1471

T. N. L. A. Debates

Official Report

Vol 38 No. 2

1980

D
V211,31 'N80
N80.38.2
23043

250|க

வெளியீடு—26-6-1980] [Issued—26-6-1980

DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
1980
1471
EGMORE

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட் கிழமை 1980 பிப்ரவரி 11-தொகுதி XXXVIII-எண் 2

Monday 11th February 1980—Volume XXXVIII—No. 2

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
*1980*

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

D
N811,31 N80
N80.38.2
123043

# உள்ளடக்கம்.

11—2—1980

பக்கங்க

1. வினாக்கள்—விடைகள்—
   - (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 143—178
   - (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 178—250

2. அறிக்கை அளித்தல்—
   - (அ) துணை வினாக்களுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை .. .. 250—252
   - (ஆ) வேலை நீக்கம் செய்யப்பெற்ற காவலர்கள் குறித்து .. .. .. 307
   - (இ) விவசாயிகளுக்கு அளிக்கப்பெறும் சலுகைகள் குறித்து .. .. .. 307—308

3. தகவல் கோரல்—
   - கிராமப் புறங்களில் டீசல். மின்சார. பற்றாக்குறை குறித்து .. .. 252

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—
   - மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் மாநில அரசின் முதல்வரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது குறித்து .. .. 253—271

5. கவன ஈர்ப்பு—
   - நாகப்பட்டினம் துறைமுகத்தில் "எம்.வி. சிதம்பரம்" கப்பல் நிறுத்துவது குறித்து. 271—275

6. தன்னிலை விளக்கம்—
   - (அ) உறுப்பினரைப் பற்றி மற்றொரு உறுப்பினர் உபயோகித்த வார்த்தைகளைக் குறித்து .. .. .. 275—276
   - (ஆ) உறுப்பினரைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்டது குறித்து .. 308—309

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு. 1980 .. .. 276

(ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு. 1980 .. .. .. 276—305

(இ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. .. 306

(ஈ) பயிரிடும் குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் (பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. 309 - 351

(உ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக-நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. 352

(ஊ) பயிரிடும் குத்தகைக்காரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 352—353

(எ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைக்காரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு .. .. 353

8. அறிவிப்பு—

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980 (ஆ.இ) .. .. .. 306

9. அரசினர் தீர்மானம்—

விதி 31-ஐத் தளர்த்தல் .. .. 354

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 354—371


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை 1980 பிப்ரவரி 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருவொற்றியூர்-எண்ணூர் கடலோரப் பகுதி.

*வினா எண் 101 திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவொற்றியூர், எண்ணூர் கடலோரப் பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது முதல் செயல் படுத்தப்படும்?

திரு எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படும் யோசனை இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வுப் பிரச்சினை அதிலே அடங்கியிருக்கிறது. இதற்கு என்று ஒரு உயர்மட்ட குழு அமைத்து அதற்கான முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை கடைசி முறையாகக் கேள்வி கேட்கிறேன். அதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்: தலைவர் அவர்களே, திருவொற்றியூர் எண்ணூர் கடலோரப் பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் இல்லை என்றுதான்

குறிப்பிட்டேன். வட சென்னையில், இராயபுரம், எண்ணூர் பகுதியில் கடலரிப்புக்கு எதிரான தாற்காலிகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ரூ. 30·80 லட்சங்களுக்கான ஒரு மதிப்பீட்டை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. சிகாமணி: தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் கூறியிருக்கிறார். ஏற்படுத்த இருக்கும் அந்தக் குழுவானது நிரந்தரமாக செயல்படுமா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, நிரந்தரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நில மற்றும் நீர் இயல் ஆய்வுத் துறை ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அவர்களுடைய முடிவு வந்தவுடன் அதற்குப் பின்னாலே எந்த வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ அந்த வகையிலே மேற்கொள்ளப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அழகுபடுத்தும் குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். அதே நேரத்திலே கடலரிப்பைத் தடுக்கின்ற முறையிலே—காசிமேடு போன்ற பகுதிகளிலே ஏற்கனவே ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது—தடுப்புச் சுவர் கட்டுவதற்கு உத்தேசம்) உண்டா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, திருவொற்றியூர் எண்ணூர் கடலோர பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் பற்றிய கேள்வி இது.

## கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடம்.

*வினா எண் 102 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடத்தின் ஒரு பகுதியை கோ-ஆப்டெக்சிற்கு வாடகைக்கு விடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) வங்கியின் பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை **கோவை மத்தியக் கூட்டுறவு வங்கி ''கோ-ஆப்டெக்சிற்கு'' 17—9—1979-ல் வாடகைக்கு விட்டுள்ளது.**



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, வாடகைக்கு விடப்பட்ட அந்த இடத்திலே ''கோஆப்டெக்ஸ்'' ஷோ ரூம் வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அந்த இடத்திலே ஏர்-கண்டிஷன் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்றும் அறிகிறேன். அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அந்த நிறுவனம் கைத்தறித் துணிகளை விற்கின்ற நிறுவனம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார். எனவே விற்பனையைப் பெருக்குவதற்காக அவர்கள் மற்ற உத்திகளை நிச்சயம் கையாள்வார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கியினுடைய அந்தக் கட்டடத்திலே கூட்டுறவு இலாகாவிற்குத் தேவையான பல காரியங்களுக்குக் கட்டடங்கள் இல்லாத கஷ்டம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்—வாடகைக்கு இடத்தை விடுவதற்குப் பதிலாக கூட்டுறவு இலாகாவிற்குத் தேவையான முறையிலே அதைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, கைத்தறி நிறுவனமும் கூட்டுறவுத் துறையினுடைய நிறுவனம் என்பதை மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய மேலான பார்வைக்கு நான் வைக்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவின் ஒரு பகுதி என்று கோவாப்டெக்சிற்குக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். வாடகை என்ன முறையில் நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது? எந்த தேதி முதல் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 17—9—1979ல் அது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த வாடகையைப்பற்றி அதற்குரிய அதிகாரிகள், கூட்டுறவுத் துறை கட்டிட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். உரிய முறைப்படி வாடகை நிர்ணயிக்கப்படும்.

[1980 பிப்ரவரி 11

வேளாண்மைக் கடன்கள் வசூல்,

*வினா எண் 103—திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

கடன் வசூலிக்க வரும் அதிகாரிகள் வரும் டாக்ஸிகளின் வாடகைகளை விவசாயிகள் கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் நிர்பந்தப்படுத்துகிறார்களா என்று தென்னாற்காடு மாவட்ட அதிகாரியிடம் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: ஆம்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, சில கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் கடன் கொடுக்க வேண்டிய நாளை நினைவுபடுத்தி தந்தி கொடுக்கப்படுகிறது. அந்தத் தந்திகளுக்காகும் செலவு விவசாயிகளிடத்திலிருந்து வசூலிக்கப் படுகிறது என்பதை அரசு அறியுமா? அப்படியிருந்தால் இனி மேல் தந்தி கொடுக்காமல், விவசாயிகளின் கடன் சுமையை அதிகரிக்காமல் அரசு பார்த்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி மாறன் அவர்கள் சொல்லியுள்ள விவரம் தற்பொழுது என்னிடத் தில் இல்லை. குறிப்பாகச் சொன்னால் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, கடன் வசூலிக்க வரும் அதிகாரிகள் வரும் டாக்சிகளின் வாடகை களை விவசாயிகள் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்தப்படுவது பற்றி புகார் வந்துள்ளதாக அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டார்கள். பல இடங்களில், எல்.டி. பேங்குகள், கூட்டுறவு மத்திய வங்கிகள் ஆகிய இடங்களில் வசூலிப்பதற்காக ஆகும் செலவை சாதாரண விவசாயிகளிடம் கேட்பது என்ன நியாயம்? வசூலிப்பதற்காக ஆகும் செலவை '' பேங்கே '' ஏற்க வேண்டுமே தவிர கடன் வாங்கிய விவசாயிகளிடம் கேட்பது என்ன நியாயம்? இனிமேலாவது உடனடியாக இந்த முறையை நிறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர் சாமி அவர்களின் கருத்தோடு நான் ஒன்றுபடுகிறேன். இப் படிப்பட்ட செலவினங்களைச் சம்பந்தப்பட்ட வங்கிகள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அதிகாரிகள்



1980 பிப்ரவரி 11]

ஏதாவது கடன் நிதி உதவியை விவசாயிகளிடத்தில் பெற்றிருந் தால் அந்தத் தகவலை அரசிடத்திலே தெரிவித்தால் நிச்சய மாகச் சம்பந்தப்பட்ட தவறு செய்யும் அதிகாரிகள் மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, கடன் வசூலிக்கச் செய்யும் அதிகாரிகள் வன்முறையாளர்களால் தாக்கப்படுகிறார் கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் தங்கள் கடமைகளை ஒழுங் காகச் செய்யும் வகையில் அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிச்சயமாக விசுவாசமிக்க, சட்டபூர்வமாக, சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் அதிகாரி களுக்குத் தக்க பாதுகாப்பைத் தமிழக அரசு நிச்சயம் அளிக்கும்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, புகார் வந்துள்ளதாக அமைச்சரவர்கள் சொல்லியுள்ளார்கள். இது பரவலாக எல்லாயிடங்களிலும் இருக்கிறது. அதுமட்டு மல்லாமல், ஒரே நாளில் பல இடங்களுக்கு வசூலிக்கச் செல்லும் நேரத்தில், ஒவ்வொரு நபரிடத்திலிருந்தும் டாக்சிக்கான வாடகையை வசூல் செய்திருக்கிறார்கள். கடனைக் கட்ட முடியாதவர்களிடத்தில் கஷ்டப்படுத்தி இவ்வாறு வாங்கும் நிலைமையிருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே தெளிவாக, உறுதியாகச் சொல்லியிருக்கிறேன். அப்படி விவசாயிகளிடத்திலே கட்டாய மாக வசூல் செய்வது முறைகேடானது ; அதர்மமானது. அப் படிப்பட்ட அதிகாரிகள் யாராவது இருந்தால், அதன் விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சுப்பிரமணியம் அவர் களிடத்தில் இருந்தால், அதை அரசின் பார்வையில் வைத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நிச்சயமாக எடுக்கப் படும், என்று சொன்னால் போதாது. இன்றைக்கு நடைமுறை யிலே எல்லாயிடங்களிலேயும் அப்படித்தான் இருக்கிறது. குடியாத்தம் தாலுக்காவைப் பொறுத்தவரையில் காரை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டதையே கேட்கா தீர்கள். வேறு ஏதாவது புதிய விவரம் வேண்டுமென்றால் கேளுங்கள்.

[1980 பிப்ரவரி 11

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உறுதிமொழி கொடுப்பதில் கொஞ்சம்கூட அஞ்சுவதில்லை ; அது தண்ணீர்பட்ட பாடாகத்தான் இருக்கிறது. ஆயிரம் ரூபாய் விவசாயிகள் கடன் வாங்கியிருந்தால், இரண்டாயிரம், மூன்றாயிரம் என்று திமிர் வட்டிக்காரன் வாங்குவதைப் போல், வட்டிக்கு வட்டி என்று போட்டும் வாங்கும் சூழ்நிலையிலே, காரைப் போட்டுக் கொண்டு வந்து அதற்கும் வாடகை வேண்டுமென்று கேட்பது, எரிந்த கொள்ளியில் பெட்ரோலை ஊற்றுவது மாதிரி இருக்கிறது. இதனால் விவசாயிகள் புரட்சியில் இறங்கும் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் அளவிற்கு ஏற்பாடு செய்வார்களா ? குடியாத்தம் தாலுக்காவில் சர்வ சாதாரணமாக நடக்கிறது. ஆகவே, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். கவனமாக இருப்போம், விழிப்பாக இருப்போம் என்று சொன்ன பிறகும், திரும்பத் திரும்ப அனுபவம் மிக்க உறுப்பினரவர்கள் மீண்டும் வற்புறுத்துவதை நிச்சயமாகக் கவனத்திலே கொண்டு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

[முற்பகல் 9-10].

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும் போது '' ஆம் '' என்று விடை தந்தார்கள். புகார் வந்திருக்கிறது என்று மட்டும் ஒத்துக் கொள்கிறாரா அல்லது இந்த வாடகை அந்த விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்று ஒத்துக் கொள்கிறாரா ? அப்படி ஒத்துக் கொள்கிறார் என்றால் தென் ஆற்காடு மாவட்டத்தில் 1978-79ல் எந்த அளவுக்கு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 16—6—1979 அன்று நடந்த விவசாயிகளின் கோரிக்கை கேட்கும் தினத்தன்று தென் ஆற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் தாலுகா, விவசாயச் சங்கச் செயலாளர், தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றைக் கொடுத்தார். அந்த மனுவிலே குறிப்பிட்டிருக்கிற பிரச்சினை, நிலவள வங்கி அதிகாரிகள் கடன்தாரர்களிடம் கடன் வசூலிக்கும் போது கடன் வசூல் வாடகைக் காருக்குரிய கட்டணத்தையும் வசூலிப்பதாகக் கூறினார். உடனடியாக சம்பந்தப்பட்ட கோட்ட டி. ஆர். அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து சம்பந்தப்பட்டவர்களிடத்திலே



1980 பிப்ரவரி 11]

விவரம் கேட்ட நேரத்திலே, இந்தப் புகாரைக் கூறிய அந்த விவசாயச் சங்கச் செயலாளர் இதுவரையில் ஆதாரத்தைக் கொடுக்காத காரணத்தாலே, எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, விவசாயிகள் கொடுக்க வேண்டிய விவசாயக் கடன்களுடைய தொகைகள் வெகு காலமாக வசூலிக்கப்படாத காரணத்தால், '' அக்குமுலேட்டட் டெட்ஸ் '' ஆகிவிட்டன. அதனால், அவர்கள் கொடுக்கும் சக்தியை இழந்து விட்டார்கள். ஒரு காலவரையறை நிர்ணயித்து, அந்த '' பேட் டெட்ஸ் '' என்று சொல்லக்கூடியவைகளை அரசாங்கம் '' ரைட் ஆப் '' செய்ய நடவடிக்கை எடுக்குமா ? வசூல் செய்ய நிர்வாகத்திற்கு அதிகமாகப் பணம் செலவாகிறது. ஆகவே, அந்தச் செலவுகளைத் தவிர்ப்பதற்கு, '' ரைட் ஆப் '' செய்வதற்கு அரசு, ஓரளவுக்காவது முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு தலைவர் அவர்களே, இது, சில அதிகாரிகள் வசூல் செய்கின்ற நேரத்திலே, செல்லுகின்ற டாக்சிகளுக்கான வாடகையை விவசாயிகளிடத்திலே பெறுகிறார்கள் என்பது பற்றிய கேள்வி. அதுபற்றிய விவரத்தை அளித்திருக்கிறேன். வேறு விவரங்கள் தேவை என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் வழக்கம் போல் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளிடத்திலிருந்து கடன் வசூலிக்கச் செல்கின்றவர்கள் டாக்சி மூலம் செல்கின்றார்கள் என்பது உண்மை. அது கடந்த காலம் தொட்டு வசூல் செய்து வருகிறார்கள் . அந்தத் தொகையை '' பாங்கே '' ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னதுபோல், விவசாயிகளுக்குப் பதிவுத் தபால், தந்தி மூலமாக தபால்களை அனுப்பி, விவசாயிகள் மீது அதிகப்படியான சுமையை ஏற்படுத்தும் அதிகாரிகள் மீதும் தக்க நடவடிக்கை எடுப்பதோடு, பதிவுத் தபால்களை அனுப்பாமல் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[1980 பிப்ரவரி 11

## Export of Quinine

*Q. No. 104 Thiru. N. KITTAPPA Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) Whether the State has sought the permission of the Central Government to export quinine from this State overseas and

(b) If so the details thereof:

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) 1964—65-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசின் சின்கோனாத்துறை கொயினா உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி வணிகர்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகிறது. இத் துறையின் உற்பத்திப் பொருட்கள் உயர்ந்த தரமுடையனவாக உள்ள காரணத்தால், வெளிநாட்டு அங்காடி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. எனினும், நாட்டில் மலேரியா மீண்டும் தோன்றிப் பரவியதன் காரணமாக, உள் நாட்டில் கொயினா உற்பத்திப் பொருட்களின் தேவை அதிகரித்ததால், இந்திய அரசு 25—7—1978-லிருந்து திடீரென்று கொயினா ஏற்றுமதிக்குத் தடை யன்றை விதித்தது. தடை விதிக்கப்படுவதற்கு முன் மாநில அரசைக் கலந்தாலோசிக்கவில்லை. மாநில அரசு இப் பொருள் குறித்து இந்திய அரசிடம் முறையிட்டு, கொயினா ஏற்றுமதி குறித்து வலியுறுத்தியது. இந்திய அரசு மாநில அரசின் கோரிக்கைக் கிணங்க, 1978—79-ம் ஆண்டில் 3.25 டன் கொயினா பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. 1979—80-ம் ஆண்டில் 4,500 கிலோ அல்லது 4.5 டன் கொயினாப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதியளித்துள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஏற்றுமதி செய்யப்பட்ட அந்த இரண்டு வருஷங்களிலும், அந்த ஏற்றுமதியினால் என்ன வருமானம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது? அதோடு, இப்பொழுது இந்திய அரசாங்கத்திடம் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று கேட்டிருப்பதனால், ஏற்றுமதி செய்வதற்காக, நம் தேவை போக, எவ்வளவு கொய்னா "ஸ்டாக்" இருக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்றுமதியின் மூலம் எவ்வளவு வருவாய் கிடைத்திருக்கிறது என்பதற்கு என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால், உள்நாட்டுத் தேவைக்கு 4,500 கிலோ கிராம் போக, 3,500 கிலோ கிராம் இருப்பு இருக்கிறது என்று துறை அறிவித்துள்ளது.



1980 பிப்ரவரி 11]

## திருச்செந்தூர் ஆலயத்திற்கு வெள்ளித் தேர்.

*வினா எண். 105 திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் சுத்த வெள்ளிக்குப் பதிலாக கலப்படம் செய்து தேர் செய்யப்பட்டுள்ளது என்பது அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில் சம்பந்தப்பட்டவர் மீது அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) வெள்ளியில் கலப்படம் செய்ததாக புகார் ஏதும் இல்லாத போதிலும், அறநிலையத்துறையின் நகை சரிபார்க்கும் அதிகாரி, அவரது வைர நுண்ணறிஞர் மற்றும் திருநெல்வேலி நகை வியாபாரிகள் சங்கத்தினால் அனுப்பப்பட்ட ஒருவர், ஆகிய மூவரைக் கொண்டும் இந்த வெள்ளித்தேர் சமீபத்தில் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி தேர் செய்வதற்கு சுத்தமான வெள்ளிதான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்றும் கலப்படம் ஏதுமில்லை என்றும் தெரிய வந்தது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டிருக்கிறது. அது சுத்தமான வெள்ளிக்குப் பதிலாக கலப்படமான வெள்ளியால் செய்யப்பட்டிருப்பதாக பொதுமக்கள் புகார் சொல்லுகிறார்கள். அதைக் கண்டுபிடிப்பதற்காக இந்த அரசு ஒரு குழு அமைத்து விசாரிக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அதைப் பரிசீலித்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்பான குற்றச்சாட்டுக்கள் ஏதேனும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் இருந்து தெரிவித்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு வேளை சோற்றுக்குக் கூட வழியில்லாமல் கோடிக்கணக்கான மக்கள் நம் நாட்டிலே பரிதவிக்கிறபோது வெள்ளியிலே சாமிக்குக் கொண்டு போய் தேர் செய்வது என்பது ஊதாரித்தனமான ஒரு செலவு அல்லவா, ஏன் மரத்திலே செய்தால் அந்தத் தேர் ஓடாதா? அல்லது சாமிதான் மறுக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மனம் புண்படாத அளவுக்குக் கேளுங்கள். ஊதாரித்தனம் என்று சொன்னால் பக்தர்கள் மனம் புண்படும்.

திரு. ரா. உமாநாத் : எக்ஸ்ட்ராவேகன்ட் எக்ஸ்பென்டிச்சர் என்பதன் மொழிபெயர்ப்புத்தான் இந்த ஊதாரித்தனம் என்பது. என் மனதும் புண்படுகிறதே, தேரைப் பார்த்தால்.

We are equals. Theists and atheists are equals அவர்கள் மனம் புண்படக் கூடாது என்றால் என் மனமும் புண் படக் கூடாது. எக்ஸ்ட்ராவேகன்ட் எக்ஸ்பென்டிச்சர்தான். அந்தத் தேர் வெள்ளியில்தான் செய்யப்பட வேண்டுமா ? மரத் தால் செய்தால் ஓடாதா ? மரத்தால் செய்த தேரில் சாமி சவாரி செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டதா ? அனைத் திற்கும் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்று சாதாரண மக்களுக்கு அட்வைஸ் செய்கின்ற இந்த அரசு இந்த விஷயத்தில் சாமிக்கும் கொஞ்சம் அட்வைஸ் பண்ணி, அதன் மூலம் கிடைக் கும் பணத்தை டெவலப்மென்ட்டு ஆக்டிவிட்டீஸ்க்குப் பயன் படுத்தலாம். ஏனென்றால் இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கி றோம் என்று சொல்லுகிறவர்கள். அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்தப் பணியில் இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற வாகனங்கள், ஆலயங்களில் செய்யப்படுவது என்பது பக்தர்களாலும், நம் பிக்கை உள்ள மக்களாலும் அவர்கள் விரும்பும் வகைக்காக கொடுக்கப்படுகின்ற தொகையில் இருந்து செய்யப்படுகிறது. ஆகவே அரசாங்கத்தின் வரிப் பணத்தையோ அல்லது பொதுப் பணத்தையோ எடுத்து இந்தத் தங்கத் தேர்கள், வெள்ளித் தேர்கள் செய்யப்படுவதில்லை. பக்தர்கள் விரும்பி அளிக்கி றார்கள். சாமிக்கு வேண்டும் என்று ஆசாமிகள் தருகிறார்கள். அவர்கள் தருவதை வைத்து அவர்கள் விருப்பப்படி காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு குழு போடப்பட்டு அது பரிசீலித்ததாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மீண்டும் சில அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவைப் போட்டுப் பரிசீலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் முன்னாலேயே, தெரிவித்தேன். குறிப்பான குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்தோடு இருந்து, அதைத் தெரிவித்தால் அந்த அடிப்படையில் ஒரு குழுவை அமைத்து அரசு விசாரிக்க ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வெள்ளித் தேரைக் குறித்துக் குறிப் பிடும்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. உமாநாத் அவர்கள் அது ஊதாரித்தனம் என்றும், அதை எதிர் கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்றும் கூறினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதுதான் ; எங்களை ஆளாக்கிய அண்ணா அவர்களின் கொள்கையும் அதுதான். எனவே இதற்கு நாங்கள் உடன்படவில்லை. வெள்ளித் தேர் போன்றவைகளை இந்த அரசு விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளித் தேர் செய்வது இந்த அரசின் கொள்கை அடிப்படையிலே அல்ல என்பதை முன்னாலே தெரிவித்துவிட்டேன். பக்தர்கள் நிதிகளைச் தங்கமாகவும், வெள்ளியாகவும், பணமாகவும் தருகிறார்கள். அதை ஒரு சேரத் சேர்த்து பாதுகாப்பாக ஒரு உருவத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பேர்தான் வெள்ளித் தேர்.

[முற்பகல் 9-20].

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களே விடை சொல்லும்போது சாமிக்கு ஆசாமிகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். திருச்செந்தூர் ஆலய வெள்ளித் தேரைப் பொறுத்த வரையில் சாமிக்கு ஆசாமிகள் தந்த தொகை எவ்வளவு ? அறநிலையத் துறை தந்தது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாக விடை தயாரித்துத் தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 106-ம் 107ம் மாண்புமிகு அமைச்சவரார்களின் வேண்டுகோளுக்கிணங்க பின் னால் எடுத்துக் கொள்ளப்பெறும்.

[1980 பிப்ரவரி 11

துடியலூர் கோயில்பாளையம் வாரச்சந்தை.

*வினா எண். 108: திரு. ரா. வெங்கிடசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையை அடுத்த துடியலூர் கோயில்பாளையம் வாரச் சந்தையில் அரசு நிர்ணயித்த விகிதத்திற்கு மேலாகக் கட்டணம் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கட்டண வசூலுக்கு முறையான ரசீது வழங்கப்படுகிறதா ?

(இ) அதிகக் கட்டண வசூலைத் தடுத்து நிறுத்தவும், முறையாக ரசீது வழங்கவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சா. காளிமுத்து :

(அ) அவ்வாறு வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. வெங்கிடசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே. கோயில்பாளையம். துடியலூர் சந்தைகளைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு வரி வசூல் நடக்கக்கூடிய விஷயத்தில் அதிகமாக நடக்கிறது என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற செய்தி அந்த வரியை கான்ட்ராக்ட் விட்டு, டெண்டர் விட்டு தனியார் வசூல் செய்வதற்குப் பதிலாக அரசே நேரடியாக அந்த சந்தைகளில் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. இதிலே அரசு தலையிட முடியாது.

கிணத்துக்கடவு ஒன்றியப் பகுதியில் உள்ள பம்புசெட்டுகள்.

*வினா எண் 109 : திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிணத்துக்கடவு ஒன்றியத்தில் இருக்கும் பல ஆழ்குழாய் பம்புசெட்டுகள் ஒரு வருடத்திற்கு மேலாக வேலை செய்வது இல்லை என்பது உண்மையா ?



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கிணத்துக்கடவு ஒன்றியத்தில். தேவராயபுரம் ஊராட்சியைச் சேர்ந்த நல்லிகவுண்டன் பாளையத்திலுள்ள குழாய்க் கிணற்றில் பொருத்தப்பட்ட நீர் மூழ்கி மோட்டார் பம்புசெட் மட்டுமே பழுதடைந்து, இயங்காமல் உள்ளது

திரு. கா. வே. கந்தசாமி : தலைவரவர்களே. ஓராண்டுக் காலமாகியும் இன்னும் பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. அதைப்போல இன்னும் 3, 4 ஆழ்குழாய்க் கிணறுகளில் பம்புசெட் பழுது ஏற்பட்டு. இன்னும் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. பலமுறை இதுபற்றி நான் கலெக்டருக்கு மனு எழுதியும். பி.டி.ஓ.க்கு சொல்லியும் இன்னும் பழுது பார்க்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ! உடனடியாக பழுது பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கிணத்துக்கடவு ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில் நல்லிக்கவுண்டன் பாளையத்தைப் பற்றி மட்டும்தான் தகவல் இருக்கிறது. மற்ற இடங்கள் பற்றி தகவல் இல்லை. ஒருவேளை அவை பழுது பார்க்கப்பட்டிருக்கலாம், புகார் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு. மு. செல்வராஜ் : தலைவரவர்களே. பொதுவாக தமிழ் நாட்டிலே பெரும்பாலான பஞ்சாயத்து யூனியன்களில் கிராமங்களில் இருக்கிற இப்படிப்பட்ட குடிநீர் திட்ட பம்புசெட்டுகள் பழுதடைந்துவிட்டால். அவைகளை குடிநீர் வாரியம் பழுது பார்த்து செயல்படச் செய்ய வேண்டுமென்ற உத்தரவு இருப்பதால் பழுது ஏற்பட்ட பம்புசெட்டுகள் பல மாதங்கள் ஆகியும், பழுதுபார்க்கப்படாத கிராமங்கள் பல இருக்கின்றன. அதனால் குடிநீர் பற்றாககுறை ஏற்படுகிறது, இதைத் தவிர்கக உடனடியாக நடவடிக்கை எடுககப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதை ஆழ்ந்து பார்த்து, எந்த வகையிலே இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்பதை பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுககப்படும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, பொதுவாக கிராமங்களில் இருக்கிற பம்புசெட்டுகள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கிணத்துக்கடவு பற்றிய கேள்வி,

[1980 பிப்ரவரி 11

திரு. சி. ஆறுமுகம் : பொதுவாக என்று குறிப்பிட்டுவிட்டுத் தான் கேள்வியை ஜாக்கிரதையாகக் கேட்கிறேன். கேள்வி கிணத்துக்கடவு பற்றியதாக இருந்தாலும் பொதுவாக பம்புசெட்டுகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன, பழுது பார்ப்பதற்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நபர்தான் வைக்கப்பட்டிருக்கிறார், உடனுக்குடன் பழுது பார்ப்பதற்காக ஒன்றியத்திற்கு 2 அல்லது 3 பேர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திரு. ஆறுமுகத்தின் யோசனையை அரசு பரிசீலிக்கும்,

திரு. நா. வெங்கிடசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே. கிணத்துக்கடவு ஒன்றியத்தில் மோட்டார் பம்புசெட் கெட்டுப்போன காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது, அப்படித் தண்ணீர் கிடைக்காத மக்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு மாற்று ஏற்பாடு என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே. நான் குறிப்பிட்ட நல்லிக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்தமட்டில் ஆழ்குழாய்க் கிணற்று பம்புசெட் பழுதடைந்துவிட்டதால், அதற்குப் பக்கத்தில் இன்னொரு கிணறு வெட்டி பம்புசெட் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, பழுது ஏற்பட்டால் அதை சீர் செய்யவோ, மாற்று ஏற்பாடு செய்யவோ அரசு நிச்சயமாக முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் சோறு இல்லாமல் ஒரு மாதம் கூட சும்மா இருக்க முடியும். குடிக்கத் தண்ணீர் இல்லை என்றால் 2 அல்லது 3 மணி நேரம் கூட தாக்குப்பிடிக்க முடியாது, ஆகவே பழுது ஏற்பட்டுவிட்டால் அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களே டெண்டர் கால் பார் செய்து, உடனடியாக அதைப் பழுது பார்ப்பதற்கு உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆரம்பத்திலேயே பதில் சொல்லி இருக்கிறேன்,

## உடையார்பாளையம் நகருக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 110: திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் நகரத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ;

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும் ?



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

திரு, வெ, கருணாமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி அப்படிப்பட்ட தொகை கட்டுவதற்குத் தயாராக இருப்பதாக ஒரு தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, மேலும் அருகாமையிலே இருக்கின்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்றும் அது ''ரூரல் ஸ்கீம்'' என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் வைக்கப்பட்டு அதனடிப்படையில் இப்போது இன்வஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே, அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து அந்த நகரத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. புதிய திட்டம் பரிந்துரை செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று அரசுக்கு வந்தால் அரசு அனுதாபத்தோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

## சங்கராபுரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

*வினா எண் 111: திரு, துரை முத்துசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் உள்ள வடமக்கேல்புரம் பவுஞ்சிப்பட்டு, பொரசப்பட்டு, மூங்கில் துறைப்பட்டு, அருளம்பாடி மூக்கனூர் ஆகிய இடங்களில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன :

மாண்புமிகு திரு, எஸ், இராகவானந்தம்: (அ) & (ஆ) பொரசப்பட்டு, அருளம்பாடி ஆகிய இரு சிற்றூர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அருளம்பாடித் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருகிறது, பொரசப்பட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, இதர நான்கு சிற்றூர்களும் நல்ல குடிநீர் ஆதாரமுள்ள சிற்றூர்களானதால் அவைகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1980 பிப்ரவரி 11

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இரண்டு ஊர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருவதாகச் சொன்னார்கள். மற்ற ஊர்களுக்கு எப்போது தண்ணீர் கொடுக்கப்படும்? எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படும் என்று அறிவித்தார்களே, இப்போது இந்த மூன்று கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதைப் பற்றிய நிலை என்ன? ஓராண்டுக்கு முன்னதாக சங்கராபுரம் பேரூராட்சிக்கு 8¼ இலட்ச ரூபாயில் குடிநீர்த் திட்டம் ஒன்றுக்கான கால்நடு விழா எல்லாம் செய்தார்கள். அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர்களே சங்கராபுரத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நீங்கள் குறிப்பிட்ட மூன்று ஊர்களில் மூங்கில் துறைப்பட்டு என்ற இடத்தில் ஆண்டில் 6 மாதகாலம்தான் தண்ணீர் கிடைக்கின்றது என்று தகவல் அரசுக்குக் கிடைத்திருப்பதால் அந்த ஊருக்கு குடிநீர் வழங்குவதைப்பொறுத்தவரையில் அது 6 ஆவது பிரிவில் இருந்து வந்தது. அதை 3 ஆவது பிரிவுக்கு மாற்றி வேலை எடுத்துக்கொள்ளலாம் என்ற பரிந்துரை பரிசீலனையில் உள்ளது.

நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண் 112—திரு தி. அன்பழகன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடாற்காடு மாவட்டம் நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு தி. அன்பழகன்: தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சியைச் சேர்ந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருப்பதாலும் மேலும் திருப்பத்தூருக்கு பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லப்படுவதாலும் அதன் அருகாமையிலேயே இந்தப் பேரூராட்சி இருப்பதாலும் அந்தக் குடிதண்ணீரைப் பயன் படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சி ஆய்வுத் தொகையைக் கட்டுவதற்கு நிதிவசதி இல்லை என்று கூறிவிட்டது. எனினும், பேரூராட்சியின் சார்பில் வாரியம் ஆய்வுப் பணிகளை ஏற்று நடத்தவும் இப்பணிகளுக்கு ஆகும் செலவுத் தொகையை திட்ட மதிப்பீட்டில் இணைத்து பின்பு அரசு ஒப்புதலுடன் இத்திட்டம் நிறைவேறும் பொழுது திருப்பிச் செலுத்தவும் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். பொதுவாக ஆய்வுப் பணம் முன்னதாகத் தரவேண்டும். திட்டத்திற்கான பணத்தைப் பின்னதாகத் தரவேண்டும். எனவே ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் பின்னதாகத் தருகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றி பேரூராட்சி அரசுக்கு அனுப்பி வைத்தால் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே நாட்டரம்பள்ளிப் பேரூராட்சிக்கு நிதிவசதி குறைவாக இருப்பதால் அரசு இதற்காக சலுகை அளித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :— தலைவரவர்களே அதற்சாகத்தான் சொன்னேன். ஆய்வுத் தொகையை முன்னதாகக் கட்டாமல் ஆய்வுத் தொகையையும் திட்டத் தொகையையும் சேர்த்துப் பின்னதாகக் கட்டுகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றினால் அந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அப்படித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய ஆய்வு.

* வினா எண் 113 —திரு எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீர்ப்பாசனத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க மாநில மட்டத்தில் உயர்மட்ட அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய விவர அறிக்கை சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பெற்றது.

[356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

[1980 பிப்ரவரி 11

[முற்பகல் 9-30]

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 30 கோடிக்கு மேற்பட்ட செலவு மதிப்புடைய பாசனத் திட்டத்திற்கும், 30 கோடிக்குக்கீழ் மதிப்புள்ள இரு பெரிய பாசனத் திட்டங்கள ஒவ்வொன்றுக்கும் அரசாங்க அதிகாரிகளை இந்த குழுவின்கீழ் போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியிலும், சிறு பாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும், மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் போடப்படும் கமிட்டியிலும், வங்கிகளுக்குக் கூட பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளைப் போட்டு சட்டமேலவை பேரவை உறுப்பினர்களையும் போட்டு இக் குழுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய ஆணைக்கிணங்க இது குறித்து ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பாசனத் துறையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு அதிலே சட்டமன்ற மேலவை பேரவை உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவைகளின் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, வேறு ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசினுடைய ஆய்வில் இல்லை.

## செடிப் பண்ணைகள்.

* வினா எண் 114—திரு சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு செடிப் பண்ணைகள் இருக்கிறது?

(ஆ) அதன் மூலம் ஏதாவது பயன் ஏற்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

[357-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 11]

## மானா மதுரை கூட்டுறவு உலோகத் தொழிற்சாலை.

*வினா எண் 115. திரு வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மானா மதுரையிலுள்ள கூட்டுறவு உலோகத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதா?

(ஆ) மூடப்பட்டதற்கு என்ன காரணம்?

(இ) மீண்டும் திறக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது:

(அ. ஆ. மற்றும் இ.) மானாமதுரையிலுள்ள உலோகத் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கத்தில் 1978 செப்டம்பர் மாதத்திலிருந்து வேலை நடைபெறவில்லை. தமிழ்நாடு கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி இச் சங்கத்தின் எதிர்கால நிலைமையைப்பற்றி முடிவெடுக்க ஒரு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அதிகாரி தன்னுடைய அறிக்கையில் இச் சங்கத்தை மீண்டும் நல்ல முறையில் நடத்த சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் இச் சங்கத்தை கலைத்து விடலாமென்றும் பரிந்துரை செய்துள்ளார். ஆகவே இச்சங்கத்தைக் கலைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை போல இதர பஞ்சாயத்து யூனியன்களிலும் உலோகத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எங்கும் சரியாக நடைபெறவில்லை என்பது உண்மைதான். இதற்குக் காரணம் இத் தொழிலில் உள்ள சிக்கல்கள், தகடுகள் சரியாகக் கிடைக்காமை, கூலி நிர்ணயம் போன்ற பல காரணங்களால் உற்பத்தி அதிகரிக்காமல் இருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவைகள் கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்தால் உண்மையிலேயே இலாபகரமாக நடக்கக்கூடிய தொழில் இது என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு ஆய்வு செய்யப்படுமானால் இலாபகரமாக நடக்கக்கூடியது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது உண்மை நிலை என்னவென்று சொன்னால் செப்பு பித்தளை பாத்திரங்களை வாங்குவதைவிட மக்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைத்தான் விரும்பி அதிகமாக வாங்குகிறார்கள் என்ற காரணத்தினால்தான், மானாமதுரையில் உள்ள உலோகத் தொழிற்சாலை மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 11

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானாமதுரை தொழிற்சாலை கிழக்கு இராமநாதபுரத்தில் பிற்பட்ட பகுதியில் இருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை. அதை மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பிற்பட்ட பகுதியில் உள்ள தொழிற்சாலை ஆதலால், அரசு எப்படியாவது உதவி செய்து அதை மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் நட்டத்திலேயே நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், எப்படியாவது இலாபகரமாக நடத்த வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டது. அதற்குக் காரணம், நான் முன்னாலே சொன்னது போல மக்கள் செம்பு, பித்தளை பாத்திரங்களை விட ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே விரும்பி வாங்குகிறார்கள் என்பது தான். அது மட்டும் அல்லாது இந்தத் தொழிற்சங்கத்தில் பணி புரிந்து கொண்டிருந்தவர்கள் தனியாக தொழில் நடத்திக்கொண்டிருப்பதாலும், அவர்கள் திரும்பவும் வந்து இந்தச் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து வேலை செய்யத் தயாராக இல்லாத காரணத்தினாலும், இச்சங்கத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த முயற்சி செய்து, உலோகத் தொழிலாளர்களைக் கொண்டு உடனடியாகச் சங்கத்தை திறக்க முயற்சி செய்தாலும், அதை வேறு ஒரு புதிய சங்கமாகக்கூட அங்கீகரித்து செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பித்தளை, செம்பு போன்ற பாத்திரங்களில் சமையல் செய்து சாப்பிட்டால் உடல் நலம் கெடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, மண் பாத்திரங்களை உற்பத்தி செய்ய மண்பாண்டத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே மண்பாண்டத் தொழிற்சாலையை அரசு ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இலட்சக்கணக்கான மண்பாண்டங்களை தமிழகம் முழுவதும் தயாரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதை விட அவர்களே மண்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கினால் நலமாக இருக்கும்.



1980 பிப்ரவரி 11]

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் மண்பாண்டத்தில்தான் சமையல் செய்து சாப்பிட்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அது அவருடைய உடல் வலுவைப் பார்க்கும் போது தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டும் அல்ல, அவரே ஒரு மண்பாண்டத் தொழிற்சாலையை மதுராந்தகத்தில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு).

## பட்டு உற்பத்தி நிலையம், பணகுடி.

*வினா எண். 116 —திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் பட்டு உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு செயல்படாது உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) பருவகால மாறுதல் காரணமாக ஏற்பட்ட கடுமையான காற்றின் தாக்குதலால் மணலால் மூடப்பட்டு, பட்டு வளர்ப்புத் தொழில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டதால், ஊரகத் தொழில் திட்டத்தின் கீழ் பணகுடி கிராமத்தில் 1964ல் துவக்கப் பெற்ற செயல் விளக்கப் பட்டுப் பண்ணையை மூடும்படி 1973ல் அரசு ஆணை பிறப்பித்தது.

திரு. யா.சை.மு. யூசுப் : பணகுடியில் உருவாகிய அந்தப் பட்டு குற்றாலம் மற்றும் இதர பகுதிகளில் உருவாகிய பட்டை விட தரம் மிகுந்ததாகக்கருதப்பட்டபோதிலும் பருவமழை என்று கருதாமல் தொடர்ந்து அந்த இடம் தூசிபடிகிற இடமாக இருக்கிறது என்று தெரிந்தும் தவறான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டதால், கட்டடங்கள் பழுதடைந்து, கிணறுகள் மூடப்பட்டு திட்டம் பாழ்பட்டு விட்டது என்ற காரணத்தால், அங்குள்ள சீதோஷ்ண நிலையைக் கருதியும் வேறு ஒரு இடத்தில் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டம் ஏன் கைவிடப்பட்டது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள சீதோஷ்ண நிலை பட்டு வளர்ப்புக்கு ஏற்றதாக இல்லை. ஆரம்ப காலத்தில் மிகச் சிறந்த பட்டு அங்கே தயாரிக்கப்பட்டு வந்தது. அங்கே, மணல் மூடுகிற ஒரு பேராபத்து ஏற்பட்ட காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள பண்ணைகள் எல்லாம் மணல் மூடப்பட்டு விட்டன. ஆகவே, அந்தப் பகுதியில் இந்தச் செயல் விளக்கப் பண்ணை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் வேறு ஏதாவது ஒரு பகுதி தகுந்த இடமாக இருக்குமானால் அரசு பரிசீலனை செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. யா.சை.மு. யூசுப் : என்னுடைய கேள்வியில் குறிப்பிட்டதைப்போல் அந்தக் கிராமத்தின் சீதோஷ்ண நிலை பட்டு உற்பத்திக்கு நல்லவிதமாக இருந்த போதிலும் அரசாங்கம் தேர்ந்தெடுத்த இடம் மோசமான இடமாயிருக்கிறது. எப்போதும் மணல் வாரியிரைக்கிற பகுதியாக உள்ள ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து பெரிய தவறைச் செய்திருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்யும் விதத்தில் அதே கிராமத்தில் பக்கத்தில் இன்னொரு இடத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் அந்தக் கிராமத்திலுள்ள வேறு ஒரு பகுதியில் மணல் மூடுகிற பேராபத்து இல்லை என்ற உறுதியிருக்குமானால் நிச்சயமாக இந்தத் திட்டத்தை அங்கே மேற்கொள்ளலாம்.

## யானைக்கால் வியாதித் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண். 117 — திரு. ஆர். மணிமாறன், திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) யானைக்கால் வியாதியினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்படுகிறார்களா ?

(ஆ) தஞ்சை, கோவை போன்ற மாவட்டங்களில் இதற்கென எடுக்கப்படுகிற தடுப்பு நடவடிக்கைகள் என்ன ?

(இ) நோயைக் கண்டறிவதற்கான ஆய்வு முறைகள் என்ன

(ஈ) இதனால் பாதிக்கப்பட்டு கால் மிகப் பெரிதாக வீங்கியவர்களுக்கு மருத்துவத் துறையினரால் தனிப்பட்ட சிகிச்சை முறைகல் கொடுக்கப்படுகின்றனவா ?





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :

(அ), (ஆ), (இ), மற்றும் (ஈ) : மற்றும் அவை முன் ஒரு விவர* அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். மணிமாறன் : இந்த மருத்துவத்தில் தனித்திறமை வாய்ந்த ஒருவர் தஞ்சையில் இருப்பதாகத் தெரிய வருகிறது. அவரை அரசு பயன்படுத்துமா ? அவர்களைப் பயன்படுத்தி இந்த மருத்துவத்திற்குத் தனியாக ஒரு மருத்துவமனை அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பேராசிரியர் ஒருவர் இந்த யானைக் கால் வியாதிக்கு ஒரு நல்ல வைத்திய முறையைப் பயன்படுத்தி வருகிறார் என்று தெரியும். ஆகவே ஒரு தனிப் பிரிவு அங்கே நியமிப்பதற்கான ஆய்வு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த யானைக்கால் வியாதி கிராமங்களில் பரவுகிறது என்றாலும் அதிகாரிகள் அதைத் தடுக்கிற திட்டத்தை நகரங்களில்தான் அமல்படுத்துகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களில் அந்தத் திட்டத்தை அமல்படுத்த விதி இல்லை என்று சொல்கிறார்கள். அரசு கிராமங்களில் அந்த வியாதி பரவுவதைத் தடுக்க கிராமங்களிலும் அந்தத் திட்டத்தை செயல்படுத்த, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: குறிப்பாக இந்த வியாதி ஒரு இடத்தில் பரவுகிறது என்பது கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்போதிருக்கிற விதிமுறைகள், இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட ஒரு இடத்தில் ஐந்து விழுக்காட்டிற்கு மேல் அந்த வியாதி பரவுமானால் உடனே இந்தத் திட்டம் அங்கே செயல்படுத்தப் படுகிறது என்பதுதான் வரையறுக்கப்பட்டிருக்கிற நிலை, குறிப்பாக எந்த இடத்திலாவது இந்த நோய் இருக்கிறது என்று தெரியப்படுத்தினால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ர. ஜெபமணி : திருநெல்வேலி மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் இந்த வியாதி இப்போது அதிகமாகப் பரவி வருகிறது என்று சொல்கிறார்கள். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

---

[*359ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்தின்படி தற்போது நலத்துறை அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[முற்பகல் 9-40]

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. யானைக்கால் வியாதிக்கு ஒரு பேராசிரியரை நியமிக்க ஒத்துக்கொண்டதைப்போல், தஞ்சை, கும்பகோணம் பகுதிகளில் பாரிசவாயு என்ற ஒரு வியாதி வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு முயற்சி செய்ய, அதற்கும் ஒரு மருத்துவரை நியமிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே. யானைக்கால் வியாதியைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, இந்த வியாதி வருமானால் தடுப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதற்கு ஒரு தனி "கிளினிக்'. தஞ்சையிலே நிறுவுவதற்கான ஒரு எண்ணம் அரசின் ஆய்வில்' இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. தென் ஆற்காடு மாவட்டத்தில், பண்ருட்டியில் யானைக்கால் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப் போக்குவதற்கு அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உரிய நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியம் சார்பாக, அரசு துணையோடு எடுத்து வருகிறார்கள்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிங்காரச் சென்னையிலே யானைக்கால் வியாதி சைதாப்பேட்டை பகுதியிலே நீண்டகாலமாகப் பரவி வருவது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா ? இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த யானைக்கால் வியாதி பரவுவதற்குக் காரணம் "கியூலெக்ஸ்" என்று ஒரு கொசுதான். இந்தக் கொசு அதிகமாக தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகளிலே



உருவாகின்றது. இந்தக் கொசுக்கள் பரவுவதைத் தடுப்பது. இந்த நோயைத் தடுப்பதற்கு ஒரு வழியாகும். இந்த வியாதியை அறவே ஒழிப்பதற்கு இதுவரை எந்தத் தகுந்த முறையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே, யானைக்கால் வியாதி, பரவாமல் தடுக்க முறையாக கவனித்து, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த யானைக்கால் வியாதியைக் குணப்படுத்துவதற்கு தஞ்சையிலே ஒரு தனி பிரிவு உருவாக்கி யிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாவட்டத்ங்களிலே இருக்கின்ற மருத்துவ மனைகளிலும் இந்தத் தனிப் பிரிவை அமைக்கும் உத்தேசம் உண்டா என்று கேட்டுக் கொள்வதோடு. கோவை மாவட்டத்தில் பலருக்கு யானைக்கால் வியாதி பரவியிருப்பதால். அதற்கான ஒரு மருத்துவரை கோவை அரசு மருத்துவமனையில் நியமித்து, அங்கே தனிப் பிரிவு ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, தஞ்சையிலே இருக்கின்ற மருத்துவர் ஒருவர் அறுவைச் சிகிச்சை முறையிலே குணப்படுத்துவதால், தஞ்சையிலே இருக்கின்ற மருத்துவ மனையில் இதற்கென ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தேன். அந்த எண்ணம் நிறைவேற்றப்படுகின்றதா, அந்த முறை செயல்படுத்தப்படுகின்றதா என்பதைப் பார்த்து, பின்னர் மற்ற மாவட்டங்களிலேயும் துவக்கப்படும். கோவையைப் பொறுத்த வரையில். யானைக்கால் நோயைத் தடுப்பதற்கு இதுவரை எந்தவிதமான திட்டமும் இல்லையென்றாலும். சாதாரணமாக தற்போது அங்கேயுள்ள ஊராட்சி மன்றங்கள். அரசு மானியத்தோடு செயல்பட்டு வருகின்றன. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எங்கே 20.000 மக்கள் தொகை இருக்கின்றதோ அங்கேதான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே கலசப்பாக்கம். வேடந்தவாடி ஆகிய பகுதிகளிலே இந்த வியாதி பரவி இருக்கின்றது. இதைப்பற்றி அரசாங்கத்திற்கும் சொன்னேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் எடுத்துச் சொன்னேன். அதிகாரிகள் பரவுகின்றது என்ற உண்மையை ஒத்துக் கொண்டார்கள். ஆனால். தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு. அந்த வியாதியைப் போக்குவதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மத்திய அரசாங்கத்தின் நிதியிலாவது, மாநில அரசாங்

கத்தின் நிதியிலாவது கிராமப் பகுதியில் இந்த வியாதி வேகமாகப் பரவாமல் தடுப்பதற்கு மாநில அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தேவைப்படுகின்ற சிகிச்சையைக் குறித்து, அரசு ஆவன செய்யும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் வியாதி ஒருவகைக் கொசுவால் ஏற்படுகின்றது. அதைப் போலவே, மலேரியா போன்ற வியாதியும் கொசுவால் ஏற்படுகின்றது. இந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு நாடு தழுவிய திட்டமாக இருந்தால் தான் நலமாக இருக்கும். அந்தமாதிரி ஒரு திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசின் துணையோடு செயல்படுத்தப்படுகின்ற திட்டமாகும். ஆகவே, இது குறித்து மாநில அரசு மத்திய அரசோடு விவாதித்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்கு உரிய வழிவகை செய்யும்.

திரு. செ. கிருஷ்ணன் : இந்த யானைக்கால் வியாதி "க்யூலெக்ஸ்" கொசுவால் ஏற்படுகிறது. தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கும் பகுதிகள் இந்தக் கொசுக்கள் வளர வசதியாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல் பகுதியில் யானைக்கால் வியாதி இல்லாதவர்களே இல்லை. அங்கு தொழிற்சாலை கிடையாது. அந்த இடத்தில் ஏன் அந்த வியாதி பெருமளவுக்குப் பரவியிருக்கிறது என்று ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி என்பது ஒரு காரணமாகும். நீர் தேங்கியிருக்கும் இடங்களிலும் கொசுக்கள் உற்பத்தியாக வழிவகை உண்டு. பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமானால் ஓரளவு கொசுத் தொல்லைகளைக் குறைக்க முடியும். அது மிகுந்த பொருட் செலவில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டமாதலால் அத்தகைய திட்டங்களை படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.



திரு. சி. பழனிமுத்து : சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பெத்த நாயக்கன்பாளையத்தில் யானைக்கால் வியாதி பரவி வருகிறது. அரசுக்கு விண்ணப்பம் கொடுத்தும் இதுவரை பரிசீலனை செய்யவில்லை. கொசு மருந்து லிட்டர் ஒன்றுக்கு 120 ரூபாய் ஆகிறது. அரசு பாதி விலையில் மானியம் கொடுத்து ஊராட்சிகளுக்கும். ஒன்றியங்களுக்கும் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அந்தப் பகுதியில் யானைக்கால் வியாதியைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

*118*—

## Hostel for Post Graduate Students of Medical College

Q. No. *118*—Thiru K. SUPPU will the Hon. the Minister for Health be pleased to state:

[a] whether the Post Graduate Hostel built for the students of Madras Medical College two years back is occupaid by unauthoraised persons and

[b] if so the action taken thereon.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :—

(அ) பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்காக புதியதாக கட்டப்பட்டுள்ள விடுதியில் அதிகாரம் பெறாத யாரும் தங்கியிருக்கவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கிராமச்சாலை திட்டங்களுக்கு உலக வங்கி உதவி.

*வினா எண். 119—

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையவிப்பாரா—

(அ) கிராமச் சாலைகள் சிறப்புத் திட்டத்திற்காக உலக வங்கியிலிருந்து உதவித் தொகை கோரப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் என்றால் எவ்வளவு தொகை ?

(இ) எந்தத் திட்டத்திற்கு செலவு செய்யப்படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி — (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விக்குகளுக்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி : கடந்த ஆண்டு இதே கேள்வியை ஏற்கனவே இருந்த அமைச்சர் அவர்களிடம் கேட்ட நேரத்தில் 120 கோடி ரூபாய்க்குக் கடன் கேட்டிருப்பதாகவும் அதன் மூலம் கிராமச் சாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் இதே சபையில் சொன்னார்கள். இப்போது இல்லையென்று சொல்லுகிறார்கள். இந்தத் திட்டம் கைவிடப்பட்டதா . மேலும் கிராமச் சாலைகளை முன்னேற்ற திட்டத்தைக் கொண்டு வருவார்களா .

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கேள்வி உலக வங்கியின் கடன் உதவியுடன் செயலாக்கும் திட்டத்தைப் பற்றியது. உலக வங்கியின் கடனுதவியுடன் செயலாக்கப்படும் சாலைப் பணிகள் யாவும் பெருநகர் பகுதிகளில் அதாவது சென்னை கோவை மதுரையில் மட்டுமே நடைபெற்று வருகின்றன. கிராமப் பகுதிகள் சாலைத் திட்டத்தின்கீழ் மூன்று கட்டப் பணிகளில் இதுவரையில் 3 772 கிலோ மீட்டர் சாலைகளை அமைப்பதற்கும் மேம்பாடு செய்வதற்கும் ரூபாய் 19.16 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்காம் கட்டமாக 545.10 கிலோ மீட்டர் சாலைகளை மேம்பாடு செய்வதற்கு ரூபாய் 500 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : கிராமச் சாலைகள் சிறப்புத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி கோரப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது நேஷனல் ஹைவேஸ் ஸ்டேட் ஹைவேஸ்களில் அதிகமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் கிராமச் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்துக்கு லாயக்கில்லாததன் காரணமாக அதிகமான நிதி ஒதுக்கி அவற்றை பராமரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா .

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : ஏற்கெனவே நான் கூறியபடி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடுதலாக நிதி ஒதுக்குவது பற்றிய செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : சிறப்புத் திட்டத்தின் கீழ் 1 500 மக்கள் தொகை கொண்ட ஊர்கள்தான் இடம் பெறும். அந்த மக்கள் தொகை எண்ணிக்கையைக் குறைத்து சிறு ஊர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம்





உண்டா ? தார்ச்சாலைகள் போடப்பட்டு பேருந்துகள் செல்லாத காரணத்தால் அவை பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அது பற்றிய புகார் எதுவும் எனக்கு வரவில்லை. அது அனுப்பப்படுமானால் இந்த இலாகா பரிசீலிக்கும்.

## ஒன்றியங்களில் கால்நடை மருத்துவர் பதவிகள்.

*வினா எண். 120—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களில் தனியாக கால்நடை மருத்துவ அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய அரசு ஆலோசித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) மற்றும் (ஆ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி சங்கத்திலிருந்தும் தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்கள் சங்கத்திலிருந்தும் ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்கள் இருக்கும் இடங்களில் பி.வி.எஸ்.ஸி படித்த பட்டதாரிகளை நியமிக்கும்படி கோரியிருந்தார்கள். இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

[முற்பகல் 9.50]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே கால்நடை மருத்துவர்கள் இப்போது தனியாக இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே உள்ள கால்நடைகளுக்கு வியாதி ஏற்பட்டால் பொதுமக்கள் ஒன்றியத்திலேதான் புகார் செய்கிறார்கள். அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படுமா ? அந்த வகையில் துரித நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களை ஒன்றியங்களிலே நியமிக்க வேண்டும். இல்லையென்றால் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற சப்சென்டர்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகளை ஒன்றிய ஆணையரின் கீழ் கொண்டுவந்து அங்கே பணியாற்றுகின்ற முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் முதல் நிலை கால்நடை ஆய்வாளர்கள் கால்நடை விரிவாக்க அலுவலர்களாகப் பணியாற்றி

வருகிறார்கள். அவர்கள் பட்டப்படிப்பு படித்தவர்கள் அல்ல. இவர்கள் 11 மாத காலம் மட்டுமே பயிற்சி பெற்றவர்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகப் பல கால்நடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத்துறையில் பட்டப்படிப்புப் படித்தவர்களை நியமித்தால் அவர்கள் இத் திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கால்நடைகளுக்கு வரும் நோய் நொடிகளையும் அவற்றிற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் உடனுக்குடன் எடுப்பது இன்றியமையாதது. இவைகளைப் பட்டப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே செய்ய முடியும். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களில் பட்டப்படிப்பு படித்தவர்கள் விரிவாக்க அலுவலர்களாக இருப்பது நல்லது. இதனால் கால்நடை ஆய்வாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள். அவர்களை கிளை நிலையங்களிலும் தீவிர கால்நடைத் திட்டம் செயல்படும் பகுதிகளிலும் கேந்திர கிராம கால்நடைத் திட்டப் பகுதிகளிலும் உள்ள கிளை நிலையங்களிலும் கால்நடை ஆய்வாளர்களாக நியமனம் செய்யலாம்.

கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் பரிந்துரைகளின்மீது? தன்னுடைய கருத்தைக் கூறுமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநர் கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே கால்நடை மருத்துவ அதிகாரிகளை ஒன்றியங்களிலே நியமிப்பதை நான் வரவேற்கிறேன். அவர்கள் பணியாற்றுகின்ற பொழுது— ஒன்றியப் பகுதிகளிலே சப்-சென்டர்களும் இருந்து வருகின்றன. அவைகள் உதவி இயக்குநருடைய ஆணையின் கீழ் இருந்து வருகின்றன—அவர்களை நியமிக்கும் பொழுது அந்த இடங்களிலும் பணியாற்றுகின்ற முறையிலே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ? அதையும் சேர்த்துக் கவனிப்பார்களா .

மாண்புமிகு செல்வி பி டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே அதைப்பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

### *Syllabus for Higher-Secondary Education*

* 106 *Q.*—THIRU R. E. CHANDRAN JAYAPAL : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal under consideration to revise the syllabus in the Higher Secondary Schools in the State ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தில் பாடச்சுமை அதிகமாக உள்ளதெனவும் அதனைக் குறைக்க வேண்டும் எனவும் ஆசிரியர் மற்றும் கல்வி வல்லுநர்களிடமிருந்து வேண்டுகோள் வரப்பெற்றதின் பேரில் பொதுக் கல்விப் பாடத் திட்டத்தின் பகுதி 3ன் பிரிவு “ ஏ ” யில் உள்ள 13 பாடங்களில் ஆங்காங்கு சில பகுதிகளை மட்டும் நீக்குவதற்காகப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளினின்று ஆசிரியர்கள்/பேராசிரியர்கள் ஆகியோர் அடங்கிய 11 குழுக்கள் அமைக்கப்பட்டு அக் குழுக்கள் ஆராய்ந்து முடிவாக அளித்த பரிந்துரைகளின் மீது உரிய பாடத் திட்டக் குழுத் தலைவர்களின் ஒப்புதலையும் கவனத்தில் கொண்டு மேற்படி மேல்நிலைக் கல்வி பாடத் திட்டத்தின் பொதுக் கல்வி பகுதி 3ன்பிரிவு‘ஏ’யில் நீக்கப்பட்ட சில பகுதிகள் 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாளிட்ட அரசாணை எண் 775ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நீக்கப்பட்ட பகுதிகள் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் இப்போது சோதனைக் கூடங்கள் இல்லை. ஆகவே அந்த மேல் நிலைப் பள்ளிகளுக்கு அருகாமையில் இருக்கின்ற கல்லூரிகளிலே உள்ள சோதனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால், மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் கல்லூரிகளிலே உள்ள சோதனைக் கூடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லாமல் தாங்களாகவே சோதனைத் தேர்வுக்கான மார்க்குகளைப் போடுவதாகக் கூறுகிறார்கள். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

### பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு.

*வினா எண். 107—திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் டிப்ளமோ பெற்ற மாணவர்கள் நேரடியாக பி.இ. (பொறியியல்) படிக்க மூன்று வருட வேலை அனுபவச் சான்றிதழ் கேட்பதை நிறுத்திடும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அடுத்த கல்வியாண்டில் அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்தப் பொறியியல் டிப்ளமோ படித்தவர்கள் தாங்கள் பி. இ. பொறியியல் படிக்க வேண்டுமென்றால் மூன்று ஆண்டுகள் வேலை அனுபவ சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தச் சான்றிதழ் தேவை என்பதை நிறுத்தும் உத்தேசம் உண்டா? அதைப்பற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பொறியியல் டிப்ளமோ படித்தவர்கள் 3 ஆண்டுக் காலம் வேலை அனுபவத்தை வைத்துத்தான் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதிலே எந்த மாற்றமும் செய்வதற்கு இப்பொது உத்தேசம் இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்குகளிலே பொறியியல் படித்த மாணவர்கள் இதற்கு முன்னாலே அவர்கள் அந்தப் படிப்பை படித்து முடித்தவுடனே நேரடியாக பி.இ. பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். ஆனால், தற்போது 3 ஆண்டு அனுபவ சான்றிதழ் கோரப்படுகிறது. அப்படியின்றி பாலிடெக்னிக்குகளில் படித்து முடித்தவர்களை நேரடியாக பி. இ. படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ள அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த பாலிடெக்னிக் படித்தவர்கள் பட்டப் படிப்பிலே படிப்பதாக இருந்தாலும், வேறு எதற்காக இருந்தாலும், யூனிவர்சிட்டி போன்ற அமைப்புகள் முடிவு செய்யும். டெக்னிகல் எஜூகேஷன் போர்டு முடிவு செய்ய வேண்டும். ஆனால், இப்போது அந்த உத்தேசமில்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மேல்நிலை வகுப்புகளில் தமிழ்நாடு முழுவதும் எத்தனை பேர்கள் படிக்கிறார்கள்? அந்த இடங்களை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதாவது அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்பொழுது என்னிடத்திலே அந்த விவரம் இல்லை. ஆனால், போன வருஷம், அதற்கு முந்தைய ஆண்டு இருந்ததைவிட, கொஞ்சம் இடங்களை அதிகரித்ததாக அறிகிறேன்.



## அய்யன்குளத்திற்கு வரத்துக் கால்வாய்.

குறுகியகால வினா எண் 2—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருகேயுள்ள வரதமாநதி அணையிலிருந்து அந்த அணைக்கு உட்பட்ட அய்யன்குளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டுவதற்கான கோரிக்கையை அப் பகுதி விவசாயிகள் வற்புறுத்தி வந்ததை அரசு அறியுமா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:

(அ) மற்றும் (ஆ): மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து கால்வாய் மூலம் அய்யன்குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது. அய்யன்குளத்திற்கு வந்து சேரும் மழை நீரும், மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து வரத்துக்கால்வாய் மூலம் வந்து சேரும் நீரும், அக்குளத்தை நிரப்பப் போதுமானதாலும் வரதமா நதியிலிருந்து இக் குளத்திற்கு புதிய ஒரு வாய்க்கால் வெட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

## விவசாயிகளது கடன்கள்.

குறுகியகால வினா எண் 3—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் கடன்களை ரத்து செய்துவிட்டு, பின்னர் இழப்பீடு கோரிக்கை வைத்தால் அதனை பரிசீலிக்கும் என மத்திய விவசாய அமைச்சர் உறுதி கூறியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த உறுதியின் அடிப்படையில் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) பத்திரிகை செய்தியைத் தவிர, வேறு தகவல் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1980 பிப்ரவரி 11

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்த விவசாயக் கடன்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டிருந்தால் அதையும் ரத்து செய்யும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விகளெல்லாம் கூட்டுறவுக் கடன்களைப் பற்றியது, தனியார் கடன்களைப் பற்றியது அல்ல.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டு விவசாயிகளினுடைய கடன்களை மாநில அரசு ரத்து செய்தால் அதற்கு உறுதுணையாக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று மத்திய அமைச்சர் இரண்டு மூன்று இடங்களில் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். தமிழக விவசாயிகள் கடன்களைக் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமைகளை அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே, இந்தக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்துவிட்டு, ரிசர்வ் பேங்கிலே அந்தக் கடனை ஈடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் கேட்டுக் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மத்திய மாநில விவசாய அமைச்சர் கடந்த 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 28 ஆம் நாள் சென்னைக்கு வருகை தந்தபொழுது பத்திரிகை நிருபர்களுடைய கூட்டத்திலே இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலே இந்த அரசுக்கு அதிகாரப்பூர்வமாக எந்தத் தகவலும் அனுப்பப்படவில்லை. அப்படி அனுப்பினால் கண்டிப்பாக இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே வாங்கப்பட்ட கடன்களையெல்லாம் கட்ட முடியாமல் இருக்கிறோம் என்று விவசாயிகள் கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருப்பது இன்று நேற்று அல்ல. பழைய அரசிலேயும் இப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு கடன சம்பந்தமாக மசோதா கொண்டு வரும் இந்தச் சமயத்தில், மத்திய அரசுதான் முந்திக் கொண்டு, தானே கடன்களைத் தீர்க்கத் தயாராக வருவதாக, அந்த முறையிலே இன்றைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது. இதை முன்னுதாரணமாகக் கொண்டு, தமிழக அரசு விவசாயிகளின் பிரச்சனைகளை, கடன்களைத் தீர்ப்பதற்கு, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு........



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவுபடுத்த வேண்டாம். சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: அதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாநில அரசைக் காட்டிலும், மைய அரசுக்கு அதிக அக்கறை இருக்கும் என்றால் கண்டிப்பாக மைய அரசு, ரிசர்வ் வங்கியின் உதவியோடு கடன்களை ரத்து செய்ய முடியும். அப்படி முன் வந்தால் கண்டிப்பாக இந்த அரசு அவர்களுடைய கடமை உணர்வைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு இதுவரையிலே அப்படி எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த அரசு மூலம் மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். உடனடியாகக் கடனை வஜா செய்யவும், அதற்குண்டான நடவடிக்கைகளில் ஈடுபடவும் வகைசெய்ய வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 9 ஆம் தேதிய "ஹிந்து" பத்திரிகையில் நம்முடைய மத்திய விவசாய அமைச்சர் திரு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள், ரிசர்வ் வங்கி துணை கவர்னர் அவர்களைச் சந்தித்து தமிழக விவசாயிகள் கடனில் மூழ்கியிருக்கின்ற சூழ்நிலையைக் கூறி, அதற்கு எப்படி நிவாரணம் அளிக்க வேண்டும் என்று பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். நம்முடைய அமைச்சரவர்கள் இந்தச் செய்தியை அறிவார்களா? அதற்கு முன் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் செய்தியையும் கூடப் பத்திரிகையின் மூலமாகத்தான் நானும்கூடப் பார்த்தேனே தவிர, அதிகாரப்பூர்வமாக இதுவரையிலே எந்த அறிக்கையோ, எந்தக் கடிதமோ இந்த அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட மத்தியிலேயிருக்கின்ற பிரதம அமைச்சரின் மூலமாகக் கூட கேட்டுக்கொள்ள முடியும். அப்படிக் கேட்டுக்கொண்டு இந்த அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

இந்த அரசைப் பொறுத்த அளவிலே, விளைகின்ற விளைபொருளுக்கும் கூட நியாயமான விலையைப் பெற்றுத் தர வேண்டுமென்றுதான் அன்று வந்திருந்த மத்திய அரசின் மாநில விவசாய அமைச்சரிடத்திலும் கூட கூறிக்கொண்டேன்.

வருகின்ற 15 ஆம் தேதி ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலேயும், நான் கலந்துகொள்ள இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் எழுப்பிய பிரச்னைபற்றி ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான்கு நாட்களுக்கு முன்பு முதலமைச்சரவர்களும் நானும் மின்சாரத்துறை அமைச்சரவர்களும் நமது மத்திய நிதி அமைச்சர் (ஆர். வி.) ஆர். வெங்கட்டராமன் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்னைப்பற்றிப் பேசினோம். ரிசர்வ் பாங்க் கவர்னரோடு இதுகுறித்துப் பேசுவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள். ரிசர்வ் பாங்க் கவர்னர் அவர்களைச் சந்தித்து என்னையும் பேசுமாறு கேட்டிருக்கிறார்கள். அனுதாபத்தோடு இந்தப் பிரச்சனையை அணுகுவதாக அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக மத்திய சர்க்கார் உதவும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

### பழனி திருக்கோயில் முடியெடுப்போர் முன்னேற்ற சங்கத்தின் வேண்டுகோள்.

வினா 201—திரு. எஸ்.ஜே.சாதிக் பாட்சா: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி திருக்கோயில் ஊழியர்கள் மூலம் நேரிடையாக தலைமுடி விற்பனை செய்யவேண்டும் என்று 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாளன்று பழனி திருக்கோயில் முடியெடுப்போர் முன்னேற்ற சங்கம் அரசுக்கு வேண்டுகோள் மனு அனுப்பி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) பழனி திருக்கோயில் முடியெடுப்போர் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளரை தம் மனுவின்மீதான ஆணைக்கு இந்து சமய அறநிலைத்யதுறை ஆணையாளரை அணுகுமாறு பணிக்கப்பட்டது. ஆனால், அவர் ஆணையாளரை இது குறித்து அணுகவில்லை.



### அசாதாரண மரணங்களின் எண்ணிக்கை.

வினா 202—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் தற்கொலை போன்ற அசாதாரண மரணங்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இதுபோன்ற நிகழ்ச்சிகளை தடுக்க அரசு மேற்கொள்ள எண்ணியுள்ள தடுப்பு நடவடிக்கைகள் யாவை?

விடை—(அ) தற்கொலை போன்ற அசாதாரண மரணங்களின் எண்ணிக்கை—

| | |
|---|---|
| 1975 .. .. .. .. .. | 12,076 |
| 1976 .. .. .. .. .. | 10,589 |

(ஆ) தற்கொலை நிகழச்சிகள் ஒரு சமூகக் கொடுமையேயாகும். எனவே, தற்கொலையின் எண்ணிக்கையை குறைப்பதற்கான பரிகாரம் காண்பதும் மற்ற அசாதாரண மரணங்களைத் தடுப்பதும் கடினமான காரியம்.

### கிரிமினல் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்ட காவல் துறையினர்.

வினா 203—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிரிமினல் குற்றங்களுக்காக 1975, 1976-ம் ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட காவல் துறையினர் எத்தனை பேர்?

விடை—

| | |
|---|---|
| 1975ல் .. .. .. .. .. | 55 பேர்கள். |
| 1976ல் .. .. .. .. .. | 53 பேர்கள். |

### எம். எஸ்., எம். டி. மாணவர்கள் மற்றும் அவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம்.

வினா 204—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள எம். எஸ்., எம். டி., மாணவர்கள் அவுஸ் சர்ஜன்களின் வேலை நிறுத்தத்தினால் மருத்துவமனைகளின் வேலைகள் பாதிக்கப்பட்டதா?

[1980 பிப்ரவரி 11

(ஆ) அவர்களது கோரிக்கைகள் யாவை?

(இ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—(அ),(ஆ),(இ). விவர அறிக்கை *ஒன்று பேரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

## குப்பங்குழிப் பகுதியில் திருமணமண்டபம்.

வினா 205—திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயில் ஒன்றியப் பொது நிதியில் இருந்து குப்பங்குழிப் பகுதியில் சுமார் 2 இலட்சம் அளவில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—அரசால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

## சின்ன சேலத்தில் புதிய மருந்துவமனைக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 206—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுமார் 27,000 மக்கள் தொகை கொண்ட செலக்சன் கிரேடு பேரூராட்சியான சின்னசேலத்தில் புதிய மருத்துவமனை ஒன்று கட்டிடவும், எம். பி. பி. எஸ்,. டாக்டர்களை நியமிக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமுல்படுத்தப்படும்.

விடை—(அ) மற்றும் (ஆ) சின்னசேலத்தில் ஒரு மருந்தகம் ஒரு மருத்துவர் மற்றும் தேவையான இதர மருத்துவ அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. புதிய மருத்துவமனை கட்ட திட்டம் தற்போது ஒன்றும் இல்லை.

## காவல் துறையினரால் தொடரப்பட்ட கிரிமினல் வழக்குகள்.

வினா 207—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

* . . ... ...360ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 11]

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 1975 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய இ. பி. தொ. 307-வது பிரிவின்படி காவல்துறையினரால் தொடரப்பட்ட வழககுகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை?

(இ) இந்த வழக்குகளின் பூர்வாங்க விசாரணையின் போதே 307-வது பிரிவு பொருந்தாது என்று நீதி மன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை

விடை—

| | வருடம். | | | | | தொடரப்பட்ட வழக்குகள். |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 1975 | .. | .. | .. | .. | 186 |
| | 1976 | .. | .. | .. | .. | 151 |
| | 1977 | .. | .. | .. | .. | 249 |
| (ஆ) | 1975 | .. | .. | .. | .. | 3 |
| | 1976 | .. | .. | .. | .. | 7 |
| | 1977 | .. | .. | .. | .. | 16 |

(இ) 1975 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி முடிய தொடரப்பட்ட மொத்த வழக்குகளில் 307-வது பிரிவு பொருந்தாது என நீதி மன்றங்களால் தள்ளுபடி செய்யப் பட்ட வழக்குகள்.—

| வருடம். | | | | | | தள்ளுபடி செய்த வழக்குகள். |
|---|---|---|---|---|---|---|
| 1975 | .. | .. | .. | .. | .. | 66 |
| 1976 | .. | .. | .. | .. | .. | 42 |
| 1977 | .. | .. | .. | .. | .. | 52 |

தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் தள்ளுபடி செய்த வழக்குகள் :—

| வருடம். | | | | | | தள்ளுபடி செய்த வழக்குகள். |
|---|---|---|---|---|---|---|
| 1975 | .. | .. | .. | .. | .. | 2 |
| 1976 | .. | .. | .. | .. | .. | 2 |
| 1977 | .. | .. | .. | .. | .. | 1 |

1980 பிப்ரவரி 11

## கடலூர் தலைமை மருத்துவமனை.

வினா 208—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கடலூரிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஈ.ஸி.ஜி. போன்ற பரிசோதனைக்குரிய கருவிகளை நிறுவி அந்த மருத்துவமனையை அபிவிருத்தி செய்யும் ஆலோசனை அரசிடம் உள்ளதா ?

விடை—

கடலூர் அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ஒரு புது ஈ.ஸி.ஜி. பரிசோதனைக் கருவி வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்.

வினா 209—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றும் சுமார் 500-க்கு மேற்பட்ட உதவி இளநிலைப் பொறியாளர்களில் சுமார் 400-க்கு மேற்பட்டவர்கள் பல ஆண்டு காலமாக தொடர்ந்து பணியாற்றியும் கூட அவர்களது பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) உண்மையன்று. ஒரே ஒருவரின் பணி மட்டுமே வரன் முறை செய்யப்பட வேண்டியுள்ளது.

(ஆ) அவரின் பணியையும் வரன்முறை செய்வதற்கான குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## சென்னை சைதாப்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை.

வினா 210—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு மருத்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.



1980 பிப்ரவரி 11]

## பெரியகுளம் கிராமத்தில் ஏரி கட்டும் திட்டம்.

வினா 211—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த பெரியகுளம் கிராமத்தில் ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) உடைப்புகள் காரணமாக பல வருடங்கட்கு முன்ட சத்தியமங்கலம் தொகுதி, வரதம்பாளையம் கிராமத்தில் இருந்த 'பெரியகுளம்' என்ற குளம் தூர்ந்துபோனது. அந்த குளம் இருந்த இடத்தில் புதிதாக ஒரு குளம் அமைக்கும் செயற்குறிப்பு பாசனத்துறை அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் விவரம் ஆய்வு முடிந்த பின்னரே தெரியவரும்.

## *Levy and collection of Property tax by Madras Corporation.*

*Q.* 212—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Local Administration be pleased to place on the Table of the House a copy of the instructions issued to the Madras Corporation on the levy and collection of property tax ?

விடை—

அரசு ஆணையின் படிவம்* அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளது.

## *Kalaiarangam Cinema Theatre at Trichy.*

*Q.* 213—THIRU N. KITTAPPA : Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) whether the 'Kalaiarangam' Cinema Theatre, at Trichy is to be leased out to private parties ; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) ஆம்.

*362–223ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது

(இ) முதற்கண் கலையரங்கத் தொகுதியைச் சேர்ந்த அரங்கப்பகுதி, திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த டாக்டர் எம். சிவக்கண்ணு என்பவருக்கு ரூ. 23,800 என்ற மாதாந்திர குத்தகைத் தொகைக்கு 1-7-77 முதல் ஓர் ஆண்டு காலத்திற்காக குத்தகைக்கு விடப்பட்டது. 1-7-78 முதல் இந்த அரங்கம் திருச்சிராப்பள்ளி திருவாளர்கள் நியூ பத்மா என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ரூ. 36,101 மாதாந்திர வாடகைக்கு மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

## *Resolution passed by Coimbatore Municipal Council*

*Q.* 214—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Coimbatore Municipal Council has adopted resolutions to post male and female teaching staff working in the Educational Institutions run by it nearer to their residential areas ;

(*b*) if so, whether the resolution has been given effect to ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பைரோக்குளோர் என்ற கனிப்பொருள் கண்டுபிடிப்பு.

வினா 215—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு புவியியல்துறை இம்மாநிலத்தில் பைரோக்குளோர் என்ற கனிப்பொருளைக் கண்டெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

விடை—

(அ) ஆம். வட ஆற்காடு மாவட்டத்தில் கொரட்டி அருகே

(ஆ) வடஆற்காடு மாவட்டத்தில் கொரட்டியின் அருகே காணப்படும் கார்போனைட் கற்களில் நையோபியடேன்டேள ஆக்ஸைடுகளாலான பைரோக்குளோர் என்ற கனிமம் தனித்தனித் துகள்களாக உற்பத்தியான தாதுவாக கிடைக்கிறது. இந்த



கனிமம் சுமாரான அளவு யுரேனியத்தையும் கொண்டுள்ளது. 42 சதவிகிதம் நையோபிய ஆக்ஸைடு, 21 சதவிகிதம் யுரேனிய ஆக்ஸைடு, 5 சதவிகிதம் டேன்டேள ஆக்ஸைடு இவைகளைக் கொண்ட இந்த பைரோக்குளோர் கனிமம் சுமார் 800 டன்கள் அளவு கிடைப்பதாக ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த தாது குறைந்த தரம் வாய்ந்ததாலும், 30லிருந்து 45 மீட்டர் மட்டும் வேலைக்குகந்த சிறந்த குழி—சுரங்க முறையை உபயோகித்து தோண்டியெடுப்பதை முன்னிட்டும் இந்த பைரோக்குளோரின் தொகுப்பு மிகச்சிறிய கனிவளமாகவே கருதப்படுகிறது. மேலும் இந்த கனிமம் மொத்த கல்லின் கொள்ளளவில் 0·12லிருந்து 0·25 சதவிகிதமே கிடைக்கிறது. எனவே இந்தக் கனிமங்களை லாபகரமான முறையில் தோண்டி எடுத்து உபயோகப்படுத்த முடியாது எனக் கருதப்படுகிறது.

## தருமபுரி மாவட்டத்திலுள்ள தாதுப்படிவங்கள்.

வினா 216—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(எ) தமிழ்நாடு புவியியல்துறை தருமபுரி மாவட்டம், மோட்டுக்குளக்கரையில் காப்பர் சல்பைடு என்னும் தாதுப்படிவங்கள் பெருமளவில் இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளதா ?

(பி) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(எ) & (பி): தருமபுரி மாவட்டம் மோட்டுக்குளக்கரையில் காப்பர் சல்பைடு என்னும் செம்பு கனிவளம் பெருமளவில் இல்லை என்று மாநில புவியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

## தனியார் பேருந்து ஓட்டுநர், நடத்துநர் அடிப்படை ஊதியம்.

வினா 217 —திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகளில் பணியாற்றும் ஓட்டுநர் நடத்துநர் முதலியோர்க்கு அடிப்படைச் சம்பளம் ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1980 பிப்ரவரி 11

விடை—

(அ) ஓட்டுநர், நடத்துநர் உட்பட தனியார் போக்குவரத்துக்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதிய விதங்கள் 15—2—1979 முதல் அமுலுக்கு வரும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஓட்டுநர்களுக்கு மாத அடிப்படை ஊதியம் ரூ. 150-ம் அகவிலைப்படி ரூ. 100-ம் என்றும் நடத்துநருக்கு அடிப்படை ஊதியம் ரூ. 125-ம் அகவிலைப்படி ரூ. 75 என்றும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 19—1—79ன்படி அகவிலைப்படி சென்னை மாநகருக்கான நுகர்வோர் விலைவாசிப் புள்ளியுடன் (அதாவது 1960—100 என்ற அடிப்படையில் 325 புள்ளிகளுக்கு) இணைக்கப்பட்டுள்ளது. ஒரு புள்ளிக்கு ரூ. 0·75 என்ற கணக்கின்படி அகவிலைப்படி ஏற்ற இறக்கத்திற்கு தகுந்தாற்போல் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும் மாற்றம் ஆண்டுக்கு ஒரு முறை ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செய்யப்பட வேண்டும். இதற்கான முந்தைய சனவரி மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் முடிய உள்ள 12 மாதங்களில் சராசரி அகவிலைப் புள்ளிகளைக் கணக்கிட வேண்டும். முதல்மாற்றம் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமுலாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் 1978-ம் ஆண்டிற்கு சராசரி 316 புள்ளியாக உள்ளது. ஆனால் இது 9 புள்ளி குறைவாக இருப்பதால் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் அகவிலைப்படியில் ரூ. 6·75 நஷ்டமடைவர்.

### அரிஷ்டம், மதுக்கஷாயம் விற்பதற்கு தடை விதித்தல்.

வினா 218—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு காதி, கைத்தறி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போதையூட்டக்கூடிய அரிஷ்டம், மதுக்கஷாயம் போன்றவற்றை தமிழ்நாட்டில் விற்பதற்கு தடை விதித்திட அனுமதி கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு விண்ணப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

விடை —

(அ) & (ஆ) : போதையூட்டக்கூடிய அரிஷ்டம், மதுக்கஷாயம் போன்றவற்றை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதை மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முகத்தான், 1956-ம் ஆண்டு மருந்துப்பொருட்கள் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) விதிகளை தக்கபடி மாற்றியமைக்கும்படி மத்திய அரசை இவ்வரசு கேட்டுள்ளது. இது சம்பந்தமான மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.



1980 பிப்ரவரி 11]

### *Randhawa Committee's Report on Farm Universities.*

*Q.* 219—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) Whether the Central Government has sought the views of the State Government on the report of Randhawa Committee on Farm Universities ; and

(*b*) If so, the details of the views provided by the State Government to the Centre ?

விடை—

(அ) ஆம்

(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் பற்றி மொத்தம் 125 பரிந்துரைகள் அடங்கிய டாக்டர் ரந்தவா குழுவின் அறிக்கையில், 16 பரிந்துரைகளின் மீது மட்டுமே இவ்வரசின் கருத்து மத்திய அரசினால் வேண்டப்பட்டது. அப் பரிந்துரைகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு நடவடிக்கை எடுத்த பின் தக்க பதில் இந்திய ஆராய்ச்சி கழகத்திற்கு அனுப்பப்படும்.

### *Study of Tuberculosis among Industrial Workers.*

*Q.* 220—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Health be pleased to state—

(*a*) Whether the Government chest Institute has undertaken a study of Tuberculosis among the workers in Industrial undertakings in and around Madras City recently :

(*b*) If so, the details thereof.

விடை —

(அ) ஆம்

(ஆ) விவர அறிக்கை * சட்டமன்றப் பேரவையின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது

### பள்ளித் தணிக்கைக்குழு.

வினா 221—திரு. செஞ்சி ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாவட்டக் கல்வி அலுவலர்கள் உயர்நிலைப் பள்ளிகளை ஆய்வு செய்கின்ற காலங்களில் மற்றத் துறையில் தேர்ந்த வல்லுநர்களுடன் தமிழில் தேர்ந்த வல்லுநர்களையும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

---

.. 362 ம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப் பெற்றுள்ளது

[1980 பிப்ரவரி 11

விடை—

பள்ளித் தணிக்கைக் குழுவில் முதுநிலைத் தமிழாசிரியர்களையும் இடம் பெறச் செய்வதற்கான அரசு ஆணை 9—5—79 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### *Issue of driving licences.*

*Q.* 222—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Transport be pleased to state—

(*a*) Whether licences for driving vehicles are to be issued to candidates passed out from recognised institutions in future ;

(*b*) If so, the details thereof.

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் திடீர் வேலை நிறுத்தத்தைத் தடுக்கச் சட்டம்.

வினா 223—திரு. என். கிட்டப்பா : திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் திடீர் வேலை நிறுத்தத்தை தவிர்க்க மோட்டார் வாகனச் சட்டத்தினை திருத்த அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) உரிமைதாரர் மற்றும் டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை தடை செய்ய வேண்டி அவர்களுடைய வாகனங்களை தகுந்த காரணங்களின்றி சாலைகளிலிருந்து விலக்கிக் கொள்வது மற்றும் விலக்கிக்கொள்ள செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1940 திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.



1980 பிப்ரவரி 11]

### திருவில்லிபுத்தூர் தொகுதியில் தாய் சேய் நல விடுதி அமைத்தல்.

வினா 224—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்ராயிருப்பு ஒன்றியம், கோவிந்தநல்லூர், சீல்நாயக்கன்பட்டி அல்லது ஆட்டனேரி ஆகிய ஊர்களில் ''தாய் சேய் நல விடுதி'' அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

### *Memorial for the Maruthu Brothers in Madurai.*

*Q.* 225—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Information and Religious Endowments be pleased to state ;

(*a*) Whether the State Government has proposed to set up a Memorial for the Maruthu Brothers in Madurai District ; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) மருது சகோதரர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குவதற்காக ஒரு குழு அமைக்கப்படவிருக்கிறது.

### *Award for best films and artists.*

*Q.* 226—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Information and Religious Endowments be pleased to state —

(*a*) the details of the revised scheme for the award for best films and artists in this state.

(*b*) how is the new scheme different from the existing schemes?

விடை —

(அ) மற்றும் (ஆ) அவையின் முன் * அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 364 ம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது

[1980 பிப்ரவரி 11

பஞ்சாயத்து ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு.

வினா 227—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களில் பணிபுரியும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு பதவிகள் எந்த வருடத்திலிருந்து ஒன்றியங்களுக்கு அனுமதிக்க ஆணை பிறப்பித்துள்ளது ?

விடை —

1971 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாளிட்ட கல்வித்துறை ஆணை எண். 288-ன் படி அனைத்துப் பள்ளிகளிலும், ஒன்றிய பள்ளிகள் உள்பட, பணியிடங்களில் 10 சதவிகிதத்தைத் தேர்வுநிலைப் பணியிடங்களாக உயர்த்துமாறு உத்திரவிடப்பட்டது. பின்னர் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் 10 ஆண்டு காலங்களுக்கு மேல் தொடர்ந்து பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை வழங்க 1974 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 20 ஆம் நாளிட்ட கல்வித்துறை ஆணை எண். 1009-ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

சென்னைத் துறைமுகத்தில் தீ விபத்து.

வினா 228—திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாள் அன்று சென்னை துறைமுகத்தில் கற்பூரக் குவியல் பெருமளவில் தீக்கிரையாகினவா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரங்கள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாள் அன்று சென்னை துறைமுகத்தில் வடகோடியில் உள்ள கிடங்கில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தினால் அங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 400 பெட்டிகள் கற்பூரம், பல இலட்சம் மதிப்புள்ள இரசாயனப் பொருட்கள், மற்றும் பல சரக்குப் பொருட்கள் தீக்கிரையாகின. உயிர்சேதம் எதுவுமில்லை. இதனால் ஏற்பட்ட நட்டம் சுமார் ரூ. 15 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.



1980 பிப்ரவரி 11]

மதுரை மாநகராட்சித் தொழிலாளர் கோரிக்கை மனு.

வினா 229—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாநகராட்சித் தொழிலாளர்கள் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தங்களது கோரிக்கைகள் அடங்கிட்ட மகஜரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) கோரிக்கைகள் மாநகராட்சி மற்றும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் திட்டப் பணிகள்.

வினா 230—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வாலிநோக்கம்—மாரியூர் தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் திட்டத்தின் கீழ் இதுவரை முடிந்துள்ள செயல் பகுதி விகிதம் எவ்வளவு ?

(ஆ) அதற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

விடை —

(அ) இதுவரை 50 சதவிகிதம் அளவிற்கு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஆ) 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை ரூ. 72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

*Special aid to industries situated in flood hit areas.*

Q. 231—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Rural Industries pleased to state :

(a) Whether the Industrial Development Bank of India has agreed to offer special aid to the industries situated in flood–hit areas in this state.

(b) If so, the details thereof.

விடை —

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ( I.D.B.I. ) ஒரு சிறப்புத் திட்டத்தை வகுத்து அதனை அமுலாக்க 1978-ம் ஆண்டு நவம்பர் திங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு அனுப்பியது. இந்தத் திட்டத்திற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தேவையான விளம்பரம் கொடுத்தது என்னும் இதுவரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கோரி ஒரு விண்ணப்பம் கூட தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு வரவில்லை.

## திருவண்ணாமலைக் கோட்டத்தில் பருவமழை தவறியதால் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு.

வினா 232—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நடப்பாண்டில் திருவண்ணாமலை கோட்டத்தில் பருவமழை தவறியதன் காரணமாக, மணிலா, சம்பா பாதிக்கப்பட்டிருக்கிறது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள நிவாரணம் யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) பாதிக்கப்பட்ட நஞ்சை நிலங்களுக்கு வருவாய் வாரிய நிலை ஆணையின்படி பருவகால வஜா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புஞ்சை நிலங்களுக்கு ஏற்கனவே உள்ள அரசு ஆணைகளின்படி அடிப்படை தீர்வை வசூலிக்கப்படுவதில்லை.

## தனியார் பஸ் கம்பெனிகளுக்கு பெர்மிட் வழங்குவதற்கு கடைப்பிடிக்கும் முறை.

வினா 233—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பஸ் கம்பெனிகளுக்கு பெர்மிட் வழங்குவதில் கடைபிடிக்கப்படும் மார்க் அடிப்படையை மாற்ற சட்டத் திருத்தம் குறித்து துறை அரசுக்கு பரிந்துரைத்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?





விடை —

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## பனையூர் குளத்தில் நீர்பிடிப்பு இடங்களில் நிலச் சுவான்தார்கள் ஆக்கிரமிப்பு.

வினா 234—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி பனையூர் குளத்தில் சில நிலச்சுவான்தார்கள் நீர்பிடிப்பு இடங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாய் ஆக்கிரமிப்பாளர்கள், கோவில்பட்டியில் உள்ள மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தொடர்ந்துள்ள வழக்கில் தற்போதுள்ள நிலையை வழக்கு முடியும்வரையில், நீடிக்கும்படி, மாவட்ட முன்சீப் உத்தர விட்டுள்ளார்.

## முதியோர் கல்வி நிலையங்கள்.

வினா 235—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவித் தொகையுடன் தமிழகத்தில் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல் ஆரம்பிக்கப்பட்ட முதியோர் கல்வி நிலையம் எத்தனை?

(ஆ) தனியார் நிறுவனங்கள் இந்த திட்டத்தை செயல் படுத்த அனுமதி கோரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது?

[1980 பிப்ரவரி 11

விடை —

(அ) 6,667 மையங்கள்.

(ஆ) ஆம்.

(இ) கீழ் குறிப்பிட்டுள்ள 28 தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது :—

1. தமிழ்நாடு பெண்கள் தொண்டு நிறுவனம், சென்னை.

2. திரு. இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, கோயம்புத்தூர்.

3. கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு அறக்கட்டளை, ஈரோடு.

4. தமிழ்நாடு காந்தி சமாரக் நிதி, மதுரை.

5. தமிழ்நாடு அடிப்படைக் கல்விச் சங்கம், மதுரை.

6. காந்தி நிகேதன் ஆசிரமம், டி. கல்லுப்பட்டி.

7. தமிழ்நாடு தொடரும் கல்விக் கழகம், சென்னை.

8. தென்னிந்திய இந்தி பிரச்சார சபை, சென்னை.

9. சென்னை இலக்கியக் கழகம்.

10. காந்தி கிராமம் அறக்கட்டளை, காந்திக்கிராமம்.

11. அமைதித்தீவு, களக்காடு (Island of Peace)

12. மதுரை மாவட்ட முறைசாராக் கல்விக்கழகம், மதுரை.

13. இந்தியப் பெண்கள் சங்கம், சென்னை.

14. கிராம நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் திட்ட நிறுவனம்., காந்திகிராமம்.

15. மக்கள் சங்கம், மதுரை.

16. மதுரை தெற்கு வட்டம் கல்விச் சங்கம், மதுரை.

17. அரநாடு வெள்ளாளர் சங்கம், திருவானைக்கோவில்.

18. திரு. சர்குரு சேவா சமரச சங்கம், குன்னூர்.

19. திரு. விவேகானந்தா மருத்துவ சங்கம், எழும்பூர்.



1980 பிப்ரவரி 11]

20. வெண்ணந்தூர், கிராம சமுதாய பொருளாதார மற்றும் கலாச்சார கழகம் (சேலம் மாவட்டம்).

21. மக்கள் கல்விச் சங்கம், மதுரை.

22. அமலா குழந்தைகள் காப்பகம் மற்றும் மகளிர் மன்றம், கன்னியாகுமரி.

23. நாமகிரிப்பேட்டை அன்னை கஸ்தூரிபா காந்தி கிராம வளர்ச்சி சங்கம்.

24. காந்தி கிராமம் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் பொது அறக்கட்டளை, மதுரை.

25. கிறித்துவ இளம் பெண்கள் சங்கம், சென்னை. (Y.W.C.A.).

26. மண்டல முதியோர் கல்விக்குழு, சென்னை.

27. ஓமலூர் கிராம சமுதாய பொருளாதார மற்றும் கலாச்சாரக் கழகம்.

28. தென்னிந்திய முர்துழாவிய கல்வி மற்றும் கலாச்சார அமைப்பு, சென்னை.

(Murthuzavia Educational and Cultural Foundation of South India.)

### Accidental death at Velacheri.

Q. 236—THIRU N. KITTAPPA : Will the Honourable Chief Minister be pleased to state :

(a) whether death due to drowning in open wells in Velacheri area, near Madras have been reported to the Police about the 12th December 1978 ; and

(b) the steps taken to guard against such accidents ?

விடை —

(அ) சென்னை வேளச்சேரி பகுதியில் 11—12—78 அன்று காலை சுமார் 6—30 மணி அளவில் ராமன் என்பவரது மனைவி கிருஷ்ணவேணியும், அவருடைய இரு மகன்களும் வழக்கம்போல் கிணற்றில் குளிக்கச் சென்றனர். அவர்கள் குளித்துக் கொண்டு இருக்கும் பொழுது வழுக்கி கிணற்றுள் விழுந்துவிட்டனர். இதுபற்றி வேளச்சேரியைச் சேர்ந்த சுகுமார் என்பவர் வேளச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதன் தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடத்தப்பட்டது.

(ஆ) இம்மாதிரி விபத்துக்கள் இனி ஏற்படுவதைத் தவிர்க்க அத்திறந்த கிணற்றை சுற்றிலும் சுவர் எழுப்புமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உள்ள முதுநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதம்.

வினா 237—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கபுரம் நெமிலி காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் முதுநிலை இளநிலை ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதம் (செலக்ஷன் கிரேடு) வழங்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) 257 முதுநிலை ஆசிரியர்களுக்கும் 302 இளநிலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

*Special labels for Drugs supplied in Government Hospitals.*

*Q.* 238—THIRU N. KITTAPPA: Will the Honourable the Minister for Health be pleased to state—

(*a*) whether the Drugs supplied to Government Hospital are to bear special labels ; and

(*b*) If so, the details thereof

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகள் கையாடல் செய்வதை தடுப்பதற்கும், அவ்வாறு மருந்துகள் கையாடல் செய்யும்போது அத்தகைய நண்பர்களை எளிதில் கண்டுபிடித்து தக்க தண்டனை அளிப்பதற்கும் அரசு மருத்துவ மனைகளுக்கு தரமான மருந்துகள் வழங்குவதற்கும், அரசு மருத்துவ மனைகளில் 1—4—79 ஆம் தேதியிலிருந்து வழங்கப்படும் மருந்துகள் அனைத்தும் சிறந்த சிப்பங்களில் அரசு சின்னங்கள் பொறிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும் என்று அரசாணை பிறப்பித்துள்ளது.



திருநெல்வேலியில் மாவட்ட நீதிமன்றங்கள் கட்டிடம்.

வினா 239—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றங்கள் கட்டடம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது.

(ஆ) கொக்கிர குளத்திலேயே கட்ட அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றங்களுக்காக கட்டடங்கள் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து கேட்கப்பட்ட திட்டமும் மதிப்பீடும் எதிர்பார்க்கப்படுகின்றன.

(ஆ) ஆம்.

*Salem Museum.*

*Q.* 240—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Education be pleased to state :—

(*a*) whether the Salem Museum is to be taken over by the Government Central Museum from April, 1979 ; and

(*b*) If so, the details thereof

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேலத்திலுள்ள அருங்காட்சியகத்தை தமிழக அரசு 24–3–79 அன்று எடுத்துக் கொண்டது. மேற்படி அருங்காட்சியகம் சென்னையிலுள்ள அருங்காட்சியக இயக்குனரின் பொறுப்பில் 24–3–79 முதல் நடைபெற்று வருகிறது.

பணி நீக்கம் செய்யப்பட்ட பொறியாளர்கள்.

வினா 241—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

" தமிழ் நாடு பொறியியல் சங்கம் 1977-ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியில் நடத்திய போராட்டத்தின்போது உறுதி அளித்தபடி 165 பொறியாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டு விட்டனரா ?"

விடை —

பணி நீக்கம் செய்யப்பட்டப் பொறியாளர்கள் அனைவரும் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுவிட்டனர்.

[1980 பிப்ரவரி 11

## குளத்துப் பாளையம் கிராமத்திலுள்ள பொதுக் கிணற்றில் நீர் எடுத்தல்.

வினா 242— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் குனியமுத்தூர் பேரூராட்சி குளத்துப் பாளையம் கிராமத்திலுள்ள பொதுக் கிணற்றில் பொது மக்கள் நீர் எடுக்க அஞ்சுவது அரசு அறியுமா ?

(ஆ) அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## விளம்பரத்திற்கென தனியிடங்கள்.

வினா 243—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விளம்பரத்திற்கென தனியாக இடங்களை ஒதுக்க வேண்டுமென்ற யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

## வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக்கூடம் அமைத்தல்.

வினா 244—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

"சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அதில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?"



1980 பிப்ரவரி 11]

விடை —

வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக, திருக்குறள் நூல்கள், திருக்குறள் உரைகள், மொழி பெயர்ப்புகள் ஆகியவை களடங்கிய ஒரு நூலகம் அமைக்கும் செயற் குறிப்பு பரிசிலனையில் உள்ளது.

## வரதமா நதி அணைக்கு அருகே புதிய அணை.

வினா 245:—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்திலுள்ள வரதமாநதி அணைக்கு உள்ளே தள்ளி இன்னொரு அணை கட்டலாம் என்று 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதியில் நடைபெற்ற மாவட்ட நீர்ப் பாசன கருத்தரங்கில் சிபாரிசு செய்யப்பட்டு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## திரையரங்குகளில் ஒரே காட்சியில் இரண்டு முழு நீளப் படங்கள் திரையிடத் தடை

வினா 246—திரு. என். கிட்டப்பா: திரு. சேலம் மு. ஆறுமுகம் மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரைப்பட அரங்குகளில் ஒரே காட்சியில் இரண்டு முழு நீளப் படங்களைத் திரையிடுவதற்குத் தடை விதிக்க அரசு ஆலோசித்து வருகிறதா ?

விடை —

(பேரவை முன் விவர * அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது)

[ * 366 ம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சடப் பெற்றுள்ளது]

[1980 பிப்ரவரி 11

## சென்னை பாரிமுனையின் பெயர் மாற்றம்

வினா 247—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பாரிமுனையை இராஜாஜி முனை எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளதா?

விடை—

இல்லை.

## தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழான நிலையில் வாழும் மக்கள் எண்ணிக்கை

வினா 248—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தோடு முடிந்த ஆண்டில், தமிழ் நாட்டில் 53.85 சதவீத மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்ததாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

(ஆ) கிராமப்புறத்தில், 57.48 சதவீத மக்களும், நகரப் புறத்தில் 45.47 சதவீத மக்களும் வறுமைப் பிடியில் உள்ளனர். கிராம, நகர்ப்புறங்களைச் சேர்த்து மொத்தத்தில் 53.85 சதவீத மக்கள் வறுமையிலுள்ளவர். இக்கணக்கீட்டின்படி, ஏறத்தாழ, இரண்டரைக்கோடி (25 மில்லியன்) மக்கள் வறுமையிலுள்ளனர் என்று தெரிகிறது.

## அரசு சார்பில் ஜல்லிக்கட்டு விழா

வினா 249—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா விழாவையொட்டி ஜல்லிக்கட்டுகள் எங்கெங்கு நடைபெற்றன ?

(ஆ) இவ்வாண்டு ஜல்லிக்கட்டிலே **மாண்டவர் குடும்பத்துக்கு அரசு பண உதவி அளித்துள்ளதா ?**



1980 பிப்ரவரி 11]

விடை—

(அ) சுற்றுலா விழாவையொட்டி அரசு சார்பில் ஜல்லிக்கட்டு விழா எங்கும் நடைபெறவில்லை. ஆனால் பொது மக்களாலும் தனிப்பட்டவர்களின் அமைப்பினாலும் ஜல்லிக்கட்டுகள் ஆண்டுதோறும் நடைபெறுவது போல இவ்வாண்டும் கீழ்க்கண்ட இடங்களில் நடந்தன.

1. மதுரை மாவட்டம் .. அலங்காநல்லூர்
2. கோவை மாவட்டம் .. கோவை நேரு மைதானம்
3. திருச்சி மாவட்டம்—
   - அ. திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம். — சூரியூர் கூத்தப்பார் நாவல்பட்டு அரசங்குடி அரியமங்கலம் திருவெறும்பூர்.
   - ஆ. தா. பழூர் ஊராட்சி ஒன்றியம். — ஒன்றியத்தைச் சேர்ந்த 33 ஊராட்சியில் நடத்தப் பட்டன.
   - இ. பெரம்பலூர்வட்டம் .. அரும்பாவூர்.
   - ஈ. மணப்பாறை வட்டம் .. வையம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதி.
4. இராமநாதபுரம் மாவட்டம் சிறுவயல் (காரைக்குடிக்கருகில்)

(ஆ) இவ்வாண்டு ஜல்லிக்கட்டிலே பங்கு கொண்டவர்களில் யாரும் இறக்கவில்லை.

## மாவட்ட உணவுக் கிடங்கிலிருந்து வழங்கப்பெறும் தானியங்களின் எடை.

வினா 250—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்வு கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் புதியதாக திறக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளுக்கு மாவட்ட உணவுக் கிடங்கிலிருந்து உணவுத் தானியங்கள் வழங்கப்படும்போது எடை குறைவாக வழங்கப்படுவது பற்றி அரசுக்கு ஏதேனும் முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1980 பிப்ரவரி 11

" பரளை ஆற்றின் மூலம் தண்ணீர் பாக்குவெட்டியில் குன்டாற்றில் விழச்செய்யவும் கால்வாய் ஏற்படுத்தித்தர அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

## தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்களை அரசே ஏற்று நடத்துதல்.

வினா 257 —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி.

வினா 258 —திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் அதிக நிலப்பரப்பில் தென்னந்தோப்பு உள்ளது ?

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் தென்னந்தோப்பு உள்ளது ?

(இ) ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் ஆண்டு நிகர வருமானம் என்ன கிடைக்கும் ?



1980 பிப்ரவரி 11]

விடை —

(அ) நமது மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னை சாகுபடி அதிகப் பரப்பில் உள்ளது.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1976–77 சர்வேபடி 49,664 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி உள்ளது.

(இ) காய்ப்புக்கு வந்துள்ள தோப்புகளில் அதாவது நட்ட பத்தாவது ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ஒரு ஏக்கரிலிருந்து சுமார் ரூபாய் 2,000 நிகர இலாபம் பெறலாம்.

## *Prawn Culture Farm at Killai Village near Chidambaram.*

*Q.* 259—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Food be pleased to state—

(*a*) Whether any Prawn Culture Farm is to be opened at Killai village near Chidambaram ; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் அருகில் கிள்ளையில் ரூபாய் 13,08,000 செலவில் 50 ஹெக்டேர் உப்பங்கழிப்பரப்பில் உவர் நீர் மீன் பண்ணை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

## சைதாப்பேட்டையிலுள்ள மாநகராட்சிப்பள்ளி.

வினா 260— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையிலுள்ள மாநகராட்சிப்பள்ளியில் நடைபெறும் ஷிப்டு முறை பயிற்சி நீக்கக் கோரி பெற்றோர்கள், பொது மக்களிடமிருந்து கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசின் நடவடிக்கை யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையிலுள்ள உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் இடவசதி இல்லாததால் ஷிப்டு முறை கையாளப்படுகிறது என்பதை பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

[1980 பிப்ரவரி 11

## சின்னசேலம் பால் கூட்டுறவுச் சங்கம்.

வினா 261— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கிராம கைத்தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சின்ன சேலம் பால் கூட்டுறவு சங்கத்தில் பாலை குளிர் பதனம் செய்யும் இயந்திரம் எந்த தேதியில் இருந்து இயங்கி வருகிறது ?

(ஆ) நாளொன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் குளிர் பதனம் செய்யப்படுகிறது ?

(இ) சின்ன சேலத்தில் புதியதாக குளிர் பதனம் செய்யும் கட்டிடத்தை கட்டுவதற்கு அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) சின்ன சேலத்தில் பால் குளிர் பதனம் செய்யும் இயந்திரம் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது.

(ஆ) தற்போது நாளொன்றுக்கு சுமார் 13,000 பால் குளிர் பதனம் செய்யப்படுகிறது.

(இ) முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் சின்ன சேலத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிர் பதனம் செய்யும் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பூர்வாங்க வேலைகள் முடிந்து கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தேவையான புதிய இயந்திரங்கள் வாங்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

## ஈரோடு—கள்ளக்குறிச்சி பேருந்துப்பணி.

வினா 262— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சிக்கும் ஈரோட்டிற்கும் இடையே அரசாங்க பேருந்து விடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம். அண்ணா போக்குவரத்துக் கழகம் ஈரோடு-ஆத்தூர் வழித்தடத்தை நீடித்து, ஈரோடு-கள்ளக்குறிச்சிக்கு இரு பேருந்துகளை இயக்க மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்கு மனுச் செய்துள்ளது.



1980 பிப்ரவரி 11]

## திருவண்ணாமலை அரசினர் கலைக்கல்லூரி.

வினா 263— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் எந்த ஆண்டிலிருந்து எந்தத் துறையைச் சார்ந்த பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## ஒன்றியந்தோறும் கைத்தறித் துணி விற்பனைக் கடைகள்.

வினா 264— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக ஒன்றியத்திற்கு ஒரு துணி விற்பனைக் கடை திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் எப்போது திறக்கப்படும் ?

(இ) எத்தனைக் கடைகள் ?

விடை—

(அ) ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு விற்பனை நிலையம் திறக்க வேண்டுமென்று குறிப்பிட்ட திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

## கிராம நீதிமன்றங்கள் அமைத்தல்.

வினா 265— திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நீதிமன்றங்கள் ஊராட்சி மன்றங்களால் அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

[1980 பிப்ரவரி 11

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எப்பொழுது முதல் துவக்கப்படும் ?

விடை—

(அ) கிராம நீதிமன்றங்கள் ஊராட்சி மன்றங்களால் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

குதிரைமொழி வனத்துறை பகுதியில் யுரேனியம் கண்டுபிடிப்பு.

வினா 266— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகா, குதிரைமொழி வனத்துறை பகுதியில் (Uranium) யுரேனியம் என்னும் மூலப் பொருள் உள்ளது என்று ஜப்பான் நிபுணர்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அப்பொருளை மூலப் பொருளாகக் கொண்டு உலோகப் பொருட்கள் தயாரிக்கும் செயற் குறிப்பு ஏதும் உண்டா ?

விடை—

(அ) ஜப்பான் நிபுணர்கள் திருச்செந்தூர் வட்டம் குதிரைமொழி வனப்பகுதியில் யுரேனியம் கண்டு பிடித்ததாகத் தகவல் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சாத்தனூர் வலது பக்கக் கால்வாய்த் திட்டம்.

வினா 267— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் வலது பக்கக் கால்வாய்த் திட்டம் வேலை முடிந்து விட்டதா ?



1980 பிப்ரவரி 11]

(ஆ) ஆம் என்றால் எப்போது தண்ணீர் திறந்து விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சாத்தனூர் வலது பக்கக் கால்வாய் திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. முக்கியமான பணிகள் முடிவடைந்துவிட்டன.

தொழுதூர் பாசனத் திட்ட வாய்க்கால்.

வினா 268— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென் ஆற்காடு மாவட்டம், தொழுதூர் நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள வாய்க்கால் அனைத்தும் Lining Scheme முறைப்படி அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம், உண்டா ?

(ஆ) ஆம் என்றால் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். தொழுதூர் மதகணையிலிருந்து வெலிங்டன் நீர்த்தேக்கத்திற்கு வரும் பாசனக் கால்வாய் லைனிங் செய்ய ரூ. 26.50 இலட்சம் மதிப்பில் ஒரு திட்டமும், வெலிங்டன் நீர்த்தேக்கத்தின்கீழ் உள்ள கால்வாயை லைனிங் செய்ய ரூ. 61.95 இலட்சத்தில் ஒரு திட்டமும் தல அதிகாரிகளின் தீவிர ஆய்வில் உள்ளன.

குதிரைப் பந்தயங்களுக்குத் தடை.

வினா 269— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நடைபெற்று வரும் குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுதிலிருந்து ?

[1980 பிப்ரவரி 11

விடை—

(அ) மற்றும் (ஆ) 1975-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் குதிரைப் பந்தயத்தை இவ்வரசு தடை செய்தது. இதை எதிர்த்து சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, தடுப்பு ஆணையையும் பெற்று குதிரைப் பந்தயத்தை தற்பொழுது நடத்தி வருகிறது. இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இந்த வழக்கில் முடிவு தெரிந்த பிறகு இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு யோசிக்கும்.

## சேலம் மாவட்டத்தில் சந்தன மரங்கள் ஏலம்.

வினா 270—திரு. செ. மெ. இராசு : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டத்தில் சந்தன மரங்கள் ஏலம் போட்டு விற்ற வகையில் 1977–78, 1978–79 ஆண்டுகளில் அரசுக்கு எவ்வளவு தொகை கிடைத்தது ?

(ஆ) இது இதற்கு முந்தைய ஆண்டுகளை விட அதிகமா குறைவா ?

விடை—

(அ) முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் சந்தன மரங்கள் 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6-ம் நாளன்று ஏலம் விடப்பட்டது. அந்த ஏலத்தில் 118.75 டன்கள் விற்றதில் ரூ. 40,40,090 அரசுக்குக் கிடைத்தது?

(ஆ) 1978-க்கு முந்தைய ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் சந்தனமரம் ஏலம் நடத்தப்படவில்லை.

## சேலத்தில் மருத்துவக் கல்லூரி

வினா 271—திரு. செ. மெ. இராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் வரும் கல்வி ஆண்டில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



1980 பிப்ரவரி 11]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## ஆத்தூர் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வசதி.

வினா 272—திரு. செ. மெ. ராஜு : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர், அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி மாணவர்களுக்கு உணவு உறைவிட (Hostel) வசதிகள் இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இக்கல்வி ஆண்டில் ஹாஸ்டல் ஒன்றைத் திறக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) உண்டு.

## ஆத்தூரில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம்.

வினா 273—திரு செ. மெ. ராஜு : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூரில் முன்சிப் கோர்ட் ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ): நீதிமன்றங்கள் அதிகார வரம்புக் குழு பரிந்துரைத்துள்ளவாறு ஆத்தூரில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பு, முன்னுரிமை வரிசைப்படி, கூடுதல் நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பொழுது அனுமதி வழங்க எடுத்துக் கொள்ளப்படும்.

[1980 பிப்ரவரி

## தஞ்சை மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் மேற்கொண்ட பணிகள்.

வினா 274—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பொதுப்பணி கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் கீழ் 1978–79-ல் மேற்கொண்ட வேலையின் மதிப்பு என்ன?

(ஆ) அவற்றில் நாமினேஷன் முறையில் கொடுக்கப்பட்ட வேலையின் மதிப்பு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மேற்பார்வை பொறியாளரால் (பொதுப் பணித்துறை) 1978–79-ல் மேற்கொள்ளப்பட்ட வேலையின் மதிப்பு ரூ. 420.28 இலட்சங்கள். இத்தொகை, பாசனம், கட்டிடம் ஆகிய இரு துறைகளும் சேர்ந்தது. இதில் ரூ. 105.21 லட்சம் மதிப்புள்ள வேலைகள் நியமன முறையில் கொடுக்கப்பட்டன.



1980 பிப்ரவரி 11]

## புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு அரசு அளித்த உதவி.

வினா 276: திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ல் மதுரை மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு அரசு அளித்துள்ள நிவாரணங்கள் என்ன? தாலூகா வாரியாக.—

(ஆ) அவை கடனாகவா அல்லது மானியமாக வழங்கப் பெற்றனவா?

விடை:

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தாலூகா சேடப்பட்டி பகுதியில் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 40 நெசவாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டைப் பழுதுபார்க்க, கடனாக ரூபாய் 300-ம் மானியமாக ரூபாய் 200-ம் மற்றும் தறியை பழுது பார்க்க மானியமாக ரூ. 125-ம் ஆக மொத்தம் ரூ. 25,000 அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## ஆயக்குடி பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா 277—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1977-லேயே கேட்டகிரி 1-ல் (Category-I) இருந்ததா?

(ஆ) ஆம் எனில், இன்னும் அங்கு எந்த வேலையும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் யாது?

(இ) இந்த ஆண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை:

(அ) ஆயக்குடி பகுதி, ஆயக்குடி பேரூராட்சியில் உள்ளதால் பிரிவு 1 போன்ற வகைப்படுத்தும் பிரச்சினைக்கிடமில்லை.

(ஆ) மற்றும் (இ): இவ்வினாக்களுக்கு இடமில்லை

[1980 பிப்ரவரி 11

## பாடிக்குப்பத்தில் பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடம்.

**வினா 278—திரு. க. சுப்பு :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகரியம், பாடிக்குப்பத்தில் சர்வே எண், 245-ல் பள்ளிக்கூடத்திற்கென்று நகரியத்தால் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நகரிய உறுப்பினர் ஒருவர் பணம் வாங்கிக்கொண்டு குடிசை போட வைத்துள்ளது உண்மையா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை :

(அ) மற்றும் (ஆ) : இந்த இடத்தில் குடிசைகள் போட்டது உண்மை. ஆனால் நகரிய உறுப்பினர் ஒருவர் பணம் வாங்கிக்கொண்டு குடிசை போட அனுமதித்தாரா என்பது பற்றி தகவல்இல்லை. 12 குடிசைகள் ஏற்கெனவே அகற்றப்பட்டுவிட்டன. ஒரு கூரை மட்டும் அகற்றப்படவில்லை. இதையும் அகற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## வெள்ளைப் பன்றிகள் அபிவிருத்தித் திட்டம்.

வினா 279—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளைப் பன்றிகளை அபிவிருத்தி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஒசூரில் வளர்க்கப்படும் பன்றிகளின் மூலம் ஆண்டு தோறும் கிடைக்கும் லாபமென்ன ?

விடை :

(அ) கால்நடைப் பராமரிப்புத் துறை வெள்ளைப்பன்றி அபிவிருத்தித் திட்டத்தினை ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது.

(ஆ) லாபம் ஏதுமில்லை.



1980 பிப்ரவரி 11]

## சேந்தமங்கலத்தில் ஜவ்வரிசி ஆலை.

வினா 280 —திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலத்தில் ஒரு ஜவ்வரிசி ஆலை நிறுவும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

## கொல்லிமலையில் உள்ள யூனியன் ஆரம்பப் பள்ளிகள்.

வினா 281 —திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கொல்லிமலையில் உள்ள யூனியன் ஆரம்பப் பள்ளிகள் அனைத்தும் ஆதிவாசிகள் உறைவிடப் பள்ளிகளாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை —

கொல்லிமலையில் உள்ள ஒன்றியம் ஆரம்பப் பள்ளிகளில் எதனையும் ஆதிவாசிகள் உறைவிடப் பள்ளியாக மாற்றக்கூடிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

## சென்னை-தஞ்சாவூர் இடையே குளிர்சாதன பேருந்து விடல்.

வினா 282 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை-தஞ்சாவூர் குளிர்சாதன பேருந்து விட செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், விட நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இத்திட்டத்தில் குளிர்சாதனப் பேருந்து விடுவது சாத்தியமில்லை.

## மீன்துறை களப்பணியாளர் கோரிக்கைகள்.

வினா 283 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் 1977, டிசம்பர் 12-ம் நாள் அன்று நடந்த மீன்துறை களப்பணியாளர் மாநாட்டு 21 அம்ச கோரிக்கை அரசுக்கு வந்ததா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து, 1979, மே 11-ம் தேதியன்று மீன்துறை களப்பணியாளர் சங்கத்திற்கு பதில் அனுப்பப்பட்டது.

## சமயநல்லூர் தொகுதியில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி.

வினா 284 —திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள கருப்பாயி ஊரணிக் கருகில் (ஹோமியோபதி) மருத்துவக் கல்லூரி கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், கட்டிடம் கட்டாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

## கள்ளக்குறிச்சி கிளை சிறைச்சாலை.

வினா 285—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி கிளை சிறைச்சாலையை புதுப்பிக்கக் கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?



(ஆ) ஆமெனில், விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அத்தகைய கோரிக்கை ஏதும் வரவில்லை. எனினும் இக்கிளைச் சிறைச்சாலையில் நீரடிக் கழிப்பிடம் அமைக்கவும், கட்டிடங்களைச் சீர்படுத்தவும், கூடுதல் அறைகள் கட்டவும் மொத்தம் ரூ. 1,00,400 அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## மேல்நிலைப்பள்ளிகளுக்கான புதிய கட்டிடங்கள்.

வினா 286 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத்தில் அரசாங்க மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்படும் புதிய கட்டிடங்களுக்குப் பெரியார் நூற்றாண்டு விழா கட்டிடம் என்று பெயர் சூட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## பரவை ஊராட்சி.

வினா 287—திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள பரவை (Major) ஊராட்சியை பிரிக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) இது பற்றி ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ஊராட்சித் தேர்தல் முடியும் வரை நிர்வாக மாற்றம் செய்யக்கூடாது என தடை இருப்பதால் தேர்தல் நடந்த பின் இப்பொருள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[1980 பிப்ரவரி 11

சுகநதியின் மீதுள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

வினா 288—திரு. பி. முனுசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி-திண்டிவனம் ஆகிய ஊர்களின் இடையே அமைந்துள்ள சுகநதியின் குறுக்கே உள்ள சிறு பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எவ்வளவு காலத்திற்குள் அப்பணி முடியும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

போளூரில் உள்ள பிரசவ விடுதி இடமாற்றம்.

வினா 289 –திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

போளூர் அரசு மருத்துவ மனையின் நகரத்தின் அருகாமை யில் உள்ள பழைய கட்டிடத்திற்கு அரசு பிரசவ விடுதியை மாற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

இல்லை.

*Speech Theraphy in Children's Hospital, at Egmore.*

Q. 290—THIRU Salem M. ARUMUGAM : Will the Honourable the Minister for Health be pleased to state—

*(a)* Whether Speech Therapy is being provided at the Children's Hospital at Egmore, Madras : and

*(b)* the details of the improvements to be given in this regard to children at this Hospital in the next two years ?



1980 பிப்ரவரி 11]

விடை –

(அ) ஆம்.

(ஆ) தற்போது இருக்கும் வசதிகளுடன் பேச்சு கற்பித்தல் சிகிச்சையானது மிகவும் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு செவிலியர் ஒரு குழந்தைகள் மன நோய் சிகிச்சை யாளர், ஒரு காது கேட்பியல் நுட்பனர் மற்றும் காது கேட்கும் சிகிச்சைக்கான கருவிகளை செய்வதற்கான நுட்பனர் முதலியோர் களைக் கூடுதலாக நியமிப்பதற்கும் மற்றும் சென்னையிலுள்ள காது கேளாதோர் மற்றும் கண் பார்வையற்றோர்களுக்கான பள்ளிக்கூடங்களை இம்மருத்துவ மனையுடன் இணைப்ப தற்கான நடவடிக்கைகளும் மருத்துவக் கல்வி இயக்குனரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வீரகனூர்-பூலாம்பாடி சாலையில் ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 291—திரு. செ. மெ. ராஜு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதியில் வீரக னூர்-பூலாம்பாடி சாலையில் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது மேற்கொள்ளப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தானிப்பாடிக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 292—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், தானிப்பாடி கிராமத் திற்கு பாம்பாற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து, குடி தண்ணீர்ப் பற்றாக்குறையை போக்க அரசு நடவடிக்கை எடுத் துள்ளதா ?

விடை—

இல்லை.

[1980 பிப்ரவரி 11

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.

வினா 293— திரு. பி. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனையிலுள்ள மகப்பேறு பிரிவுக்கு புதியதாகக் கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொது நிறைவேற்றப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருச்சி நகரிலுள்ள வீடுகளுக்கு வரி உயர்வு.

வினா எண் 294— திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் உள்ளாட்சித் துறையினரால் சொந்த வீடு உள்ளவர்களுக்கு சென்ற சில ஆண்டுகளில் வரி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது எந்த அடிப்படையில் செய்யப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள சொந்த குடியிருப்பு உள்ள வீடுகளில் கூடுதல் கட்டிடம் கட்டப் பெற்றதற்கும், அபிவிருத்தி செய்து கட்டியதற்கும் தற்போதைய ஆண்டு வாடகை மதிப்பின் அடிப் படையில் வரி உயர்வு செய்யப் பெற்றுள்ளன.

பச்சைமலைப் பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

வினா எண் 295— திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பரா—

(அ) திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்கும் உத்தேசமுண்டா ?



(ஆ) ஆமெனில் திட்டம் எப்பொழுது நிறைவேறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

கரூர் வட்ட அரிசன மக்களுக்கு வீட்டு வசதி.

வினா 296—திரு. கு. வடிவேல்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80-ல் கரூர் வட்டத்தில் எங்கெங்கு அரிசன மக்களுக்கு வீடு கட்டித்தர உத்தேசித்துள்ளது.

(ஆ) எங்கெங்கு வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனை வாங்கித்தர அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

(அ) 1979–80 ஆம் ஆண்டு அரிசன வீட்டு வசதித்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கரூர் பட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் வீடு இல்லாத அரிசனங்களுக்கு வீட்டு மனை வாங்கித்தர அரசு உத்தேசித்துள்ளது:—

கிராமத்தின் பெயர்.

1. கிழக்கு ஆண்டான் கோவில்.
2. பி. கடப்பக்குறிச்சி சின்னவாரப்பாளையம்.
3. ஆஞ்சூர், பாண்டிலிங்கபுரம்.
4. மண்மங்கலம் மேதி நகர்.
5. நாகம்பள்ளி.
6. தொக்குப்பட்டி கருங்கால்பட்டி.
7. கருப்பம்பாளையம் சங்கிலியூர்.
8. ஐ. கரூர் பெரியகுளத்துப்பாளையம்.
9. ட. வெங்கடபுரம்.

10. பெரியமான்சுவேலி.

11. பெரியமான்சுவேலி நல்லிக்கோம்பை.

12. அம்மாபட்டி, ஆத்தூர்.

13. அரவக்குறிச்சி குமராண்டவலசு.

14. பஞ்சாமதேவி, காந்திநகர், காமராஜ்நகர்.

15. சு. பிச்சம்பட்டி.

16. தொரனக்கல்பட்டி கரட்டுப்பாளையம்.

17. நாகம்பள்ளி படைத்தானச்சன்பட்டி.

18. வெங்கமான் கூடலூர் ஊத்துக்கரைப்பட்டி.

## நாமக்கல்–சென்னை விரைவுப் பேருந்துப் பணி.

வினா 297—திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு இரவு 11 மணிக்கு புறப்படும் வகையில் துரிதப் பேருந்து விடும் திட்டம் உண்டா?

விடை—

இல்லை.

## கோடம்பாக்கம் ஆற்காடு சாலையின் பெயர் மாற்றம்.

வினா 298—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கோடம்பாக்கத்திலுள்ள ஆற்காடு ரோட்டின் பெயரை அம்பேத்கார் சாலை எனப் பெயர் மாற்றம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை.—

இல்லை.



## கொல்லிமலை பழத் தோட்டப் பண்ணை.

வினா எண் 299— திரு. வ. சின்னச்சாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொல்லிமலை பழத்தோட்டப் பண்ணை அமைக்க பழங்குடி மக்களின் நிலங்களில் அயர்ன் 25 ஏக்கர் அரசால் எடுக்கப்பட்டு மேற்படி நிலத்திற்கு உரிய தொகை இன்னும் தரப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இதுவரை தரப்படாமைக்குக் காரணம் என்ன ?

விடை.—

(அ) கொல்லிமலை பழத் தோட்டப் பண்ணை அமைக்க பழங்குடி மக்களின் நிலங்களில் 16.64 ஏக்கர் மட்டுமே அரசால் எடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு நில கையகப்படுத்தும் சட்டத்தின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நில உரிமையாளர்களுக்கு உரிய நட்ட ஈட்டுத்தொகை 19–3–79-ம் நாளன்று அளிக்கப்பட்டு விட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

## விளாத்திகுளம் தொகுதியிலுள்ள பாசனக் குளங்களில் தூர்வாரும் திட்டம்.

வினா எண் 300.—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் பழைய நீர்ப்பாசன குளங்களில் தூர்வாரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தக் குளங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?

விடை —

(அ) மற்றும் (ஆ) : இல்லை. காரணம் இவைகளைத் தூர்வாருவதற்கு தற்போது அவசியமில்லை.

## விளாத்திகுளம் தொகுதி மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்.

வினா எண் 301.—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி கடற்கரை பகுதி மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களில் எத்தனை வீடுகள் கட்டித்தரப்படும்.

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## விளாத்திக்குளத்தில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம்.

வினா 302.—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திக்குளத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், விளாத்திக்குளத்தில் ஒரு குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றம் (சப்-மாஜிஸ்டிரேட்) அமைக்க 31-8-79 நாளிட்ட உள் துறை அரசாணை (நிலை) எண் 2175-இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## ஜம்பு கண்டி நீர்த்தேக்கத் திட்டம்.

வினா 303—திரு. அ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுகு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் அணைக்கட்டு பகுதியில் ஜம்பு கண்டி நீர்த்தேக்கம் கட்ட அரசு திட்டம் போட்டுள்ளதா ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?



விடை—

(அ) ஜம்பு கண்டி நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டம் தல அலுவலர்களின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 10 இலட்சம் ஆகும்.

## தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி.

வினா எண் 304.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் என்னென்ன கலைகள் கற்பிக்கப்படுகின்றன ?

(ஆ) அங்கு பயின்று தேர்ச்சி பெறுவோர்க்கு என்னென்ன பட்டங்கள் வழங்கப்படுகின்றன ?

விடை—

(அ) சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் கீழ்க்கண்ட கலைகள் கற்பிக்கப்படுகின்றன.—

(1) வாய்ப்பாட்டு
(2) வீணை
(3) வயலின்
(4) இசையாசிரியர் பட்டம்
(5) மிருதங்கம்
(6) புல்லாங்குழல்
(7) நாதஸ்வரம்
(8) தவில்
(9) பரதநாட்டியம் (விளக்கம் அனுபந்தத்தில்).

(ஆ) அக்கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெறுவோர்க்கு கீழ்க்கண்ட பட்டங்கள் வழங்கப்படுகின்றன :

(1) இசைக்கலை மணி
(2) வாத்யக் கலை மணி
(3) ஆடற் கலை மணி
(4) இசையாசிரியர் பயிற்சிப் பட்டம் (விளக்கம் அனுபந்தத்தில்)

[1980 பிப்ரவரி 11

## நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கும் பொருட்கள்.

வினா எண் 305.— திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நியாய விலைக் கடைகளின் மூலம் சாமான்கள் சரிவர வழங்கப் பெறுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதனை நிவர்த்திக்க வழி வகை ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள Social Education Organiser பதவிகள்

வினா 306. — திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் Social Education Organisor பதவிக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## நாட்டுப் படகு கட்டுமர மீனவர்கள் சங்கத்திடமிருந்து அரசுக்கு வந்த விண்ணப்பம்.

வினா எண் 307 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 17—3—1979 தேதியிட்ட நாட்டுப் படகு கட்டுமர மீனவர்கள் சங்கத்தின் விண்ணப்பம் அரசுக்குக் கிடைத்ததா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?



1980 பிப்ரவரி 11]

விடை —

(அ) கிடைக்கவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## " அன்பின் அலைகள் " திரைப்படத்திற்கு நிதி உதவி.

வினா 308 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

" அன்பின் அலைகள் " என்ற குழந்தைகள் திரைப்படத்திற்கு அரசு அளித்த சலுகைகள் யாவை ?

விடை—

" அன்பின் அலைகள் " திரைப்படத்திற்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ. 1 லட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டது. மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இப்படத்தின் கதாசிரியர் திரு. பூவண்ணனுக்கும், சிறுமி நடிகை இந்திராவுக்கும் தலா ரூ. 2,000 மதிப்புள்ள தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. கேளிக்கை வரி விலக்கும் அளிக்கப்பட்டது.

## மரண தண்டனை பெற்ற கைதிகளின் எண்ணிக்கை.

வினா 309—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

21—3—79 வரை தமிழ்நாட்டுச் சிறைகளில் உள்ள மரண தண்டனை பெற்ற கைதிகளின் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) 29 ஐயா.

## நீலகிரி மாவட்ட கிராமங்களில் விவசாயக் கிடங்குகள்.

வினா 310—திரு. கே. உச்சி : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள கிராமங்களில் சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு விவசாயக் கிடங்குகள் கட்ட செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை கிடங்குகள் கட்டப்படும் ? எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

அரசு வேளாண்மைத் துறையைப் பொறுத்த மட்டில் நீலகிரி மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகள் கட்ட செயற் குறிப்பு ஏதுமில்லை. ஆனால் அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்கீழ் நடப்பு ஆண்டில் (1979–80) நீலகிரி மாவட்டத்திலுள்ள கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு துணை வேளாண்மைக் கிடங்கு கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### முதுகுளத்தூர் சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு புதியக் கட்டிடம்.

வினா 311—திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதுகுளத்தூரில் உள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் புதிய கட்டிடம் கட்டித் தரும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

ஆம் ஐயா. ரூ. 2·70 லட்சம் செலவில் முதுகுளத்தூரில் இரண்டாம் குற்றவியல் நீதிமன்றம் கட்டிடம் கட்டுவது பற்றிய செயற் குறிப்பு ஒன்றை 1975 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் அனுப்பி வைத்தது. மேற்குறித்த நீதிமன்ற கட்டிடத்திற்கென தெரிவு செய்யப்பட்ட இடம் பொருத்தமானதல்ல என்பதால் 1975ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் திருத்திய செயற் குறிப்பு ஒன்றினை அரசுக்கு அனுப்பி வைத்தது. நிதி நிலையைக் கருதி ஏற்ற காலத்தை எதிர் நோக்கி மேற் குறித்த செயற் குறிப்பினை ஒத்தி வைக்கலாம் என அரசு கடித எண் 4928. நீ. ம. 3.75 நாள் 21–12–1976 வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு மேற் குறித்த செயற் குறிப்பு உயர் நீதி மன்றம் மீண்டும் அனுப்பி வைக்கும்போது அரசு இது குறித்து கருதும்.

### இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கேரள மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர திட்டம்.

வினா 312—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்ட விவசாய குடிநீர் தண்ணீர் பிரச்சினை தீர கேரள மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?





விடை—

(அ) இதுபற்றி திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

### வந்தவாசி ஊராட்சியை நகராட்சியாக்கல்.

வினா 313—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு. வந்தவாசி ஊராட்சியை நகராட்சியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

### கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்தல்.

வினா 314—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்த கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தமிழகத்தில் பயறு வகைகள் உற்பத்தி.

வினா 315—திரு. கு. ரமணி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்யும் பயறு வகைகள் எவ்வளவு ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படுகிறது?

(ஆ) பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரிக்க என்ன திட்டமிடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :—விவர அறிக்கை* ஒன்று அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

வணிக வரித் துறை சாவடிகள்.

வினா 316— திருவாளர்கள் : ஏ. எம். பரமசிவன், சு. முத்துசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வணிக வரித் துறையில் சோதனைச் சாவடிகள் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சோதனைச் சாவடிகள் உள்ளன ?

(இ) அவைகளில் நிரந்தரமான (Permanent) சோதனைச் சாவடிகள் எவை ? தற்காலிகமான (Temporary) சோதனைச் சாவடிகள் எவை?

(ஈ) அதனால் அரசுக்கு எவ்வளவு லாபம் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) எழுபத்தைந்து.

(இ) எழுபத்தைந்தும் நிரந்தரமானவைகளே. இவைகளின் விவரம் பேரவைமுன்* அறிக்கை வடிவில் வைக்கப்பட்டுள்ளது. இது தவிர சட்டத்தின் கீழ் அறிவிக்கப்படாமல் சில சோதனைச் சாவடிகள் வேண்டிய இடங்களில் தேவைக்கேற்ப தற்காலிகமாக ஏற்படுத்தப்படுகின்றன.

(ஈ) வரி ஏய்ப்பினைத் தடுக்க சோதனைச் சாவடிகள் பெரிதும் பயன்படுகின்றன. 1978—79-ம் ஆண்டில் இணக்கக் கட்டணமாகவும் வரியாகவும் இச் சோதனைச் சாவடிகள் மூலம் ரூ. 34,63,052 வசூலிக்கப்பட்டது.

---

*367 ம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுளளது.

(* 370 ம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)





தமிழ்நாட்டில் சந்தன மரங்கள் வளர்க்கும் திட்டம்.

வினா 317—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் சந்தன மரங்களை மேலும் வளர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) எந்தப் பகுதியில் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 1978—79-ம் ஆண்டில் 3.51 இலட்ச ரூபாய் செலவில் 170.6 ஹெக்டேர் நிலத்தில் சந்தன தோட்டம் அமைக்கப்பட்டது. இத் தோட்டங்கள் சேலம், திருச்சி, கோவை மாவட்டங்களில் உண்டாக்கப்பட்டன. 1979—80-ம் ஆண்டில் 19·03 இலட்சம் ரூபாய் செலவில் 170 ஹெக்டேர் நிலத்தில் சந்தனத் தோட்டங்கள் உண்டாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலும் மிகுதியுள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980—81 முதல் 1982—83 முடிய) 600 ஹெக்டேர் பரப்பில் இத் தோட்டம் உண்டாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் தோட்டங்கள் சேலம், வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி, ஒசூர், திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, கோவை, நீலகிரி ஆகிய இடங்களில் உண்டாக்கப்படும்.

நாகர்கோவிலுக்கருகில் பால் குளிரூட்டம் நிலையம்

வினா 318— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா,—

(அ) தமிழ்நாடு அரசு நாகர்கோவிலுக்கருகில் பால் பதனிடும் ஆலை அமைத்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரமென்ன ?

(இ) எவ்வளவு மூலதனம் ?

(ஈ) எவ்வளவு பேர் வேலை வாய்ப்பு பெறுவார்கள் ?

[1980 பிப்ரவரி 11

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்ட பால் விநியோக கூட்டுறவு ஒன்றியம் நாகர்கோவிலுக்கருகில் உள்ள மார்த்தாண்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் நிறுவ தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

(ஆ) மேற்கண்ட குளிரூட்டும் நிலையம் மார்த்தாண்டத்தில் நிறுவுவதற்கு விளவங்கோடு தாலுக்காவிலுள்ள நல்லூர் கிராமத்தில் திரு. என். சின்ன நாடார் என்பவரிடம் 18.450 செண்டு அளவுள்ள மனையை ரூபாய் 9,225-க்கு வாங்கியுள்ளது. ரூ. 59,500 மதிப்பிற்கு கட்டிடம் கட்ட வரைப்படம் மற்றும் மதிப்பீடு அங்கீகாரம் பெறப் பெற்றுள்ளது.

(இ) பால் குளிரூட்டும் நிலையம் நிறுவ மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2,68,000. அதில் திருவாங்கூர் மாநில வங்கி மூலம் ரூ. 2.50,000 கடனாகப் பெற்றுள்ளது. மீதியுள்ள ரூ. 18,000 ஒன்றியப்பொது நிதியினின்று செலவுசெய்ய உள்ளது. அதில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்ட நிறுவனம் மானியமாக ரூ. 1,26,000 வழங்கியுள்ளது. மேலும், 1979—80-ல் தற்போது உள்ள பால் பதனிடும் நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணிக்காக அரசு நிலை ஆணை எண் 1480, வேளாண்மை, நாள் 1979, ஜூலை, 25-ல் ரூ. 7 இலட்சம் நிதி உதவி அனுமதிக்கப்பட்டு திட்டத்தை அமுலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) கருவி இயக்குநர்—1

பரிசோதனை உதவியாளர்—1

டையரிமேன்—1

எழுத்தர்—1

உதவியாளர்—1

இரவு காவலர்—1.

பால்கொடுக்கும் சங்கங்களின் விற்பனையாளர் 25 ஆகியோர் வேலை வாய்ப்புப் பெற வாய்ப்புள்ளது. இதன் மூலம் 500 விவசாயிகள் பயனடையவும் வாய்ப்புள்ளது. வேலை வாய்ப்பு பற்றிய விபரம் அரசு உதவி ரூ. 7 இலட்சம் முழு அளவு பயன் படுத்தப்பட்ட பின்புதான் கணிக்க இயலும்.



1980 பிப்ரவரி 11]

## வேளாண்மை பட்டப்படிப்பிற்கு மைய அரசு வழங்கும் மான்யம்.

வினா 319—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆண்டுக்கு 10 ஊர்நல அலுவலர் (கிராம சேவக்) களுக்கு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பு படிக்க மைய அரசு மான்யம் வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் சென்ற ஆண்டு எத்தனை பேர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர் ?

விடை—

(அ) ஆம், சென்ற ஆண்டு மைய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது.

(ஆ) பட்டப்படிப்பின் தரம் குறையா வண்ணமும் அதே சமயத்தில் திட்டத்தை பயன்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடனும் வேளாண்மைத் துறையுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை பல்கலைக் கழகம் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இதை அனுமதிக்க ஒத்துக்கொண்டுள்ளது. தீவிர மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, சென்ற ஆண்டு இதை பயன் படுத்த முடியவில்லை.

## தமிழ்நாட்டின் தெருக்களில் சாதிப் பெயர்களை ஒழித்தல்.

வினா 320—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டின் தெருக்களின் பெயர்கள் சாதிப் பெயரால் இனி விளங்காதென அரசு அறிவித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) 1978, அக்டோபர், 3-ம் நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1531-ல் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[1980 பிப்ரவரி 1

## அரசு இசைக் கல்லூரியில் தமிழிசை ஆராய்ச்சிப் பிரிவு.

வினா 321—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை அரசு இசைக் கல்லூரியில் தமிழிசை ஆராய்ச்சிப் பிரிவொன்றினைத் தொடங்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

(இ) எத்தனை பேர் பணியில் அமர்த்தப்படுவர் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சென்னையில் கூட்ட நேரங்களில் சிறப்புப் பேருந்துகள் விடும் திட்டம்.

வினா 322—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்சகண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் காலையிலும் மாலையிலும் கூட்ட நேரத்தில் (Peak Hours) ஏராளமான மக்கள் பேருந்து களில் இட நெருக்கடி காரணமாக அவதிப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இந்த இன்னலைப் போக்க கூட்ட நேரத்தில் விசேஷ பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா ?

விடை :

(அ) ஆம்

(ஆ) மொத்தப் பேருந்துகள் 1,611-ல் 1,510 பேருந்துகள் வரையறுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை பேருந்துகளாக இயக்கத் திற்கு உபயோகப்படுத்தப் படுகிறது. மற்ற மாநிலங்களில் மொத்தப் பேருந்துகளில் 90 சதவீதம் மட்டுமே இயக்கப்படு கிறது. இங்கு மிக அதிகபட்சமாக 94 சதவீதம் இயக்கப் படுகிறது. எனவே மேலும் சிறப்புப் பேருந்துகள் விடுவதென்பது இயலாதது.



1980 பிப்ரவரி 11]

## சென்னையிலுள்ள ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம்.

வினா 323—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஐ.ஏ. எஸ். பயிற்சி நிலையத்தில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென்று உள்ள விடுதியில் பல வசதிக்குறைவுகள் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை :

(அ) அரிசன மற்றும் ஆதிவாசிகளுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடிப் பயிற்சி நிலையத்துடன் இணைந்துள்ள மாணவ கள் விடுதியில் போதுமான இடவசதி இல்லை. இக்கட்டிடம் மிகவும் பழமையானது.

(ஆ) இப்பயிற்சி நிலையத்தை வேறொரு கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு அரசு கருத்தில் கொண்டுள்ளது. இது குறித்து பொதுப்பணித்துறைக்கு சார்ந்த கட்டிடம் ஏதும் கிடைக்கப் பெறுமா என்று ஆலோசிக்கப்பட்டது. முன்னோடிப் பயிற்சி நிலையத்திற்கு தேவையான வசதிகள் உடைய கட்டிடங்கள் ஏதும் பொதுப்பணித்துறையில் இல்லை. இப்பயிற்சி நிலையத் திற்கு பயன்படும் கட்டிடம் ஏதும் இடவசதிக் கட்டுப்பாடு அலுவலர் வசம் தற்போது இல்லை. இடவசதி கட்டுப்பாடு அலுவலர் வசம் ஏதும் கிடைக்கப் பெற்றால் இப்பயிற்சி நிலையத்தை அக்கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு வாய்ப்புண்டு.

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம், தகுந்த கட்டிடம் கட்டி தந்தால் வாடகைக்கு முன்னோடிப் பயிற்சி நிலையத்தை அங்கு மாற்றி கொள்வதற் கான செயல்குறிப்பு ஒன்று உள்ளது.

இக்கட்டிடத்திற்கான 'மின்சார விளக்கு' வசதியை அதிகரிக்கும் பொருட்டு ஒரு செயல்குறிப்பும் உள்ளது.

முன்னோடிப் பயிற்சி நிலைய கட்டிடத்தை பழுது பார்ப்பதற்கும், கழிவிடத்தினை பழுது பார்ப்பதற்கும் செயற் குறிப்பும் ஒன்று உள்ளது.

[1980 பிப்ரவரி 11

## உப்பாறு அணை வாய்க்கால் விஸ்தரிப்பு.

வினா 324—திரு. ரா. அய்யாசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தாராபுரத்தில் உள்ள உப்பாறு அணைக்கு வரும் உபரி தண்ணீரை அதன் இடதுபுற வாய்க்காலில் திருப்பிவிட்டு அதனை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு உண்டா ?

விடை :

தற்பொழுது இல்லை.

## *Cases of food poisoning at Sankaran Koil.*

*Q.* 325—THIRU S. M. VASAN : Will the Honourable Chief Minister be pleased to state—

(*a*) Whether a number of persons were taken ill due to food poison at Sankarankoil in Tirunelveli district on or about the 4th May '79, and

(*b*) If so, the details thereof ?

விடை :

(அ) மற்றும் (ஆ) 4-5-1979 அன்று திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவிலில் திருவாடுதுறை ஆதீன மடத்தினர் சிவஞான குருபூசையை முன்னிட்டு பிரசாதங்கள் வழங்கினர். இவற்றை உண்டோர்களில் 100 பேர் வயிற்றுவலி, வாந்தி பேதி மயக்கம் ஏற்பட்டதன் விளைவாக உடனே சங்கரன்கோவில் அரசினர் மருத்துவமனையிலும் மற்றுமொரு தனியார் மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றபின் குணமடைந்தனர். உணவுப் பொருட்களைத் தயார் செய்வதற்கு பயன்படுத்திய எண்ணெயும் பாத்திரங்களும் இரசாயன பரிசோதனைக்காக கைப்பற்றப்பட்டன. உணவுப் பொருட்களை தயார் செய்யப் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள சமைப்பதற்குத் தகுதியற்றவைகளாக இருந்ததால் இரசாயன மாற்றம் ஏற்பட்டு உணவில் விஷக்கிருமிகள் கலந்திருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது.



1980 பிப்ரவரி 11]

## இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரியகாந்தி பயிரிடும் திட்டம்.

வினா 326—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரியகாந்தி பயிரிட தீவிரத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கரில் பயிரிடப்படுகிறது ?

(இ) அரசு அளிக்கும் சலுகை என்ன ?

(ஈ) மற்ற மாவட்டத்திற்கும் இத்திட்டம் விரிவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) சுமார் 40,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது.

(இ) (1) அதிக மகசூல் தரும் புதிய ரக விதைகளை உற்பத்தி செய்து விரயத்திற்கு வழங்குவது.

(2) திருந்திய சாகுபடி முறைகளை விளக்கிக் காட்ட விவசாயிகள் வயல்களில் நிரூபணங்கள் அமைக்கப்படுகிறது. ஒரு ஹெக்டேர் பரப்பு நிரூபணங்களுக்காக ரூ. 300 மானியந் தொகை வழங்கப்படுகிறது.

(3) தனி விவசாயிகளிடமிருந்து தரமான விதைகளை அரசு வேளாண்மைத்துறை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு விதைகளைத் தரம் பிரித்துக் கொடுக்க ஆகும் செலவினை ஈடு செய்ய ஒரு டன் தரமான விதைகளுக்கு ரூ. 300 மானியம் வழங்கப்படுகிறது.

(ஈ) இத்திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தஞ்சை மாவட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்கல்.

வினா 327—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் முழுவதும் மண்ணெண்ணெய் பொது விநியோகத்தை கூட்டுறவுத் துறையும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக்கழக அமுதம் அங்காடிகளும் மேற்கொண்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விபரம் யாது ?

(இ) மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படுமா ? எப்பொழுது ?

விடை :

(அ) மற்றும் (ஆ) ஆம்.

கடந்த ஆகஸ்டு திங்கள் முதல் இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சை நகராட்சியில் குடும்ப அட்டைகள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு 6 லிட்டர் மண்ணெண்ணெய்யும், இதர நகராட்சியில் உள்ள குடும்ப அட்டைகள் ஒவ்வொன்றுக்கும் மாதம் 4 லிட்டர் மண்ணெண்ணெய்யும், மற்ற நகரங்கள், ஊராட்சிகள் இவைகளில் உள்ள குடும்ப அட்டைகள் ஒவ்வொன்றுக்கும் மாதம் 2 லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்பட்டு வருகிறது.

(இ) இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் ஏற்கெனவே விரிவாக்கப்பட்டு 1979, ஆகஸ்டு திங்கள், 1-ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அருப்புக்கோட்டை கூட்டுறவு நெசவாளர் சங்கம்.

வினா 328—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு கதர் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அருப்புக்கோட்டை கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் ரூபாய் இரண்டாயிரத்து முந்நூறு கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

விடை :

(அ) அருப்புக்கோட்டை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கையாடல் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.





## கோவிலாங்குளம் கிராம கூட்டுறவு கடன் சங்கம்.

வினா 329 —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அருப்புக்கோட்டை தாலுக்கா கோவிலாங்குளம் கிராமத்திலுள்ள கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து ரூபாய் இரண்டு லட்சம் மதிப்புள்ள நகைகள் திருடுபோனது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இது காவல் துறையின் புலனாய்வில் உள்ளது.

## *Training Course in Sericulture in Dharmapuri District.*

*Q. 330*—THIRU SALEM M. ARUMUGAM : Will the Honourable Minister for Rural Industries be pleased to state—

(*a*) Whether the Government have started any training course in Sericulture in Dharmapuri District ; and

(*b*) If so, the details thereof.

விடை:

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சிப் பள்ளி நிறுவுவதற்கு இவ்வாண்டு (1979) மே மாதத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிற்கும் இரு பகுதிகளாகப் பிரித்து 50 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கும், 100 பட்டதாரி அல்லாதவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தின்போது பட்டதாரி மாணவர்களுக்கு தலா மாதம்ரூ. 250-ம் பட்டதாரி அல்லாதவர்களுக்குமாதம் 150ம் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது. தற்போது முதற் பகுதி பிரிவினருக்கு பயிற்சி நடைபெற்று வருகின்றது. பயிற்சி முடிவு பெற்ற பின்னர் துறையில் ஏற்படும் வேலை வாய்ப்பிற்கு ஏற்ப பயிற்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

[1980 பிப்ரவரி 11

தமிழ்நாடு முழுவதற்குமாக தர்மபுரிக்கும் சேர்த்து விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டம் ஒன்றிற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்பட உள்ள 5,000 விவசாயிகளில், தர்மபுரி மாவட்டத்தில் 450 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இவ்விவசாயிகளுக்கு மாதம் 100 உதவி தொகையுடன் கூடிய மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். அதுமட்டுமல்லாமல் பயிற்சி முடிவு பெறும் காலத்தில் ரூ. 200 மதிப்புள்ள பட்டு வளர்ப்பு கருவிகள் ஒவ்வொரு விவசாயிக்கும் சுய வேலை வாய்ப்பினை மேற்கொள்ள இலவசமாக வழங்கப்படும். ஓசூரில் உள்ள அரசு நூற்பு நிலையத்தில், நூற்பு தொழிலில் வேலை தேடும் நபர்களுக்கு பயிற்சி அளிக்க வசதிகள் உள்ளன.

## உதகையில் மலர் கண்காட்சி.

வினா 331—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகையில் மலர் கண்காட்சியினை நடத்த அரசு முன் வந்துள்ளது உண்மையா ?

விடை :

ஆம்.

## மோட்டார் வாகனங்கள் பதிவுப் பிரிவு.

வினா 332—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மோட்டார் வாகன பதிவு லைசென்ஸ் வழங்குவதற்கு கம்ப்யூட்டர் முறை வர இருக்கிறதா ?

**விடை :**

**அத்தகைய முறை புகுத்துவதற்கான கருத்து ஏதும் இல்லை**



1980 பிப்ரவரி 11]

## மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையாருக்கு நினைவுச் சின்னம் அமைத்தல்.

வினா எண். 333.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட தாய்குலத்தின் மேம்பாட்டிற்காக தான் சாகும் வரை போரிட்ட மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் உருவாக்கிட அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா.

விடை—

இல்லை.

## Apprentice Training in Printing Trade.

Q. No. 334—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Food be pleased to State—

(a) Whether training is provided in printing in the Printing Press in the State owned by the State: and

*(b)* If so, the details thereof

விடை—

(அ) ஆம்.

(ஆ) எழுதுபொருள் அச்சுத் துறையில் 1961 ஆம் வருடத்திய ''பயிற்சியாளர் திட்டத்தின்'' கீழ் ''லெட்டர் பிரஸ் மெஷின்'' எனப்படும் அச்சுப் பிரிவில் பயிற்சி சென்னையிலும் மற்றும் வட்டார அரசினர் அச்சகங்களிலும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒப்பளிக்கப்பட்ட பயிற்சி இடங்களின் எண்ணிக்கை 81 ஆகும்.

## Research in 'Type design and Type Development'

Q. No. 335—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Food be pleased to state—

*(a)* Whether any 'type design and type development' research is being conducted by the Directorate of Printing in this State; and

*(b)* If so, the details thereof?

விடை—

(அ) அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்கத்தினரால் அச்சு வடிவமைப்பு மற்றும் அச்சு எழுத்து வளர்ச்சியும் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடத்தப்படவில்லை.

(ஆ) ஆராய்ச்சி எதுவும் நடத்தப்படாததால் அதைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட ஏதும் இல்லை.

## Printing of Civil List.

Q. No. 336—Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) When the Civil list was printed last ;

(b) the steps taken to print the Civil list periodically; and

(c) if not, what alternative Scheme is to be adopted

விடை—

(அ) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் பட்டியல் 1-1-1968 தேதியை அடிப்படையாக வைத்து இறுதியாக 1972-ல் அச்சிடப்பட்டது.

(ஆ) மற்றும் (இ) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் பட்டியல் முக்கியமாக அலுவலகப் பயனுக்காகவே தயாரிக்கப் படுகிறது. செய்ய வேண்டிய செலவினங்களைக் கருதிப்பார்த்தும் அவ்வப்போது ஏற்படக்கூடிய தேவைக்கேற்றவாறும் அத்தகைய பட்டியல்கள் துறைவாரியாக அச்சிடப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதற்குமான பொதுவான பட்டியல் 1975-லிருந்து சிக்கனம் காரணமாக அச்சிடப்படுவது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

## Factories Act

Q. No. 337—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) Whether the State Government have addressed the Central Government to amend the Factories Act to provide larger powers for the Inspectors under the Act; and

(b) if so, the details thereof

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## Tamil Nadu Institute of Film Technology.

Q. No. 338—Thiru N. KITTAPPA : Will the Hon the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) Whether a post of President of Film Technology has been created in the Tamil Nadu Institute of Film Technology; and

(b) the details of the person appointed to this post



விடை.—

(அ) ஆம்

(ஆ) பத்திரிகையாளர், எழுத்தாளர், நாடகாசிரியர், திரைப்பட இயக்குநர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளரான திரு ப. நீலகண்டன் இப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் 1-7-1979 முதல் அமர்த்தப்பட்டுள்ளார்.

## மதுரை மாவட்ட பஞ்சாயத்து ஒன்றியங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள்.

வினா 339—திரு என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் நெருக்கடி நிலை அமலிலிருந்த காலத்தில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் வேலை பார்த்த நிரந்தர தற்காலிக ஊழியர்களில் வேலையிலிருந்து நீக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் நெருக்கடி நிலை அமலிலிருந்த காலத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டி இருந்த சூழ்நிலையில் பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 18 ஊழியர்களும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 8 ஊழியர்களும் ஆக 26 ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

(ஆ) வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுள் ஒருவர் மட்டும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மீண்டும் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆணை தற்போது அமலில் உள்ளது. எனவே, மற்றவர்களின் நியமனம் அரசு ஆணைகளுக்குப் புறம்பானவையாதலால் அவர்களை மீண்டும் பணியில் நியமனம் செய்யவில்லை. எனினும் தேவைக்கு இணங்க மீண்டும் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டாலும் முன்பு பணி நீக்கம் செய்யப்பட்டவர்களையே மீண்டும் நியமனம் செய்யவேண்டும் என்பதை விதி முறைக்கு உட்பட்டே செய்ய இயலும்.

## Tamil Naud Forest Training School at Vaigai Dam

Q. No. 340—Thiru N. KITTAPPA: Willt he Hon, the Minister for Information and Religious Endowments be pleased to state the details of the courses of study given to the students of the Tamil Nadu Forest Training School, Vaigai Dam?

விடை—

கீழ்க்கண்ட பாடங்களில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது:—

(1) மரம், காடு வளர்ப்புக்கலை (Silviculture).

(2) வனவிலங்குகள் சம்பந்தமான பயிற்சி. (Wild life).

(3) தாவர இயல் (Botany)

(4) நில உட்கூற்றியல் (Geology).

(5) மண் இயல் (Soil Science).

(6) உரு அளவை நூல் (Mensuration).

(7) பயனீட்டுக்கொள்கை சார்ந்த பயிற்சி (Utilisation).

(8) தொழில் நுட்பம் (Engineering).

(9) அளவியல் மற்றும் வரைவியல் (Survey and Drawing).

(10) வனப்பாதுகாப்பியல் (Forest Protection).

(11) கணக்கிடும் முறையும் அதன் விதிகளும் (Accounts and Procedure).

(12) வனத்துறைச் சட்டம் (1 orest Law).

## Demand of Tamil Nadu Judicial Officers Association.

Q. No. 341 —Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) Whether the Tamil Nadu Judicial Officers Association has demanded salary revision in July 1979 for the Judicial Officers: and

(b) If so, the action taken thereon?

விடை—

(அ) ஆம் ஐயா.

(ஆ) கோரிக்கை அரசின் பரிசீலனைக்குபின் நிராகரிக்கப்பட்டது.



## Assault on Assistant Commissioner of Civil Supplies Corporation at Saidapet.

Q. 342—Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) Whether any Assistant Commissioner of the Civil Supplies Corporation attached to Saidapet, Madras, was assaulted on or about the 22nd July 1979 by unknown persons;

(b) If so, the details thereof ; and

(c) the steps taken thereon?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) உணவுப் பொருள் வழங்கு துறை (சைதை மண்டல) உதவி ஆணையாளர் திரு. எஸ். கணபதி 23-7-1979 அன்று சுமார் 9-30 மணிக்கு சென்னை தியாகராய நகரிலுள்ள நடேச அய்யர் தெரு வழியாக மாம்பலம் பஸ் நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த போது ஒரு மண்ணெண்ணை (கைவண்டி) வியாபாரி அவரை தடுத்து நிறுத்தியவுடன் இன்னும் மூன்று பேர்கள் அவரை சூழ்ந்துகொண்டு அவரை தாக்கினார்கள். உடனே அவர் கூச்சல் போட வழிப்போக்கர்கள் அவரைக் காப்பாற்ற முன் வந்ததால் அவரை தாக்கியவர்கள் ஓடிவிட்டனர்.

மண்ணெண்ணை வியாபாரத்தில் சில தில்லு முல்லு செய்த காரணத்தால் அவர்களுக்கு விநியோகத்திற்குத் தரும் மண்ணெண்ணையை நிறுத்திவிட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால் இந்த சம்பவம் நடந்திருக்கிறது. உதவி ஆணையாளர் சிகிச்சைக்காக இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 24-7-1979 அன்று வீட்டிற்கு அனுப்பப்பட்டார். அவர் மாம்பலம் போலீஸ் நிலையத்தில் கொடுத்த மனுவின் மீது காவல் துறையினர் விசாரணை நடத்தி அவ்வாரைத் தாக்கியவர்கள் மீது ஒன்பதாவது நகர குற்றவியல் நீதிமன்றம் முன்பாக விசாரணை தொடரப்பட்டு குற்றவாளிகளுக்கு தலா ரூ. 75 அபராதம் விதிக்கப்பட்டது. குற்றவாளிகள் அபராதத்தையும் செலுத்தி விட்டார்கள்.

## வேலைக்கு உணவு திட்டத்திற்கு மைய அரசு அளித்த மானியம்.

வினா எண் 343 —திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978—79-ல் வேலைக்கு உணவு திட்டத்திற்கு மைய அரசு மானியம் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

விடை :

(அ) வேலைக்கு உணவு திட்டம் இம்மாநிலத்தில் 1979-80 ஆம் நிதியாண்டு முதல் தான் ஆரம்பிக்கப்பட்டது. 1978-79-ல் இத்திட்டம் இம்மாநிலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## Distribution of fertilisers

Q. No. 344 Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) Whether fertilisers are being distributed through Messrs, E.I.D. Parry & Co. and Messrs. Shah Wallace Co. Ltd., in this State ; and

(b) if so details thereof?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தார் இம்மாநிலத்தில் "சூப்பர் பாஸ்பேட் மற்றும் ஃபாரம் பாஸ்" எனும் 16 : 20 காம்பிளக்ஸ் உரங்களைத் தயாரித்து விநியோகித்து வருகின்றனர். ஷா வாலஸ் நிறுவனத்தார் சூப்பர் பாஸ்பேட் உரம் தயாரித்து விநியோகித்து வருகின்றனர். இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் மத்திய அரசு இம்மாநிலத்தில் உரங்கள் விநியோகிக்கும் பொறுப்பை இவ்விரு நிறுவனங்களுக்கும் ஒப்படைத்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் கீழ்க்கண்ட அளவில் உரங்களை இம்மாநிலத்தில் விநியோகிக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் | .. | சூப்பர் பாஸ்பேட் 23,000 டன்கள் |
| | | 16 : 20 காம்பிளக்ஸ் 13,500 டன்கள். |
| 2 ஷா வாலஸ் நிறுவனம் | .. | சூப்பர் பாஸ்பேட் - 25,000 டன்கள். |



## தஞ்சை மாவட்டத்தில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

வினா எண் 345 திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1978-79-ல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(ஆ) அதில் தண்டனை பெற்ற வழக்குகள் எத்தனை ?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1978-79-ல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 244.

(ஆ) அதில் தண்டனை பெற்ற வழக்குகள் 15.

வினா எண் 346 திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பேரளம் காவல் நிலைய பகுதியில் 1977-78, 1978-79-ல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் எத்தனை ?

(ஆ) அதில் ஆய்விலேயே தள்ளுபடி செய்த வழக்குகள் எத்தனை?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம், பேரளம் காவல் நிலைய பகுதியில் 1977-78-ல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவாகவில்லை. 1978-79-ல் எட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன.

(ஆ) 1978-79 ஆய்விலேயே 5 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

## திருச்சி பாரத் மிகு மின் நிலையத் தொழிலாளர்கள்.

வினா எண் 347—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள பாரத் மிகு மின் நிலையத் தொழிலாளர்கள் (பி.எச்.இ.எல்.) வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருப்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருச்சி தொழிலாளர் நல அதிகாரி ஓர் சமரச உடன்பாடு காண இதன் மீது பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் வேலை நிறுத்த அறிவிப்புப்படி 7,148 தொழிலாளர்களில் 153 பேர் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள் அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து விட்டு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் அன்று வேலைக்குத் திரும்பி விட்டனர்.

## அம்பத்தூர் டன்லப் தொழிற்சாலைக் கதவடைப்பு.

வினா எண் 348—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் டன்லப் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதைத் திறப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் அன்று நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு நிர்வாகமும் கதவடைப்பை நீக்கியதால் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள் முதல் தொழிற்சாலை திறக்கப்பட்டு சகஜ நிலைமையில் தற்போது தொழிற்சாலை இயங்கி வருகிறது.

## வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய பயறு வகைகள்.

வினா எண் 349—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் புரதச் சத்துக்கள் அடங்கிய புதிய பயறு வகைகள் ஏதேனும் வெளியிட்டுள்ளதா ?



(ஆ) ஆம் எனில், எந்தவகை பயறு வகைகள் ?

(இ) இதற்கான செலவு விவரங்கள் என்ன ?

(ஈ) தற்போது ஆராய்ச்சிகளில் உள்ள தானிய வகைகள் யாவை ?

விடை—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1979-ஆம் ஆண்டு காராமணி, கொண்டைக் கடலை ஆகிய பயறு பயிர் வகைகளில் அதிக மகசூல் தரும் இரகங்களை வெளியிட்டுள்ளது. பயறு வகைகள் பொதுவாகப் புரதச் சத்து உள்ள பயிர்களாகும்.

(ஆ) காராமணிப் பயிரில் கோ. 3 என்ற இரகத்தையும் கொண்டைக் கடலையில் கோ. 2 என்ற இரகத்தையும் வெளியிட்டுள்ளது.

(இ) (1) காராமணிப் பயறு : மானாவாரிப் பயிராகப் பயிரிட ஹெக்டேருக்கு ரூ. 750 செலவாகும் ; சுமார் ரூ. 510 நிகர இலாபம் அடையலாம். இறவைப் பயிராகப் பயிர்செய்ய ஹெக்டேருக்கு ரூ. 1,080 செலவாகும் ; நிகர இலாபம் ரூ. 405 பெறலாம்.

(2) கொண்டைக் கடலை : இந்தப் பயிரினை மானாவாரியில் பயிரிட ஒரு ஹெக்டேருக்கு ரூ. 550 செலவாகும். இதைப் பயிர் செய்வதால் ஒரு ஹெக்டேருக்கு நிகர லாபம் ரூ. 450 கிடைக்கும்.

(ஈ) தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தமிழகத்தில் பயிரிடப்படும் பயறு வகைகளாவன துவரை, உளுந்து, பச்சைப் பயறு, காராமணி, கொள்ளு, கொண்டைக் கடலை, மொச்சை ஆகிய பயிர்களில் அதிக மகசூல் தரவல்ல இரகங்களை உருவாக்குவது குறித்து ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

## மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் சீனியர் ஹவுஸ் சர்ஜன்கள் நியமனம்.

வினா 350—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சீனியர். ஹவுஸ் சர்ஜன்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும் .

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. அறிக்கை அளித்தல்

துணை வினாக்களுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதியன்று உடுக்குறியிட்ட வினா என் 99-க்கு (10346) எழுப்பப்பெற்ற துணை வினாக்களுக்கு அளிக்கபெற்ற விடைகளுக்கு மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் திருத்தம் ஒன்றை அளிப்பார். கேள்வி கேட்டவர்கள் திரு. எம். ஏ. லத்தீப், திரு.ரா. உமாநாத் ஆகியோர்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதி அன்று உடுக்குறியிட்ட வினா என் 99-க்கு விடையளிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எம். ஏ. லத்தீப் மற்றும் ரா. உமா நாத் ஆகியோரது துணை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில் களுக்கான திருத்தங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு திரு. எம். ஏ. லத்தீப் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் :

' 4-வது வாரியம் ஏற்பட்ட பிறகு 3-வது வாரியத்தின்மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன்மீது புலன் விசாரணை செய் திருக்கிறார்கள். '

### திருத்தம்.

'4-வது வாரியம் ஏற்படுவதற்கு முன்னாலே 3-வது வாரி யத்தின் மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன்மீது விசாரணை செய்திருக்கிறார்கள். '

மாண்புமிகு திரு. ரா. உமாநாத் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் : ' . . . . . . . . . . . .இதன் மீது கொடுக்கப்பட்ட ரிப் போர்டிலிருந்து 44 வழக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. திரும்ப வும் இதிலுள்ள உறுப்பினர்கள் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்க வில்லை என்று சொன்னதற்குப் பிறகு இப்போது அரசின் சார்

3-11-79 அன்றைய 306-307ம் பக்கங்களில் பார்க்க.



பில் விழிப்புணர்ச்சி—லஞ்ச ஒழிப்புத் துறையின் மூலமாக ஒவ் வொரு உறுப்பினரின் கருத்துக்களையும் கேட்டு புலன் விசாரணை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பிறகு அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கும். '

### திருத்தங்கள்.

' 42 குற்றச்சாட்டுகள் மற்றும் 33 புதிய வழக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விசாரணை நடத்தி அதன்மீது வந்த அறிக் கையின் பேரில் அரசு, தமிழ்நாடு வக்பு வாரியத்தையும், சம் பந்தப்பட்ட இலாக்காக்களையும் கலந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்படி விசாரணைக்குட்பட்ட முன்னாள் வக்பு குழு உறுப் பினர்களிடமிருந்து, தங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று எந்த வேண்டுகோளும் அரசுக்கு வரவில்லை. புகார்களின் உண்மைத்தன்மையைக் கண்டறியவே மேற்படி விசாரணை நடத் தப்பட்டதால் இவ்விசாரணையின்போது அந்த உறுப்பினர் களுக்கு வாய்ப்பளிக்கின்ற கேள்வி எழவில்லை. '

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் திருத்தம் கொடுத்த பிறகும் நான் கேட்க விரும்புவது, அதிலிருக்கக்கூடிய ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் எனக்குத் தெரிந்தவர்கள். யார் தவறு செய்தாலும் நிருபிக்கப் பட்டால் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், முடிவெடுப்பதற்கு முன்னதாக சந்தர்ப்பம் கொடுக்க வேண்டு மென்பது ' பிரின்சிப்பில்ஸ் ஆஃப் நாச்சுரல் ஜஸ்டிஸ் '. அது வழங்கப்பட வில்லையென்று கூறுகிறபொழுது அந்த நியாயம், அந்த 'பிரின்சிப்பில்ஸ் ஆஃப் நாச்சுரல் ஜஸ்டிஸ் 'ஸின்கீழ் அவர்கள் ' பொசிஷனை " எக்ஸ்ப்ளெய்ன் பண்ணுவதற்கு அவர் களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் எப்படி வக்ஃப் உறுப் பினர்கள் தெரிவித்தார்களோ, அதே போல், என்னிடத்திலே தெரிவித்ததையொட்டித்தான் அந்தப் பதிலை நான் சொன்னேன். ஆனால், அதிகாரப்பூர்வமாக நான் கோப்புகளைப் பார்த்த பொழுது, அப்படிக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அத னால் அந்தக் கேள்வி எழவில்லை என்று திருத்தத்தில் தெரி வித்தேன். அப்படி யாராவது கேட்டால், அதிகாரப் பூர்வமாக எழுதிக் கொடுத்தால் கண்டிப்பாக வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்பது ஒன்று. அப்படிக் கொடுக்கக் கூடிய நிலை உருவாகும்போது, உங்கள் மீது இன்னின்ன குற்றச்,

சாட்டுகள் இருக்கின்றன. என்று முறையாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்குத் தெரிவித்த பிறகு, அவர்களுடைய விளக்கங்களைத் தர வாய்ப்பு தரவேண்டும் என்று கேட்க முடியும் அப்படி ஏதாவது சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறதா ? அப்படி என்றால் யார் யார் அந்த உறுப்பினர்கள், அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். இது லஞ்ச ஒழிப்புத் துறையின் பரிசீலனையில் — அவர்கள் ஆய்வில் இருக்கிறது. எனவே அவர்கள் எப்படி இந்த வழக்கை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அறிக்கை தருகிறார்களோ அதன்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். ஒருவேளை உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கக்கூடும். அவர்கள் கேட்காவிட்டாலும் கூட உங்கள் மீது இன்னின்ன குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இலாகாபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்றால், அரசுக்கு மனுப் போட்டால் நிச்சயமாக அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்குப் பதிலாகத் தெரிவித்திருக்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### கிராமப்புறங்களில் டீசல், மின்சாரப் பற்றாக்குறை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் டீசல் கிடையாது, மின்சாரம் கிடையாது. இது குறித்து இந்த அவையிலே ஏகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது பற்றி விவசாயிகள் அரசாங்கத்திற்குத் தந்தி, மனுக்கள் மூலமாக அனுப்பியிருக்கிறார்கள். அதைக் குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. போதிய டீசல் கிடைக்கவில்லை, மின்சாரத்திற்கும் கட்டுப்பாடு இருக்கிறது. பயிர்கள் காய்கின்றன. விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசு போதிய நடவடிக்கை எடுத்து போதிய டீசல் கொடுக்காதன்தயும் மின்சாரம் கொடுக்காததையும் கண்டித்து முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம், அடையாள பூர்வமாக.

(காங்கிரஸ், தி,மு.க. அகிலஇந்திய பார்வாடு பிளாக், முஸ்லீம் லீக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்)



## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் மாநில அரசின் முதல்வரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் தேதியன்று சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் மத்திய அரசின் பெட்ரோலிய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் தமிழக முதல்வர் தாமாக வெளியேறாவிட்டால், அவரை தூக்கி எறிய வேண்டுமென பகிரங்கமாகப் பொதுமக்களை, தமிழக அரசுக்கு எதிராக வன்முறை கலகம் செய்யத் தூண்டியதன் மூலம் ஏற்பட்டுள்ள ஆபத்தான பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்து வைக்க வேண்டும் என்று கேட்டு திரு. உமாநாத் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த விஷயமானது இந்த அவை சம்பந்தப்பட்டதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் சம்பந்தப்பட்டதும், மிகவும் சீரியசும், கிரேவாகவும் இருக்கக்கூடியதும் ஆகும். மத்திய பெட்ரோலியம் மினிஸ்டரும் என் அருமை நண்பருமான— நண்பர் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால் நான் பார்லிமெண்டிலே இருக்கும் போது அவர் அமைச்சராக இருந்தார். திரு. சேத்தி அவர்கள் தமிழ் நாட்டிலே வந்து, சென்னையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசி இருக்கிற பிரச்சினை, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய மக்களின் மன அமைதியைக் குலைக்கக்கூடிய முறையிலே, சீரியஸ் கான்சிக்வன்ஸ் என்ற முறையிலே இருக்கிறது என்பதை நான் சொல்லுகிறேன்.

It is part of a diabolical plan to illegally, unconstitutionally and immorally unseat an elected Government and dissolve an elected House. அப்படித்தான் நான் இதைக் கருதுகிறேன். அந்தக் கூட்டத்தில் அவர் பேசியிருப்பது அப்ஜக்ஷனபிள் அண்டு சீரியஸ் மேட்டர் என்று சொல்லியிருக்கிறேன். இது "தினமணி" பத்திரிகை மதுரை எடிஷன் 9-ந் தேதி, மெட்ராஸ் எடிஷன் 8-ந்தேதி, இதிலே 2 அயிட்டம்கள் இருக்கின்றன. ஒன்று எம்.ஜி. இராமச்சந்திரனுக்குத் தன்மான உணர்ச்சி இருந்தால், யார் சொல்வது, நார்த்திலே இருந்து வந்தவர் சொல்கிறார், பி. சி. சேத்தி பார்ட்டி லீடர் ஆக இருந்தாலும் அவர் யூனியன் மினிஸ்டர் ஆகவும் இருக்கிறார்.

He still remains a Union Minister.

எம்.ஜி.ஆருக்குத் தன்மான உணர்ச்சி இருந்தால் மக்கள் தீர்ப்பை மதித்து பதவியில் இருந்து விலக வேண்டும், என்று சொல்லியிருக்கிறார். அடுத்து ஒன்று சொல்கிறார். எம். ஜி. இராமச்சந்திரன் தானாக விலகா விட்டால் அவரை வெளியேற்ற மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று திரு. சேத்தி குறிப்பிட்டார். அதாவது தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருக்க வேண்டுமாம். நான் பல பத்திரிகைகளைப் பார்த்தேன். " இந்துவில் " ஷார்ப்பாக இருக்கிறது.

"If the Chief Minister does not go by himself, you have to throw him cut."

[முற்பகல் 10-10]

கூட்டத்தில் இருக்கிற ஜனங்களைப் பார்த்து ஒரு மத்திய அமைச்சர் சொல்கிறார். நீங்கள் அவரைத் தூக்கி எறிய வேண்டும் என்று கூறுகிறார். These are the important portions நான் எழுப்புகிற அப்ஜெக்ஷனைப் பொறுத்த மட்டில், ஒன்றிரண்டு முக்கியமான இம்பிளிக்கேஷன்ஸ் உண்டு. ஒன்று 'ப்ரொப்ரைட்டி'.. அது என்னவென்றால், ஒரு அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர் இன்னொரு அரசாங்க அமைச்சரைப் பற்றிக் குறிப்பிடும்போது பிரசங்கம் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டியது. ஒரு மத்திய அமைச்சர் ஒரு மாநில முதலமைச்சரைப்பற்றி விமர்சனம் செய்யும்போது, விமர்சனம் செய்ய அவருக்கு உரிமை உண்டு, ஆனால் அதிலே கடைப்பிடிக்க வேண்டிய ப்ரொப்ரைட்டி முக்கிய விஷயம். அவர் கூட்டத்திலே பேசும்போது, Propriety between Minister and Minister between Minister and Chief Minister என்பது கையாளப்பட வேண்டிய ஒன்று. நான் என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். எங்களுடைய தோழர் ஜோதிபாசு அவர்கள் தமிழ் நாட்டில் பல பொதுக் கூட்டங்களில் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தினுடைய பாலிசியிலும் எங்களுடைய பாலிசியிலும் டிஃபரன்ஸ் உண்டு. இருந்தபோதிலும் மேடையில் பேசும்போது ப்ரொப்ரைட்டி இல்லாமல் பிரசங்கம் செய்யவில்லை. நான் யாரோடு வேண்டுமானாலும் 'சாலஞ்ச்' பண்ணத் தயாராக இருக்கிறேன். எங்கள் தோழர் அந்த வழிமுறைகளை மீறவில்லை இந்த அரசாங்கத்தை ரெஃபர் செய்யும்போது, ஒரு சீஃப் மினிஸ்டர் இன்னொரு சீஃப் மினிஸ்டரைப்பற்றிப் பேசும்போது ப்ரொப்ரைட்டியை கடைப் பிடித்துதான் பேசியிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். அது இப்போது இங்கே மீறப்பட்டிருக்கிறது.



இரண்டாவதாக அவர் சொல்லியிருப்பது, அவராகவே இராஜிநாமா செய்யவில்லை என்றால் மக்களை, தூக்கி எறியுங்கள் என்று சொல்வதன் பொருள் என்ன ? பொது மக்களை கலகம் செய்ய ஒரு முக்கிய பொறுப்பிலே இருக்கிற மத்திய அமைச்சர் பகிரங்கமாக மக்களைத் தூண்டி விடுகிறார் என்று அர்த்தம். பொதுமக்கள் வன்முறையில் ஈடுபட்டு, சர்க்காரை கவிழ்க்க வேண்டும் என்பதுதான் அவருடைய பிரசங்கத்தின் பொருளாக இருக்கிறது. அப்படி, தாங்களே கலகத்தை செய்த பிறகு, ஜனங்கள் வன்முறையில் ஈடுபட்ட பிறகு, சட்டம், அமைதி குலைந்து விட்டது என்று மத்திய சர்க்கார் சொல்லி,

"quote the consequences, throw the duly elected Government and dissolve the House.

அந்த மாதிரியாக இதில் அடங்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இருப்பது இம்பிளிகேஷன். ஒரு மத்திய அமைச்சர் இப்படிப் பேசும்போது, இங்கே இருக்கிற மாநில அரசைச் சேர்ந்த சீனியர் அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? சீனியர் அதிகாரிகள் உட்பட எல்லா அதிகாரிகளும் இது மத்திய அரசு அறிவிப்பைச் சேர்ந்ததததோ என்று எண்ண இடமிருக்கிறது, If he does not go out threw him cut ? என்று சொல்லும்போது இங்கு இருக்கக் கூடிய சீனியர் ஆபீசர்ஸ் தெரிந்துதான் சொல்கிறார், அதனால்தான் வெளியே சொல்கிறார் என்று நினைப்பார்கள். ஆகவே, இந்த நேரத்தில் ஒரு மத்திய சர்க்கார் அமைச்சர் இந்தச் சர்க்கார் போய்விடும் என்ற (குறுக்கீடுக )

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். ஒரு அமைச்சர் என்ன சொன்னார் என்று விளக்குகிறார்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்து விட்டீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பதை விளக்க அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அனுமதிக்க முடியாது. ; நீங்கள் பேசும்போது குறிப்பிடலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்த பிறகுதான் இப்படி விரிவாகப் பேசலாம். நீங்கள் அனுமதித்து விட்டீர்களா ?

[1980 பிப்ரவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரிமுத்து அவர்கள் எனக்கு வழிகாட்ட வேண்டும். திரு. உமாநாத் அவர்கள் மத்திய அமைச்சர் பேசியதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் அனுமதித்த பிறகுதான் இதையெல்லாம் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விளக்குவதற்கு அனுமதித்திருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஒரு விவாதம் அனுமதிக்கப்பட்டு, அதன் பிறகுதான் இப்படி விரிவாகப் பேசலாம். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அவையில் எழுப்ப அனுமதி அளித்திருக்கிறேன். அவர் பேசுகிறார். அதற்கு நான் இன்னும் பதில் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : சார், இப்படி ஒத்திவைப்புத் தீர்மானம், உரிமைப் பிரச்சினை............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள பத்திரிகையிலே வந்ததை வைத்துத்தான் விளக்குகிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையாக விளக்கிக் கொண்டே போகிறார். ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் இவ்வாறு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இன்னும் முடிக்கவில்லை. அதை முழுமையாகக் கேட்காமல் ஏன் பேசுகிறீர்கள் ?

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, இவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படும் முன்புஅதிலே நீண்ட நேரம் பேசுவதற்கு நீங்கள் ஏன் அனுமதி கொடுக்கிறீர்கள்....

(கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இப்படி எல்லோரும் பேசுவதற்கு எழுந்தால் நான் என்ன செய்வது....................



1980 பிப்ரவரி 11]

திரு. துரை முத்துசாமி : நீங்கள் ஏன் அனுமதித்தீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னைக் கேள்வி கேட்கக் கூடாது. உட்காருங்கள். நான் திரு. மாரிமுத்து அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்வதற்கு முன்பு இப்படி எல்லோரும் குறுக்கிட்டால் என்ன செய்வது?

திரு. துரை முத்துசாமி : அவர் பத்திரிகையிலே வந்ததை வைத்து விரிவாகப் பேசிக் கொண்டே போகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரிமுத்து அவர்கள் கேட்டதற்கு நான்............

திரு. அ. ரகுமான்கான் : ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இவ்வாறு பேச அனுமதிப்பது முறையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவர் பேசுகிறார் என்று சொல்கிறீர்கள், நான் விளக்குகிறார் என்று சொல்கிறேன்.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்ற விஷயம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழே வராது என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் குறித்து நீங்கள் எழுத்து மூலமாக எழுதித் தாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்கிறேன். தலைவரவர்களே,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் தொடர்ந்து பேசி முடிக்க விரும்புகிறேன். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் ஏன் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்பது பற்றித்தான் விளக்கிக் கொண்டிருக்கிறார். ஆகவே அதைக் கேட்ட பிறகுதான் நான் முடிவு எடுப்பேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இன்னும் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை தாங்கள் இன்னும் அனுமதிக்கவில்லை. இது ஏன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான விளக்கத்தைத்தான் நான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மற்றவர்கள் அதற்குள் பதட்டப்பட வேண்டியதில்லை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி இரண்டுபேர் பேச ஆரம்பித்தால் நான் யாருக்கு அனுமதி கொடுப்பது?

[முற்பகல் 10-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் முதலிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் படிப்பார்கள். அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் படித்துவிட்டு அமர்ந்து விட்ட பிறகு அதை ஏற்று விவாதத்திற்கு அனுமதிப்பார்கள். இப்போது நீங்கள் விவாதத்திற்கு அனுமதித்திருக்கிறீர்கள். அது தவறு.........(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது தவறு. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில்தான், படித்து விட்டு அமர்ந்து விட வேண்டும்; அமைச்சர் அறிக்கை அளித்தபின் ஒன்றிரண்டு விளக்கம் கேட்கலாம் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் விளக்கிச் சொன்ன பிறகுதான் அந்தத் தீர்மானத்திற்கு இசைவு கொடுக்கப்படுகிறதா மறுக்கப்படுகிறதா என்கிற என்னுடைய முடிவு சொல்லப்படும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : எல்லோருக்கும் அது போல் அனுமதி தருகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரையும் அனுமதிக்கிறேன். திரு. உமாநாத் தொடர்ந்து பேசட்டும்.

திரு. ரா. உமாநாத் : இந்தமாதிரி இது பேசலாம், இது பேசக் கூடாது என்று எப்பொழுதும் இந்த மன்றத்தில் சர்ச்சை எழுவதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த சபையினுடைய மரி யாதைபற்றி நாம் நடந்து கொள்கிற (கூச்சல் குழப்பம்)

திரு. ரா. உமாநாத் : எனக்குப் பேச உரிமையில்லையா நான் பேசக் கூடாதா (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் எழுந்து நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தால் எப்படிப் புரியும்? எப்படி அவையை நடத்துவது ? திரு. சுப்பு தயவு செய்து உட்காருங்கள். திரு. ரகுமான்கான் உங்களை அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.





திரு. க. சுப்பு : இது ரகுமான்கானுக்கு மட்டும் தானா? எவ்வளவு பேர்கள் எழுந்து நிற்கிறார்கள் ? அவர்களுக்கும் சொல்லவேண்டாமா ? (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும்தான் சொல்கிறேன. தயவு செய்து உட்காருங்கள்........

(திரு. ரகுமான்கான் நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்)

திரு. கு. ரமணி : மேஜையை உடைப்பதற்கு விதி இருக்கிறதா? உடைத்து என்ன செய்யப்போகிறார்கள்.. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்களே, தயவு செய்து உட்காருங்கள், நல்லதம்பி உட்காருங்கள். திரு. ரகுமான்கான் உங்களை அனுமதிக்க முடியாது. இப்படி அனுமதி இல்லாமல் நீங்களாகவே எழுந்து நின்று பேசிக்கொண்டிருப்பது தவறு. இது அவை, இதற்கு மரியாதை கொடுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. சுப்பு நீங்களும் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்த அவை பாரம்பரியம் மிக்க அவை என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அவையின் விதிமுறைகளின் அடிப்படையில் நாம் விவாதிக்க விரும்புகிறோம். விதிகளைச் சுட்டிக்காட்டி விவா திக்கிற போது, விதிகளின் அடிப்படையில் விவாதிக்க அனுமதிக்க வேண்டும். இங்கே கூறுகிற குறைபாடு ஒத்திவைப்புத் தீர் மானத்திற்கு ஃபிரைமாபேசி இல்லை என்று வாதாடுகிறார்கள். பிரச்னைகளை விதிகளின் அடிப்படையிலே விவாதித்து சுமூக மாக அவை நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : விதியைச் சொல்ல விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி எழுந்து எழுந்து பேரவைத் தலைவருக்கு அறிவுரை சொல்வது என்றால் இது அவையா? (கூச்சல் குழப்பம்).

எல்லோரும் உட்காருங்கள். இது வழக்குமன்றம் அல்ல நீங்கள் வக்காலத்து வாங்குவதற்கு.

[1980 பிப்ரவரி 11

திரு. க. சுப்பு : குறிப்பிட்டு விதியைச் சொல்லச் சொன்னதினால் சொல்கிறேன். திரு. ரஹுமான்கான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். அதற்கு கம்யூனிஸ்ட் கட்சி, ரைட் லெப்ட், ஜனதா எல்லோரும், இப்போது அவர்கள் கூட்டாக இருக்கலாம், அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் 'திரட்டென்' செய்வதற்கு நாங்கள் பயப்படமாட்டோம். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விதியின்கீழ் பேசவில்லை;

திரு. ரா. உமாநாத் : ஆகவே இந்தப் பேச்சின் இரண்டாவது பொருளானது, இந்த மாநில அரசாங்கத்தின் அதிகாரிகளை அச்சுறுத்துவதாக இருக்கிறது என்று கருதுகிறேன். ஏனென்றால், மாநில அரசு அதிகாரிகள் என்ன நினைக்கக் கூடும் என்றால் இதுதான் போகக்கூடிய சர்க்கார் என்று மத்திய அமைச்சர்தான் சொல்லிவிட்டாரே, இந்த நேரத்தில் நாம் ஒரு முடிவு எடுத்தால், இது போகிற சர்க்கார், நாம் முடிவு எடுத்தால் நமக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்று செயலற்று நிற்பார்கள். ஆகவே constitutional machinery will come to a stand still அப்படி ஒரு 'ஸ்டாண்ட்ஸ்டில்' வந்த பிறகு அதை 'கோட்' செய்து There is constitutional breakdown in Tamilnadu என்று சொல்லி 'இன்டர்வீன்' செய்து இந்தச் சபையைக் கலைக்க, இந்த அரசை கலைக்க பொதுவாக 'க்ரவுண்ட் வொர்க்' ப்ரப்பரேஷன் என்ற முறையிலேதான் இருக்கிறது. இதற்கு முன்பு பல அட்ஜர்ன்மென்ட் மோஷன்ஸ் வந்தபோது உங்கள் உசிதப்படி நீங்கள் நேரம் கொடுத்திருக்கிறீர்கள். குறைவாகவும் கொடுத்திருக்கிறீர்கள். அவற்றை நாங்கள் க்வஸ்டின் செய்யவில்லை. ஆகவே, உங்கள் முடிவிற்கு விடுகிறோம். ஆக, இந்த முறையில் 'டிபெக்ஷன்' மூலம் இந்த அரசாங்கத்தை கலைக்கலாம் என்று நினைத்தார்கள். 'டிபெக்ஷன்' மூலம் சாத்தியமில்லை என்ற நிலை வந்தபோது இப்போது வன்முறை மூலம் இந்த அரசாங்கத்தை.............

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி மறுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னால் தருகிறேன். நீங்கள் கேட்கும்போது கொடுக்க வேண்டும் என்பதல்ல. (கூச்சல் குழப்பம்).



1980 பிப்ரவரி 11]

திரு. ரா. உமாநாத் : டிபெக்ஷன் மூலம், கட்சி மாறுவதின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கலைக்க முடியவில்லை, ஆகவே இன்று வன்முறை மூலம் கவிழ்க்கலாம் என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (கூச்சல் குழப்பம்).

[முற்பகல் 10–30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்புவுக்கு நான் சொல்லவில்லை. எல்லோருக்கும் நடவடிக்கை என்று நான் சொல்லமாட்டேன். இதுதான் முறையா? இது அவையா? நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் : உட்காருங்கள்:

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே. கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதாவது, திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கம் ஆட்சி நடத்துகின்றபோது. டிஸ்மிஸ் செய்வதற்கு ஒரு 3. 4 மாதங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன்......இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்றவர். அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்தபோது, மத்திய அமைச்சர் இங்கே வந்து பேசிய போது, அன்றைக்கு ஒரு பப்ளிக் மீட்டிங்கில் கிரிமினல் என்று கூறினார். திராவிட முன்னேற்றக் கழகம் டிஸ்மிஸ் செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்அப்படி கூறியஅமைச்சர் இதே திரு. சேதி தான். அவர்கள் அன்றைக்கு கிரிமினல் என்று சொன்னார்கள். என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (கூச்சல்) நம்முடைய பாரதப் பிரதமர் கடைசியாகச் சொல்லியிருக்கிறார்........ பதவி எடுத்தவுடனே அவர்கள் ரேடியோவிலே பேசுகின்றபோது ............

திரு. சென்னை மு. அரங்கநாதன் : (குறுக்கீடு) இந்த அறிவுரையை அங்கே சொல்லுங்கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்......... (கூச்சல்— குழப்பம்). நானே அவரை முடிக்கச் சொல்லியிருப்பேன். நீங்கள் இப்படியெல்லாம் செய்வது சரியல்ல,

[1980 பிப்ரவரி 11

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே. நம்முடைய பாரதப் பிரதமர் பதவிப் பிரமாணம் எடுத்தபோது. ரேடியோ விலே பேசுகின்ற போது நாட்டுக்கும் எல்லோருக்கும் ஒரு வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதியானது, நான் 'கான்பிரான்டேஷனு'க்குப் போக மாட்டேன், 'கோ ஆபரேஷன், எல்லோருடைய ஒத்துழைப்பும் தான் தேவை என்று சொன் னார்கள். இன்றைக்கு........(கூச்சல்— குழப்பம்).

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர்....
(திரு. சாதிக் பாட்சா வெளிநடப்புச் செய்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சாதிக் பாட்ச அவர்கள் ** அடியுங்கள்.

திரு. ரா. உமாநாத் : நம்முடைய நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ரேடியோ ஸ்பீச் மூலமாக நாட்டுக்கு ஒரு வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதியானது. நான் எந்தக் கட்சிகளோடும். எந்த அரசாங்கத்தோடும் 'கான் பிரான்டேஷன் பண்ண மாட்டேன்: ஒத்துழைப்பேன். 'கான் பிரான்டேஷன் கூடாது. 'கோ ஆபரேஷன் தேவை என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியைப் பொறுத்தவரையிலே. கொடுத்த வாக்குறுதியையே பிரதமர் அவர்கள் இன்றைக்கு மீறி. இந்த மாநில அரசோடு ஒத் துழைப்பதற்குப் பதிலாக 'கான்பிரான்டேஷன் என்று இன் றைக்கு ஆரம்பித்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்பு கிறேன். (கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆறுமுகம். சுப்பு, சொக்கலிங்கம், புருஷோத்தமன் நல்லதம்பி— நீங்கள் எல்லாம் இந்தச் செய்கையை அனுமதிக்கிறீர்களா? இல்லை யென்றால் என்ன சொல்லுகிறீர்கள்? அரசாங்கத்தின் பொருளை சேதமாக்குவது நியாயமில்லை: உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : ஆகவே தலைவர் அவர்களே. இந்த மோதல். இருக்கக்கூடிய கன்ஃப்ரான்டேஷன் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தை விளைவிக்கும். இதைப்பற்றி இந்த அவையில் விவாதிக்க வேண்டும். இந்தஅரசைக் கலைப்பது என்ற முறையில் மிரட்டுவதாக இருந்தால் அதை பேஸ் பண்ணத் தயார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்.....

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் மேஜையை உடைக்கிறீர்கள். மேஜையை உடைத்துவிட்டு பாய்ன்ட் ஆப் ஆர்டரா? பேரவை முன்னா....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை இங்கே கொண்டு வந்தார்கள். அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் மத்திய பெட் ரோலியம் அமைச்சர் அருமை நண்பர் திரு. சேத்தி அவர்கள் முதலமைச்சரைப் பற்றியும், தமிழகத்தின் அரசைப் பற்றியும் பேசிய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். பல கருத்துக்கள் மக்களைத் தூண்டி விடுகின்ற முறையில் அரசுக்கு, எதிராக அவர் சொல்லிய கருத்துக்களையும் சுட்டிக் காட்டி எந்த அளவுக்கு இது முறைகேடான காரியம் என்பதைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

மைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற ஒரு மத்திய அமைச்சர் இங்கே இப்படிப்பட்ட கருத்துக்களை வெளி யிட்டிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமான ஒன்று என்பதை நான் மெத்தப் பணிவோடு இந்த அவைக்குத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலும் இப் படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றதை அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். உண்மை யிலேயே அருமை நண்பர் திரு சேத்தி அவர்கள் சென்னைக்கு விமானத்தில் வந்து கொண்டிருந்த நேரத்தில் மிக அருமையாக முதலமைச்சரோடு பேசி முதலமைச்சரோடு உரை யாடி முதலமைச்சரோடு தேநீர் விருந்து அருந்த வருவதாகவும் அல்லது முதலமைச்சரோடு நண்பகல் உணவுக்கு வருவதாகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்த பிறகு அவர் இந்தக் கருத்தைப் பொதுக்கூட்டத்தில் தெரிவித்திருப்பது வேதனைக்குரியது என்பது மட்டுமல்லாமல் கண்டனத்திற்குரியது என்பதையும் இந்த அவையில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந் திருக்கின்ற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஏனென்றால் ஏற்கனவே நமது முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையாருக்குக் கடிதம் எழுத இருப்பதாக வும், அதன் மூலம் தமிழக மக்களின் வேதனையைச் சொல்லிக் காட்டப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் நான், திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் முதலமைச்சரே இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்ட பிறகு பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதுவதாகச் சொல்லியான பிறகு பிரதமஅமைச்சர் அவர்களது உணர்வுகளை தெரிந்த பிறகு

எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதுதான் நியாயமாக இருக்கும் என்று கூறி ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு பேரவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் எழுந்து நின்றதே ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதற்காகத்தான்.....

திரு. சி. ஆறுமுகம் : எல்லாவற்றையும் பேச அனுமதித்து விட்டு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி இல்லை என்று தீர்ப்புக் கூறுவதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

[முற்பகல் 10-40]

திரு. க. சுப்பு : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு நேரம் அரசாங்கச் சொத்தை சேதப்படுத்தியிருக்க வேண்டியதில்லை. அவையின் மரபுகளை மீறியிருக்க வேண்டியதில்லை. அவையினுடைய செயலுக்கு மீறி சப்தம் போட்டுக் கொண்டு இருக்கவேண்டியதில்லை.

திரு. க. சுப்பு : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள். நான் ரிக்கார்ட் பண்ண வேண்டும் அல்லவா? மேசையை உடைத்ததை எல்லாம் ரிக்கார்ட் பண்ண வேண்டும்.

திரு. க. சுப்பு : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகரை மதித்தா பேசினீர்கள்? நிறுத்தி விதிகளுக்கு உட்பட்டு மனச்சாட்சியைத் தொட்டுப் பேசுங்கள் அடிக்கச் சொன்னீர்கள். ** திரு லத்தீப் அவர்கள் அங்கிருந்து கொண்டு எல்லோரும் சப்தம் போடுங்கள் என்று சொல்கிறார்கள்.....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. து. புருஷோத்தமன் : திரு சாதிக் பாட்சா அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு புருஷோத்தமன் நீங்கள் உட்காருங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : திரு சாதிக் பாட்சா சொல்லவில்லை. * * * சொல்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்ற வார்த்தையைச் சொல்லாதீர்கள். விதிகளைக் கற்றுக் கொண்டு வாருங்கள். சைதாப்பேட்டையில் வழக்கு மன்றம் எல்லாம் இருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன் : தாம்பரத்திலே கூட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாம்பரத்திலே இல்லை. சைதாப்பேட்டையிலே இருக்கிறது. உட்காருங்கள் விதிகளைப் படித்துக்கொண்டு வாருங்கள். ** என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டு வாருங்கள்.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரைப் பற்றி மறைமுகமாகப் பேசுவதே தவறு. உங்கள் ஒழுங்குப் பிரச்சினையை அனுமதித்ததே தவறு (குறுக்கீடு). என்னைத் தயவு செய்து மனம் திறந்து பேசவிடுங்கள். உங்களுக்குத் திறமை இருக்கலாம். பரந்த அறிவு இருக்கலாம். நாலே வரிகளிலே புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் இருக்கலாம். *** உங்களுக்குச் சுருக்கமாக ஏறிவிடும் அந்த அளவிற்கு எனக்கு ஏறாது. அவர்கள் சொல்லி முடிக்கிற வரையில் நான் காத்திருக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை வேறுவிதியின் கீழ் கொண்டுவாருங்கள். இந்த விதியின் கீழ் தனிப்பட்ட ஒருவரைப்பற்றிச் சொல்லவில்லை. கூட்டுப் பொறுப்பிலே உள்ள ஒரு அமைச்சர்பற்றித்தான் என்று அவர் எனக்கு விளக்கம் கொடுத்தார்.

திரு. க. சுப்பு : * * *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 பிப்ரவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினைக்கே இவ்வளவு நேரம் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இவ்வளவு நேரம் ஏன் எடுத்துக் கொண்டீர்கள் என்று ஏன் பேசுகிறீர்கள்? ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்?

திரு. க. சுப்பு : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பேசவிடுங்கள். பேரவைக்கு நான் சொல்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் நேற்றைக்கு முந்தினமே என்னிடம் தந்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு ஒழுங்குப் பிரச்னையா? இதை நான் அனுமதிக்க முடியாது. நான் பேரவைக்குச் சொல்ல விரும்புவது, நேற்று முன்தினம் என்னிடம் நோட்டீசை அனுப்பி, இதை அனுமதிக்கிறீர்களா என்று கேட்டார். நான் ஆய்விலே வைத்து அனுமதிப்பதா வேண்டாமா என்று..........

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நான் அனுமதிக்க முடியாது. இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. இது வீண் வம்பு.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சும்மா பேச வேண்டாம். ஒழுங்குப் பிரச்னை வேண்டாம். இப்பொழுதே ஒரு மணி நேரத்திற்குமேல்......

திரு. க. சுப்பு : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் மீதே குற்றஞ்சாட்டுவது சரியல்ல ; உறுப்பினரவர்கள் உட்கார வேண்டும். திரு. சுப்பு அவர்கள் சொன்னதற்கு விளக்கம் தர விரும்புகிறேன். அவர் இப்பொழுதுதான் எழுதிக் கொண்டிருந்தார், இப்பொழுது தந்ததை உடனே ஏற்றுக் கொள்ளலாமா என்று இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள்.

திரு. க. சுப்பு : ** ** **

**** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பற்றன.



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உட்கார்ந்து கொண்டு பேசுவது நியாயமா?

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் எழுந்தால் உட்கார்ந்து விட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்களிடத்தில் கிடையாது. அந்த முயற்சி தோல்வி, இந்த அவையில் அந்த முயற்சி சிலபேர்களிடத்தில் தோல்வி...

திரு. க. சுப்பு : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் எதையெதைப் பேசினார்களோ அத்தனையையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

பேரவைக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். திரு. சுப்பு அவர்கள் ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். நேற்று முன்தினமே அவர் என்னிடம் எழுதியனுப்பி இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். நான் உடனே அதை அனுப்புங்கள், சபையினுடைய விதிகளுக்கு உட்பட்டு, அனுமதிக்க இயலுமா என்று பார்த்துப் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன். பிறகு பார்த்து, விளக்கத்தையும் பார்த்து, பத்திரிகையிலே பார்த்த பிறகு, நேற்று முன்தினம் என்னுடைய செயலாளரிடம் அதை அனுமதிக்க வேண்டுமென்று சொல்லி அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். அதற்கு ஆதாரம் வேண்டுமானால், திரு. சுப்பு அவர்கள், கோப்புகளை என்னுடைய அறையிலே வந்து பார்க்கலாம்.

ஆனால், அரை மணிநேரத்திற்கு முன்புதான் எழுதிக் கொண்டிருந்தார் என்று அவையைத் திசை திருப்புவதும், என் மீது களங்கம் கற்பிப்பதும் நல்லது அல்ல. அவசரப்பட்டுச் சொல்லிவிடலாம். ஆகவே, அதைப்பற்றிப் பிரச்னை இல்லை. விதிகளில் இருப்பதை நான் விளக்கமாகச் சொல்கிறேன். இத்தனை நிமிஷ நேரத்திற்குள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி முடிக்க வேண்டுமென்று இல்லை. அதை அனுமதிப்பதா வேண்டாமா என்பதில் நான் ஒரு முடிவுக்கு வர எனக்குத் தேவையான தகவல்களை நான் முழுமையாக சேகரித்துக் கொள்வதற்கு உறுப்பினரை பேச அனுமதிக்கிறேன். அப்படி இத்தகையதொரு பொதுப் பிரச்சினையில் பேச அனுமதித்தது நியாயமே என என்னைப் போல் பலரும் கருதுவார்கள் என நினைத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆனால் இப்படிப்பட்ட ஒரு நிலை வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. பேரவை முன்னவரவர்கள் விளக்கம் அளித்த பிறகு இதற்காக அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பும் அளித்து விட்டேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு ஒருவருக்கே தான் எல்லா ஒழுங்குப் பிரச்னைகளுமா?

திரு. க. சுப்பு : அசெம்பிளியைக் கலைக்கப் போகிறார்கள் என்ற பேச்சு அடிபடுகிறதே.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே முக்கியமான சில பிரச்னைகள் வரும்பொழுது எதிர் வரிசையிலே உள்ள நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்பினேன். நான் கேள்விகூட அதிகமாகக் கேட்பது கிடையாது. ஒழுங்குப் பிரச்சனைகூட அதிகமாகக் கேட்க மாட்டேன். வேண்டுமானால் பேசும்பொழுது கொஞ்சம் வேகமாகப் பேசுவேனே தவிர..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒரு புதுமையைக் கூட நான் பார்த்தேன். பேசுவதைப்பற்றிக் கூட ஒன்றும் பிரச்னை இல்லை. ஆனால் கையைக் காட்டி சப்தம் போடுமாறு சொன்னீர்களே, அதுதான் உசிதம்! பிரமாதம்?

திரு. எம்.ஏ. லத்தீப் : திரு. உமாநாத் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்பொழுது அமைச்சர்கள் வரிசையிலேயிருந்து பேசுங்கள் பேசுங்கள் என்று தூண்டும்பொழுது நாங்கள் சொல்லக் கூடாதா?

திரு. க. சுப்பு : கே.ஏ.கே. சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப் பேசுவதுதான் முறையா? (குறுக்கீடு) அப்படிச் சொல்லாதீர்கள். அவ்வாறு திரு. லத்தீப் சொல்வது த்தான் முறையாத?

திரு. எம். ஏ. லத்தீப் : நான் சொல்ல வந்தது நான் அங்கே சுட்டிக்காட்டித்தான் சொன்னேன். அது தவறுதான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதேமாதிரி திரு. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது ஒரு அமைச்சரே எழுந்து பேசுங்கள் பேச்சை விடாதீர்கள் என்று சொன்னது சரியா?



[முற்பகல் 10-30]

அமைச்சர் சொன்னாரா, இல்லையா, என்பதை திரு. உமாநாத்தே சொல்லட்டும். அமைச்சர் சொன்னால், நாங்கள் சொல்லக்கூடாதா (கூச்சல் குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். என்னைச் சொல்ல விடுங்கள். நீங்கள் சொன்னதற்கு உடனே சொன்னால்தான் எனக்கு நினைவு வரும். ஏனென்றால், எனக்கு எல்லாமே குறித்து வைத்துக்கொள்கிற நினைவு இல்லை. திரு. லத்தீப் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இந்த அவையிலே 2 1/2 ஆண்டுகாலமாக, யார், யார், எப்படி, எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை வரலாறு எனக்குச் சொல்கிறது. அவர்களுடைய குணாதிசயங்கள், எப்படி எல்லாம் வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை குறிப்பேடுகள் சொல்கின்றன. ஆகவே, லத்தீப் அவர்கள், சுப்பு அவர்கள், ரகுமான்கான் அவர்கள், ஆறுமுகம் அவர்கள் எப்பொழுதும் நடந்து கொள்கிற முறை அவர்களுக்குத் தவறாகப் படவில்லை. திரு. உமாநாத் அவர்கள், சங்கரய்யா அவர்கள், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்றைக்கு உணர்ச்சி வயப்பட்டதையும் நான் வரவேற்கவில்லை. என்றாலும் இன்றைக்கு அவர்களைச் செய்ய வைத்தது, இங்கே இருக்கிற சில உறுப்பினர்களின் தூண்டுதல்தான் என்பதை இந்த அவையில் நான் சொல்லித் தான் ஆகவேண்டும். (கூச்சல்—குழப்ப

(திருவாளர்கள் தி. சு. நல்லதம்பி, ரு. புருஷோத்தமன் ஆகியோர் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.)

திரு. நல்லதம்பி நான் சொல்வதைக் கேளுங்கள். நான் நிற்கும்போது, இப்படி நின்று கொண்டு நீங்கள் பேசாதீர்கள். நீங்கள் எப்போதுமே இப்படித்தான். (குறுக்கீடுகள்) மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்.

திரு. தி. சு. நல்லதம்பி : தலைவர் என்றால் எல்லோருக்கும் பொது ................ (திரு. ரு. புருஷோத்தமன், திரு. சுப்பு ஆகியோர் ஒரே நேரத்தில் குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்டுப்பாட்டைப் பாருங்கள். கட்டுப்பாட்டை முதலிலே கற்றுக் கொள்ளுங்கள். இப்படி, எழுந்து, எழுந்து பேசுவது என்ன முறை? என்ன கட்டுப்பாடு? அடுத்து திரு. லத்தீப் சுருக்கமாகச் சொல்லட்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, தாங்கள் சொல்வதிலே நியாயம் இருக்கலாம். ஆனால் ஒன்றை நான் சொல்கிறேன். இந்தப் பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்கள் வேகம் அடைகிறார்கள், அப்பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அதற்கு வேகம் அடைகிறார்கள் என்றால் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அமைச்சர்கள் வேகம் அடைந்து உறுப்பினர்கள் பேசும்பொழுது/ அவர்களே, எழுந்து நின்று, '' இன்னும் பேசுங்கள், விடாதீர்கள் '' என்று சொல்வது அவர்கள் வகிக்கின்ற பொறுப்புக்குக் கொஞ்சம் சரியாக இருக்காது என்ற காரணத்தினாலே தான் அதை நான் சொன்னேன். இல்லை அப்படித்தான் நடப்பார்கள் என்று நீங்கள் கருதினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள், கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல் நடந்து கொண்டிருந்தால், அதுவும் தவறு. அமைச்சர்களும் அப்படி செய்யக் கூடாது...............

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியாது நேரம் கிடையாது, உட்காருங்கள், தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு கே. இராஜா முகமது : இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் அமைதியாகத்தான் உட்கார்ந்திருந்தோம். ஆனால், எங்களுக்கு எல்லாம் ஒரு ஆபத்து. இங்கே மேஜையை உடைத்து அவர்கள் பிய்த்திருக்கிறார்கள், எங்களுக்குப் பாது காப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அது ஏன் ஏற்பட்டது என்று சொன்னால், அமைச்சர்கள் எழுந்திருந்து, அவர்கள் வேகம் அடைந்து, அதைவிடப் பன்மடங்கு நாங்கள் வேகம் அடைய வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆகையினாலேதான் நாங்கள் அதைக் காட்டுகிறோம். இங்கேதான் காட்டுகிறோமே தவிர ..................

திரு. நா. சுந்தரராஜ் : பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முறையாக அணுகவில்லை. உங்களுக்கு அனுமதி கிடையாது. அடுத்து, திரு. சங்கரய்யா.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, நான் கேட்பது வேறு ஒரு விஷயம். இந்த விஷயம் முடிந்து போயிற்று. கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே வெளி நடப்பு



செய்யும்போது முற்போக்கு கூட்டணியின் சார்பில் வெளி நடப்பு செய்வதாக மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் அறிவித்தார்கள். முற்போக்கு கூட்டணி என்ற ஒரு கட்சி தமிழ் நாடு சட்டசபையிலே இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறதா ? அதனுடைய தலைவராக மாண்புமிகு மாரிமுத்து அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களா ? அப்படி ஏதாவது தகவல் தங்களுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அவருக்குச் சந்தேகம் வந்தது ஏன் என்றால், முற்போக்குக் கூட்டணி என்று இங்கே அவையிலே இல்லை. கூட்டணியினுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியாகப் பெயர் சொல்ல வேண்டாமென்பதற்காக நான் அப்படிச் சொன்னேன்.

திரு. நா. சுந்தரராஜ் : பாய்ன்ட் ஆப் ஆர்டர் ........

திரு. ரா. உமாநாத் : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். சார் ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்குப் பின்னாலே பாய்ன்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பது இல்லை.

திரு. ரா. உமாநாத் : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் பின்னால் தரலாம். இப்போழுது இல்லை. (கூச்சல் குழப்பம்).

5. கவன ஈர்ப்பு.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் '' எம். வி. சிதம்பரம் '' கப்பல் நிறுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து. 54 வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவனஈர்ப்பு. திரு. ரா. உமாநாத், திரு. மா. மணி மாறன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ரா. உமாநாத் : கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"நாகப்பட்டினம் துறைமுகத்தில் "எம். வி. சிதம்பரம்" கப்பல் நிறுத்துவதில்லை என்று இந்தியன் கப்பல் கழகம் எடுத்துள்ள முடிவின் காரணமாக 3,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை குறித்து".

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையே போய் வந்து கொண்டிருக்கும் பயணிகள் கப்பல்கள் நாகப்பட்டினத்தைத் தொட்டுச் சென்றுள்ளன. இவை போகும் பொழுதும் வரும் பொழுதும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் நின்று செல்வது வழக்கம். பல ஆண்டுகளாக இரண்டு பிரயாணிகள் கப்பல்கள் இந்த வழியாக இடையூறு ஏதுமில்லாமல் சென்று வந்து கொண்டிருந்தன. "எஸ். எஸ். ரஜூலா" என்பது இந்தப் பயணிகள் போக்குவரத்துக்காகவே கட்டப்பட்டு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே பயன்படுத்தப்பட்ட பிறகு இந்தக் கப்பல் விற்பனை செய்யப்பட்டு உடைக்கப்கப்பட்டது. 1973-ல் "எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மதராஸ்" என்னும் கப்பலுக்குப் பதிலாக 'எம். வி. சிதம்பரம்' என்னும் கப்பல் ஷிப்பிங் கார்ப்பரேஷனால் விடப்பட்டது. எஸ். எஸ். ரஜூலா நிறுத்தப்பட்ட பிறகு எம். வி. சிதம்பரம் என்னும் ஒரு பிரயாணிகள் கப்பல் மட்டுமே நாகப்பட்டினத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தது. இரண்டு முன்னர் பயணிகள் கப்பல்கள் ஆண்டு முழுவதும் நாகப்பட்டினத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தபோதும் "எம். வி. சிதம்பரம்" கப்பல் அக்டோபரிலிருந்து பிப்ரவரி வரை காலநிலை சரியில்லை என்ற காரணத்தால் அந்த மாதங்களில் நாகப்பட்டினத்தில் நிற்காமல் போய்க்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு முதல் எம். வி. சிதம்பரம் என்னும் கப்பல் இனி எப்பொழுதும் நாகப்பட்டினத்தில் நிற்பதை அடியோடு தவிர்த்துவிடும் என்று ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா அறிவித்துள்ளது.

இந்த கப்பலை நம்பி ஏறத்தாழ நேரடியாக 1,000 பேர்கள் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்கள் சாதாரணமாக பயணிகளின் மூட்டை முடிச்சுகளைப் படகுகளில் ஏற்றிக் கப்பலுக்கும் அதே மாதிரி கப்பலிலிருந்து இறக்கிப் படகுகள் மூலம் கரைக்கும் அங்கே உள்ள சோதனைக் கூடத்திற்குக் கொண்டு வருவதுமாக வேலையைச் செய்பவர்கள். இவர்கள் தவிர படகு வேலையாட்கள். கப்பலில் பாரம் இறக்கி ஏற்றுபவர்கள் போன்ற மேலும் 2,000 பேர்கள் இந்தக் கப்பலையே



தங்கள் வாழ்க்கைச் சாதனமாக நம்பி இருக்கின்றனர். இந் நிலையில், நாகப்பட்டினத்தில் இந்தக் கப்பல் நிற்காமல் போவது இவர்களைப் பெரிதும் பாதிக்கும். தற்சமயம் இக் கப்பல் அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில் கால நிலை சரியில்லாததினால் கப்பல் நிற்காதபொழுதே இவர்கள் தங்களது வாழ்க்கையை நடத்துவதில் மிகவும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கப்பல் இந்தத் துறைமுகத்திற்கு வருவது தவிர்க்கப்படுவதால் இத்துறைக்குக் கிடைக்க வேண்டிய துறைமுகத்தீர்வை பயணிகள் கட்டணம், மிகையான மூட்டை முடிச்சுகளுக்கான கட்டணம் ஆகிய வருவாய் யாவும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக ஆண்டொன்றுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேலாக இத்துறைக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது. மேலும் இந்தக் கப்பல் போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்டே 9 இலட்சம் ரூபாய் செலவில் எல்லா வசதிகளும் கூடிய பயணிகள் தங்கும் நிலையம் ஒன்றுகூட பயணிகளுக்காகவே இந்தத் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் தவிர்க்கப்படுவதன் காரணமாக இந்த வசதிகள் எல்லாம் வீணாகின்றன.

அதைப்பற்றி எல்லாம் 28—1—1980 அன்று தமிழகத்தின் சார்பில் மைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட, அவர்களுடைய சொந்த முயற்சியின் அடிப்படையில்கூட இதை மைய அரசுக்குத் தெரிவித்தார். மாநில அரசு தொடர்ந்து மீண்டும் வலியுறுத்துவதன் அடிப்படையாக சிதம்பரம் கப்பல் தற்போது மீண்டும் அந்தத் துறைமுகத்திற்கு வந்திருக்கிறது. இருந்த போதிலும் அங்கே இருக்கிற மக்களுக்குத் தொடர் இன்னல் இருக்காமல் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தின் பொருட்டு 3 சிறு கப்பல்கள் அங்கு திருப்பி அனுப்பப்படுமேயானால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழைகளுக்கு, அவர்கள் சந்தித்து வரும் இன்னல் இடர்பாடுகள் நீங்கும் என்று மைய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மீண்டும் கப்பல் நிறுத்துவது என்று மாநில அரசினுடைய முயற்சியையும். அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற மாதிரி நானும் தோழர் இராமமூர்த்தி அவர்களும் எடுத்த முயற்சியின் விளைவாக அதை 14-ந் தேதி அங்கே நிறுத்த ஏற்பாடு செய்ததற்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் அந்த 4 மாதங்கள் நிறுத்துவது என்பது காலநிலை சரியில்லை என்ற காரணத்தால் வருடா வருடம் 4 மாதங்கள் நிறுத்தாமல் இருக்கிறது. ஆனால் அந்த 4 மாதங்களில்தான் அங்கே இருக்கக்கூடிய ஏற்றுமதியாளர்கள் தனியார் கப்பலை

வாடகைக்கு அமர்த்தி கொண்டிருக்கிறார்கள். அந்தக் கப்பலுக்கு மட்டும் எப்படி பாதிக்கும். ஆகவே வருஷம் பூராவும் இந்த கப்பல் வந்து நின்று போவதற்கான ஏற்பாட்டைத் தாடக்ர்ந்து வற்புறுத்தி செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மற்ற பல துறைமுகங்களில் காலநிலையைக் கருத்தில் கொள்ளாமல் கப்பல் வந்து செல்லும்போது நாகப்பட்டிணத்திற்கு கப்பலை அனுப்பும்போது மட்டும் ஏன் காலநிலையை ஒரு காரணமாக சொல்ல வேண்டும்? ஆகவே, அந்த கருத்து ஒப்புக்கொள்ளக்கூடியது அல்ல என்று வலியுறுத்தியிருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்தி, அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

<u>திரு ரா. உமாநாத்:</u> தலைவரவர்களே, இந்த சிதம்பரம் கப்பலில், சாதாரண பாசஞ்சர் கப்பலில் மலேசியாவுக்கு போவது என்றால் 250, 300 ரூபாய் என்றால் இந்தக் கப்பலில் போவதற்கு 1,000 ரூபாய் கேட்கிறார்கள். ப்ளேன் டிக்கட்டே 1,250 ரூபாய்தான். அதனால் மேல்நாட்டுக்காரர்கள் ப்ளேனிலே போய்வருகிறார்கள். சாதாரண மக்களுக்கு முடியாது. ஆகவே, மலேசியா, சிங்கப்பூருக்கு போய் வருவதற்கான கட்டணத்தைக் குறைப்பதோடு, இன்னும் மூன்று கப்பல்களை அங்கே நிறுத்த முயற்சிகள் செய்துவருவதாகச் சொன்னார்கள், அவை பாசஞ்சர் கப்பல்களாக இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்கனவே கூறியிருக்கிறார்கள். அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

<u>திரு மா. மணிமாறன்:</u> தலைவரவர்களே, அக்டோபர் முதல் பிப்ரவரி வரையில் கப்பல்கள் வராத காரணத்தால் அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த மாதங்களில்தான் தஞ்சை மாவட்டத்தில் சிரமம் அதிகமாக இருக்கிறது. எனவே இதில் அரசு தலையிட்டு, உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சென்னையிலிருந்து நாகைக்கு ஒரு நாள் பயணம்தான். "வெதர் ரிப்போர்ட்" அடிக்கடி கொடுக்கிறார்கள். ஆகவே, வெதர் ரிப்போர்ட்டைப் பார்த்து, அந்த ஒரு நாள் பயணத்தை மேற்கொள்ளலாம்; கப்பலை தடுக்க வேண்டியதில்லை. அதற்கு அரசாங்கம் முன்வருமா? அதோடு, வேலை இல்லாமல் இருக்கும் காலங்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?



<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் மத்திய அரசிடம் இதைப் பற்றி எடுத்துக்கூறி, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

6. தன்னிலை விளக்கம்.

அ. உறுப்பினர் பற்றி மற்றொரு உறுப்பினர் உபயோகித்த வார்த்தைகளைக் குறித்து.

<u>திரு ரா. உமாநாத்:</u> சார், நான் ஏற்கனவே பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கேட்டேன். பின்னால் அனுமதி தருகிறேன் என்று சொன்னீர்கள். பர்சனல் எக்ஸ்பிளனேஷனுக்கு மட்டும் அனுமதி தாருங்கள் சொல்லிவிடுகிறேன்.

இன்று காலை 9.30 மணிக்குத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன் என்று நண்பர் சுப்பு சொன்னார். நீங்கள் அதை விளக்கினீர்கள். இருந்தாலும் "ஏற்பாடு செய்து" என்ற வார்த்தைகளையும் சேர்த்து சொன்னார்கள் It is an insinuation against a member அதற்காக வேண்டுமானால் பிரிவிலேஜ் மோஷன் மூவ் பண்ணுங்கள் என்று சொன்னார். அந்த அளவுக்கு நான் கீழ்த்தரமாக போகவிரும்பவில்லை. நான் கொடுத்திருக்கிற "கால் அட்டன்ஷன்" வருகிறது, அப்புறம் அட்ஜர்ன்மென்ட் மோஷன் வருகிறது என்ற காரணத்தால் நான் அங்கே இருந்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தேன். என்னிடம் அவர் கேட்டிருந்தால் கூட நான் சொல்லியிருப்பேன். அவர் கேட்கவில்லை. நான் குறிப்புகள் தயார் செய்ததைப் பார்த்து, அப்போதுதான் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கிறேன் என்று நினைத்துக்கொண்டார். விவரத்தையும் தெரிந்துகொள்ளாமல், என்னையும் கேட்காமல் இப்படி சொன்னது சரியல்ல. In the House we must maintian a standard,

என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 11

திரு க. சுப்பு: தலைவரவர்களே, ஒரு ''இம்பர்சனல் எக்ஸ்பிளனேஷன்''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள். அதற்குமேல் விளக்கம் வேண்டாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு, 1980.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

ஆ. கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று மொழிகிறேன்.

மேலும், தலைவரவர்களே, 14,வது சட்ட முன்வடிவும் இதைப்போன்று உள்ள சட்டமாக இருப்பதால் இந்த இரண்டு பற்றியும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து விட்டால் நேரம் மிச்சமாகும். என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

1980 பிப்ரவரி 4-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகிறது. இரண்டு சட்ட முன்வடிவுகளையும் அடுத்த சட்ட முன் வடிவு பற்றியும் இதுபற்றிப்பேசும் போதே உறுப்பினர்கள் பேசி விடலாம். முடிவில் தனித்தனி யாக நிறைவேற்றிக்கொள்ளலாம்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர் களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒவ்வொரு அசெம்பிளி கூட்டத் தொடர் கூடுகின்ற நேரத்திலும் ஒரு 6 மாதத்திற்கு என்று கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருவதற்கு என்ன மூல காரணம் என்பதையும் அமைச்சரவர் கள் தொடக்கத்திலேயே விளக்கவில்லை. ஆகவே தீர்மா னத்தை நிறைவேற்றும்போதாவது விளக்குவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் 4,800 ரூபாய் என்று ஒரு அளவு வைத்திருக்கிறீர் கள். அது எந்த அளவுக்கு சரியாக வரும் என்பது தெரிய வில்லை. சாதாரண கூலி வேலை பார்க்கின்றவர்களுக்கே கணவன், மனைவி இரண்டுபேர்களுடைய கூலியும் சேர்த்துப் பார்க்கின்ற நேரத்தில் இதைவிட அதிகமாக வந்து விடும், ஆகவே 4,800 ரூபாய் என்று இருப்பதை மாற்றி பத்தாயிரம் ரூபாய் என்ற அளவுக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் ஓரளவுக்குச் சரியாக இருக்கும் என்று நினைக் கிறேன். ஆகவே அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சரவ வர்கள் முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை ஒவ்வொரு 6 மாத காலத்திற்கும் கொண்டுவரும்போதெல்லாம் வழக்கறிஞர் கள் திணறுகிறார்கள். இந்த சட்டத்தை எப்படி பயன் படுத்துவது, இந்த சட்டத்தை எவ்வாறு தேடுவது என்பது குறித்து வழக்கறிஞர்கள் மட்டும்தானா மிரளுகிறார்கள் என்று பார்த்தால் நீதிபதிகளும்மிரள ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம் ஒவ்வொரு 6 மாத காலத்திற்கும் இந்த சட்டத்தை நீட்டித்துக்கொண்டு போவதுதான். ஆகவே அரசு ஒரு முடிவை எடுத்து ஒட்டுமொத்தமாக, ஒரு காலகட்டத்தைக் குறிப்பிட்டு, முழுமையான ஒரு சட்டம் கொண்டுவருவது தான் சரியாக இருக்கும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும். அல்லது இந்தச் சட்டத்தை பொறுக்குக் குழுவிற்காவது

விட்டு அந்தக் குழுவினுடைய கருத்து என்ன என்பதையாவது ஆராய்ந்து அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் சரியாக இருக்கும். அல்லது இதற்காக ஒரு நிவாரணக் குழுவையாவது அமைத்து அந்தக் குழுவினிடத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து அவர்கள் என்ன கருத்துச் சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்து ஒரு முடிவு எடுத்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே ஒவ்வொரு 6 மாதத்திற்கும் இந்த சட்டத்தை நீட்டித்துக்கொண்டே போவது சரியாக இருக்காது. இந்த சர்க்கார் என்று மட்டும் நான் சொல்லவில்லை. இந்த சர்க்கார், முன்பு இருந்த சர்க்கார், எந்தச் சர்க்காராக இருந்தாலும் இந்தக் கடன் நிவாரணத்தைப் பொறுத்தமட்டில் ஒரு நிலையான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தை இந்த அரசு கொண்டு ஒரு நிலையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்ற இன்றைய சூழ்நிலையிலே கிட்டத்தட்ட 70 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட சட்ட திருத்தம் கொண்டுவரப்படுவது வரவேற்கக்கூடியது. ஆனால் ஏற்கனவே விசாரணை காரணமாக கடன் சம்பந்தப்பட்ட வழக்குகள் காலதாமதமாகி இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் இப்போது அபிடவிட் தாக்கல் செய்தால் அதை வைத்துக்கொண்டு அந்த வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற முறையிலே நாங்கள் கோருகிறோம். ஆகவே இப்போது மீண்டும் விசாரணை என்று வைத்தால் மேலும் நிலுவை என்கிற நிலைதான் நீடிக்கும். ஆகவே காலதாமதத்தைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். ஆகவே இந்த 70 இலட்சம் வழக்குகளையும் உடனடியாக தள்ளுபடி செய்துவிட்டு அதற்குப் பிறகு அபிடவிட் வேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்.

அடுத்து இந்தக் கடனைப் பொறுத்தவரையில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடன் கொடுத்தவர் என்ற முறையிலே அவர் மனு தாக்கல் செய்து, தள்ளுபடி செய்யப்பட்ட பின் ஏற்கனவே கடன் கொடுத்தவர், ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்தில் குறிப்பிட்டதற்கு மேல் வருமானம் உள்ளவர் என்று கடன் வாங்கியவர் என்று நிரூபிக்க வேண்டிய ஒரு பொறுப்பு அவசியம் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.





அடுத்து இப்போது வருட வருமான வரம்பு 2,400 ரூபாய் என்ற நிலையிலே இருந்து வருகிறது. சாதாரணமாக ஒரு தொழிற்சாலையிலே வேலை செய்யக் கூடியவர்கள் ஆனாலும் சரி, முனிசிபாலிட்டியிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு இந்த வருமானத்தை விட அதிகமாக வரக்கூடிய நிலைமை இருப்பதால், கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் அவர்கள் நிவாரணம் அடைய முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த ஆண்டு வருமான வரம்பை சுமார் 5 ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே உருவாக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

[முற்பகல் 11-10]

அத்தோடு எந்த தேதிக்குள் இந்த மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று 1979 டிசம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 6 மாதம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்பொழுது 3 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இது நடைமுறைக்கு வர இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் ஆகும். ஆக அப்படி 6 மாதங்கள் முடிந்துவிட்டால் அதற்குப் பிறகு எப்பொழுது தாக்கல் செய்வது. ஆகவே சட்டம் இயற்றப்பட்ட காலத்திலிருந்து 6 மாதங்கள் வரையில் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஒரு திருத்தம் அமைய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அத்தோடு இன்று கிராமப்புறங்களில் இந்த கடன் வாங்கும் வசதிகளே குறைவாக இருக்கிறது. அரசாங்கமும் இப்படி கடன் வாங்குவதற்கு சட்டங்கள் போட்டு விட்டால் கொடுக்கல் வாங்கல் அடியோடு நின்றுவிடக்கூடிய நிலைமை கிராமப்புறங்களில் ஏற்படும். அதனால் அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக எளிமையாக குறைவான வட்டியுடன் கடன் கொடுக்க அல்லது செக்யூரிட்டி பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து தாராளமாக கிராமப்புறங்களில் கடன் வசதி ஏழை எளியவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இரண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் மேல் என்னுடைய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்டம் 1976 ஆம் ஆண்டு அவசர காலத்தின் போது போடப்பட்ட சட்டமாகும். இந்த சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் எந்த அளவுக்கு கிடைக்க வேண்டுமோ அந்த

[திரு. சோ. அழகர்சாமி] [1980 பிப்ரவரி 11

அளவுக்கு கிடைக்காமல் போய்விட்டது என்பதை நான் இப்பொழுது வற்புறுத்தி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல; இந்த சட்டத்தின் கீழே 70 லட்சம் மனுக்கள். தீர்வு காணமுடியாமல் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த மனுக்களின் மேல் எந்தவிதமான தீர்வும் அளிக்காமல் வைத்திருப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதற்கு போடப்பட்ட தாசில்தாருக்கு பல்வேறு காரியங்கள் இருப்பதினால் இந்த வேலை தள்ளி போடப்பட்டிருக்கலாம். அதற்காக ஒரு தனி அதிகாரியை தாலுக்காபீசில் தாசில்தார் மட்டத்தில் தனியாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டு சட்டங்களிலேயும் இந்த 1980-ம் ஆண்டு வரை கடன் வாங்கியவர்கள் அத்தனை பேருக்கும் அதிலே 4,800 ரூபாய் வருட வருமானம் உள்ளவர்கள் அத்தனைபேருக்கும் கடன் நிவாரணம் கிடைக்கிறது. பழைய சட்டத்தில் இருந்த வரம்பு 2,400 ரூபாய் வருட வருமானம் அல்லது 2 ஹெக்டேர் புஞ்சை நிலம் அல்லது 1/2 ஹெக்டேர் நஞ்சை நிலம் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் இருந்தது. அப்படி அதன் அடிப்படையில் இதை 4,800 ரூபாய் என்று மாற்றும்போது உனக்கு மாத வருமானம் ரூ. 150 உன் மனைவியின் மாத வருமானம் ரூ. 150 அதனால் கடனை தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக உன் மனுவை தள்ளுபடி செய்கிறேன் என்று தாசில்தார் தீர்ப்பு வழங்கிவிடுவார். அதுமாதிரி நிறைய மனுக்களை நான் பார்த்திருக்கிறேன். இந்த சட்டம் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இந்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். ஆனால் எந்த நோக்கத்தோடு இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் இந்த சட்டம் பயனுற வேண்டுமானால் அதிகாரிகளை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. அதிகாரிகள் எப்பொழுதும் கடன் கொடுக்கக்கூடிய தகுதியில் இருக்கும் பெரிய முதலாளிகளின் பக்கம் தான் இருப்பார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகவே வருட வருமானம் ரூ. 4,800 தான் அல்லது மாத வருமானம் ரூ. 200 தான் என்று சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமானால் அப்படி கொடுக்க வேண்டிய பொறுப்பை கடன் வாங்குபவன் கொடுக்கக்கூடாது. அவன் எவ்வளவுதான் என்னுடைய வருமானம் இவ்வளவு தான் என்று சத்தியம் செய்தாலும் இல்லை உன்னுடைய வருமானம் அதிகம் என்று எதிர்த்து தீர்ப்பு எழுதிவிடுவார்கள். அதனால் கடனை யார் கொடுக்கிறார்களோ அவர்கள் இந்த கடனை பெறுபவன் இந்த ஊரில் இன்ன வேலை செய்கிறார். அவருக்கு மாத வருமானம் இவ்வளவு. மாத சம்பளம் இவ்வளவு அல்லது இதுதான் அவருடைய மொத்த வருமானம் அதனால்நிவாரணம் கொடுங்கள் என்று சொல்ல வேண்டும். ஆகவே



1980 பிப்ரவரி 11] [திரு. சோ. அழகர்சாமி]

கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கும் இது பயன்பெற வேண்டுமென்றால் நான் மேற்கூறிய முறையில் கடன் கொடுப்பவன் கடன் வாங்குபவனுக்கு இந்த வருமானம் என்று உறுதியளிக்க வேண்டிய முறையில் ஒரு திருத்தத்தை கொண்டு வரவேண்டும். அப்படி செய்தால் இந்த நிவாரனச்சட்டம் யாருக்கு நிவாரனம் அளிக்க வேண்டுமோ அவர்களுக்கு பயன்படும், அதுபோலவே இநத 1976 ஆம் ஆண்டு பிறபபிக்கப்பட்ட 31-வது சட்டத்தை எடுத்துக்கொண்டாலும் இதுவரைக்கும் ஆயிரக்கணக்கான பேர்கள் மனுக்கள் தந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை. ஆகையால் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்படுகிற இந்த சட்டத்தின் பலன் அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்று சொன்னால் இந்த திருத்தத்தை கொண்டு வர வேண்டும் அத்தோடு விவசாயத் தொழிலாளர்கள் என்று வரும்போது இந்த வருமான வரம்பொன்றும் அவர்களுக்கு இருக்கக்கூடாது. அவர்களுக்கு மாத சம்பளம் வேறு வேலை எதுவும் இல்லை என்று வருகிற போது கட்டாயம் எந்தவித வரம்பும் இல்லாமல் அவர்களின் கடன் தள்ளுபடி பண்ணவேண்டும்.

அவர்களிடம் போய் சான்றிதழ் வாங்கி வா, தாசில்தார் கோர்ட்டுக்கு போ என்று சொல்லக்கூடாது. ஒரு விவசாயத் தொழிலாளிக்கு நிலம் இல்லை எந்தக் கம்பெனியிலும் வேலை இல்லை, எந்த முதலாளிகளிடமும் வேலை செய்யவில்லை என்று சொன்னால் அவர்களிடம் எந்த சான்றிதழையும் கேட்காமல் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும். கோர்ட்டுக்குப் போகக்கூடாது. அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். ரூ. 2,400-க்கு மேல் என்று சொல்லக்கூடியதில் இவருக்கு அதிக வருமானம் வருகிறது என்று நிரூபிக்கும் பொறுப்பு கடன் வாங்கியவர்களுக்கு இருக்கக்கூடாது. அதை நிரூபிக்கும் பொறுப்பு கடன் கொடுத்தவர்களுக்குத்தான் இருக்க வேண்டும்.

அடுத்து எழுபது லட்சம் மனுக்கள் போட்டாகிவிட்டன. மேலும் புதிதாக மனுக்கள் போடமுடியாது. போட்ட இந்த எழுபது லட்சம் மனுக்களை வைத்துக் கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்க வேண்டுமே தவிர புதிதாக மனுக்கள் போடவேண்டும் தவணை கொடுக்கிறோம் என்று சொல்லக்கூடாது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13-ம் தேதியிலிருந்து ஆறு மாத காலம் என்றிருப்பதை ஒரு ஆண்டு காலமாக மாற்ற வேண்டும். எழுபது லட்சம் மனுக்கள் தீர்க்கப்படாமல் இருக்கும்போது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர புதிதாக மனு கொடு என்று சொல்ல வேண்டியதில்லை. இடைக்காலத்தில் இது சம்பந்தமாக நிவாரணம் பெறக்கூடியவர்கள் நிவாரணம் பெறாமல் அடகு வைத்த பொருள்களை ஏலத்திற்கு விட்டிருக்கிறார்கள். ஏலத்தில்

விட்டு வந்த பணத்தை கடன் வாங்கியவர்களுக்குக் கிடைக்கும் படிச் செய்ய வேண்டும். புதிதாக கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டத்தில் ரூ. 4,800 என்றிருப்பதை அமல் நடத்தும் முறையில் வருமானம் குறித்த சான்றினை கடன் வாங்கியவர்கள் கொடுக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. கடன் கொடுத்தவர் தான் நிரூபிக்க வேண்டும். தீர்ப்புகள் வழங்கும்போது தாசில்தார் அல்லது தனி அதிகாரி மட்டும் விசாரித்து தீர்ப்பு சொல்வது என்ற நிலை இல்லாமல் அந்த தாசில்தார் அல்லது தனி அதிகாரி என்று போடுவதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் குழு தாலுக்கா மட்டத்தில் அல்லது ஊராட்சி ஒன்றிய மட்டத்தில் அமைத்தால்தான் உண்மை நிலையை தெரிந்து கொள்ள இந்த அதிகாரிக்கு உதவியாக இருக்கும். எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு மக்கள் குழு அமைக்க வேண்டும். அமைத்து கடன் சம்பந்தமாக தீர்ப்பளிக்கும்போது வருமானம் வருகிறதா இல்லையா எவ்வளவு வருமானம் வருகிறது என்று முடிவு செய்வதற்கு இப்படிப்பட்ட மக்கள் குழு ஒன்று இருந்தால் பிரயோசனமாக இருக்கும். தாசில்தார் அல்லது தனி அதிகாரியை மட்டும் நம்பியிருந்தால் கடன் வாங்கியவருக்கு நிவாரணம் கிடைக்காது. ஒரு ஆயிரம் ரூபாய்க்கு கடன் வாங்கியிருந்தால் இரண்டாயிரம் ரூபாய்க்கு டாக்குமெண்ட் இருக்கும். நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தால் இருநூறு ரூபாய்க்கு பத்திரம் எழுதி வாங்கியிருப்பார்கள். ஆயிரம் ரூபாய் ஒத்தி அல்லது அடைமானம் வைத்து வாங்கியிருந்தால் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய்க்கு அதிகமாக பத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. அப்படி எழுதப்பட்டிருப்பது மட்டுமல்ல அவர்கள் திருப்பிக் கொடுத்த பணத்தை வட்டி அல்லது அசல் திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்தும் வரவு வைக்கப்படாமல் இருக்கின்றன. இதற்கு என்ன நிவாரணம் . ஆயிரம் ரூபாய் வாங்கியிருந்தால் இரண்டாயிரத்திற்கு டாக்குமெண்ட் இருக்கும். முன்பு இந்த அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. வாங்கியகடனில் பேர்பாதி செலுத்தினால் போதும் என்றிருந்தது. அதைநீக்கியாகிவிட்டது. ஆகவே ரிக்கார்டில் இருப்பதை மட்டும் எடுத்துக் கொள்ளாமல் உண்மையாக பெறப்பட்ட தொகை எவ்வளவு ஏதாவது தொகை திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் உண்மையில் நிவாரணம் அளிக்க முடியும். ஆகவே கடன் பற்றி தீர்ப்பு வழங்கக்கூடிய அதிகாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் அல்லது ஆலோசனை சொல்லக்கூடிய வகையில் ஒரு மக்கள் குழு போடவேண்டும். கேரளாவில் போட்டிருக்கிறார்கள் மற்ற மாநிலங்களில் போட்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு குழு அமைத்து வாங்கிய கடன் எவ்வளவு, எவ்வளவு திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கிறது அவருக்கு வரக்கூடிய வருமானம் எவ்வளவு என்பதைப் பற்றியெல்லாம் முடிவுஎடுக்க வேண்டும். ரூ. 4,800-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம்





கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றிருக்கிறது. ஒருவனுக்கு ரூ. 4,900 அல்லது ரூ. 5,000 வருமானம் இருந்தால் அவர்களுக்கு என்ன நிவாரணம் . அவர்கள் அசலுக்கு ஒன்றரை மடங்கு கட்டினால் போதும். அதற்கு மேல் வட்டியை தள்ளுபடி செய்யும் முறையில் ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும். ரூ. 5,000 வருமானம் உள்ளவர்களுக்கும் நிவாரணம் இருக்க வேண்டும். ஏற்கனவே போட்டிருக்கிற எழுபது லட்சம் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிக்கு உதவியாக மக்கள் குழு அமைக்க வேண்டும். அப்படி கடன் பற்றி தீர்ப்பு வழங்கும் அதிகாரிக்கு ஆலோசனை கூறக்கூடிய முறையில் மக்கள் குழுக்கள் அமைத்து அத்தனை பேர்களுக்கும் நியாயம் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11.20]

<u>திரு. க. சுப்பு</u> : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கடன் நிவாரண (திருத்த) மசோதா. பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) மசோதா ஆகியவைகளின் மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மசோதாக்கள் இங்கே கொண்டு வரப்பட்டாலும்..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இரண்டையும் சேர்த்து பேசுகிறோம், தனித்தனியாக எடுக்கப்படும்.

<u>திரு. ஏ. ஆர் மாரிமுத்து</u> : ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது இந்த மசோதா கொண்டு வந்திருப்பதில் நெம்பர் 2, 14 என்று எடுத்துச் சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொள்வது சரியா? இப்போது நெம்பர் 14-ஐ எடுத்திருக்கிறோம். அதைப்பற்றி குறிப்பு எங்களுக்குக் கொடுக்கவில்லை.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : இன்றைக்கு இருக்கின்ற நிகழ்ச்சியின் நிரலில் நெம்பர் 14 என்பதும், நெம்பர் 1 என்பதும் ஒன்றுதான்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : எங்களுக்கு கொடுத்த நிகழ்ச்சியில் அந்தக் குறிப்பு இல்லை.

[1980 பிப்ரவரி 11

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டங்களைக் கொண்டுவருவதில் மாத்திரம் பிரயோஜனமில்லை. இந்தச் சட்டத்தை, நிவாரணம் கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை கொண்டுவருவதில் மட்டும் பிரயோஜனமில்லை. உண்மையிலே இந்தச் சட்டத்தால் நிவாரணம் ஏற்படுகின்றதா என்பதை கவனிக்கவேண்டும். அப்படி அளிக்காவிட்டால். இந்தச் சட்டத்தை கொண்டு வருவதில் அர்த்தமில்லை. ஆனால் அப்படிப்பட்ட நன்மை ஏற்படுவதில்லை. டெட் ரிலீப் என்று சொன்னால், குத்தகைதாரர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால்; அவர்களுக்கு நிரந்தரமாக பாதுகாப்பு கொடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் நாம் நீண்ட நாட்களாக சொல்லிக் கொண்டு வருகிறோம். கடந்த இரண்டரை ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறோம். பர்மனெண்டாக செய்யாமல். இதை எத்தனை தடவைகள் சொல்லிக் கொண்டு வருவது? பர்மனெண்ட் ஸ்டெப் இஸ் பீயிங் டேகன் என்ற நோக்கத்தோடு நிறைவேற்றப்பட வேண்டும். தாற்காலிகமாக தலைவலிக்கு தைலம் தடவுவதைப்போல், உங்களுக்கு நிவாரணம் அளிக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு வந்தால். அதை மக்கள் உண்மையிலேயே வரவேற்பார்களா? இந்தச் சட்டத்தை மக்கள் வரவேற்பார்களா? ஏற்கனவே அடகுக்கடைக்காரர்கள் வைத்திருந்த நகைகளை எல்லாம் ஏலம் போட்டுவிடலாம் என்று சொல்லி விட்டார்கள். ஏற்கனவே அது முடிந்துவிட்டது. இருக்கின்ற கொஞ்சத்தைக் காப்பாற்ற சட்டம் கொண்டுவந்து இங்கே நிறைவேற்றப்பட இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

இந்தச் சட்டத்திலே ஆண்டு வருமானம் ரூபாய் 4,800 என்றும், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு விளக்கம் சொல்லும்போது, குடும்பம் என்று மொத்தமாகச் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 400 என்று ஆண்டு வருமானம் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை, அந்தக் குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களையும். வருமானம் வரக்கூடிய எல்லோரையும் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். இது பாவர்டி லைனுக்கு கீழே உள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வதற்கு, மொத்தமாக குடும்பத்திற்கு ரூபாய் 4,800 ஆண்டுக்கு என்று போடப்பட்டிருப்பது நியாயமா என்று சொல்லவேண்டும். இங்கே முன்பு பேசப்பட்ட உறுப்பினர்களால் கடன் வாங்கியவர்கள்தான் நிரூபிக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக, கடன் கொடுத்தவர்கள்தான் நிரூபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. மேலும், இதிலே வழக்கறிஞர்கள் வாதாடக் கூடாது என்று தடை போடப்பட்டுள்ளது.





இதை நான் வழக்கறிஞர்களுக்காக வாதாடவில்லை. ஏற்கனவே சட்டத்தில் இருப்பது. பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்தாலே நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்ட் படி எழுதிக் கொடுத்தவரின்பேரில் படிஸ்—அப்ருவ் செய்து நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை ஆனால். எந்த நிலைமையில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். ஓராயிரம் ரூபாய்க்காக இரண்டாயிரம் ரூபாய் என்று Under durers or coercion எழுதி வாங்குவதும் உண்டு. ஆனால். அப்படி எழுதிக்கொடுத்துவிட்டால். அந்த பிராமிசரி நோட்டின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்ப்பு சொல்லப்படும் சாட்சியம் தேவையில்லை. ஏற்கனவே. கடன் எழுதிக் கொடுத்தவர்கள் ஓராயிரத்திற்கு இரண்டாயிரம் என்று எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். ஏழை அப்பாவி விவசாயிகள் ஒன்றும் அறியாதவர்கள், அவர்கள் வட்டி கொடுப்பார்கள். அந்த வட்டியை வரவு வைப்பதில்லை. வரவுவைக்க வேண்டும் என்று சொன்னால் கேஸ் போடுவதாக பயமுறுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைதான் கிராமங்களிலே அதிகமாக இருக்கிறது. அதை வரவுவை என்று சொன்னால் கேஸ் போடுவான். போர்ஜரி கையெழுத்தே போடுகிறான். அவர்கள் ஆர்கனைஸ்டு எக்ஸ்பிரியன்ஸ்டு மணி லெண்டர்ஸ். அவர்களுக்கு கோர்ட் நடவடிக்கை பூராவும் தெரியும். அப்பாவி ஏழை மக்களுக்கு ஒன்றும் தெரியாது. அவன் கடனை அவசரத்திற்கு வாங்கியிருப்பான். அவனுக்கு வக்கீல் வாதாடக் கூடாது என்றால் என்ன செய்ய முடியும்?

கொடுத்திருக்கக்கூடிய விளக்கம் விளக்கமாக இல்லை விளக்கத்திற்கு விளக்கம் தேவை. கடன் கொடுத்தவர் என்பது கடன்பட்டவர் எவரிடமிருந்து அல்லது எவருக்காக ஒருவர் கடன் வாங்கினாரோ....... என்ற வகையில் ஒரு பக்கம் கடன் கொடுத்தவரைப் பற்றிச் சொல்கிறது. ஒரு பக்கம் வாங்கியவரைப் பற்றிச் சொல்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பிலே தவறாக இருக்கலாம். கோர்ட்டில் தமிழில் எடுத்துக் கொண்டு வாதிடும் போது மாட்டிக் கொண்டு முழிக்கக் கூடாது. சட்டத்திலே டூபியசாக இருக்கிறது. ஏற்கனவே சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இண்டர்பிரட்டேஷன் தகராறு வருகிறது. உண்மையிலேயே நிவாரணம் கிடைக்க வேண்டுமா? நாங்களும் சட்டம் கொண்டு வந்தோம் என்று நீங்கள் சொல்லலாம். உங்களுடைய கடைசிக் காலத்தில் சட்டம் கொண்டு வருவதும் நல்லதுதான்.

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கமிட்டி போடுங்கள் என்று கேரளாவை மனதில் வைத்துக் கொண்டு உங்களுக்குச் சொல்கிறார்கள். அங்கு கூட அன்—எம்ப்ளாயி

[திரு. க. சுப்பு] [1980 பிப்ரவரி 11

மென்டைத்தீர்த்து வைக்க அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. நீங்கள் பேட்டா கொடுப்பதில்லை. மேற்கு வங்கம். திரிபுரா போன்று கமிட்டி போலல்ல அவர்கள் ஆல்பார்ட்டி கமிட்டியாகப் போடுவார்கள். லாண்ட் டிஸ்பியூட்டுக்காக அவர்கள் கமிட்டி போட்டது ஒரு பெஸ்ட் எக்சாம்பிள். ஸ்டாச்சுடரி கமிட்டி—ஆல் பார்ட்டி கமிட்டி நான்—பார்ட்டி கமிட்டி போட்டார்கள். நீங்கள் பஞ்சாயத்து போர்டு அட்வைசரி கமிட்டியிலேயே உங்கள் ஆட்களைப் போடுகிறீர்கள். லாண்ட் டெவலப்மென்ட் அட்வைசரி கமிட்டியில் அமைச்சருக்கு வேண்டிய ஆட்களைப் போடுகிறீர்கள். அவர்களுக்கு அனுபவம் எதுவும் இருக்காது. ஒன்றும் தெரியாது. கேலிக் கூத்தாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. முற்போக்கான சர்க்காருக்கு உதவிடும் நல்ல நோக்கத்தோடு திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இது குத்தகைதாரர்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லப்படுகிறது. குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய கடன் இதிலே சேராது. எக்சம்ஷன் இருக்கிறது. மழையால், வெள்ளத்தால். புயலால் பாதிக்கப்பட்டிருந்தாலும் குத்தகை செலுத்த வேண்டியதைத் தள்ளுபடி செய்ய வகையில்லை. இன்றைக்கு எலக்ட்ரிசிடி பெயில்யூர். டீசல் கிடைக்கவில்லை எல்லா ஊர்களிலும் கரன்ட் இல்லை. சவுத் ஆர்காட். நார்த் ஆர்க்காட் எங்கும் கரன்ட் இல்லே. எலக்ட்ரிக் மினிஸ்டர் போனவர் திரும்பவில்லை. ஊருக்குள்ளே போக முடியாமல் நெய்வேலி கெஸ்ட் அவுசில் இருந்து கொண்டிருக்கிறார் ஏதோ அசெம்பிளியில் கரென்ட் இருக்கிறது. அவ்வளவுதான் பல காயில்கள் தீய்ந்து விட்டன. குடிக்கத் தண்ணீர் இல்லையென்று மனுக் கொடுத்திருக்கிறார்கள். திமிரி சப் ஸ்டேஷனில் விவசாயி போராட்டத்திற்கு வருவதாகச் சொல்லி போலீசை விட்டு பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் அதற்குப் பொறுப்பு? பம்ப் செட் போட்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லை. கரென்ட் இல்லை. அதற்கு சர்க்கார் பொறுப்பேற்க வேண்டும். சர்க்கார் தவறுக்கு எப்படி விவசாயிகளைப் பொறுப்பாக்குவது? நம்முடைய தவறைக் கணக்கில் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு நிவராணம் கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள் 60–40 என்பதை மாற்றி 75–25 என்று கொண்டு வரப் போவதாகச் சொன்னார்கள். 40 பங்கு கொடுப்பது தப்பு



1980 பிப்ரவரி 11] [திரு. க. சுப்பு]

25 பங்கு கொடுத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்கும்போது அந்த 40.ல் 15 பங்கையாவது இந்தக் குத்தகை தாரர்களுக்கு தள்ளுபடி செய்யக்கூடாதா? நியாயத்தின் அடிப்படையில் கேட்கிறேன்.

நேற்று டி. வி. யில் படம் காட்டினார்கள்— '' நாடோடி மன்னன் '' படம். ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன் முதலிலே அவர் சொல்லுவது '' உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்பது. குத்தகை எவ்வளவு கொடுப்பது என்று சொல்லும்போது 10 பர்சன்ட்தான் கொடுக்கவேண்டும். அதற்கு அதிகமாகக் கொடுப்பது அநியாயம். அந்த '' நாடோடி மன்னன் '' கருத்துக்களை வரவேற்கலாம். ஏற்கனவே நீங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற ஒரு வாய்ப்பை மக்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள அல்லவா ?

[முற்பகல் 11-30]

10 சதவீதம் என்று நீங்கள் தானே சொன்னீர்கள். கடன் கொடுத்தவர்களுக்கு எல்லாம் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் சொல்லியிருக்கிறது. நீங்கள் சர்க்கார் நடத்தக் கூடியவர்கள், நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 'நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால் ஏழைகள் வேதனைப் படமாட்டார்' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது எப்படி ? இப்போதாவது இரண்டு மூன்று நாட்களிலே அந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டாமா ? அவசரம் அவசரமாகப் போடுங்கள் சட்டங்கள். கட்டுகுத்தகை பாக்கி, மழையால், புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், சர்க்காரின் கரண்ட் கட்டால் பாதிக்கபட்டவர்கள், சர்க்காருடைய தவறான கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பூராவும் ரத்து செய்கிறோம் என்று சொல்லுங்கள். இப்போது திடீரென்று எல்லாவற்றையும் மத்திய சர்க்கார் தலையிலே போடுகிறீர்கள். சொப்பைத் தூக்கி கோனார் தலையிலே போடுகிற மாதிரி திடீரென்று எல்லாவற்றையும் மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று 250 கோடி ரூபாய் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்.

இதற்கு முன்னாலே மத்திய சர்க்காரிலே நீங்கள் மந்திரியாக இருந்தீர்கள். அப்போது இருந்த மத்திய சர்க்காரோடு உறவோடு இருந்தீர்கள். சரண்சிங் இருந்திருக்கிறார், மொரார்ஜி இருந்திருக்கிறார், நீங்கள் கேட்டதை எல்லாம் கொடுக்கிறவர்கள் இருந்திருக்கிறார்கள். கேட்பதையெல்லாம் கொடுக்கிறவர்கள் இருந்தபோது நீங்கள் ஏன் கேட்கவில்லை. கேட்க வேண்டியதை கேட்கவேண்யடி நேரத்திலே கேட்கவில்லை. கேட்க

வேண்டியதை கேட்கவேண்டிய நேரத்திலே கேட்கமாட்டேன் என்றீர்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் உங்களால் ஏற்பட்டவைதானே தவிர வேறு யாராலும் அல்ல. இன்றைக்கு இந்தச் சட்டங்கள் கொண்டுவருவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இந்தச் சட்டங்களினால் நிவாரணம் வருமா என்று கேட்கிறோம். இது எல்லாம் சம்பிரதாயத்திற்காக போடப்படுகிற சட்டங்கள் ஆகும். சடங்காக ஜனவரி 15 முடிந்ததா, அப்போது ஒரு சட்டம் போடு என்பது. இப்படியெல்லாம் சம்பிரதாயத்திற்காக சடங்கிற்காக சட்டங்கள் போடக்கூடாது. அப்படிப் போடுவதால் அதனுடைய " என்ட் " என்ன என்று பார்க்க வேண்டுமா ? உங்களுடைய சட்டத்தினால் பலன் ஏற்பட்டால் பாராட்டுவார்கள், சட்டங்களினால் பலன் இல்லை என்றால் உங்களை எப்படிப்பாராட்டுவார்கள். திரும்பத் திரும்ப அதையே போட்டு புரையோடிய புண்ணுக்கு புனுகு போடுகிறமாதிரி அதையே திருப்பித் திருப்பிக் கொண்டுவருவதை விட இந்த சர்க்கார் நிரந்தரமாக நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே பரிசீலனை செய்து சட்டத்தைக் கொண்டுவந்தால் பாராட்டுவோம். உண்மையிலே எஸ். டி. எஸ். அவர்கள் அப்படி செய்யக்கூடியவர் தான். ஏன் அவர் செய்யவில்லை, அவருக்கு நேரம் இல்லை, வேறு சிந்தனை இப்போது வந்துவிட்டது. நம்முடைய மக்களைப்பற்றிய பிரச்சினையில் நம்முடைய சிந்தனை இல்லை, நம்முடைய சிந்தனை எல்லாம் நம்மைப்பற்றியே இருக்கிறது, நம்முடைய நிலைமை நிச்சயமாக இருக்குமா என்பதைப்பற்றி சிந்திக்கிறோமே தவிர மக்களுடைய பிரச்சினைகளைப்பற்றி சிந்திக்க முடியவில்லை. நீங்கள் நாட்டிற்கு செய்யக்கூடிய ஒரே ஒரு உதவி சட்டம் கொண்டுவருவதை விட இன்றைய நிலையில் மக்களிடத்திலே போய் உத்தரவு பெற்று மீண்டும் வருவது அதைத் தான் நாங்கள் சொன்னோம், அதற்குத்தானே தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த நடவடிக்கையை எடுப்பீர்களேயானால் இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவதை நாங்கள் பாராட்டுவோம். அந்த அடிப்படையிலே சட்டத்தை இங்கே கொண்டுவருவதைவிட மீண்டும் மக்கள் மத்தியிலே போய் வோட்டு வாங்கி வந்தால் பாராட்டலாம், இல்லாவிட்டால் பரவாயில்லை, இருந்துவிட்டுப் போங்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய கடன் நிவாரணச் சட்டம், குத்தகைதாரர்களுடைய பாதுகாப்புச் சட்டம் ஆகியவை குறித்து ஆட்சிக் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இங்கே இந்தச் சட்டங்களின்மீது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட அவைகளை எதிர்க்கவில்லை. இந்தச் சட்டங்கள் மிகமிகத் தேவையென்பதை வலியுறுத்திக்கொண்டுதான் பேசியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, ' நான்



ஆணையிட்டால், அது நடந்துவிட்டால், ஏழைகள் வேதனைப்பட மாட்டார் ' என்று எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்திய வகையில், அதை நிலைநிறுத்தக் கூடிய வகையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் அதற்கு ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பேசுகின்றபொழுதே இடைச் செருகலாக வார்த்தைகளைச் சொல்வது, மாண்புமிகு அண்ணன் சுப்பு அவர்களுடைய பழக்கம், அந்த முறையிலே தான் ஆட்சிக்கு வருகிற முன்னணிக் கட்சிக்கோ அல்லது தோழமைக் கட்சிக்கோ இதை சொல்கிறேன் என்று சொன்னார்கள். இப்போது இருக்கின்ற ஆட்சியே ஜனநாயக முன்னணி ஆட்சி தான் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ஆட்சி நிலைக்கும்—தொடரும் எனச் சொல்லி ஒரு சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாகச் சட்டங்கள் என்று சொல்கிறபோது சுதந்திரமடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் சட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்கு நல்லமுறையிலே பயன்படவில்லை என்ற முறையிலே தான் இந்தத் திருத்தச் சட்டத்தை நாம் கொண்டு வருகிறோம். சட்டம் சரியாக இல்லாத நிலையில், மக்களுக்குப் பயன்படாத நிலையில், பலப்பல நேரங்களில் பலப்பல பிரச்சினைகளில், நாட்டிலே மக்களுக்காக என்ன என்ன திட்டங்களைக் கொண்டு வந்தோமோ அவைகளை எல்லாம் ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏமாறுகிறவர்கள் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலைதான் இருக்கிறது என்பதை யாரும் இன்றைக்கு மறந்துவிட முடியாது. அந்த வகையில் இப்போது அரசு கொண்டுவருகின்ற இந்தச் சட்டம் நல்லமுறையிலே இருக்கிறது என்று நாம் நம்பலாம். அரசு அலுவலர்களைப் பற்றி எங்கள் கிராமத்திலே சொல்வார்கள். ஒருவனிடம் காலணா கொடுத்து பாக்கு வாங்கிக்கொண்டு வா என்று சொல்லிவிட்டு, இன்னொரு காலணாவைக் கொடுத்து அதற்கு புகையிலை வாங்கிக் கொண்டு வா என்று சொன்னவுடன் அவன் கடைக்குப் போனானாம், 5 நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்தானாம். எந்தக் காலணாவிற்கு பாக்கு, எந்தக் காலணாவிற்குப் புகையிலை என்று கேட்டானாம். அந்த முறையிலே தான் இன்றைக்கு சட்டங்கள் போடப்பட்டாலும், ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள், ஏமாறுகிறவர்கள் ஏமாந்து கொண்டு இருக்கிறார்கள், இந்த நிலைமை இங்கே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த நிலையில் இந்தச் சட்டங்கள் நல்ல பலனை அளிக்கும் என்று நம்புகிறோம்.

கடன் நிவாரணம் சட்டங்கள் என்கிறபோது அதற்காக எவ்வளவு சட்டங்கள் எவ்வளவு திட்டங்கள் போட்டாலும், தமிழகத்திலே, மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எவ்வளவு பணம் புழக்கத்தில் இருக்கிறது என்று வரையறுத்துச் சொல்லமுடியாத நிலை மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1980 பிப்ரவரி 11

மாநில அரசுக்கும்கூட இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான், நாட்டிலே பணப்புழக்கம் இருக்கிறதா, எவ்வளவு தொகை இருக்கிறது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத நிலையிருப்பதற்குக் காரணமே சட்டம்தான். ஆகவே, சட்டத்தில் ஒரு சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். அதற்காக தமிழக அரசுக்கு யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த யோசனையை, மாநில அரசு இங்கே ஒரு தீர்மானம் மூலமாக. அனைத்துக் கட்சிகளையும் கொண்டு, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும் சூழ்நிலை உருவாகுமேயானால், தமிழகம் மட்டும் அல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பயன் அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக, இப்பொழுது இருக்கும் லேவாதேவிச் சட்டம் உருப்படியான சட்டமாக நிச்சயமாக இல்லை. இப்பொழுது இருப்பது கடன் நிவாரணச் சட்டம். ஆனால் லேவாதேவிச் சட்டத்தையும் மாற்றியமைக்க வேண்டும். இந்திய அரசின் துணையோடு மாற்றியமைக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை வந்தால்தான் கொடுக்கக் கூடியவனுக்கும் நிம்மதியாக இருக்கும், வாங்கக் கூடியவனுக்கும் திருப்பிச் செலுத்த முடியும் என்ற நிலை இருக்கும். ஆட்சியில் இருப்பவர்களும் இது குறித்து நிம்மதியாக ஒரு முடிவு கட்ட முடியும். இல்லையென்றால் இந்தப் பிரச்னை ஒரு தொடர்கதையாகவே இருக்கும்.

என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இப்பொழுது இருக்கும் லேவாதேவிச் சட்டம் மாறி, இனிமேல் வேறொரு சட்டம் வர வேண்டுமென்ற யோசனையாக வைக்கிறேன். பொதுவாக, லேவாதேவி என்றால், யார் வேண்டுமானாலும் செய்யலாம், அது ஆணாக வேண்டுமானாலும் இருக்கலாம். பெண்ணாக வேண்டுமானாலும் இருக்கலாம். சிறியவர்களாக வேண்டுமானாலும் இருக்கட்டும், பெரியவர்களாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. லேவா தேவி செய்பவர்கள் 10 ரூபாய்க்கு கட்டணம் கட்டி லைசென்ஸ் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று இருக்க வேண்டும். லேவாதேவி செய்யும்பொழுது 100 ரூபாய் கொடுத்தால், அவர்கள் ஒரு ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் எழுத வேண்டுமென்ற முறையைக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு எழுதவில்லையென்றால் அது தவிர்க்கப்படும், கோர்ட்டுக்கோ, பஞ்சாயத்துக்கோ சென்று பேச முடியாது என்ற நிலையிருக்க வேண்டும். அந்த நிலையில், 100 ரூபாய் கடனுக்கு 1 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பர் என்ற நிலை வந்தால், 1,000 ரூபாய் கொடுத்துவிட்டு, 2,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று எழுதவும் முடியாது. அதைப்போல கடன் வாங்கியவர்களும், சும்மா வெறும் பேப்பரில்தானே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட பினாமி என்ற நிலை வராது. அவர்கள் சொத்து,



1980 பிப்ரவரி 11] [டாக்டர் கே. சமரசம்]

இவர்கள் சொத்து, என்னுடையது இல்லை என்று சொல்ல முடியாது. யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்த்து, எவ்வளவு பணம் நாட்டில் இருக்கிறது என்று கணக்கிட்டு, கறுப்புப் பணத்தை அடியோடு ஒழிக்க முடியும் ; பினாமிகளை அடியோடு ஒழிக்க முடியும்; அதற்கு இது நல்லமுறையாக அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அமைந்தால் எவ்வளவு அதிகத் தொகைக்கு லேவாதேவி செய்கிறார்களோ அதற்கேற்றவாறு சூப்பர் டாக்ஸ் பெறுவதற்கும், நாட்டிலே இவ்வளவு பணம்தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும், அதனால் வரும் வருவாயை வைத்து, இனிமேல் துண்டு விழும் பட்ஜெட்டை எந்த மாநிலமும் போடாமல், சர்ப்ளஸ் பட்ஜெட் போடும் வகையில் அனைத்து மாநிலங்களும் இருக்கக் கூடிய நிலை ஏற்படும். அதேநேரத்தில் கொடுத்தவனும் நிம்மதியாக இருப்பான், வாங்கியவனும் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடும் நம்மிடம் அதிகமாக வாங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடும் இருப்பான். அரசாங்கத்திற்கும் வருவாய் கிடைக்கும். அப்படிப்பட்ட நல்லதொரு புதிய திட்டத்தை நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறும் வழிவகைகளை ஏற்பாடு செய்தால், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள கறுப்புப் பணம் அடியோடு ஒழிக்கப்படவும், பினாமிகள் ஒழிக்கப்படவும் முடியும். அரசாங்கத்திற்கும் வருவாய் அதிகம் கிடைக்கும். கடன் வாங்கியவர்களும், கடன் கொடுத்தவர்களும் நிம்மதியாக இருப்பார்கள். எனவே, இவ்வாறு அமைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆட்சி விவசாயிகளின் அரசு என்பதை நிலைநிறுத்தும் வகையில் இந்த அரசு நடக்கிறது என்பதையும், ஏழைகள் பால் இரக்கம் கொண்டது இந்த அரசு என்பதையும் நிலைநிறுத்தும் வகையில், 30 ஆண்டுக்காலமாக இருந்த சட்டத்தில் இருந்த சந்துபொந்துகளை எவ்வளவோ அடைத்து நல்லதொரு புதிய சட்டத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இந்த அரசின் சார்பாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் இந்த நாட்டிற்கு மிக மிகத் தேவை, நாட்டு மக்கள் வரவேற்கக் கூடியது இந்தச் சட்டம் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

[முற்பகல் 11-40]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை இந்த மசோதாவின் மேல் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே இந்த மூலச் சட்டம் அவசர பிரகடன காலத்திலே போடப்பட்டது. ஆனால், இந்தச்

சட்டத்தினுடைய பெரும்பான்மையான பலன்களை ஏழை-எளிய மக்கள் அடைய வேண்டும் என்றால், இந்த ஏழை எளிய மக்கள் கொடுத்துள்ள விண்ணப்பங்களின் அடிப்படையிலே விரைவான விசாரணைகளும் விரைவான முடிவுகளும் ஏற்பட வேண்டும். விரைவான விசாரணைகளும் விரைவான முடிவுகளும் எந்தக் காலத்திலே ஏற்பட்டது என்றால், அவசரப் பிரகடனக் காலத்திலேதான் தாசில்தார்கள் எல்லாம் இந்த மனுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நல்லபடியாக விசாரணை செய்தார்கள். இன்று 70 லட்சம் மனுக்கள் விண்ணப்பங்கள் விசாரணை அடிப்படையிலே விசாரணை செய்யப்படாமல் இருக்கின்றன என்றால் எவ்வளவு தூரத்திற்கு 'ரெட் டேப்பிஸம்' இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

அது மட்டுமல்ல இந்தச் சட்டத்தினுடைய பலன்கள் ஏழை-எளிய மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதைத்தான் அந்தப் புள்ளி விவரம் காட்டுகிறது. தாசில்தார்களைப் பொறுத்தவரையிலே இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அவர்கள் விசாரணை செய்கின்ற பொழுது நல்லபடியாக விசாரணை செய்யவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பான்மையான தாசில்தார்கள் கிளார்க்குகளாக இருந்து வந்தவர்கள். அப்படி இருந்தாலுங்கூட ஒரு சில தாசில்தார்களுக்குத்தான் அந்த 'ஜுடிஷியல் ஃபிரேம் ஆஃப் மைண்ட்' இருக்கிறதே தவிர பெரும்பான்மையான தாசில்தார்கள் விண்ணப்பித்தவர்களுடைய கடன் வாங்கியவர்களுடைய வருமானத்தை நிர்ணயம் செய்கின்ற பொழுதும் அல்லது அவர்களுடைய சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்யும் பொழுதும் சட்டத்தின் அடிப்படையிலேயிருந்து வெகுதூரம் விலகிச் சென்று விடுகிறார்கள். ஆகவே ஏழை-எளியவர்களுடைய வருமானத்தையும் அவர்களுடைய சொத்தையும் விட சரியாகக் கணக்கிடாத சூழ்நிலையிலே தாசில்தார்கள் தவறான முடிவுகளை தவறான தீர்ப்புகளை அவர்களுடைய மனுக்களிலே கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இந்த நிலைமைகளைப் போக்க வேண்டுமென்றால் தனியாக ஒரு தாசில்தாரைப் போட்டு விசாரிக்க வேண்டுமென்று தோழர் அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். தனியாக ஒரு தாசில்தார் இல்லாவிட்டாலும்; ஒரு டிவிஷனுக்கு ஒரு ஆர். டி. ஓ. அளவிலே ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு இந்த மனுக்களை மட்டும் கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையிலே கொடுக்கப்பட்டுள்ள மனுக்களை மட்டும் விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் உண்மையிலே இந்தச் சட்டத்தின் பயனை ஏழை-எளிய மக்கள் அனுபவிக்க முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.





அடுத்தபடியாக எனது அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். இன்று கிராமங்களிலே இருக்கின்ற ஏழை-எளிய மக்களுக்குச் சட்டத்தினுடைய அனுபவம் தெரியாது. அதிகாரிகளிடத்திலே அவர்கள் தைரியமாக பேசவும் முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். ஆகவே வழக்கறிஞர்கள் அந்தக் கடன் வாங்கியவர்களுக்காக ஆஜராகும்படியான ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தால் உண்மையிலேயே எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் ; இந்தச் சட்டத்தினுடைய பலன்கள் ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்று நான் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தச சட்டமன்றத்திலே ஆக்ட் 31 ஆஃப் 1976 என்கின்ற சட்டத்திற்குப் புதிய விளக்கங்களை மேற்கொண்டும் திருத்தங்களைத் தருகின்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக கடன் மசோதாக்கள் என்று சொல்கின்றபொழுது நாம் ஏற்கெனவே பல சட்டங்களை உருவாக்கி இருக்கிறோம். ஒரு மொத்தமான ஒட்டு மொத்தமான கடன் நிவாரணச் சட்டத்தை உருவாக்க வேண்டும் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் அவ்வப்பொழுது சட்டங்களை ஏற்படுத்துவது என்பது பலருக்குப் பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது. ஆகையினாலே 'ஒன் கோடிஃபைட் லா ஃபார் தி டெட் ரிலீஃப்' என்கின்ற முறையிலே நீங்கள் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இந்தச் சட்டத்தினுடைய நோக்க விளக்கத்தைச் சொல்கிற பொழுது தாசில்தார் விசாரணை நடத்த வேண்டும். விசாரணை நடத்தி அவர்களுக்கு உரிய புத்தகங்கள் கிடைக்கவில்லையென்றால் ஒரு பிரமாண பத்திரத்தைத் தாக்கல் செய்தால் அவர்கள் ஆக்ட் 36 ஆஃப் 1976 என்கின்ற சட்டத்தினுடைய பர்வியூவுக்குள்ளாக வந்து விடுகிறார்கள். என்ற முறையை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். இருப்பினும் உடனடியாக அவைகள் எல்லாம் தீர்மானிக்கப்பட முடியவில்லை, தீர்மானிக்கப்படவில்லை, தாசில்தாரிடத்தில் சென்றால் என்கின்ற ஒரு குறை இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காக நீங்கள் தனியாக ஒரு தாசில்தாரை இதற்காகப் போடவேண்டும். பெட்டிஷன் கொடுத்த இரு மாதத்திற்குள்ளாக ஒரு மனுவை பரிசீலனை முடித்துவிட வேண்டுமென்று நீங்கள் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறேன்.

அடுத்தபடியாக ஏற்கெனவே டெட் ரிலீப் ஆக்டிலே விதவைகள், பென்ஷனர்கள், மைனர்கள் ஆகியோருக்கு நாம் எக்சம்ஷன் தந்திருக்கிறோம். அதே போன்ற எக்சம்ஷனை ஆக்ட் 31 ஆஃப்

1976-லேயும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று டெட் ரிலீப் ஆக்ட் 31 ஆஃப் 1976-ன் கீழாக யார் யார் சட்டத்தினுடைய பலனை அனுபவிக்க வாய்ப் புள்ளதோ அவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய பலன்கள் கிடைக்க வேண்டும். ஏதோ கஷ்டப்பட்டு ஏதோ சிலவற்றை மிச்சப் படுத்தி அப்படிப்பட்டவர்கள் கடன் கொடுத்திருந்தால் குத்தகைதாரர்களாக வருகின்றவர்கள் கடன் கொடுத்திருந்தால் கூட அவர்களுக்கு Creditors என்ற வகையிலே இந்தச் சட்டத்தினுடைய ஆப்பரேஷனிலேயிருந்து எக்சம்ஷன் தர வேண்டுமென்று கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 1/2 ஹெக்டார், 1/4 ஹெக்டார், 2 ஹெக்டார் என்றிருக்கிறது.

கால் ஹெக்டார் நிலம் என்றால் 67¼சென்ட் இருபோக நிலம்: அரை ஹெக்டார் என்றால் ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலம் ஒரு போகம் பயிரிடக் கூடியது. 2 ஹெக்டார் புஞ்சை நிலம் என்றால் 3, 4 ஏக்கர் புஞ்சை நிலமாக வருகிறது. எனவே இந்த நிலத்தின் அளவை சிறிது உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே விதவைகளுக்கும் பென் ஷன்தாரர்களுக்கும் மைனர்களுக்கும் எக்சம்ஷன் தாருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். Tney should be exempted f.om the purview of the Act.

இதிலே கூட 12-வது செக்ஷனை omit செய்திருக்கிறார்கள். The burden of the creditor to prove whether a debtor comes under benefit of Act 31 of 1976 என்று ஏற்கனவே ஒரு சட்டம் இருக் கிறது. அது பாதுகாப்பான சட்டம்தான். எனவே செக்ஷன் 12ஐ ஓமிட் செய்வது நல்லது அல்ல. அதை புனராலோசனை செய்ய வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே இந்த டெட் ரிலீப் சட்டம் பல தடவைகள் மாற்றி மாற்றி குழப்பம் பண்ணி இன்றைக்குத்தான் கடைசியில் வைத்திருக்கிறீர்கள். இனிமேலாவது மாற்ற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். 500 ரூபாய் வரையில் வாங்கி இருக்கிற கடன் செல்லாது என்று அமெண்ட்மென்ட் கொண்டு வந்து பாஸ் பண்ணினோம். அதை ரத்து செய்து இன்னொரு சட்டம் பாஸ் பண்ணினோம். இந்த இடைக் காலத்திலே அதிகாரிகள் பாத் திரங்களையும் மற்ற சாமான்களையும் எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. இது அரசாங்கத்தின கோளாறு என்பதைத் சொல்லிக் கொள் கிறேன். அரசாங்கம் எடுத்த முடிவுகளின் கோளாறு. கடன்



வாங்கியவர்களுக்கு ஏற்பட்ட சங்கடம். இந்த 8, 10 மாதங் களிலே-இடைக்காலத்திலே சாதாரண மக்களுக்கு ஏற்பட்ட. சங்கடங்கள் யாருக்கு இந்த பாதுகாப்பு நிவாரணங்கள் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்காத நிலையும் அரசாங்கத் தால் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் அடிக்கடி தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்வதன் காரணத்தால் மக்கள் நகைகளை இழந்து பாத்திரங்களை இழந்து சொத்துக்களை இழந்து கஷ்டப்பட்டுகிறார்கள். அவைகளை யார் எடுத்துக் கொண் டார்களோ அவர்களிடம் இருந்து திருப்பி வாங்கிக் கொடுப்ப தற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அடுத்து இந்த அப்ளிகேஷன் கொடுக்கிறபோது அபிடவிட் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அபிடவிட் கொடுத்துவிட்டு ஒரு சர்டிபிகேட்டும் கொடுக்க வேண்டும் என்றும் இதிலே இருக் கிறது. இதில் கீழே இருக்கிற ரெவின்யூ அதிகாரிகளிடம் இருந்து சர்டிபிகேட் கிராம அதிகாரிகளிடம் இருந்து தாசில்தாரிடம் இருந்து வருமான சர்டிபிகேட் வாங்கிக் கொடுப்பது என்பது சரியல்ல. அந்த ஏழை மக்களுக்கு எந்தவிதமான சங்கடமும் ஏற்ட்டுத்திவிடக் கூடாது. அவர்கள் ஒரு அபிடவிட் கொடுத் தாலும் போதும். அதை வைத்துக் கொண்டு தாசில்தார் அவர் களும் மற்ற கிராம அதிகாரிகளும் விசாரணை செய்து முடி வெடுக்க வேண்டுமே தவிர, சர்டிபிகேட் புரட்யூஸ் பண்ண வேண்டும் என்ற ஷரத்தை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்றால் இது கீழே இருக்கிறவர் களுக்கு மிகவும் சங்கடமாக இருக்கும்.

அடுத்து அனேகமாக இந்தப் பலனை அனுபவிக்கப் போகிற வர்கள் சாதாரண கிராம மக்கள் அல்லது நகரத்திலே இருக்கிற கூலி வேலை செய்கிற ஏழைகள்தான். அவர்களால் கோர்ட்டுக் குச் சென்று வாதாட முடியாது. எனவே அவர்கள் சார்பில் வக்கீல்கள் ஆஜராக வேண்டும். லீகல் பிராக்டிஷனர்கள் ஆஜராக வேண்டும். கிரெடிட்டார்கள் அதாவது லேவாதேவிக்காரர்கள் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். திறமையாக வாதாடி இருப் பவர்கள். அவர்கள் முன்னாலே இந்த ஏழை மக்கள் போய் கடனை வாங்கிவிட்டு வாதாடுவது என்பது இயலாது. எனவே லீகல் பிராக்டிஷனரை வைத்து வாதாட அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

[முற்பகல் 11.50]

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, நான் இரண்டே இரண்டு பிரச்சனைகளை மட்டும் அமைச்சரவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற் கெனவே என்னுடைய கட்சியின் சார்பாக பல கருத்துக்கள்

சொல்லப்பட்டிருக்கின்றன. 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் வாங்கியிருக்கக்கூடிய கடன்களுக்கு நிவாரணம் வேண்டுமென்றால் அவர்களுடைய வருமானம் ரூ 2,400-க்கு உட்பட்டிருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், இப்போது வந்திருக்கக் கூடிய சட்டத்தில் ஆண்டு வருமானம் ரூ. 4,800 வரை உள்ளவர்கள் நிவாரணம் பெற தகுதியுடையவர்கள் என்று இருக்கிறது. ஆகவே. 1976-ம் ஆண்டுக்கு முன்னால் இருக்கிற கடனையும். ஆண்டு வருமானம் ரூ. 4,800 வரை உள்ளவர்கள் நிவாரணம் பெற தகுதியுடைவர்கள் என்று அறிவிக்க வேண்டும்.

மற்றொன்று 1976-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் தாக்கல் செய்யப்பட்டபோது 70 இலட்சம் அப்ளிகேஷன்ஸ் பென்டிங் உள்ளன என்று சொல்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் அவர்கள் வருமான சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது அது தேவையில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் கடன்பெற்றவர்கள் எல்லோருமே அநேகமாக இந்த வருமான வரம்புக்கு உட்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள்; இந்த 'பர்டன் ஆஃப் ப்ரூஃப்' கிரடிட்டார் மேல் இருக்கட்டும். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு மேலாக கடன்பெற்றவர் வருமானம் பெறுகிறார் என்று அவர்கள் ஆட்சேபம் பண்ணட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் கடன்பெற்றவர் வருமானம் பற்றி சான்றிதழ்பெற்று கொடுக்கலாம். அப்படிச் செய்தால் இந்த 70 இலட்சம் பேர்களுக்கு வருமான சர்டிபிகேட் கொடுக்க வேண்டியதில்லை; அதனால் சீக்கிரமாக இந்த விஷயத்தில் தீர்வுகாண முடியும் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே. இன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த கடன் நிவாரணச் சட்டத்தைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் ரூபாய் 4,800 வரை ஆண்டு வருமானம் பெறுகிறவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை உருவாக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். பலர் இங்கே சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டு சட்டத்தில் கிராமப்புறங்களிலே இருக்கிற சிறு விவசாயிகள். அதுவும் ால் ஏக்கர். அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் ான் பாதுகாப்பு அளித்தது. மற்றவர்களுக்கு பாதுகாப்பு இல்லை.



கிராமப்புறங்களிலே இருப்பவர்களைப் போன்று நகரப்புறங்களிலும் கடன் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இப்போது வந்திருக்கிற சட்டத்தில் கடன் பெற்றவர்கள் நகரில் இருந்தாலும். கிராமத்தில் இருந்தாலும். விவசாயிகளாக இருந்தாலும் வேறு யாராக இருந்தாலும் 4,800 ரூபாய் வரையில் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு கடன் நிவாரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு அப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை ஏழை எளிய மக்களை வாழ வைப்பதற்காக, அவர்களுடைய தொல்லைகள், துயரங்கள் நீங்குவதற்காக உருவாக்கியிருப்பதை வரவேற்று, அமர்கிறேன்.

திரு ஓ. சுப்பிரமணியன் : துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் எந்த நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதற்கு மாறாக சில கோர்ட் தீர்ப்புகள் வந்து, அந்த நன்மைகள் கிடைக்கவில்லை, என்பதை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு தாசில்தார் மூலம் நிவாரணம் கிடைத்தது. கடன் கொடுத்தவர் அப்பீல் செய்தார்; அப்பீல் விசாரணை ஆர். டி. ஓ. முன்னால் நடந்தது. அங்கும் கடன் பெற்றவருக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆர். டி. ஓ. தீர்ப்புதான் இறுதியானது என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் கடன் வாங்கியவர்மீது ஏற்கெனவே இருந்த ஒரு சிவில் சூட் அடிப்படையில், இந்தத் தீர்ப்புக்குப் பின்னால். மீண்டும் கோர்ட்டுக்குப் போய், ஆர். டி. ஓ. தீர்ப்புக்கு விரோதமாக கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இப்போது கடன் பெற்றவர் 'பாப்பர் சூட்' மூலம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார். கடனை கட்ட வேண்டியதில்லை என்று இங்கே சொல்லப்பட்டது; கோர்ட்டிலே மாறுபட்ட தீர்ப்பு சொல்லப்பட்டதால் நிவராணம் கிடைக்கவில்லை. ஆர். டி. ஓ. தீர்ப்பு இறுதியானது என்று சொல்லும் வகையில் ஏதாவது திருத்தம் கொண்டுவந்து. பழைய கேசை புதுப்பித்து அந்தத் தீர்ப்பை புறக்கணிக்கும் வகையில் ஒரு அமென்ட்மென்ட் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று இங்கே இரண்டு சட்டங்களைக்கொண்டு வந்து, அவைகளை நீங்கள் எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்படிக் கேட்கிறபோது 1976 ஆம் ஆண்டு வந்த சட்டத்தையும். அதற்குப் பிறகு இன்றைக்கு வந்திருக்கிற சட்டத்தையும் சுட்டிக்காட்டி, அதில் இருக்கிற நன்மைகளை விட அதிகமாக நன்மைகள் வரவேண்டும் என்பதற்காகத்தான் இப்போது ஒரு சட்டம் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இங்கே பேசிய உறுப்பினர்கள். அதிகமான நன்மை பயக்கக்கூடிய ஒரு சட்டம் வருகிறபோது பழைய சட்டம் தேவை இல்லையே என்று கூட. யாராவது பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் யாரும் அவ்வாறு பேசவில்லை. 4,800 ரூபாய் வரையிலும் வருமானம் வருகிறவர்கள் கிராமப் புறங்களிலே இருந்தாலும் சரி, நகரப்புறங்களிலே இருந்தாலும் சரி அவர்கள் 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் வரைக்கும் வாங்கிய கடன் இந்தச் சட்டத்தின் மூலம் நீக்கப் படும். ஆனால் 1976 ஆம் ஆண்டு வந்த சட்டம் 1966 ஆம் ஆண்டுக்கு முன்னாலே வாங்கிய கடன் பற்றி மட்டும் தானே. அது கிராமங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் தானே. ஆகவே அந்தச் சட்டம் இப்போது தேவையில்லை என்று யாராவது சொல்வார்கள் என்று கருதினேன். ஆனால் யாரும் சொல்லவில்லை. அப்படியானால் என்னிடத்திலே ஏன் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கக்கூடும். இப்போது கொண்டுவரப்படுகிற சட்டத்தில் யார் வேண்டு மானாலும் நன்மை அடைய முடியும். அவ்வாறு நன்மை அடைகிறபோது பழைய சட்டத்திலே எங்கேயாவது சிக்கல் இருந்தால் அது தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஒருவருக்கு எவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் ஒரு யூனிட் என்கிறபோது வாழை, திராட்சை, தென்னை, பாக்கு போன்றவற்றை விதைக்கக்கூடிய நிலம் 1-1/4 ஏக்கர் உள்ளவர்களுக்கு நிவராணம் உண்டு. நன்றாகத் தண்ணீர் பாய்கிற இடம் என்றால், 685 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குத்தான் நன்மை. தண்ணீர் நன்கு பாயாத இடம் என்றால் 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு நிவாரணம் உண்டு. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டுவரப்படுகிறபோது அது கிராம மக்களுக்கு மட்டும்தான். ஆனால் இன்றைக்கு கொண்டுவரப்படுகிற சட்டத்தினால் கிராம மக்களுக்கும் நன்மை உண்டு, நகர மக்களுக்கும் நன்மை உண்டு. 4,800 ரூபாய் வருட வருமானம் உள்ளவர் எல்லோருக்கும் உண்டு என்பதை யும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயக் கூலி வேலை செய்பவர்களைப் பொறுத்த வரையில் ஒரு குடும்பம் என்றால் கணவன், மனைவி, பிள்ளை போன்ற வர்கள் எல்லோரும் வேலை செய்கிறபோது 4,800 ரூபாய்க்கு மேலே வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் நிரந்தரமாக வருவாய் வருகிறதா என்று பார்க்க வேண்டும். கூலி வேலை செய்பவர்கள் என்றைக்கோ ஒருநாள் வேலை செய்கிறார்கள். பல நாட்கள் அவர்கள் வேலையே செய்யாமல் இருக்கிறார்கள்.



ஆகவே சில நாட்கள் வேலை செய்து ரூ. 100 பெறுகிறார்கள் என்று வைத்துக்கொண்டால் அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொள்ள முடியாது. வருடத்திலே அவர்களுக்கு 3 மாதம்தான் கூலி கிடைக்கின்றது. ஆகவே நிரந்தரமான வேலை இல்லாமல் அன் றாடக் கூலிக்கு வேலை செய்பவர்களைப் பொறுத்தவரையில் இந்த 4,800 ரூபாய்க்கு கீழேதான் அவர்கள் வரவேண்டும், வரு வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 1976-லே கொண்டுவரப்பட்ட சட்டம் நிறைவேற்றப் படாமல் காலதாமதம் ஆகிறது என்பதை இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துச்சொன் னார்கள். அது எப்போது வந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். இந்தியத் துணைக் கண்டத்தில் எமர்ஜென்சி இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்டது. ஆனால் இரண்டு மாதங்கள் என்று சொல்கிறபோது குடியரசுத் தலைவர் ஆட்சி 2 மாதங் களுக்கு மேல் பல மாதங்கள் இங்கே ஆட்சியிலே இருந்தது. அவ்வாறு எமர்ஜென்சி காலத்திலே கூட அவர்களால் இதற்கு முடிவு கட்ட முடியவில்லை. அதற்குக் காரணம் அதிலே இருக் கின்ற ஒரு சிக்கல்தான். 70 இலட்சம் மனுக்கள் வந்தன. அந்த 70 இலட்சம் மனுக்களிலே எவ்வளவு செல்லுபடியாகும் எவ்வளவு செல்லுபடியாகாது என்று பார்க்கிறபோது அந்த மனுக்களிலே 210 ரூபாய் என்று அளவுக்கு வருகிறது. ஆகவே இன்றைக்கு அஃபிடவிட் கொடுத்துவிட்டால் போதும்; வக்கீல்கள் ஏன் தேவையில்லை என்றால், அது நியாயமா இல்லையா என்று இன்றைக்கு தாசில்தார் அவர்கள்தான் முடிவுகட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு வருவாய் 4,800 ரூபாய்க்குக் குறைவு என்று சொல்லிவிட்டால் அது உண்டா, இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டியது தாசில்தார்கள்தானே தவிர மனுக் கொடுப்பவர்கள் இல்லை. ஆகவேதான் இன்றைக்கு இதற்கு வக்கீல்கள் இல்லை என்பதைத் நான் தெரிவித்துச் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் ...........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தயவுசெய்து நான பேசி முடித்த பிறகு கடைசியில் கேளுங்கள். இங்கே திரு. அழகர்சாமி அவர்கள் பேசுகிற போது அதற்கு ஒரு கமிட்டி போட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதைப் பொறுத்தவரையிலும் கமிட்டி எதுவும் போடாமலேயே நடை முறைக்குக் கொண்டு வர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அதுமட்டுமல்ல, நான் உங்களுக்கு மிக மகிழ்ச்சியோடு

தெரிவித்துக்கொள்கிறேன். நெடுங்காலமாக பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் ஒரு விவசாயச் சங்கத் தலைவர், நான் சிதம்பரத்திற்குப் போகிறபோது ஒரு மனுவை கொடுத்தார்கள். நீண்ட காலம் பொது வாழ்வில் இருந்தவர் என்றால், அவரை எனக்கு 1947-லிருந்து தெரியும். அதற்கு முன்னால் 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர். அவர் என்னிடம் கொடுத்த மனுவில் ''கிராமக் கடன் நிவாரண சட்டத்தின் கீழ் மனு கொடுக்க 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12 ஆம் தேதி வரையிலும் அதிகமாகவே மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்''. அப்படி ஒரு விவசாய சங்கத் தலைவர் கேட்டது எவ்வளவு என்றால் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12 ஆம் தேதிக்கு அப்பால் ஒரு மாதம் தான், ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருப்பது 6 மாதங்கள். ஒரு விவசாய சங்கத் தலைவர் ஒரு மாதம் தவணை கேட்கிறார், இந்த அரசு அதற்கு 6 மாதங்கள் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி இந்தச் சட்டத்தினால் இன்றைக்கு நன்மைகள் அதிகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு ஒருவர் பேசுகிறபோது முன்பு ஒரு சட்டத்தில் அதாவது ஐயாயிரம் ரூபாய் வரைக்கும் இருந்தால் அவர்களுக்கு உண்டு என்று சொல்லி பிறகு எதுவுமே கொடுக்க வேண்டியது இல்லை என்று திருத்தம் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வந்த பிறகு 200-க்கு மேற்பட்ட ரிட்-மனுக்சள் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அப்படி யாருமே எதையும கொடுக்க வேண்டியது இல்லை என்று சொல்கிற போது உயர்நீதி மன்றம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதேபோல 1938-ம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திலே சில திருத்தம் தேவை என்பது உயர் நீதி மன்றத்தினுடைய கருத்து. அதை அட்வகேட் ஜெனரல் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டதினால்தான் இந்தச் சட்டத்தை இன்றைக்கு மாற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். அதைவிட நன்மைகளை விளைவிக்கிற அளவுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

நண்பர் அழகர்சாமி அவர்கள் பேசுகிறபோது இன்றைக்கு ரூ. 4,800 வரைக்கும் வருட வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சட்டம் வந்திருக்கிறதே தவிர ரூ. 4,800-க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு இது பயன் அளிப்பதாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி இந்தச் சட்டத்தில் இல்லை என்பது உண்மைதான். வேறொரு சட்டத்தில் இதுமாதிரி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் உங்களுக்குத் தெரியும், இதிலே

183043



பயனடைபவர்கள் வருமான வரி கட்டாதவர்கள். 10,000ரூ. வரைக்கும் கூட வருமான வரி இல்லை. அதுபோல சேல்ஸ் டேக்ஸ் கட்டாதவர்கள, அக்ரிகல்சுரல் இன்கம்-டேக்ஸ் கட்டாதவர்கள் ஆகியோர் இதனால் பலனடைகிறார்கள். இன்றைக்கு ரூ. 4,800-லிருந்து ரூ. 10,000 வரைக்கும் வருமான வரி கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கும் இந்தக் கடன் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்கிற முறையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்லியிருப்பார்கள் எனறு கருதுகிறேன். ஆனால் 1937-லே ஒரு சட்டம்வந்தது. அந்த கடன நிவாரணச் சட்டம் வருகிறபோது வட்டியும் முதலும் 2 மடங்கு கட்டினால் போதும் என்கிற சட்டம் முதலிலே கொண்டு வரப்பட்டது, அதே மாதிரி இந்தச் சட்டத்திலே இல்லை. அதற்கு அடுத்து வந்த சட்டத்திலே கூட இந்த ரூ. 4,800-க்கு மேலே வருமானம் உள்ளவர்கள், ஆனால் ரூ. 10,000 வரைக்கும் வருமான வரம்பு உளளவர்கள் நிவாரணம் பெரும் வகையில் வந்தது. வட்டியும் முதலும் சேர்த்து 1 1/2 மடங்கு கட்டினால் போதும் என்கிற வகையில் கூட ஒரு சட்டம் இங்கே நம்முடைய அரசினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

123043

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொனனதிலிருந்து ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். ஒரு ஆண்டு வருமானம் ரூ. 4,800 வரை உள்ளவர்களுக்கு இந்த நிவாரணம் என்று வருகிறபோது விவசாய கூலிகளைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் இவ்வளவு என்று அத்தாட்சி பத்திரங்கள் கூட பெற வேண்டியது இல்லை. அந்த அத்தாட்சி வாங்க வேண்டும் என்று சொன்னால், கூலி ஒரு நாளைக்கு ரூ. 7—20 என்று நிர்ணயித்திருக்கிறது, ஒரு குடும்பத்தில் 2, 3 பேர்கள் வேலை செய்கிறவர்கள இருக்கிறார்கள் என்று அதிகாரிகள் வருட வருமானத்தை கணக்கிடுகிறார்கள். அவர்களுடைய கூலி 7—20 என்று யாரும் கொடுப்பதில்லை தஞ்சாவூரில் வேண்டுமானால் உங்களைப்போன்றவளப்பமானவர்கள் கொடுக்சலாம் கூலியும் அவர்களுக்கு அவ்வளவு கிடைப்பதில்லை. இரண்டு மூன்று பேர்கள் என்று வேலை செய்தாலும் வருடத்தில் 3, 4 மாதங்கள் தான் கிடைக்கும். அதனால் அதிகாரிகள் அப்படி மொத்த கணக்குப் போடுவதால், விவசாய கூலிகள் என்று வருகிறபோது எந்த வித வருமான வரம்பும் கிடையாத அளவுக்கு இந்த சட்டத்தை கொண்டுவந்தால் நலமாக இருக்காதா ? ஆகவே, விவசாயக் கூலிகள் என்று வந்துவிட்டால் இந்தச் சட்டத்தில் வருமான வரம்பு இருக்கக்கூடாது. சான்றிதழ் வாங்குவது கஷ்டம். ஆதரைஸ்ட் ஆபீசர் கொடுப்பதில்லை. அவர்கள் ஏழைகள, பாவம். அவர்கள் எங்கே போய் வாங்குவது? ஆகவேதான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் உண்மையில் பயன்பெற வேண்டுமென்றால்

ஏழை விவசாயக் கூலிகள் பயன் அடைய வேண்டுமென்றால் இந்த வருமான வரம்பு இருக்கக்கூடாது. அதை ரத்து செய்ய வேண்டும். எனக்கு நிரந்தரமான வேலை இல்லை, மாதம் இவ்வளவுதான் வருமானம், என்று அவர்கள் அவர்களிடம் அபிடவிட் வேண்டுமானால் எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். அதுவே போதும். அதிகாரி போன்றவர்கள் வேண்டியதில்லை. அதில் தவறு இருந்தால் ரத்து செய்யலாம் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். அப்படியிருந்தால்தான் பலன் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : நான் முதலிலேயே சொன்னேன். ரூ. 4,800-க்கு குறைவாக வருமானம் வருகிறது என்றால் அது பற்றி ஒரு 'அபிடவிட்' கொடுத்தால் போதும். ரூ. 4,800-க்கு மேல் வருமானம் வருகிறது என்று நிரூபிக்கும் கடமை, பொறுப்பு கடன் கொடுத்தவர்களுக்கு இருக்க வேண்டும். அவர்கள்தான் இவர் இவ்வளவு வருமானம் பெறுகிறார், அல்லது இந்த இடத்தில் பொருள்களைவிட்டு இவ்வளவு வருமானம் வருகிறது என்பதை கடன் கொடுத்தவர்கள்தான் நிரூபிக்க வேண்டும். முன்னால் ஒரு சட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது ஹைகோர்ட், அல்லது சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிகிறேன். ரூ. 5,000-க்கு மேல ரூ. 10,000 வரை கடன் வாங்கியவர்கள், 50 சத வீதம் கட்டினால் போதும் என்ற சட்டம் இப்போது இல்லை ஆகவே அது குறித்து தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப் போகிறார்களா ? ஆகவே அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் ஏதாவது சட்டம் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலில் ரூ.500-க்கு கீழ் கடன் பெற்றிருந்தால் அவைகள் எல்லாம் ரத்தாகும் என்ற சட்டம் நீதி மன்றத்திற்கு போய், ரூ. 200-க்கு மேற்பட்ட ரிட் மனுக்கள் போய், அந்தத் திருத்தித்தான் அதற்குப் பிறகு வட்டியும் முதலும் சேர்த்து ஒன்றரை மடங்கு என்கிறபோது 100 ரூபாய் வாங்கினால் ரூ. 150 கொடுத்தால் போதும் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு அது நிறைவேறியிருக்கிறது. அது இன்று நடைமுறையில் இருக்கிறது. அதுமட்டுமல்ல. இதில் சட்டச் சிக்கல் ஏதாவது வந்தால் உடனடியாக அதற்கு வேண்டிய, இதை நடைமுறைப்படுத்தப்படுகிறபோது ஏதாவது சங்கடங்கள் ஏற்படுகிறது என்றால் அந்தச் சங்கடங்களை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தேவைப்பட்ட அளவிற்கு தேவைப்பட்ட உத்தரவுகள் போடுவதற்கு இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது, செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயக் கூலிகள் பற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு நிச்சயமாக்க் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. சோ. அழகர்சாமி : ரூ. 5,000-ல் இருந்து ரூ. 10,000 வரை கடன் பெற்றவர்கள் 50 சத வீதம் செலுத்தினால் போதும் என்ற அந்தச் சட்டம் இப்போது இல்லை என்று கேள்விப்படுகிறேன். ஆகவே பழைய சட்டத்தை அப்படியே கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ? ரூ. 5,000 ல் இருந்து ரூ. 10,000 வரை கடன் பெற்றவர்களுக்கு முன்னால் போடப்பட்ட அந்தச் சட்டத்தை திரும்பவும் அமலுக்குக் கொண்டுவரக் கூடிய முறையில் ஒரு சட்டத்தை கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

திரு. சி. ஆறுமுகம் : இந்தச் சட்டத்தை ஒட்டுமொத்தமாக தள்ளிவிடுவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா ? ஒவ்வொரு ஆறு மாதமும் தள்ளித் தள்ளி வைப்பது எந்த வகையில் உகந்தது என்று தெரியவில்லை.

திரு. க. சுப்பு : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்டார்கள். நமக்கு வேறு சட்டங்கள், கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொட்டெக்ஷன் ஆக்ட் போன்றவற்றில் சிவில் கோர்ட்ஸ்க்கு அதிகாரம் இல்லை என்று வரையறுத்துவிடுகிறோம். இந்தப் பிரச்னையில் சிவில் கோர்ட் தலையிடக்கூடாது. ஆனால் இதில் வந்திருக்கிற சிக்கல் என்னவென்றால், ஆர்.டி.ஓ. ஒரு தீர்ப்பு கூறினால் ஜெட்ஜ்மென்ட் டெப்டார்க்கு சாதகமாக ஒரு தீர்ப்பு கூறினால் அதற்கு மேல் சிவில் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே செய்து கடன் வசூல் செய்ய சிவில் கோர்ட்டில் டிக்ரீ வாங்கிவிடுகிறார்கள். அதை எதிர்த்து அவர்கள் போக வேண்டியிருக்கிறது. அதைத்தான் அவர்கள் சொன்னார்கள். ஹைகோர்ட் வரை போக சக்தி இருந்தால் அவர் கடனே வாங்கியிருக்க வேண்டாம் அல்லவா ? ஆகவே மற்றச் சட்டங்களில் உள்ளதுபோல் இதிலும் போடவேண்டும். கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் சிவில் கோர்ட் தலையிடக்கூடாது என்ற முறையில் சட்டம் இருக்கவேண்டும். 'Notwithstanding anything pending' என்று போடவேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அப்படிப்போடாவிட்டால் பல சிக்கல்கள் வரும். அதைத்தான் சுப்பிரமணியம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சிவில் கோர்ட் தலையிடுவதை தடுத்து நிறுத்த வேண்டும். ஜட்ஜ்மென்ட் டெப்டாருக்காக வாதாட வக்கீல் வைக்க முடியவில்லை என்றால் சர்க்கார் வக்கீல்களை வைக்கலாம். கவர்மெண்ட் ப்ளீடர்ஸ் இருக்கிறார்கள். மற்ற வக்கீல்களுக்கு எல்லாம் வேலையே இல்லை. கவர்மெண்ட்டில் உள்ள வக்கீல் இலவச உதவி என்றால் செய்யமாட்டார்கள். ஏற்கனவே கடன் பட்டேன், ஓசியா என்று கேட்பார்கள். ஆகவே, கடன்பட்டவர்களுக்காக வாதாட அரசாங்கமே ஏற்பாடு செய்யலாம்.

[பிற்பகல் 12-10]

இப்போது இந்த சட்ட திருத்தத்தை அமைச்சர் அவர்கள் நன்மை செய்வதற்காக கொண்டு வருகின்றார்களா, அல்லது பெயரளவிற்காக கொண்டு வருகின்றார்களா ? நன்மை செய்வதற்கு கொண்டு வருவதாக இருந்தால், இந்த மாதிரியான திருத்தங்களை ஏற்று அமைச்சர் அவர்கள் சட்டத்தைக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—பிரிவு 2, சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In new sub–section (2-A) to clause (c) *add* the following provise namely :—

"Provided that the Tahsildar may, in his discretion, allow further ime not exceeding one month for making any such application, if he is satisfied that the debtor had sufficient cause for not marking the application in time, but no application shall be made after the expiry of seven months from the said date."

2- In new sub-section (3A), in clause (a) for the expression "six months" *substitute* the expression "seven months".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 3" இது சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

3. In new sub-section (1-A) to clause (C) *add* the following proviso namely :

"Provided that the Tahsildar may, in his discretion, allow further time not exceeding one month for making any such application, if he is satisfied that the debtor had sufficient cause for not marking the application in time but no application shall be made after the expiry of seven months from the said date".

4) In new sub-section (2A) in clause (a) for the expression 'six months' substitute the expression 'seven months'.,

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவுகள் 4 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 2/1980) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று' சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

## 8. அறிவிப்பு.

### கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

### (இ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1980) *ஆய்வுக்கு எடுத்துக்கொளளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, ''தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்'' என்று மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

* 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ம் நாளிட்ட **தமிழ் நாடு சிறப்பு அரசிதழில்** அச்சிடப்பெற்றுள்ளது].





## 2. அறிக்கைகள் அளித்தல் (தொடர்ச்சி).

### (ஆ) வேலை நீக்கம் செய்யப்பெற்ற காவலர்கள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கு மாறு கேட்டுக்கொளகிறேன்.

காவல் துறையைச் சார்ந்த ஒரு பிரிவினர் அண்மையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதும், அதன் காரணமாக அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதும் அவை உறுப்பினர்கள் அறிந்ததே. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இன்னும் மீதமுள்ள ஏறத்தாழ 700 பேர் தற்போது வேலை நீக்கத்தில் இருந்து வருகின்றனர். மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சிலரைத் தவிர மற்ற அனைவரையும் (ஏறத்தாழ 600-க்கு மேற்பட்டவர்கள்) மீண்டும் வேலைக்கு அமர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் மேல் உள்ள குற்றங்களை பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கு டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ், மூன்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஆகி யோர் அடங்கிய நான்கு பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்கும்.

காவலர்கள் கிளர்ச்சி நடைபெற்றபோது, அதில் ஈடுபடாமல் கடமை உணர்வோடு பணியாற்றிய காவலர்களுக்கு முன்னதான ஊதிய உயர்வு (advance increment) ஒன்றும் அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த அறிவிப்பை மன்ற உறுப்பினர்கள் மனதார வரவேற் பார்கள் என்று நான் நம்புகிறேன்.

### (இ) விவசாயிகளுக்கு அளிக்கப்பெறும் சலுகைகள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

வ்வசாயிகளுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தருவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப்பெருக்குவதிலும், வ்வசாயிகளுக்கு ஊக்கமளிப்பதிலும், தமிழகஅரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. மத்திய அரசுடன் முதலமைச்சரும், நானும், மின்சாரத்துறை அமைச்சரும் கடன்சுமை குறைப்பு பற்றியும் அண்மையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்துள்ளோம். அவற்றைத் தொடர்ந்து வற்புறுத்துவோம்.

விவசாயிகட்கு மேலும் சில சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்துள்ளதை அறிவ்க்க வ்ரும்புகிறேன். 1976 முதல் வ்திக்கப்பட்ட தனித் தண்ணீர் தீர்வையை அரசு வசூலிப்பதில்லையென்றும், அத்தீர்வையைக் கைவ்டுவதென்றும் முடிவு செய்துள்ளது. இதன் வ்ளைவாக, அரசின் பாசன வசதி பெறும் வ்வசாயிகட்கு தீர்வை குறைப்பு ஏற்படும்; சலுகையின் பலன் சுமார் ரூபாய் இரண்டு கோடியாகும்.

அரசின் பாசன வசதி பெறாத வ்வசாயிகட்கும் சலுகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. மின்சார மீட்டர் மாதக் கட்டணத்தை ரூபாய் ஐந்திலிருந்து ரூபாய் நான்காக இந்த அரசு குறைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதனை மீண்டும் பாதியாகக் குறைத்து மாதக் கட்டணம் இனி ரூபாய் இரண்டாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் வ்ளைவாக மின் வாரியத்திற்கு சுமார் 1.75 கோடி இழப்பு ஏற்படும். புன்செய், நன்செய் விவசாயிகள் நலன் கருதி அரசு எடுத்துள்ள இம்முடிவுகளை மன்றம் வரவேற்குமென நம்புகிறேன். மத்திய அரசும், மற்ற சலுகைகள் தருவதற்கான முயற்சிகளை விரைவில் எடுக்குமென்றும் நம்புகிறேன்.

விவசாயிகள் கிளர்ச்சியின்போது கொலை, கொள்ளை, போன்ற வன்முறைச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் மீதான வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

## 6. தன்னிலை விளக்கம் (தொடர்ச்சி).

### (ஆ) உறுப்பினர்களைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்டது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தங்கள் அனுமதியோடு தன்னிலை விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காப்பியில் திரு. உமாநாத் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்கும்போது நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிவிட்டு





தொடர்ந்து வெளிநடப்புச் செய்தேன். அப்போது நான் இங்கிருக்கும் மேஜைகளை [ * * ] சொன்னதாக தாங்கள் சொன்னீர்கள். அது என்னைப்பற்றித் தவறான கருத்தை ஏற்படுத்திவிடும். என்னைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தின் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டவன். நான் அந்த வகையிலே ஒன்றும் சொல்லவில்லை. தவறான கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அந்த நேரத்தில் மிக வேகமாக பின்னாலே திரும்பி கையை உயர்த்தி **** என்று சொன்ன ஜாடையைப் பார்த்து **** என்று சொல்லியிருக்கக் கூடும் என்று கருதிச் சொன்னேன். (குறுக்கீடு) திரு. புருஷோத்தமன் எப்போதும் இதே முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார். இதை அவையாகக் கருதி மரபைக் காப்பாற்றுங்கள். திரு. சாதிக் பாட்சா பேசினார்—அதற்கு நான் விளக்கம் தருகிறேன். அதற்கிடையில் உட்கார்ந்து கொண்டே பேசுகின்ற முறையை வைத்துக் கொண்டால் அது முறையல்ல. உட்கார்ந்து கொண்டே பேசும் முறையை உறுப்பினர் மாற்றிக் கொள்ள வேண்டும்.

திரு. சாதிக் பாட்சா சொன்னதை ஏற்றுக் கொள்கிறேன். அவர் அப்படிப்பட்டவர் அல்ல. அவருக்கே இன்றைக்கு மிக்க கோபம் வந்து பின்னாலே திரும்பி அந்தச் சத்தத்தைப் பெரிதாக்கும் அளவுக்கு ஊக்கம் கொடுத்தார் என்று பார்த்து அந்த வார்த்தைகளைச் சொல்லி இருக்கக் கூடும் என்று கருதினேன்.

அவராக அப்படி ( ** ) என்று சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். ஆகவே அதை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்றும் பத்திரிகைகளிலேயும் அது வெளிவரக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

(பிற்பகல் 12—20)

## 7, அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

### (ஈ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்டச், முன்வடிவு, 1980,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

வடிவு (சட்டப் மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகிறது.

அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிநிரலிலே குறிப்பிடப்பட்டுள்ள 2, 3, 4, 5 ஆகிய சட்ட முன்வடிவுகளை ஒன்றாக எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா, திரு. அழகர்சாமி ஆகியவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், அமைச்சர் அவர்கள் 2, 3, 4, 5 ஆகிய சட்ட முன்வடிவுகளை ஒன்றாக எடுத்துக் கொண்டு பேசிவிட்டு தனித்தனியாக நிறைவேற்றலாம் என்று சொல்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : எங்களுடைய கட்சியின் சார்பாக பெயர் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அனைவரும் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேசுவதற்குப் பெயர் கொடுத்த உறுப்பினர்கள் எல்லாம் பேசுவார்கள், நான்கையும் குறைத்து பேசிவிட்டு அதற்குப் பிறகு ஒவ்வொன்றாக நிறைவேற்றலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சொன்ன அறிக்கையிலே விவசாயிகள் கிளர்ச்சியிலே ஈடுபட்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆப் ஆர்டர். உட்காருங்கள்,

---

*1980 பிப்ரவரி 5-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது,



1980 பிப்ரவரி 11]

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்று பாதுகாக்கக் கொண்டுவரப்படுகின்ற சட்டத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை தொடர்ந்து இந்த அரசு ஒத்திப்போட்டுக் கொண்டே போகிறதே அல்லாமல் இந்தச் சட்டத் திருத்தத்தை கடந்த—3, 4 ஆண்டுகளாக கடுமையான வறட்சியின் காரணமாகவும் பயங்கரமான மழை, வெள்ளத்தின் காரணமாகவும் கடந்த ஆண்டிலே ஏற்பட்ட வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொல்லைக்கு ஆளாகியிருக்கின்ற நேரத்திலே இந்த சட்டத் திருத்தத்தை தொடர்ந்து இந்த அரசு ஒத்திப்போட்டுக் கொண்டே செல்வது சரிதானா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தை உடனுக்குடன் ஒரு நிரந்தரச் சட்டமாக கொண்டுவந்து குத்தகை எல்லாவற்றையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களுடைய குறைகளையும் தொல்லைகளையும் நன்கு அறிவார்கள். அப்படி அவர்கள் அறிந்த காரணத்தால் இந்த அரசுக்கு அதை எடுத்துச் சொல்லி விவசாயிகள் படுகிற தொல்லைகளுக்கு நிரந்தரமான முடிவு காண்பதற்கு நடவடிக்கையை அமைச்சர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 25, 75 என்று வாரத்தைக் கொண்டுவந்தார்கள். அது சட்டமாக ஆக்கப்படாமல் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பதுபோல இருந்துகொண்டிருக்கிறது. காரணம் என்ன என்று தெரியவில்லை. ஆகவே அந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டுமென்ற கருத்தினைக் கொண்டு வந்தார்கள். இந்த அரசு உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவது இல்லை என்பதை யாரும் சொல்ல முடியாது. இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக ரெவின்யூ கோர்ட் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல குத்தகைதாரர்கள் நடுத் தெருவில் நிற்பதைக் காண்கிறோம். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் ஏழை எளிய விவசாயிகள் தொல்லைகளிலிருந்து நிரந்தரமாக விடுபடுகின்ற அளவிற்கு இந்தச் சட்டத் திருத்தத்தில் ஆக்க வேண்டும். நிரந்தரமாக அவர்களது கடன்களைத் தள்ள வேண்டும்.

[திரு. அ. செல்லப்பா] [1980 பிப்ரவரி 11

இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் குத்தகைதாரர்கள் வாங்கியிருக்கும் விவசாயக் கூட்டுறவுக் கடன்களையும், நிலவள வங்கிகளின் மூலமாக வாங்கியிருக்கும் கடன்களையும் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக விவசாயிகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதற்கு ஒரே ஒரு காரணம், இந்த அரசுக்கு நிரந்தரமான கொள்கை இல்லாதது தான். அந்தக் காரணத்தினால்தான் இந்த அரசு திடீர் திடீரென்று உத்தரவு போட்டு, அந்தக் கொள்கையற்ற உத்தரவின் காரணமாக விவசாயிகள் நிரந்தரமற்ற நிலையில் இருக்கிறார்கள், தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வதோடுகூட, உழுபவனுக்கே நிலம் சொந்தம் ஆக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால்தான், உண்மையிலேயே ஏழை எளிய விவசாயிகள் ஒரு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று சொல்லி, அதைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டங்களை 15-7-1980 வரைக்கும் நீட்டிக்க வேண்டுமென்ற பில் 5-ம், 6-ம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற முறை இந்தச் சட்டம் இந்த மன்றத்தில் விவாதத்திற்கு வந்த பொழுது, குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலே கோவில் நிலங்களுக்கு எக்சம்ப்ஷன் தர வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன். அரசுத் தரப்பிலேயிருந்து ஒரு உத்தரவாதம் தந்தார்கள். அந்தத் திருத்தம் இந்த முறை வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இதிலே அது காணவில்லை. ஆகையினாலே, கோவில் நிலங்களை எக்சம்ஷன் செய்ய வேண்டிய அவசியத்தை இந்த அரசாங்கமானது நினைத்து, அதையும் இந்தச் சட்டத்தில் சட்டத் திருத்தமாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த குத்தகை சாகுபடியாளர்கள் சட்டத்திலே, இதற்கு முன் செக்ஷன் 4-ஏ என்று இருந்தது. ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு நிலத்தை வைத்திருப்பவர்கள், சொந்தமாகப் பயிரிட வேண்டுமென்றால் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் பாதி வரைக்கும் மீட்டு சொந்தமாகப் பயிரிட்டுக் கொள்ளலாம் என்று செக்ஷன் 4-ஏ என்ற பிரிவில் இருந்தது. அந்தப் பிரிவு இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அது மிக மிக அவசியம் என்பதை சென்றமுறை சொல்லும்பொழுதுகூடச் சொன்னேன்.



1980 பிப்ரவரி 11] [திரு. ரா. மார்க்கபந்து]

குறிப்பாக, அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள், ரிடையராகி வீட்டிற்கு வரும்பொழுது அவர்களுக்கு வேறு தொழில் செய்ய வழியில்லை என்று சொல்லும்பொழுது, இருக்கின்ற நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருந்தால், தாங்கள் பார்த்த தொழிலை விட்டு ரிடையராகி வீட்டிற்கு வந்தபிறகு அந்த நிலத்தில் பயிரிடுவதற்கான வாய்ப்புகளைப் பெற அந்த செக்ஷன் 4-ஏ என்ற பிரிவு பாதுகாப்பாகத்தான் இருந்தது. அது இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி நாம் பயிரிடுகின்ற குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டுமென்று நினைக்கிறோமோ அதே நேரத்தில் சொந்தமாகப் பயிரிட நினைத்து, அவர்களுக்கு வேறு தொழில் இல்லை என்று சொல்பவர்களுக்கு வாய்ப்பு தரும் வகையிலே அந்த செக்ஷன் 4-ஏ யை மீண்டும் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்த மசோதாவிலே நான் கலந்து கொண்டு நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா வருவதற்கு முன்பாக ஏற்கனவே உள்ள சட்டங்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களுக்கு தற்காலிக நிவாரணம் வழங்குகின்ற விதத்திலே கொண்டுவரப்பட்டன. ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட சட்டம் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் நிலச்சுவாந்தார்களிடமிருந்து பாதுகாப்பு பெற வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. காரணம், புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் அப்படி பாதிப்பின் காரணமாக அவர்கள் குத்தகையைச் செலுத்த முடியாத ஒரு நிலையிலே இருந்தார்கள். ஆனால் அந்த நிலங்களை குத்தகைக்கு விட்ட நிலச்சுவாந்தார்கள் அந்த குத்தகை பாக்கியை வசூலிக்கவும் அப்படி வசூலிக்கத் தவறினால் அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றவும் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான சூழ்நிலை இருந்தது. அதைத் தடுப்பதற்காகத்தான் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட சட்டம் 1980ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி வரைக்கும் பாதுகாப்பு கொடுத்து, நிலச்சுவாந்தார்கள் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் நிலைமையை உணர்ந்து, அவர்களை வெளியேற்றக் கூடாது, குத்தகை பாக்கியை வசூலிக்க அவர்களை வெளியேற்றக் கூடாது என்று ஒரு கால வரையறையை வைத்து அரசு சட்டம் கொண்டு வந்தது. ஆனால், அதில், 1980 ஜனவரி 15 வரை என்று கால வரம்பு வைத்திருந்ததால், அது காலாவதியாகிவிட்டது. அப்படி, புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களுக்கு தற்காலிக நிவாரணம் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஜூலை 15 ஆம் தேதி

வரைக்கும் அரசு கால நீடிப்பைத் தந்திருக்கிறது. ஆனால் தங்கள் மூலமாக இந்த அவையில் நான் சொல்ல விரும்புவது புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களுக்கு நிரந்தரமான நிவாரணம் செய்வதுதான் சரியாக இருக்க முடியும். ஆனால் இந்த மசோதாவிலே கூறப்பட்டிருப்பது அவர்களுக்கு நிரந்தர நிவாரணம் கொடுக்கின்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. நிரந்தர நிவாரணம் பற்றி இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதைக் கடுமையாக எதிர்க்கிறேன். காரணம் பரிசீலனை என்று சொல்வது மிக விரைவாக இருக்க வேண்டும். அது காலத்தை நீடித்துக் கொண்டே போவதாக இருக்கக்கூடாது. வீடு தீப்பற்றி எரிகிறது என்று சொல்லும்போது நான் இப்பொழுது தான் கிணறு தோண்டுகிறேன்; தண்ணீர் வரட்டும்; பிறகு நெருப்பை அணைப்போம் என்பது போல் இருக்கக் கூடாது. பசிக்கிறது என்று சொல்கிறபொழுது இலையில் பரிமாறுகின்ற நிலையில் இருக்க வேண்டுமே தவிர இப்பொழுதுதான் நான் விதை விதைத்திருக்கிறேன்; அது பயிராகட்டும்; பிறகு உணவாகப் பரிமாறுகிறேன் என்று சொல்வது போல் இருக்கக் கூடாது. இந்த சர்க்காரினுடைய பரிசீலனை அதுபோல்தான் இருக்கிறது. எனவே தங்கள் மூலம் இந்த அவையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் இந்தப் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களுக்கு நிரந்தரமான நிவாரணம் வேண்டும். அந்த நிரந்தர நிவாரணம் என்ன என்று கேட்கிறபொழுது குத்தகை பாக்கியை இந்த சர்க்கார் முழுமையாக நீக்கி விட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல், இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். புயலாலும். வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நிலம் என்று அரசாங்கம் அறிவிப்பு செய்கின்றபொழுது முழுக்க, இந்த சர்க்கார் கிராம அதிகாரிகளைத்தான் நம்பியிருக்கிறது. கிராம அதிகாரிகள் எல்லோரையும் நான் தவறானவர்கள் என்று சொல்லவில்லை. விருப்பு வெறுப்பு காரணமாக இப்படி அறிவிப்பதிலே சில தவறுகள் நடந்து விடுகின்றன. எனவே, முறையாக, இந்த நிலம் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பில் சரியான கண்ணோட்டம் இருக்க வேண்டும். சரியான கவனிப்பு இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அது சம்பந்தமாக இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் சம்பந்தமாக நமது முதலமைச்சரவர்கள் வெளியேயும் உள்ளேயும் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள்கூட அது சம்பந்தமாக. 'நாடோடி மன்னன்' சினிமா படத்திலேகூட நமது முதலமைச்சரவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நேற்றிரவு, டெலிவிஷனிலே நம்முடைய முதலமைச்சரவர்கள்



நடித்த அந்த 'நாடோடி மன்னன்' படத்தைப் பார்க்கின்ற ஒரு வாய்ப்பு 22 ஆண்டுகளுக்குப் பிறகு எனக்குக் கிடைத்தது—பார்த்தேன். படம் சிறப்பாக இருந்தது. நம்முடைய முதலமைச்சரவர்கள் அதிலே மார்த்தாண்ட மன்னராக வருகிறார். மார்த்தாண்ட மன்னராக வந்து அமர்ந்திருக்கின்ற பொழுது அவரது மூத்த சகோதரர் ஒரு பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். அவர் எழுந்து ஒரு கேள்வியைக் கேட்கிறார். அந்தக் கேள்வி. 'நிலங்கள் வறட்சியாகி விட்டால், அதை இந்த சர்க்கார் என்னசெய்யும், என்ற கேள்வியைக் கேட்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மார்த்தாண்ட மன்னராக, கம்பீரமாக அமர்ந்து, ஒரு பதிலைச் சொல்கிறார். வறட்சியான நிலங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த நிலங்களுக்கு இந்த சர்க்கார் வரியை ரத்துசெய்வதோடு—நில வரியை ரத்து செய்வதோடு. இந்த சர்க்கார் மானியமும் வழங்கும் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 'நாடோடி மன்னன்' சினிமாப் படம்தானே. அதை நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது என்று முதல்வர் சொல்ல மாட்டார் என்று நம்புகிறேன். காரணம் இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'நாடோடி மன்னன்' சினிமாப் படத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களைத்தான் இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சர்க்காருடைய கொள்கை நாடோடி மன்னன் என்றெல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால்......

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே. நான் நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்ள விகும்புகிறேன். 'நடத்திக் கொண்டிருக்கின்றது' என்று சொன்னார். 'நடத்தி முடித்துவிட்டது' என்று நான் இன்னும் சொல்லவில்லை.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னைக் குழப்புகிறாரா அல்லது குழம்புகிறார்களா என்று விளங்கவில்லை. ஆனால்......

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, நான் குழம்பவில்லை. அவர் குழம்பினால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> நன்றி. தலைவர் அவர்களே நான் இதுசம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களை புண்படுத்துவதாக தயவு செய்து கருதக்கூடாது. வாதம் தான். அந்த அடிப்படையில் அண்ணா அவர்கள் ''வேலைக்காரி'' நாடகம் எழுதினார். ''வேலைக்காரி'' படத்தில் சொல்லப்பட்டிருப்பதுதான் என்னுடைய கட்சியின் கொள்கை என்று அவர் சொல்லவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் சொன்னார். பரவாயில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, அமரர் அண்ணா அவர்கள் இதே சென்னை மாநகரத்தில் 100-வது நாள் விழாவில் அந்தப் படத்தைப் பற்றி தன்னுடைய கருத்துக்களை வெளியிடும்போது, 'இதிலே சொல்லப்பட்டிருக்கிற; இடப்பட்டிருக்கிற சட்டம் போன்ற கருத்துக்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் ஆகும் என்று நான் சொல்லுகின்றேன், என்று அன்றைய தினம் சொன்னார்கள். அதை நண்பர் ரகுமான்கான் அவர்கள் கேட்க முடியாத அளவுக்கு வயது குறைவாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது நான் சொன்னதிலிருந்து அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களது விளக்கத்துக்கு நன்றி. நான் சொல்வது எல்லாம் '' நாடோடி மன்னன் '' சினிமாப் படம்தான் சர்க்காருடைய கொள்கை என்று சொன்னால், பட்ஜெட் தேவையில்லை. நாடோடி மன்னன் சினிமா பாட்டுப் **புத்தகத்தையே** பட்ஜெட்டாக **வைத்துக் கொள்ளலாம்.**

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, இதை என்னை அவமானப்படுத்துவதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அவருடைய தலைவரையே அவர் அவமானப்படுத்துவதாகும். ஏனெனில் ஒவ்வொரு கட்சிக்காரர்களும் நாடகத்தையும் சினிமாவையும் பயன்படுத்திக் கொள்ளும்போது தங்களுடைய கருத்துக்களை வெளியிடும்போது மிக மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றார்கள். அமரர் அண்ணா அவர்கள் தங்கள் கொள்கையை சொல்லும்போது ஒரு இடத்தில் சொன்னார்கள். தணிக்கை செய்யாமல் அனுமதிக்கப்பட்டால். மூன்று படங்கள் நான் வெளியிட அனுமதிக்கப்பட்டால். திராவிட நாடு பெற்றுவிடுவேன் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒரே காரணம் அதில் தங்களுடைய கொள்கையை மேலும் மக்களிடம் எப்படி பரப்ப முடியுமோ அப்படி பரப்ப முடியும் என்ற நம்பிக்கையோடு சொன்னார்கள். அவ்வளவு உறுதியான, வலிமை வாய்ந்த சாதனம் அது. அதைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு யார் திறமை உள்ளவர்களோ, அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அந்த அளவுக்கு மக்கள் மத்தியிலே கொள்கையைப் பரப்புவதற்கு சினிமா பயன்படுத்தப் படுகிறது என்பதும் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்கள் அவரவர்கள் கட்சிகளுக்கேற்ப கட்சியினுடைய திட்ட முறைகளுக்கேற்ப வெளியிடப்படுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டு. சினிமா படத்தில் சொன்னதை நான் நடத்துகிறேன் என்றால் அது மட்டும்தான் என்று ரகுமான்கான் அவர்கள் ஏற்றுக்கொண்டால் நான் உண்மையிலேயே அனுதாபப்படுகிறேன். அல்லது வருத்தப்படுகிறேன்.





அவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். அந்தக் கதையில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேனோ—22 ஆண்டுகளுக்கு முன்பு விதவைகளைப் பற்றி அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் அவர் கவனித்து இருப்பார். அண்மையில் எங்களுக்கு முன்னாலே இருந்த அரசு அப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருந்தால் அது நாடோடி மன்னன் படத்தைப் பற்றியது என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றிச் செய்தார்கள் என்றுதான் சொல்வேன் அந்தந்தக் கட்சிக்காரர்கள் யாரை தங்கள் தலைவராக வழிகாட்டிகளாக, தங்களை வழிநடத்திச் செல்லத் தகுதி படைத்தவர்களாக நம்புகிறார்களோ, கருதுகிறார்களோ அந்தக் கொள்கையை அவரவர்க்குள்ள வகையில் அதை தங்களுடைய தொழிலாக ஏற்றுக் கொண்டு குறிப்பாக நாடகம், சினிமா போன்றவைகளிலும் அதன் மூலமாக வெளியே பரப்புவதை என்னுடைய கடமையாக எண்ணிச் செய்தேன்.

அன்று நான் பாராட்டப்பட்டேன். இன்று குற்ற சாட்டப்படுகிறேன் என்றால் அதற்காக நான் கவலைப்படவில்லை. என் மனதைப் புண்படுத்தமுடியும் என்று திரு. ரகுமான்கான் எண்ணினாரேயானால் நிச்சயமாக அவர் தோற்றுவிடுவார். இனிமேல் புண்படுத்த ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறேன்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்து பரிமாற்றத்திற்காக, இவ்வளவு தூரம் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவரைப் புண்படுத்த வேண்டிய அவசியமும் எனக்கில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, நான் மறுபடியும் சொல்லுகிறேன். நான் புண்பட்டேன் என்று சொல்லவில்லை. இனிமேல் புண்படுத்துவதற்கு உங்களிடம் ஒன்றும் இல்லை. அவ்வளவையும் பேசி முடித்துவிட்டீர்கள். ஆகவே புதிதாக புண்படுத்த முடியாது என்பதும் நான் அதற்குப் பழகியவன் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்கிறேன். நான் வருத்தப்படுவதற்கான சூழ்நிலை நிச்சயமாக இல்லை. மகிழ்ச்சியோடு இருக்கிறேன். அவரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவரவர்களே, Rome is greater than Ceaser சீசரைக் காட்டிலும் ரோம் முக்கியமானது. எனவே நபர்கள் முக்கியமானவர்கள் இல்லை. அரசியல் பிரச்சினைதான் முக்கியம். முதல்வர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம்,

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ தலைவர் அவர்களே தனி நபர் முக்கியம் இல்லை என்று அவர் தெரிந்திருப்பாரேயானால் நிச்சயமாக இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து என்னைப் பற்றி பேசி இருக்க மாட்டார் என்று நான் கருதுகிறேன்.

[பிற்பகல் 12-40]

__திரு. அ. ரகுமான்கான் :__ தலைவரவர்களே, இரவு டெலிவிஷனில் அந்த படத்தைப் பார்க்கும்போது நம்முடைய முதலமைச்சர்........

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ தலைவரவர்களே. நான் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். இப்போதாவது அந்தப் படத்தைப் பார்த்தாரே, நன்றி.

__திரு. அ. ரகுமான்கான் :__ அரசியலில் நம்முடைய முதலமைச்சரை பின்பற்ற முடியாது. ஆனால் சினிமாவிலே அவர்களுடைய ரசிகனாக இருப்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ தலைவரவர்களே, என்னைப் பின்பற்றும்படியாக நான் அவரைக் கேட்கவும் இல்லை. அவர்கள் என்னைப் பின்பற்ற வேண்டியதில்லை. நான் மக்களைப் பின்பற்றுகிறேன்; அண்ணாவைப் பின்பற்றுகிறேன். பின்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

__திரு. அ. ரகுமான்கான் :__ தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த "நாடோடி மன்னன்" படத்திலே சொல்லப்பட்ட கருத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வரியை ரத்து செய்வதோடு சர்க்காரே மானியம் கொடுக்கும் என்று இருக்கிறது. ஆனால் அந்த "நாடோடி மன்னன்" சினிமாப் படம்தான். அதன் அடிப்படையில்தான் நான் நடக்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் இப்போதுகூட சொல்லி அதற்கு அண்ணாவை ஆதாரமாகக் கூட காட்டினார்கள். அப்படியானால்........

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ தலைவரர்களே, நான் தெளிவுபடுத்துவதற்காகக் குறுக்கிட்டுச் சொல்ல விரும்புகிறேனே அல்லாமல் வேறு ஒன்றும் அல்ல. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அந்தக் கதையிலே அவன் மன்னன். அண்ணாவை முன்னிலைப் படுத்தித்தான் அந்தப் பாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் மார்த்தாண்டன் மனைவி, ஒரு பெண். அவனுடைய மனைவியாக வருகின்றவள் அண்ணா என்று அழைக்கின்ற காட்சி வருகிறது





என்பதை அவர்கள் கவனித்திருப்பார்கள். அதிலிருந்து அண்ணா அவர்களை முன்னிலைப்படுத்தித்தான் அந்தப் பாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறதே தவிர இராமச்சந்திரனை முன்னிலைப்படுத்தி அல்ல என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதோடு இன்னொன்றையும் சொல்வேன். அந்த மன்னனுக்கு முழு அதிகாரம் இருந்தது. முழு உரிமை இருக்கிறது அந்த கதையிலே, அவன் சொல்ல முடியும், செய்ய முடியும். இந்த அமைச்சரவை எவ்வளவு செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறது.

__திரு. அ. ரகுமான்கான் :__ தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் பல்வேறு விளக்கங்களை எல்லாம் கொடுக்கிறார்கள். நான் மீண்டும் மீண்டும் விவாதத்தைத் தொடர விரும்பவில்லை. பிரச்சனைக்கு வருகிறேன். ஆனால் ஒன்று மட்டும் முதலமைச்சரவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்களுக்கு நட்புணர்வோடு நினைவுபடுத்த விரும்புகிறேன், உங்கள் மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு சமூக மாற்றத்திற்கு சினிமாவும், நாடகமும் பேச்சும் எழுத்தும் கருவிகள். திராவிடர் கழகத்தின் கருத்துக்கள் அப்படித்தான் பரப்பப்பட்டன. அவரைப் போன்ற பெரியவர்கள் அதிலே பங்கேற்று இந்த திராவிடர் இயக்க வளர்ச்சிக்கு பாடுபட்டிருக்கக்கூடும். இல்லை என்று நான் மறுக்கவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவதெல்லாம், ஒரு சர்க்கார் என்று சொல்லுகிறபோது நடைமுறையில் விவசாயிகள் பிரச்சனை ஆனாலும் சரி, தொழிலாளர்கள் பிரச்சனை ஆனாலும் சரி, மற்ற எந்தப் பிரச்சனை ஆனாலும் சரி, அவைகளை எல்லாம் 'ரொமான்டிசம்' என்று சொல்லக்கூடிய ஒருவகை கற்பனையும் சேர்ந்தது. அதாவது ரியலிசம் பிளஸ் ரொமான்டிசம்— இந்த இரண்டும் சேர்ந்ததுதான் சினிமாவாக இருக்க முடியும், இலக்கியமாக இருக்க முடியும். அப்படிப்பட்ட காலகட்டத்திலே வெறும் கற்பனை அடிப்படையிலே ஒரு சர்க்காரை நிர்வகித்துச் செல்வது. சினிமா படத்திலே சொல்லப்பட்ட கருத்துக்களை எல்லாம் நிறைவேற்ற முடியும் என்று சொன்னால் அது இயலாத காரியம்.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ தலைவரவர்களே, நான் ஒரு விளக்கம் சொல்வதை தவறாகக் கருத மாட்டார் என்று நிச்சயமாக நம்புகிறேன். இயற்கையும் செயற்கையும் சேர்ந்ததுதான் கலை என்பதை ஒத்துக்கொண்டார்கள். நன்றி. இதைப் புரிந்துகொண்ட பிறகு விவாதத்திற்கு இடமில்லை. இருந்தாலும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். செயற்கை இயற்கையோடு இணையும் அறிவியல் அளவிலே அது சுற்றுப்புற சார்பிலே உருவாக வேண்டும். அந்த வகையில் அறிஞர் அண்ணா அவர்கள் பயன்படுத்தச் சொன்னார்கள். அதைத்தான் நான் சொன்னேன். இதைச் சொல்வதால் "நாடோடி மன்னனைப்" போன்று நான் மன்னன் ஆகவில்லை; அந்த வாய்ப்பும் இல்லை

இங்கே இருப்பவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள். நீங்களும் அதில் பங்கேற்றிருக்கிறீர்கள் உறுப்பினர் என்ற முறையில் என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இவ்வளவு தூரம் அக்கறை காட்டி, ''நாடோடி மன்னனில்'' சொல்லப்பட்டதை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் சொல்லும்போது உங்களுடைய உதவியை ஒத்துழைப்பைத் தருவதற்கு நீங்கள் எங்களோடு வந்தால் நிறைவேற்றுவதற்கு நாங்கள் **நிச்சயமாக முயற்சிப்போம்** என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் பிரச்சனையைச் சொல்வதற்கு முன்பாகவே நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ''நாடோடி மன்னனாக'' நீங்கள் நடித்தபோது சொல்லிய கருத்துக்கள் நிறைவேற்றப்படவில்லை. நாடாண்ட மன்னனாக ......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீண்டும் சொல்கிறேன். மக்களுக்கு பெரும்பாலான அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் பாக்கி இருக்கிறது. அதையும் நிறைவேற்றுவோம்.

திரு. அ. ரகுமான்கான் : நாடாண்ட மன்னனாக இருக்கும்போதாவது அந்த நிறைவேற்றுவீர்களா என்றால் இல்லை. நாளை நாடு இழக்கின்ற மன்னனாக இருக்கும்போது அதை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு இருக்காது.

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மனிதன் சந்தேகத்தில் வாழக் கூடாது. நம்பிக்கையிலே வாழ வேண்டும். என்றைக்கோ சாகப் போகிறோம் என்பதற்காக என்று சாவோம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் ஒவ்வொரு வினாடியும் செத்துக் கொண்டே இருக்க வேண்டும். இப்படிச் சந்தேகத்தோடு இருக்கக் கூடாது என்று இளைஞராக இருக்கிற உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இளைஞராக இருக்கின்ற நீங்கள் நம்பிக்கையோடு இருக்க வேண்டும்; 100 ஆண்டு காலம் இருப்போம் என்ற நம்பிக்கையோடு வாழுங்கள். செயலைச் செய்யுங்கள். அப்போதுதான் காரியம் ஆற்ற முடியும் என்று மகிழ்ச்சியால் மட்டுமல்ல, உங்களைவிட வயதில் மூத்தவன் என்பதால் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் பல்லாண்டு வாழ்க என்று இந்த இளைஞனுக்கு அவர்கள் வாழ்த்து கூறியதற்கு நன்றி. நான் சொல்ல விரும்புவது, இப்போது புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு இருக்கக் கூடிய இந்த விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய சுமையை நிரந்தரமாக போக்க வேண்டும். ஒட்டகத்



தினுடைய முதுகின் மீது இருக்கக்கூடிய சுமையில் ஒன்றிரண்டை இறக்கிவிட்டால் எல்லா சுமைகளும் அகற்றப்பட்டுவிட்டதாக நினைத்துக்கொள்ளும். ...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இன்றைய தினம் எனக்கு நல்லதொரு வாய்ப்பைக் கொடுக்கிறார்கள். மகிழ்ச்சி அடைகிறேன். ஒட்டகத்தை ஏமாற்றுவது எப்படி என்பதைச் சொல்கிறேன். சுமையை அதிகமாக ஏற்றிவிட்டு கடைசியில் கொஞ்சம் இறக்கி வைத்து அதை ஏமாற்றுவார்கள். ஆனால் அந்தச் சுமையை ஏற்றி வைத்தது இப்போதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றப்பட்டிருக்கிறது. ஆகவே ஒட்டகத்தின் கதை ஒத்துவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒட்டகம் சகாராவைக் கடந்து போக வேண்டிய இடத்திற்குப் போகுமா என்பது வேறு விவகாரம். ஆனால் இப்போதுள்ள நிலையில் ஏராளமான சுமைகள் இருக்கின்றன. போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு அந்த ஒட்டகம் போய்ச் சேருவதற்கு முன்பே அந்தச் சுமையை இப்போதே..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒட்டகம் எங்கே போய்ச் சேர வேண்டுமோ அங்கே நிச்சயமாகப் போய்ச் சேரும். அதிலே திரு. ரகுமான்கான் அவர்களுக்கு சந்தேகமே வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒட்டகம் எந்தப் பணியைச் செய்ய வேண்டுமோ அதைக் கண்டிப்பாகச் செய்யும். அதை ஓட்டிக் கொண்டு செல்பவனும் ஒழுங்காகச் செல்வான். அவர் முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவராக இருப்பதால் அங்கே எப்படி எல்லாம் தண்ணீர் வசதி இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். அதற்கு ஒட்டகத்தை எப்படிப் பயன்படுத்துவார்கள் என்பதையும் அறிவார்கள். அதை மாத்திரம் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒட்டகம் சகாராவைத் தாண்டி போகவேண்டிய இடத்திற்குப் போகும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் மக்கள் மீண்டும் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படி தேர்தலைச் சந்திப்பதன் மூலம் இந்த ஒட்டகம் போகுமா ..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பிய நேரத்தில் அவர்கள் சந்தித்துவிட்டார்கள். எப்போது சந்திக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களோ அப்போது சந்திக்க எல்லோரும் தயார்.

திரு. அ. ரகுமான்கான் : அதைத்தான் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது பாராளுமன்றத் தேர்தல பிரச்சினையை மட்டுமல்லாமல், மாநிலத் தேர்தல் பிரச்சினையையும் நீங்கள் மக்கள மன்றத்திற்கு கொண்டு வந்தீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாநில அரசு பிரச்சினை அல்ல. அது ஒரு கொள்கைப் பிரச்சினை. அது மிகப் பெரிய பிரச்சினை. மாநில சுயாட்சி என்ற பிரச்சினை. மாநிலங்களிலே அந்தந்த மாநிலக் கட்சி இருக்கலாமா என்பதைப் பற்றியும், அவர்களுக்காகவும் சேர்ந்து தான் நான் பேசினேன என்பதையும் அந்த உறுப்பினர் தெரிந்து கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் மாநில சுயாட்சி பற்றி இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான அவர்களிடம் கேட்டுக் கொள்வது மாநில சுயாட்சி பற்றி இப்போதுதான் பேச ஆரம்பித்திருப்பதாகச் சொல்லாதீர்கள் மாநில சுயாட்சி பற்றி நான் அந்தக் கட்சியிலே இருக்கும்போதே பேசியதைக் கேட்டவன் நான். பேசப்படுவதைப் பற்றிப் புரிந்து கொண்டவன் நான். ஆனால் அதை எப்படிப் பேசுவது என்பதிலேதான் வேறுபட்ட கருத்துக்கள் எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை என்பதைச் சொல்லிக் கொள்வதோடு இப்போது இருக்கின்ற அதிகாரத்தை எடுக்க வேண்டும் என்று மத்தியிலே இருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே' அதைப், பற்றியெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, உங்கள் மூலமாக நண்பர் திரு. ரகுமான்கான் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். விவசாயிகளுக்கு ஆதரவாகச் சில சலுகைகள் தரக்கூடிய பில் வந்திருக்கிறது. அந்த பில்லிலே ஆரம்பித்து விவாதம் ஒட்டகத்திற்குப்போய எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து இதுவரைக்கும் நடந்த விவாதம் போதும். தயவுசெய்து திரு. ரகுமான்கான் அவர்கள் அந்த பில்லுக்கு வந்து அதன் ஷரத்துக்களை மேலும் செழுமைப் படுத்துவதற்குப் பேச வேண்டும் என்று வேண்டுகிறேன், ஐயா.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, எல்லாம் உங்கள் அனுமதியோடுதான். நம்முடைய முதல்வர் அவர்கள் விவாதிப்பதற்கு எனக்கு மெத்த மகிழ்ச்சி. ஆனால் இன்னும்



எனக்குப் பெருமை சேர்க்க நான் சொல்வதைக் கேட்டுவிட்டு அவர்கள் பதில் சொன்னால் அது எனக்கு மெத்த மெத்த மகிழ்ச்சி. அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் பிரச்சினைகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய நிலவரியை ரத்து செய்வது, அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய கடன் சுமையையும் ரத்து செய்கிற விவாதத்திலே முழுமையாக இந்த சர்க்கார் நிரந்தரமான பரிகாரம் காட்ட வேண்டும் என்பதுதான் என்னுடைய பிரச்சினை. நான் அதைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். நிரந்தரமான பிரச்சினை இருக்கின்றது என்று சொல்லி இந்த அரசு காலம் தாழ்த்தக் கூடாது. விவசாயிகளுக்குச் சம்பளம், விவசாயிகளுக்குப் போனஸ் போன்ற பல்வேறு வாக்குறுதிகளை எல்லாம் தேர்தல் களத்திலே கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் கொடுக்காத வாக்குறுதிகளே இல்லை. ஆணைப் பெண்ணாக்குவது, பெண்ணை ஆணாக்குவது எல்லாம் கூட........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 4 பேர்கள் பேச வேண்டி இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினையில் விவசாயிகளின் நண்பனாக இருக்கக்கூடிய நமது முதலமைச்சரவர்கள் ''நாடோடி மன்னன்'' சினிமாப் படத்திலே காட்டப்பட்டிருக்கின்றவை சர்க்காரின் கொள்கை என்று சொல்லி சட்டசபையிலேயும் அதை வாக்குமூலமாக இங்கே பதிவு செய்திருக்கக்கூடிய.........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் சொல்கிறேன், திரு. ரகுமான்கான் அவர்கள் புரியாமல் பேசுகிறாரா, அல்லது வேண்டும் என்றே தூங்குகிறவர் போல் நடிக்கிறாரா என்று தெரியவில்லை. அவரை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் புரிந்து பேசினால் நன்றாக இருக்கும், புரியவில்லை என்றால் புரிய வைப்பதற்கு எனக்கு வாய்ப்புத் தாருங்கள். புரிந்துகொண்ட ஒருவர் இப்படிப் பேசுவது சரியல்ல. எங்களுடைய கொள்கையிலே எதை எதைச் சொல்ல தணிக்கை அதிகாரிகள் சம்மதிக்கிறார்களோ அதைப் படங்களில் சொல்லி இருக்கிறேன் அதை அண்ணா அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று, அதை நிறைவேற்றுவதற்கு முயலுகிறேன் என்று சொன்னால் அதோடு எங்கள் கொள்கை முடிந்துவிட்டது என்று கற்பனை செய்துவிடக் கூடாது. உங்களுடைய தலைவரவர்களும் நல்ல எழுத்தாளர், எழுதியிருக்கிறார்கள், பல கொள்கைகளைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் படங்களிலே சொல்லி வெளிவந்தது தான் அந்தக் கட்சியினுடைய கொள்கை என்று முடிவு எடுத்து

விடுவது எப்படிச் சரியாக இல்லையோ அப்படி இதுவும் சரியில்லை. ஆகவே இன்னமும் பலவற்றைச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்தோமோ, குடிசைகள் எப்படி வீடுகளாக மாற்றப்பட வேண்டும் என்று கருதினோமோ அதை நிறைவேற்றுவதற்காக இப்படிப் பலவற்றை நாங்கள் சொல்லி இருக்கிறோம். குறிப்பாக விவசாயிகளைப் பற்றி இதைவிடத் தீவிரமாக நான் சொன்னதை ஏன் இன்னும் அவர்கள் குறிப்பிடவில்லை என்பது தெரியவில்லை.

[பிற்பகல் 12.50]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நமது முதல்வர் அவர்கள் ''நாடோடி மன்னன்'' சினிமாவைப்பற்றிப் பேசுகிறபோது தனிப்பட்ட முறையில் அவர்களைத தாக்குவதாகக் கருதுகிறார்கள். அந்தப் படத்திலே அவர்........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தயவுசெய்து அந்த கருத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாகக்கேட்டுக் கொள்கிறேன். ''நாடோடி மன்னன்'' படம் எம். ஜி. இராமச்சந்திரனைத் தாக்குவதற்காக அல்ல. நாடோடி மன்னன் படத்திலே சொல்லியிருக்கிற கொள்கைகள் தான் இந்த அரசினுடைய கொள்கைகள் என்று சொன்னாலும் அதற்காக நாங்கள் வெட்கப்படவில்லை. அதிலே இருப்பதும் எங்களுடைய கொள்கைகள்தான். அது மட்டுமல்லாமல் இன்னும் பல கொள்கைகள் பல பிரிவுகள் உள்ளன. அவைகளையும் நாங்கள் செய்தாக வேண்டும். ஆகவே ''நாடோடி மன்னன்'' படத்தைப் பற்றி பேசினால் எம். ஜி. இராமச்சந்திரனைப் பேசியதாக அர்த்தமல்ல, அண்ணாவைப் பேசியதாக அர்த்தம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே. உங்களைப் போலவே அண்ணாவை என் இதய தெய்வமாக எண்ணுபவன் நான். அதிலே எந்த விதமான மாற்றமும் இல்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது எல்லாம் அந்த ''நாடோடி மன்னன்'' படத்தை இரவிலே நான் பார்க்கின்றபோது ஒரு காட்சி வருகிறது. அந்தக் காட்சியிலே குடிசைகள் என்ன செய்யப்பட வேண்டும் என்று கேள்வி கேட்கப்படுகிறது. அங்கே இருக்கின்ற மார்த்தாண்ட மன்னன் அதாவது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், ''தேவையில்லாத காரணத்தினால் குடிசைகள் கொளுத்தப்படும்'' என்கிறார்கள். அதை எப்படி இன்றைக்கு நடைமுறை படுத்தப்போகிறீர்கள்?



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ''நாடோடி மன்னன்'' படத்திலே, அந்தக்கதையிலே, ஒரு நாட்டிலே அதாவது ரத்தினபுரியிலே அவ்வளவாக குடிசைகள் இல்லை. அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே இருந்த குடிசைகளிலிருந்து வேறு நோய்கள் வெளியே வராமல் இருப்பதற்காகக் கொளுத்தி அழிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் அவன் சொன்னானே தவிர இராமச்சந்திரன் அங்கே இல்லை என்பதைத் தயவு செய்து அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : இரட்டை வேடம் போடுகிறார்கள். அதிலே ஒருவராக வந்து சொல்கிறார்கள்........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரட்டை வேடம் போடுவது என்பது தொழில். ஆனால் அரசியலிலே இரட்டை வேடம் போடுவது என்பது ஏமாற்றுவது. அதிலே நான் அவருக்கு விளக்கம் கூறுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் எல்லாம் ''நடோடி மன்னன்'' படம் பார்த்து பல ஆண்டுகள் ஆகி விட்டது. அதிலே என்ன கொள்கைகள் சொல்லப்பட்டது என்பது தெரியாது. அதை மீண்டும் சட்டமன்றத்திலே உறுப்பினர்களுக்குப் போட்டுக் காட்டிய பிறகு இந்த விவாதத்தை வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ரத்தினபுரி சம்பந்தப்பட்ட வரையில் ............ (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அவ்வளவு தான் நேரம். முடிந்து விட்டது உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இன்னும் 2 நிமிடங்கள்தான் வேண்டும். நமது முதல்வர் அவர்கள் நல்ல விளக்கங்களை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக குறிப்பிட்டு பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக அது ரத்தினபுரி சம்பந்தப்பட்ட பிரச்சினை. அது தமிழ்நாடு சர்க்கார் சம்பந்தப்பட்ட பிரச்னை அல்ல என்பதை விளக்கமாக கூறியிருக்கிறார்ர்கள். அதற்காக.......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு வழக்குரைஞராக இருக்கலாம். இது சட்டமன்றமே தவிர வழக்கு மன்றம் அல்ல. ஆகவே திசை திருப்ப முயற்சித்தால் மறுத்து

கருத்துக்கள் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால் இது நீண்டு கொண்டே போகும். நான் ஒன்றைச் சொன்னதை அவர் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். ரத்தினபுரி என்கிற ஒரு நகரத்தை, ஒரு ஊரை வைத்து அந்தக் கதை எழுதப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதிலே பதவி ஏற்றிருக்கிற ஒரு நாடோடி ஒரு காரியத்தைச் செய்கிறார் ; அதுவும் அவன் பெயர் மாற்றத்தில் இருக்கிறான். அவன் சொந்தப் பெயர் மார்த்தாண்டன் அல்ல. வீராங்கன். அதை அவர் தெரிந்துக் கொள்ள வேண்டும். மன்னனாக் நடிக்கின்றானே தவிர, மன்னன் அல்ல அவன். நாடோடிதான். அதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தையும் அதையும் ஒத்திட்டு பார்ப்பது என்பது கூடாது என்பது மட்டும் அல்ல. 22 ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ்நாட்டு மக்கள் தொகை எவ்வளவு இன்றைய தொகை எவ்வளவு என்பதைத் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றுள்ள பிரச்னைகள் எப்படி சந்திக்கப்பட்டதோ அதே மாதிரி இப்பொழுது பிரச்னைகளைச் சந்தித்தால் பிரச்னைகள் தீராது என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே விவாதம் தான் முக்கியம் என்றால் செய்து கொண்டே போகலாம். பத்திரிகைகளிலே வரட்டும். ஆனால் விவரங்கள் கிடைத்து உங்கள் யோசனைகள் சரியாக அமைந்து, அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய அவசியம் இந்த அமைச்சரவைக்கு ஏற்பட்டு அந்தத் திருத்தங்கள் பயன் உள்ளதாக இருந்தால் நாட்டுக்கு நல்லது. நேரமும் வீணாகாது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த மசோதாவில் திரும்பவும் வலியுறுத்துவது புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய குத்தகைதாரர்கள், ஏழை எளிய மக்கள் இவர்கள் மீது வேண்டிய சுமை இருக்கிறது. அவர்களை தாற்காலிகமாக, அந்த நிலங்களை குத்தகைக்கு விட்டிருக்கிற அதன் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் அல்லது வசூலிக்காமல் அல்லது அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் போவதற்கான ஒரு சூழ்நிலையை இந்த அரசு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் இந்தத் தாற்காலிக நிவாரணம் பயன் தருமா? நிரந்தரமான நிவாரணம் வேண்டும். எனவே முதல் அமைச்சர் அவர்கள் இன்னும் இந்த அரசு இருக்க அனுமதிக்கப்பட்டால், அதற்கு நீங்கள் ஒத்துழைத்தால் . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். இப்பொதும் சொல்கிறேன். அந்தச் சந்தேகம் எங்களுக்கு இல்லை. எங்களை மாற்ற வேண்டுமென்று விரும்பினால் மக்க்ள் மாற்ற வேண்டும். திரும்பக் கொண்டு வர வேண்டுமென்றால் மக்கள் கொண்டு வர





வேண்டும். அது எனக்குத் தெரியும். அவர்களுக்கும் தெரியும். சட்டம் தெரியும் என்று நான் கருதுகிறேன். அனுமதிக்கப்பட்டால்—யாரால் என்பதைச் சொன்னால் அதற்கும் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன். இப்படிப் பேசுவதால் மட்டும் வெற்றி பெற்றதாக அவர்கள் கருதினால் பேசிக்கொண்டே இருக்கட்டும். அவர்களைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சியுறட்டும். ஆனால் இங்கே கலைஞர் அவர்கள் ஆரம்பக் காலத்தில், தொடக்கக் காலத்தில் என்று கருதுகிறேன், ஒரு கதை சொன்னார்கள். கண்ணாடி சாமான்களை விற்கிற ஒரு வியாபாரி, எப்படி அந்தக் கண்ணாடிக் கூடையை உடைத்து விட்டான் என்று அதே மாதிரி நீங்கள் கற்பனை செய்து உடைத்துவிடாதீர்கள் என்று உங்களைப் பார்த்துத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் இந்த அரசு கவிழ்வதில் அக்கறை உள்ளவன் அல்ல. இந்த அரசு மக்களிடம் வோட்டு பெற்று ஒரு மரியாதை உள்ள அரசாக இருக்க வேண்டும் என்பது தவிர வேறு ஒன்றுமல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மரியாதைக்குரியவன் என்றும், நான் மரியாதை பெறுவதற்குத் தகுதியுள்ளவன் என்றும் ஒவ்வொரு முறையும் நண்பர் எடுத்துக்கூறிவிட்டு மரியாதைக்குரிய அரசாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது, முரண்படுகிறார். முதல் அமைச்சர் என்று சொல்லிக் கொண்டு, வாக்குகள் வாங்க வேண்டும், மக்கள் அனுமதி பெற வேண்டும் என்றால் பின்னர் எப்படி என்னை முதல் அமைச்சர் என்று அழைக்கிறார் என்பது புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : விவாதத்தின் திசை திரும்புகிறது. இப்போது அவர்கள் முதல் அமைச்சர். . . . , மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சர்தான். ஆனால் பிரச்னை கிளம்பும்போது. . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : அவருக்கு நன்றி.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்ல விரும்புவது நம் முதல் அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த ஆட்சியின்மீது மக்கள் தீர்ப்பு வழங்குகையில். . . . . . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒரு தன்னிலை விளக்கம். நான் பொதுக்கூட்டத்திலோ, தேர்தலிலோ, இந்த அரசுக்கு வாக்களிக்கீறீர்கள். இதன் மூலம் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும் என்று எங்கேயாவது பேசி

[திரு. அ. ரகுமான்கான்] [1980 பிப்ரவரி 11

இந்த வாக்குகள் இந்த அரசைக் கட்டுப்படுத்தும் என்று எங்கேயாவது சொல்லியிருக்கிறேனா என்று சொல்லுங்கள். அங்கே விவாதித்ததெல்லாம், மேடையில் நான் பேசியதெல்லாம் ஒரு தனிக் கட்சி மாநிலக் கட்சியாக இருக்கக் கூடாது என்று சொல்வதை நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது, அவர்கள் வரக்கூடாது என்பதுதான் என் தேர்தல் பிரசாரத்தின் அடிப்படைக் கொள்கை விளக்கம். இப்போதும் சொல்லிக் கொள்கிறேன். பத்திரிகைகளில் தவறாக வந்திருந்து அவர்கள் அதைப் படித்திருந்தால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மாநிலக் கட்சிகள் இருக்கக் கூடாது என்று சொன்னதை நான் முதல் கொள்கையாக வைத்து அதன் பேரில் தான் தேர்தலில் போட்டியிட்டேன், அதில் நான் தோல்வியுற்றேன் என்றால் ஒத்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் மாநிலக் கட்சிகள் இருக்க வேண்டாமென்று அங்கேயிருந்தவர்கள் சொன்னதை ஒத்துக் கொண்டார்கள் என்று வாதிப்பார்களேயானால் எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை ; சந்தர்ப்பம் வரும்போது அதைப்பற்றியும் பேசலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏதோ யாரோ ஒருவர் மாநிலக் கட்சிகள் இருக்கக் கூடாது என்று சொன்னதற்காக அவர் வரக்கூடாது என்று நான் தேர்தல் பிரசாரம் செய்தேன் என்று சொன்னார்கள். யார், எப்போது, எந்தச் சந்தர்ப்பத்தில் சொன்னார் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நண்பர் அவர்கள் விளக்கம் கேட்கிறார்கள். அவர்கள் பத்திரிகை படிக்கத் தவறியது பற்றி உண்மையில் நான் வருத்தப்படுகிறேன். நல்ல விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரையில் நான் மேடைகளில் பேசியதைப் படிக்காமல் இருந்திருக்கிறார்களே என்பதை எண்ணிப்பார்க்கும் போது உண்மையில் நான் வேதனைப்படுகிறேன். பிரதமராக இன்றிருக்கிற இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசியதாக வந்திருக்கிற வாதங்களை வைத்துத்தான் பிரசினையே தவிர அது இல்லை என்றால் அப்படி இல்லை என்று சொன்னால் பிரசினையே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய மொரார்ஜி தேசாய் அவர்களிடம் கேள்வி கேட்கும்போதுதான்..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இரண்டு விதமான கருத்து. ஒன்று முதலில் சொன்னேன். பிறகு இவர்களிடம் கேட்டபோது, தேசிய நீரோட்டத்தில் மாநிலக் கட்சிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் மறுத்துப் பேசியிருக்கிறேன்.



1980 பிப்ரவரி 11]

திரு. அ. ரகுமான்கான் : நமது முதல் அமைச்சர் அவர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் நேரம் முடிந்துவிட்டது. திரு. சின்னசாமி பேசுவார்.

[பிற்பகல் 1-00].

திரு. வி. கொ. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) திருத்த சட்ட முன்வடிவை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே, ஒட்டு மொத்தமாக குத்தகைதாரர்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றாலும், அப்படி புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நேரடியாக கண்ட ஒரு அரசு என்ற காரணத்தால், அந்த அடிப்படையில் அவர்களுக்கு எப்படி நிவாரணம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால், இன்றைக்கு இதை குத்தகைதாரர்களும், விவசாயிகளும் ஆதரிக்கின்றார்கள் ; வரவேற்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த வெள்ளம், புயல் ஏற்பட்ட காலத்திலே பல விவசாயிகள் உழுது சாகுபடி செய்தும், கூலி வேலை செய்தும், மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வைத்தும் விவசாயம் செய்தார்கள். ஆனால், திடீரென்று புயல் வெள்ளம் ஏற்பட்ட காரணத்தினால், அப்படிப்பட்ட விவசாயீகள் எல்லாம் பாதிக்கப்பட்டார்கள். எந்த அளவுக்கு அந்த விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாங்கள் எல்லாம் எங்கள் தொகுதியிலே நேரிலே போய் பார்த்தோம். அப்படிப் பார்த்தவைகளைப் பற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, இன்றைக்கு இப்படிப்பட்ட சட்ட முன் வடிவை கொண்டுவந்திருக்கிறார்கள். எனவே, இதை நாம் அனைவரும் வரவேற்கக் கூடியவர்களாக இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக இன்றைக்கு தமிழகத்திலே, விவசாயப் பெருங்குடி மக்களைப் பொறுத்தவரையில் விவசாயம் செய்வதற்கு முக்கிய காரணமாக இருப்பது தண்ணீர். தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து நல்ல நிலைமையில் இருந்து வருகிறது. எந்தப் பகுதிக்கு சென்றாலும், இந்த நிலைமை இருக்கின்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள சொல்லியது போல், எங்கும் பசுமைப் புரட்சி நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாழ

வேண்டும். அப்பேர்ப்பட்ட பசுமையான நிலைமை இருந்தாலும், இன்றைக்கு வெள்ளத்தாலும், புயலாலும் விவசாயிகள், குத்தகைதாரர்கள், கூலி வேலை செய்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள விவசாயிகளுடைய நிலைமைகளை, எண்ணத்தை புரிந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு இத்தகைய சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இதைச் சட்டமாக்குகின்ற இந்த நேரத்தில், எனக்கு சின்ன வயதிலே பெரியவர்கள சொல்லியது கேள்விப்பட்டது நினைவுக்கு வருகிறது. ஒரு நாட்டிலே நல்ல மழை பெய்ய வேண்டுமானால், அந்த நாட்டிலே, ஆட்சியிலே சில பெரியவர்கள் இருப்பதால் தான் என்று சொன்னதை கேளவிப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள நல்லாட்சி இந்த நாட்டிலே இருப்பதால்தான், நாட்டினுடைய எல்லாப் பகுதிகளிலும் பெரிய அளவுக்கு, மாதத்திற்கு பத்து நாட்கள் கூட மழை பெய்கின்ற நிலைமை இருக்கின்றது. தேவைக்கு அதிகமான மழை பெய்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு தமிழகத்தில் நிலவுகிறது இந்த ஆட்சியை யாரும் நீக்க முடியாது. அது நிச்சயமாக நடைபெறாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பேசும்பொழுது திரு. ரகுமான்கான் அவர்கள் ஆவேசத்தோடு, தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்கிறீர்களா என்றார்கள். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் இன்னொருவருடைய துணையை எதிர்பார்த்து தேர்தலைச் சந்திக்கின்றீர்கள். ஆனால், யாருடைய துணையும் இல்லாமல் சந்திக்க தயார். திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தனித் தனியாக போட்டியிட வருவீர்களேயானால், இன்றைக்கும் அந்த தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்கிறோம். ஆனால், பக்கத்தில் இருக்கும் திரு மாரிமுத்து அவர்களின் துணையை எதிர்பார்த்துக் கொண்டு அவருடைய சிரித்த முகத்தைப் பார்த்துக் கொண்டு இங்கே பேசுகிறீர்கள். அந்த தைரியம் உங்களுக்கு எத்தனை நாளைக்கு, நிலைத்திருக்கும் ? அந்தக் கூட்டையும் முறித்துக் கொண்டு தைரியமாக தேர்தலை தனித்தனியாக சந்திக்கத் தயாரா ? சந்தியுங்கள். நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மசோதாவின் மீது பேசுங்கள் ; முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கொ. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை, மசோதாவை ஆதரித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.



திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குத்தகை விவசாயிகளுக்கு நிவாரணம், குத்தகை ஒத்தி வைப்பு என்பதிலே 75—25 வாரம் என்பதைப் பற்றியெல்லாம் மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக இதை வரவேற்கிறேன்.

1973ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்— '82-ம் பசலிக்கு—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, தொடர்ச்சியாக ஐந்தாறு ஆண்டு காலம் வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரணம் அளித்தார்கள். '82-ம் பசலி கட்டுகிறவர்களுக்கு அதற்கு முன்னால் உள்ள பாக்கி அனைத்தையும் தள்ளுபடி செய்கிறோம் என்று ஒரு அவசரமான சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் பலனாக பெரும்பாலான விவசாயிகளுக்கு கோர்ட்டில் இருந்தும் நிலப்பிரபுக்களிடத்தில் இருந்தும், கோயில் நெருக்கடியிலிருந்தும் சலுகை கிடைத்தது. அது ஒரு வகையாக முடிந்தது ஆனால் 1973-ம் ஆண்டு கட்டியவர்களுக்கும் கட்ட முடியாதவர்களுக்கும் அதிலிருந்து தொடர்பான பாக்கி வந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக ஏழு ஆண்டு காலமாக இருந்து வருகிறது. 1975-ம் ஆண்டு தமிழகம் பூராவும் பெரிய வரட்சிக்குள்ளாக்கப்பட்டது. 1976-ம் ஆண்டு கடுமையான மழையும் வெள்ளமும்—தமிழகமே கரை புரண்டு ஓடியது. 1977-ம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட புயலால், நாடு கண்டிராத அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அரசு அலுவலகங்கள் பாதிக்கப்பட்டன. தமிழகமே பாதிக்கப்பட்டது அது நம் அனைவருக்கும் தெரிந்த உண்மை. 1978-ம் ஆண்டு மழை. அதே போல் இந்த ஆண்டு 40 நாட்கள் தொடர்ச்சியான மழை. கடையில் சாமான்கள் வாங்கக் கூட வீட்டிலிருந்து வெளியே செல்ல முடியாத அளவுக்குக் கடுமையான மழை 40 நாட்கள் பெய்திருக்கிறது. இப்படி தொடர்ச்சியாக விவசாயிகளை பாதித்துக் கொண்டே வருவது நம் அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஆறு ஆறு மாதத்திற்கு ஒத்தி வைத்து வருவது சரிதானா என்பதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் 1977-ம் ஆண்டு புயல் அடித்த வருஷம் வரையிலும் உள்ள பாக்கி அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இந்த ஆண்டு வரையிலும் லட்சக்கணக்கான வழக்குகள் கோர்ட்டில் இருந்துகொண்டிருக்கின்றன. அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1973-ம் ஆண்டிலிருந்து 1980-ம் ஆண்டு வரையிலும் சட்டத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய அந்த ஓட்டையைப் பயன்படுத்தி விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள்.

[திரு. அ. உத்திராபதி] [1980 பிப்ரவரி 11

வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் அவர்களுக்கு உரிய நிலத்தைத் திரும்பத் தருவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். 1978–79-ம் ஆண்டுக்குள்ள பாக்கியை ஐந்தாண்டு ஒத்தி வைத்து ஒவ்வொரு ஆண்டும் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

நான் கடைசியாக கேட்டுக் கொள்வது, இப்படியே ஒத்தி வைத்துக் கொண்டே போனால், அது விவசாயிகளுக்கு திருப்தி அளிக்காது. அந்த நிலையில் நிலத்தைக் கொடுத்திருக்கக் கூடிய சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கும் அது திருப்தி அளிக்காது. நீங்கள் எந்த நல்ல நோக்கத்திற்காக இந்த நிவாரணம் அளிக்கப் பட வேண்டும் என்று கொண்டு வந்தீர்களோ அந்த நிவாரணம் அவர்களுக்கு நிரந்தரமாகக் கிடைக்க வேண்டுமென்றால் 1977-ம் ஆண்டு வரையில் உள்ள குத்தகை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

கேரளாவில் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு எல்லாம் அரசாங்கமே நட்டஈடு கொடுத்துவிட்டு நிலத்தை அந்தத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கி இருக்கிறார்கள். பெரு நிலச் சொந்தக்காரர்களுக்கு உள்ள பினாமி நிலங்களை நட்டஈடு எதுவும் கொடுக்காமல் எடுத்து நிலம் இல்லாத தொழிலாளர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதே போல் இங்கேயும் கொண்டு வர வேண்டும்.

கோயில், மடங்களுக்கு லட்சக்கணக்கான ஏக்கர்கள் வைத்திருக்கிறார்கள். கேரளாவைப் போல் அந்தக் கோயில்களில், நிர்வாகம் செய்யக் கூடியவர்களுக்கு நேரடியாகச் சம்பளத்தையும், பூசை செய்வதற்கு வேண்டிய பொருள்களையும் கொடுத்து நிலத்தை வைத்து அரசாங்கத்தையும் மக்களையும் ஒரு சிலர் சுரண்டுகின்ற நிலைமையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறு வியாபாரிகள், பெரு வியாபாரிகள் எல்லாம் எங்களுக்கு நிலம் இல்லை, ஆகவே நிலம் வேண்டும் என்று சட்டத்திலே இருக்கிற ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டு நிலத்தை வைத்திருக்கிறார்கள். அந்த ஓட்டையை அடைத்து உண்மையாக நிலத்தை உழுகின்றவனுக்கும், மண்வெட்டியை வைத்து நிலத்தைக் கொத்துகிறவனுக்கும் கிராமங்களிலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலத்தினைக் கொடுத்தால் தமிழகத்திலே உண்மையான நிலச் சீர்திருத்தம் ஏற்படும், விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய



1980 பிப்ரவரி 11] [திரு. பொ. உத்திராபதி]

நிலைமையில் நிலச் சொந்தக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் தகராறு, அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் தகராறு, இந்தச் சிக்கலைத் தீர்த்து அரசாங்கத்திற்கும், விவசாயிகளுக்கும் நேரடியாகத் தொடர்பு ஏற்படுகிற வகையில் விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும்.

சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நியாயமான விலையைக் கொடுத்து அதை அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நீண்ட நாள் தவணையில் பெற்றுக் கொள்ள வேண்டும். பினாமி என்ற பெயரில் நிலம் வைத்திருக்கின்ற நிலைமையை உடனே கண்டு பிடித்து அந்த நிலங்களை எடுத்து தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் விவசாயிகளுக்கு நிரந்தரமான நிவாரணம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் குத்தகை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்து அவர்களுக்கு நிவாரணம் அளிப்பது சம்பந்தமான சட்ட முன்வடிவுகள் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறபோது விவசாயிகள் எதிர்ப்பார்க்கிற அளவு நன்மை, உண்மையிலேயே கிடைக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் விவசாயிகளுக்கு—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது சட்டம் கொண்டு வந்த போது ஒரு பசலிக்குண்டான பாக்கியைக் கொடுத்துவிட்டால் அதற்கு முன்னாலே உள்ள பாக்கி ரத்து செய்யப்படும் என்று கொண்டுவந்ததைப் போன்று—இந்த அரசு கொண்டு வரும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து ஏமாந்தார்கள்.

1973-ம் ஆண்டிலிருந்து 1978-ம் ஆண்டு வரையிலும் 5 ஆண்டுக் காலத்திலே விவசாயிகள் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியில் ஐந்தில் ஒரு பகுதி பாக்கி கொடுத்திருந்தால் அவர்கள் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகள் அத்தனையும் ரத்து செய்யப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆனால் ஐந்தில் ஒரு பகுதி கொடுக்க வில்லையென்றால், அந்தக் கூடுதல் குத்தகை பாக்கிகள் அத்தனையையும் ஒன்றாகச் சேர்த்து இந்த ஆண்டு 1980-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள்ளாக கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியில் நான்கில் ஒரு பங்கைக் கொடுத்தாக வேண்டுமென்று இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ஆனால் உள்ளபடியே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த ஆண்டும்

[திரு. இரெ. இராசமாணிக்கம்] 1980 பிப்ரவரி 11

தாளடி மகசூல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அறுவடை சரியாக இல்லை என்றும், ஒரு மாவிற்கு 2 கலம், 3 கலம் கூட கண்டு முதல் செய்ய முடியாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் இந்த ஆண்டு குத்தகை பாக்கியை கொடுத்து இதற்கு முன் ஐந்தாண்டுகளுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியிருந்தால் நான்கில் ஒரு பங்கு கொடுக்க முடியுமா என்பதையும் தயவு செய்து அமைச்சரவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, 1979-வது ஆண்டு குத்தகை பாக்கியைப் பற்றி இந்தச் சட்டத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. 1979-ம் ஆண்டு குத்தகை பாக்கியிருந்தால் அதை முழுவதையும் கொடுக்க வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதையும் சேர்த்தால் 1979-ம் ஆண்டு குத்தகை பாக்கி, 1980-ம் ஆண்டுக்குக் கொடுக்க வேண்டிய நெல், பழைய பாக்கியில் நான்கில் ஒரு பங்கு ஆகியவற்றைக் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது இது விவசாயிகளால் முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்னும், இன்றையதினம் தாளடிப் பருவம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கும் சேர்த்து ஒரு சட்டத்தை, இதிலேயே திருத்தம் கொண்டு வர முடிந்தால் கொண்டு வருவது நல்லது என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல பகுதிகளில் அறுவடை செய்யக் கூடிய ஆட்கூலிகூடக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. வீட்டிலே இருக்கும் நெல்லைக் கொடுத்து அறுவடை செய்யும் நிலைமை தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு இந்த நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால். அரசு மூலம்—உபரி நிலத்தை எடுத்து சிலருக்கு அடைமானம் செய்திருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள், அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கிகளுக்காக இன்றையதினம் ரெவின்யூ அதிகாரிகள் ஜப்தி செய்கிறார்கள். பலயிடங்களில் அவர்கள் தொல்லைகளுக்கு ஆளக்காப்படுகிறார்கள். பலயிடங்களில் போலீஸ் காவலை வைத்துக் கொண்டு சிறு விவசாயிகள் சாகுபடி செய்த மகசூல் நெல்லை ஜப்தி செய்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட அமைச்சரின் கவனத்திற்குக் கொடுத்து இருக்கிறேன். இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளை



1980 பிப்ரவரி 11] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

உடனடியாக நிறுத்தி, ஏழை விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கிகளையும் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில். பலயிடங்களில் உபரி நிலம் அடமானம் செய்யப்பட்டிருப்பவர்களிடத்தில் அவர்கள் கொடுக்க வேண்டிய கடன் பாக்கிகளுக்காக ஜப்தி செய்யப்பட்டு வருகிறது. அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்குச் சம்மன்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கான ஆதாரங்களை நான் என்னுடைய கரங்களிலே வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

விவசாயிகள் மூன்றாண்டுக் காலமாகப் புயலாலும், வெள்ளத்தாலும், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முழு நிவாரணம் கொடுக்கும் வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள், அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சட்டம் கொண்டு வரும்பொழுது, உழுபவனுக்கே நிலம் சொந்தம் ஆக்கப்பட வேண்டும். அதுதான் அண்ணாவின் இலட்சியம். இந்த மாற்றத்தைச் சொல்கிறபொழுது ஐந்திலிருந்து மூன்று ஏக்கராகக் குறைத்தும், மீதமுள்ள நிலத்தை இரண்டு ஏக்கருக்குக் குறைப்போம் என்றும் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு. கோயில் மடத்திற்குக் கண்டிப்பாக விதிவிலக்கு கொடுக்கக்கூடாது. கோயில். மடமாக இருந்தாலும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகளையும் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும்.

கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். ஏழைகள் கொடுக்க வேண்டிய எல்லாக் கடன்களையும் தள்ளுபடி செய்து, விவசாயிகள் இந்த நிலையிலிருந்து நிரந்தர நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு நான் அதிகமாக வலியுறுத்துவது என்னவென்றால் அரசு நிலமாக உபரி நிலத்தை எடுத்து, அடமானம் பெற்றவர்கள் அதைச் செய்து சென்ற ஆண்டு 79 ஆம் ஆண்டு வரை கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகள் அத்தனையையும் தள்ளுபடி செய்துவிட்டு புதிய ஆண்டிலிருந்து நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற 75—25 விகிதாச்சாரத்தில் குத்தகை பாக்கிகள் கோரப்படும் அளவிற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அதன்

மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[பிற்பகல் 1—20]

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் பேரிலும் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்களுடைய தற்காலிக நிவாரணச் சட்ட முன்வடிவின் பேரிலும் இந்த இரு பிரிவினருடைய நிவாரணச் சட்ட முன்வடிவின் பேரிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கே குத்தகை பாக்கியைப் பொறுத்தமட்டில் 1973 ஆம் ஆண்டுக்கு முன்னால் கொடுக்கவேண்டிய பாக்கிகளை முழுமையும் செலுத்த வேண்டுமென்றும். 80 ஆம் ஆண்டு குத்தகையில் நான்கில் ஒரு பகுதி செலுத்த வேண்டும் என்றும் அதற்குப் பிறகுஇருக்கக் கூடிய ஆண்டுகளில் சிறு, சிறு சலுகையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை முழுமையாக மாற்றி ஒரு முழு நிவாரணமாக அளிக்க வேண்டுமென்று நான் எங்களுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். காரணம் அந்த பாக்கி ஏற்பட்ட காலங்களில். வறட்சி, பெரு வெள்ளம். பூச்சி போன்ற இந்த இயற்கையினுடைய பாதிப்புகள் ஏற்பட்டது என்பதும் உரம், பூச்சிமருந்து, உழு கருவி முதலானவற்றின் விலையேற்றமும் தான் அடிப்படை காரணங்களாகும்

மேலும், இந்தக் காரணங்களோடு மட்டும் அல்லாமல் தாங்க முடியாத அளவுக்கு கடந்தகால குத்தகை முறையில் குத்தகை விவசாயிகள் 60—40 செலுத்த வேண்டுமென்ற காரணத்தினால் தான் இந்த பாக்கிகள் ஏற்பட்டன. இதை அரசும் உணருகிறது என்று நாங்கள் கருதுகிறோம். காரணம், கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேகூட. 75—25 என்ற வார சட்டத்தைக் கொண்டு வந்தபொழுது. அரசு அதை உணர்ந்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. ஆகவே, இந்த யதார்த்தத்தையும். பாக்கியை தீர்க்கமுடியாத சூழ்நிலையையும் மற்றுமுள்ள விஷயங்களையும் கணக்கில் கொண்டு, இன்றைக்குச் சாதாரண உணவு உற்பத்திக்காகவும், சாதாரண ஏழை எளிய விவசாயிகளுடைய மேம்பாட்டைக் கருதியும் நிச்சயமாக எத்தனை ஆண்டுகள் குத்தகை பாக்கி இருந்தாலும், 1980 ஆம் ஆண்டு வரையிலும் உள்ள மொத்த குத்தகை பாக்கியில் ஓராண்டு செலுத்தினால் போதும் என்று செய்தால்தான் உள்ளபடியே நிவாரணம் கிடைக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும் குத்தகைப் பதிவிலே பெரும்



கண்துடைப்புகளும் பல மோசடிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. முடங்கலிலே பல வட்டங்களில் குறிப்பாக, குத்தகைதார விவசாயிகள் முழுமையாக பதிவு செய்யவில்லை. பதிவு செய்யக் கோரி இன்றைக்கு மனுக்கள் போட்டாலும் நிலச்சுவாந்தார்கள் தூண்டுதலோடு வேறு பொய்யான வழக்குகள் போடுவதன் மூலமாக எங்கும் ஆயக்கட்டு துன்புறுத்தப்படுவதாலும் பயமுறுத்தல்கள் கொடுப்பதாலும் விவசாயிகள் குத்தகை பதிவு செய்யமுடியாத நிலைமை இருக்கிறது என்பதோடு பதிவுக்கு விசாரணை என்று பல மாதங்கள் தாலுக்கா அலுவலகத்திற்கு இழுத்தடிக்கப்பட்டதன் மூலம் பலவீனப்படுத்தி பதிவைத் தடுத்து மறைக்கும் காரியங்கள் பெரும்பாலும் நடைபெறுகின்றன.

குறிப்பாக. தர்மபுரியில். ஊத்தங்கரை பகுதியில், குத்தகை செய்து கொண்டிருந்த விவசாயிகளை. அடித்துத் துன்புறுத்தி வெளியேற்றியதோடு. மட்டுமல்லாமல், அவர்களை வெறியேற்றுவது தவறு என்று சொன்னால், விவசாயச் சங்க ஊழியர்கள்மீது கூட பொய்யான வழக்குகள் போடப்பட்டு துன்புறுத்தப்படுகிற நிகழ்ச்சியைக் காண முடிகிறது. ஆகவேதான் குத்தகை வார அனுபவத்தை நிரூபிக்கும் பொறுப்பு குத்தகை வார விவசாயிகளைச் சேர்ந்தது என்பதை மாற்றி சாகுபடி அனுபவத்தை நிரூபிப்பது நிலச்சுவான்தார்களின் பொறுப்பாக விதிக்க வேண்டும் என்றும் பூரண நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் கேட்டு இந்த மசோதாவை வரவேற்று முடிக்கின்றேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் அவர்கள் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையை செலுத்தாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவர்கள் குத்தகை பாக்கி இருக்கிற காரணத்தால் நிலத்தை விட்டு வெளியேற்றப்படாமல் இருக்கக் கூடிய வழிவகைகள் இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கின்றன. வெள்ளத்தால்' புயலால் விவசாயிகள் அல்லது குத்தகைக்காரர்களுக்கு குத்தகை பாக்கி மட்டுமல்லாமல் இன்னும் பல தொல்லைகள் இருக்கின்றன என்பதை இந்த அரசு நன்றாக உணரும். இருந்தாலும் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியோடு அரசுக்கு கொடுக்க வேண்டிய கடன் தொல்லையும் எந்த அளவுக்கு குத்தகைதாரர்களை பாதிக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். ஆகவே குத்தகைக்காரர்களுக்கு குத்தகை பாக்கிக்கு எந்த நிவாரணமும் அளிக்க முடியவில்லை. அதேபோல அரசுக்கு செலுத்தவேண்டிய அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய கடன்கள் போன்ற அல்லது டாக்ஸ் போன்றவைகளைக் கூட இந்த அரசு ரத்து செய்து அந்த நிவாரணம் அளித்தால்தான் அது பூரணமான நிவாரணமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1980 பிப்ரவரி 11

அதுமட்டுமல்ல, விவசாயிகள் இம்மாதிரி தொல்லைகளுக்கு அடிக்கடி ஆளாகிறார்கள். வெள்ளம், புயல், இவைகள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று இல்லாமல் அடிக்கடி வருகிற காரணத்தால் இப்போது டெம்பரரி ரிலிப் என்று மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்கு மாறாக ஒரு நிரந்தர நிவாரணம் அளிக்கின்ற வகையில் இந்த சட்டமும் நிரந்தரமாக சட்டமாக இயற்றினால் சிறந்ததாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். இப்போது புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்ற குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நிரந்தர ஏற்பாடு இருக்கிறது என்று சொன்னால் இந்த விஷயம் இங்கே சட்டமன்றத்திற்கு அடிக்கடி வரவேண்டிய அவசியம் இல்லை. நேரத்தை நாம் அதிகமாக செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆக அரசு இந்த சட்டத்தை நிரந்தரமாக இருக்கும் என்று சொன்னால் அரசு இயந்திரம் தேவையான நிவாரணங்களை அளிப்பதற்கு வழிவகை செய்கின்ற முறையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற தடவை மழையினாலே, வெள்ளத்தினாலே தென் மாவட்டங்கள் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம், நெல்லை போன்ற மாவட்டங்களில் லட்சக்கணக்கான வாழைப் பயிர்கள் நாசம் ஆனதும், லட்சக்கணக்கான வாழை வியாபாரிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பேட்டி கண்டு மனு கொடுத்து அதற்கான நிவாரணம் அளிக்க கேட்டிருந்தேன். முதலமைச்சர் நிவாரணம் அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்த புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த குத்தகைதாரர்களுக்கும் விவசாயிகளுக்கும் அதாவது குறிப்பாக வாழை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கும் எந்தவித நிவாரணமும் அளிக்காமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் அளிப்பதோடு மட்டுமல்லாமல் மானியம் போன்ற நிவாரணமும் அளிக்கவில்லை என்றால் அவர்கள் ஏற்கனவே தங்களிடம் இருந்த பணத்தை விவசாயத்தில் செலவு செய்துவிட்டார்கள். மேலும் அவர்கள் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொன்னால் அவர்கள் கூட்டுறவு சங்கங்களில் இருந்து கடன் வாங்கி பயிரிட வாய்ப்பு இருக்காது. தேவையான கடன் உதவி அளிப்பது அரசாங்கத்தின் கடமை என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட வாழை பயிரிடுகின்ற விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கூறி இந்த மசோதாவை நான் வரவேற்று அமர்கிறேன்.



1980 பிப்ரவரி 11]

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே. 2 லிருந்து 5 வரையில் இருக்கிற இந்த மசோதாக்களிலே பல்வேறு கருத்துக்களை அமைச்சர் அவர்கள் கேட்பதற்குக் காது கொடுத்தால் கூட ஒரு குழப்பமான அரசு இருக்கிற காரணத்தால் இப்படி ஒரு குழப்பமான நிலையை உருவாக்கிக் காட்டி உறுப்பினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கூட தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையை இந்த மசோதா பிரேரேபித்திருப்பதை மெத்த வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எல்லாம் இன்றைக்கு நேரம் போதாது என்ற வாதத்தை முன் வைத்ததால், தயவு செய்து இதை சட்டமன்ற நடவடிக்கையாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு மசோதாவை நிறைவேற்றுகிற நேரத்தில் அந்த மசோதாவின் மீது உறுப்பினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டு அமைச்சர் அவர்கள் முடிவு செய்வதற்கோ அல்லது அரசு என்ன கருதுகிறது என்று கேட்டு முடிவெடுக்காமல் 5 மசோதா, 6 மசோதாக்கள் என்று சகட்டுமேனியாக எடுத்துக் கொண்டு நேரம் இல்லாத காரணத்தால் என்ன சொல்கிறோம் என்று கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்குமானால் . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** அது பிசினிஸ் அட்வைசரி கமிட்டியிலே வைக்கப் பெற்று எல்லோரும் சேர்ந்துதான் முடிவெடுத்தார்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே இப்போது எடுக்கப்பட்ட முடிவுதானே தவிர, முன்னாலேயே எடுக்கப்பட்ட முடிவல்ல.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** நீங்கள் பிசினஸ் அட்வைஸரி கமிட்டி மெம்பர் அல்ல. உங்களுக்கு எப்படித் தெரியும். தலைவர்களைக் கேளுங்கள். இப்போது பேசுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** இங்குதான் அமைச்சர் அவர்கள் பேரவைத் தலைவரைப்பார்த்து கேட்டு 5 மசோதாக்களையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நாங்கள் காதாலே கேட்டோம். நீங்கள் எது சொன்னாலும் பரவாயில்லை. இன்றைக்குக் குழப்பமான நிலை இருக்கிற காரணத்தால்தான் இப்படி ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். “ நாடோடி மன்னன் ” ஆனாலும் சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால் நாட்டிலே உள்ள

பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் இப்போது சுட்டிக் காட்டியதை கூர்மையாக உணர்ந்தவர்கள்.

[பிற்பகல் 1–30]

நீங்கள் 1976 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஒத்தி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆட்சி ஒத்திவைக்கப்படுகிற காரணத்தால் உங்களுடைய நடவடிக்கைகளை நீங்கள் ஒத்தி வைக்கிறீர்களா என்ற கேள்வி மக்களிடத்திலே இன்றைக்கு எழுகிறது. ஒரு காலத்திலே, ஜனாதிபதி ஆட்சி காலத்திலே. கவர்னர் ஆட்சி காலத்திலே ஒத்தி வைத்தார்கள் என்றால் இந்த அரசு வந்த பிறகும் ஒத்தி வைத்துக்கொண்டுதான் போகிறார்களே தவிர அவர்களுக்கு கடன் சுமையிலிருந்து விடுதலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மசோதாக்கள் நிறைவேற்றப்படும் வரையில் அவையின் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மூன்றாண்டு காலத்திற்கு மேலாக நீங்கள் ஒத்தி வைத்துக்கொண்டே போவதற்கு என்ன காரணம்? உண்மையிலேயே விவசாயிகள் மீது உங்களுக்கு அக்கரை இருந்தால் 1976 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டம் இன்று வரையில் ஒத்தி வைக்கப்படுவதற்கு காரணம் என்ன. ஒன்று கடனை தள்ளிவிட வேண்டும் அல்லது கடனைக் கட்டுங்கள் என்று விவசாயிகள் தலையிலே சுமத்த வேண்டும், ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள். கடனை தள்ளிவிட வேண்டும் இல்லை என்றால் கட்டச் சொல்ல வேண்டும். ஒத்தி வைப்பதால் எவ்விதமான பயனும் இல்லை.

நிவாரணம் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். ஒரே கிராமத்தில் ஒரு பகுதியிலே வெள்ளம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். இன்னொரு பகுதியிலே வெள்ளம் இல்லை என்று சொல்கிறீர்கள். தர்மம் ஆட்சி செய்கிறது என்று சொல்கிறீர்கள் இங்கே தண்ணீரில் தலைகள் எல்லாம் மிதக்கின்றன. எண்ண முடிந்தால் எத்தனை என்று சொல்கிறீர்கள் : எண்ண முடியவில்லை என்றால் காணவில்லை என்று சொல்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலமைகளைத்தான் இங்கே காண முடிகிறது. பாதிப்பு என்று சொல்லும்போது ஒரே கிராமத்தில் ஒரே பகுதியில் இருக்கிறவர்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது : ஒரு பகுதியில் இருக்கிறவர்களுக்கு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்று விளம்பரம் மட்டும் செய்கிறீர்கள். விளம்பரம் பெரிதாக வருகிறது. ஆனால் நிவாரணம் கிடைப்ப



தில்லை. ஒரு பகுதியில் 10 ஏக்கருக்கு நிவாரணம் கிடைக்கிறது. 300 ஏக்கருக்கு நிவாரணம் இல்லை. இதை தவிர்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு பார்த்தால் தொடர்ந்து வெள்ளத்தாலும் புயலாலும் பாதிப்பு ஏற்பட்டது. அப்படி இருக்கும்போது அமைச்சரவர்கள் கொடுத்த நிவாரணம் என்ன குத்தகைப் பாக்கியை ரத்து செய்ய வில்லை : ஒத்தி வைக்கிறீர்கள். நிலவரி. லோக்கல் செஸ் வரி வசூல் செய்யப்படுகிறது. பயிர் செய்ய வில்லை ; விளைச்சல் இல்லை நிவாரணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களைக் கசக்கிப் பிழிந்து லோக்கல் செஸ்வரியை வசூல் செய்கிறார்கள். இதுதான் நிவாரணம். வருமானம் இல்லாத நேரத்தில் எப்படி வரி வசூல் செய்ய முடியும் என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல முடியாது. ஆகவே, ஒன்று வசூல் செய்ய வேண்டும்மென்று சொல்லுங்கள் : அல்லது தள்ளுபடி செய்துவிடுங்கள். அப்படிச் செய்யாமல் ஒத்தி வைத்துக்கொண்டே போவதால் விவசாயிகளுடைய சுமைதான் அதிகரிக்கிறதே தவிர அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காது. இந்தமாதிரியாக நிவாரணம் அளிக்கிறோம் என்று சொல்லி இன்றைக்கு அவர்களைக் குழப்பிக்கொண்டிருக்கிறீர்கள். இது நீங்கள் விளம்பரத்தைத் தேடிக்கொள்வதற்காகச் செய்கிற காரியமே அல்லாமல் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற விருப்பத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பொதுப்பணித் துறை அதற்காகக் கொடுத்த பணத்தைச் செலவு செய்திருக்கிறதா தஞ்சை மாவட்டத்தில் வெள்ள நிவாரணத்திற்காகக் கொடுக்கப்பட்ட பணம் முழுவதும் சரியாகச் செலவிடப்படவில்லை. செலவு செய்யப்பட்டதில் மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நிவாரணப் பணிக்காக செலவிடப்பட்டதில் மக்களுக்கு எந்த விதமான பலனும் இல்லை. திறமை வாய்ந்த ஒரு நல்ல அமைச்சர் இருந்தும் சரியாக செலவிடப்படவில்லை என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசால் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. வருவாய்த் துறையிலே திறமையான ஒரு அமைச்சர் இருந்தும், இந்த அரசிலே அவர் இருக்கின்ற காரணத்தால் அந்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாமல் இருக்கிறார் என்பதை வேதனையோடு தெரிவித்து. அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே நான் நான்கு சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற போது, அந்தச் சட்ட முன்வடிவுகள் மீது பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சுருக்கமாக, தேவைகளை

மட்டும் பேசியிருந்தால் இவ்வளவுநேரம் ஆகியிருக்காது. மக்களை குழப்புவதற்காக குழப்பமாக விவரங்களைத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னதற்குக் காரணம் 4 மசோதாக்களையும் படிக்காமல் ஒன்றிரண்டை மட்டும் படித்துவிட்டுப் பேசியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நல்ல அனுபவம் உள்ள உறுப்பினர்கள் கூட அப்படித்தான் பேசியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

இங்கே பேசும்போது ஒத்தி வைத்துக்கொண்டே போகிறார்களே, நிவாரணம் இல்லையா என்று கேட்டார்கள். அதற்கெல்லாம் விவரமாக நான் பதில் சொன்னால் காலதாமதம் ஏற்படும். குறைந்த நேரத்தில் விளக்கமாகப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நான்கு சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக எடுத்து விவாதித்து விட்டு, தனித்தனியாக நிறைவேற்றலாம் என்று அந்தக் கட்சி உறுப்பினர்களில் ஒருவரையும் அழைத்து வைத்து, பேசி முடிவு செய்யப்பட்டது. ஆனால், அவர்கள் இப்போது எனக்கு உதவ முடியாமல் வெளியே போயிருக்கிறார்கள். ஒன்றாகச் சேர்ந்துதான் முடிவு செய்தோம் என்பதற்காக இதைச் சொல்கிறேன் அல்லாமல் வேறல்ல.

மற்றொன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ஓராண்டு கட்டிவிட்டால் போதும் என்று இருந்தது என்று பெருமையாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றால் வருவாய்த் துறை அமைச்சரவர்களும் அப்போது அங்கேதான் இருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நல்ல சட்டங்கள் என்று சொல்கிறபோது எங்களை எல்லாம் சேர்த்துத்தான் நீங்கள் பேசுகிறீர்கள் — என்பதை மறந்து விடக் கூடாது. ஆனால் நான் சொல்கிறேன். ஒரு சட்டம் என்கிறபோது முன்பிருந்த சட்டம் எப்படி, இப்போது அதற்கு வருகின்ற சட்டம் எப்படி என்று சொல்ல வேண்டும். ஆனால் காலப் போக்கில் சட்டங்கள் வருகிறபோது முதலில் இருந்த சட்டத்தை விட சீர்த்திருத்தமாகவும், முற்போக்கு எண்ணத்துடனும் வந்திருக்கிறதா என்பதைத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுலபிளர்கள் ஆராய்ந்து பேச வேண்டும். அவ்வாறு பேசுவது தான் நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் யாரும் புயல் வெள்ளம் பற்றிப் பேசவில்லை. அவ்வாறு பேசாததற்குக் காரணம் காங்கிரசுக்கும் புயல் வெள்ள நிவாரணத்திற்கும் சம்பந்தமே இல்லை.





திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, தேவையில்லாததை மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் நான் பேசுகிறேன். நேரம் அதிகமாகி விட்டது என்ற காரணத்தால்தான் தீர்மானத்தை அவர்கள் அவசரம் அவசரமாக பாஸ் செய்யட்டும் என்பதால்தான் பேசவில்லையே தவிர.........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினால் நேரம் ஆனாலும் பாதகம் இல்லை. இந்தியத்துணைக் கண்டத்தை ஆளுகின்ற கட்சியைச் சார்ந்தவர்கள். இங்கே ஆளும் கட்சியாக வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு அமைச்சரவர்கள் இவ்வாறு அழுத்தம் திருத்தமாகச் சொன்னதை நான் வரவேற்கிறேன் ஆனால் அவர்கள் எங்களுடைய கட்சி இந்தப் புயல், வெள்ள நிவாரணங்களிலே பங்குகொள்ளவில்லை என்று குறிப்பிட்டதை நான் வன்மையாகக்கண்டிக்கிறேன் குத்தகைதாரர்களின்பாக்கியை ஒரு முடிவு எடுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தியிருக்கிறேன். இன்றைக்கு புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 20 சதவீதம் அதாவது 5-ல் ஒன்றும், புயலால் பாதிக்கப்படாத பகுதிகளுக்கு 3-ல் ஒன்றும் என்று முடிவு எடுத்து இருக்கிறீர்கள். புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1978 ஆம் ஆண்டு வரையிலும் இருக்கின்ற அரியர்ஸிலே 5-ல் ஒன்று மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் சொல்வதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு திருத்தம் கொண்டு வர வேண்டும். புயலால் பாதிக்கப்பட்ட பகுதி என்று இருப்பதிலே 1976 என்று இருப்பதை 1978 என்று திருத்தி இந்தப் பசலி ஆண்டு வரைக்கும், இருக்கின்ற அத்தனை விவசாயிகளுக்கும் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி நிவாரணம் கொடுக்கப்பட்டதோ அதே மாதிரி புயலால் பாதிக்கப்படாத பகுதிகளுக்கும் அரியர்ஸை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியிலே 1978 ஆம் ஆண்டு வரையிலே உள்ள பகுதிகளுக்கும், நீங்கள் கொண்டு வந்திருக்கின்றபடி, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 5-ல் 1 என்றும் புயலால் பாதிக்கப்படாத பகுதிகளில் 3-ல் 1என்றும் திருத்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்தமாதிரி நிவாரணம் அளிக்க முன் வந்ததை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இதை ஏற்றுக் கொண்டு நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 3 ஆண்டிலே இதைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்தந்த ஆண்டினுடைய குத்தகையே அவர்களால் செலுத்த முடியவில்லை. ஆகையினால் 5 ஆண்டாக இந்தக் குறியீட்டை ஆக்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தலைவரவர்களே, எனக்கு மெத்த மகிழ்ச்சி இப்படிப்பட்ட கருத்துக்களை அவர்கள் இங்கே சொன்னதற்கு.

குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டம் என்பது வேறு. புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறபோது என்பது வேறு. ஆனால் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். 1962-லே வறட்சி நிவாரணச் சட்டம் என்று கொண்டு வந்து கடனை ஒத்தி வைத்திருக்கிறார்கள், அதாவது ஆறு ஆறுமாதம் கட்ட வேண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் முதல்முதலாக புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்படுபவர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கொண்டு வந்த அரசு எங்களுடைய அரசு, அதாவது 11-8-1972ல் என்று நான் உங்களுக்கு சொல்கிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஆண்டுகளின் கணக்குகளை நான் வைத்திருக்கிறேன்.. 3-11-52-லே..............

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, எங்களுடைய அரசு என்று மொட்டையாகச்சொல்வதனால் ஒருவேளை 1972-லேயே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் இருந்ததோ என்று நினைத்து விடுவார்கள். ஆகவே முதன் முதலாகக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று நீங்கள் சுருக்கமாகவும், உண்மையாகவும் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 11-8-72 என்று சொல்ல இருக்கிறேன். நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும், திரு. சுப்பு அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் மறுபடியும் மறுபடியும்சொல்கிறேன். 11-8-72-லே எங்களுடைய அரசு என்று. இதை நீங்கள் யாரும் மறுக்க முடியாது. நான் இன்னமும் சொல்வேன். நீங்கள் அங்கே இருந்தாலும் சரி, இங்கே இருந்தாலும் சரி, இந்த இயக்கம் வளர்ந்து ஆளும் கட்சியாக ஆவதற்கு யார் யார் எவ்வளவு பாடுபட்டார்களோ அதைவிட கூட இல்லை என்றாலும் அதற்குக் குறைவாக பாடுபட்டவன் அல்ல நான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே உரிமை பேசுவதற்கு எனக்கும் பாத்தியதை இருக்கிறது. அதை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

30-11-1952-லே நாகப்பட்டிணத்திலே புயல் அடித்தது 1955-லே புயல் அடித்தது. 1963-லே கடலூரிலே புயல் அடித்தது. 1964-லே சென்னையில் புயல் அடித்தது. 1964-லே, தொண்டியிலே புயல் அடித்தது. 1966-லே கடலூரிலே புயல் அடித்தது. ஒரே ஆண்டில் இரண்டு தரம் அடித்தது. அப்போ



1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

திருந்த ஆட்சி குத்தகைதாரர்களுக்கு கடனைத் தள்ளிக் கொடுக்கவில்லை என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

ஆனால் இப்பொழுது இங்கே தள்ளி கொடுக்க வேண்டும் என்று பேசலாம். ஆனால் ஆளும் கட்சியாக இருந்தபோது தள்ளி கொடுக்காத கட்சி என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.................

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அப்போதிருந்த ஆட்சி என்று சொன்னால் ஜனதா கட்சிக்காரர்கள் வருத்தப்படுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். உங்கள் தோழமை கட்சியை அப்படி புண்படுத்தி பேசுவது நல்லதல்ல என்று கேட்டுக் கொள்கிறேன்...........

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சி என்று சொல்கிறபோது நண்பர் மாரிமுத்து அவர்களும் மனம் வருந்துவார்கள். அவரை அப்படி வருத்தப்பட செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, அது மட்டும் அல்ல. 1972 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வருகிற போது என்னவென்றால், 1971-72 ஆகிய இரண்டு ஆண்டுகளும் சேர்ந்து வறட்சியாக இருந்த காலம். அப்பொழுது கொண்டு வருகிறபோது அந்த ஆண்டினுடைய குத்தகையை பூராவும் கட்ட வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப் பட்டது. நானும் சேர்ந்து கொண்டு வந்ததுதான் அது. அப்பொழுது கொண்டு வந்த சட்டத்தினால் நன்மை அடைந்தவர்கள் எவ்வளவு என்று கேட்டால், எவ்வளவு அதிலே நன்மை ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் எல்லாமும் சேர்த்து, தனியார் நிலம் உள்பட 3 கோடி அல்லது 4 கோடி தான் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி 3 கோடி 4 கோடிதான் என்றால் நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் ஒன்றை நீங்கள் தெளிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் முழுவதையும் கட்டியிருந்தால் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பெறறது இருந்த பாக்கிகள் தள்ளுபடி செய்யப்பெற்றன. ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தினால் ஏறத்தாழ 30 கோடி இன்றைக்கு குத்தகை பாக்கி இருக்கிறது. அந்த30 கோடியில் இன்றைக்குத் தள்ளிப் போடுகிறபோது எவ்வளவு வருகிறது என்றால் 22 கோடி; ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். முந்தைய அரசு கொண்டு வந்ததைவிட முற்போக்கான சட்டம் இது. இதை முற்போக்கான

சட்டம் என்று பார்க்கிறபோது இதில் எனக்கும் பங்குண்டு. இது ஒன்று, பின்னால் இன்னொன்றை சொல்கிறேன். அது எவ்வளவு வந்தது 4 கோடி தான். இன்றைக்கு 22 கோடி. ஒரே நேரத்தில் அதுவும் ஒரு ஆண்டு குறிப்பிடப் பெற்றது அப்பொழுது. அப்படி குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது அப்பொழுது. இப்பொழுது எந்த ஒரு ஆண்டையும் குறிப்பிட வில்லை. ஏனென்றால் வசூலிக்கும் திறமை உள்ளவன் வசூலித்து விடுவான். பயந்தவன் வரியைக் கட்டி விடுவான். எந்த ஆண்டு வரை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரியாமலே போய் விடும். அதனால் தான் 5 ஆண்டு, அல்லது 3 ஆண்டு என்று வைத்திருக்கிறது. பாதிக்கப்பட்ட இடங்களில் சில இடங்களில் 3 ஆண்டுகள் சில இடங்களில் 5 ஆண்டுகள்.

சில விவசாயிகள் பயந்து கட்டியிருப்பார்கள். ஏதாவது ஒரு வருடத்தில். சில மிராசுதார்கள் தனக்கு இருக்கிற ஆதிக்கத்தால் ஒரு ஆண்டுக்காவது வசூல் செய்து ஒரு ஆண்டாவது வரவு வைத்துக்கொள்வார்கள். இதை எல்லாம் எண்ணிப் பார்த்து நானும் ஒரு விவசாயி என்ற காரணத்தால் இதை நன்றாக உணர்ந்து அந்த ஐந்தாண்டுகளில் எந்த ஒரு ஆண்டாவது கட்டியிருந்தாலும் சரி அல்லது மூன்று ஆண்டுகளில் எந்த ஆண்டு கட்டியிருந்தாலும் சரி அதை மொத்தமாகக் கட்டி எடுத்து வரவு செய்து கொள்ள வேண்டும். அதுதான் முதல் சட்டத்தைவிட முற்போக்கான எண்ணம். ஐந்தாண்டுகளில் எந்த ஆண்டு கட்டியிருந்தாலும் சரி மூன்றாண்டுகளில் எந்த ஆண்டு கட்டியிருந்தாலும் சரி அதை கட்டியதாகத்தான் வரவு செய்து கொள்ள வேண்டும். ஐந்தாண்டுகளில் மொத்தமாக எவ்வளவு கட்டினாலும் அது ஒரு வருடக் குத்தகைக்குக் குறைவாக இருந்தால் தான் கட்ட வேண்டும். ஐந்து வருடங்களில் எந்தெந்த ஆண்டு எவ்வளவு கட்டியிருந்தாலும் அவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டி ஒரு ஆண்டு கட்ட வேண்டியது எவ்வளவோ அதை விடக் குறைவாக இருந்தால்தான் கட்ட வேண்டும். அதேபோல் மூன்று ஆண்டுகளில் கட்ட வேண்டியதை ஒன்றாகக் கட்டி அதில் மூன்றில் ஒரு வருடம் கட்ட வேண்டியதை விடக் குறைவாக இருந்தால் தான் கட்ட வேண்டும். இது இரண்டாவது முற்போக்கு. மூன்றாவது முற்போக்கு என்ன வென்றால், மேலும் மேலும் இதை தள்ளிப்போட்டுக் கொண்டு வருகிறீர்களே தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறீர்களே என்றுகேட்டார்கள். நான் அமைதியாக இருந்தேன். எனக்குத் தெரியும், விவசாயிகள் எவ்வளவு தொல்லைப்படுவார்கள் என்று, சேர்ந்தார் போல் எப்போது இரண்டாண்டுகள் ஒரளவிற்கு விளைகிறதோ அந்த ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் காத்திருந்தேன். நன்றாக எப்போது விளையும் பார்ப்போம் என்று காத்திருந்தேன். சேர்ந்தாற்போல் இரண்டு ஆண்டுகள் ஒரளவிற்கு விளைந்திருப்பதால் இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்,





அதுமட்டுமல்ல. முன்பு பூராவையும் கட்ட வேண்டிய நிலை இப்போது பூராவையும் கட்டவேண்டியதில்லை. கட்ட வேண்டிய பாக்கியில் முதலில் நான்கில் ஒரு பங்கு கட்டவேண்டும். இந்த ஆண்டு, பசலி ஆண்டில். ஒவ்வொரு பசலி வருடத்திலும் அதில் மீதி இருப்பதில் பாதி பாதி எவ்வளவு என்று பார்த்துக் கொள்ளுங்கள். சுமையை எவ்வளவு குறைத்திருக்கிறது இந்த அரசு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதலில் நான் இருந்த அரசு கொண்டு வந்தது, அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்து அதைவிட இது நன்றாக இருக்கும் வேண்டும் என்று நான் கொண்டு வந்திருக்கிறேன். அதை விட இது முற்போக்கில்லையா? அப்படி இல்லை என்றால் உண்மையை நீங்கள் உணரவில்லை என்றுதான் சொல்ல முடியுமே தவிர வேறு ஒன்றுமில்லை. இதில் முற்போக்கு இருக்கிறது. ஏறக்குறைய 22 கோடி பெறுமானமுள்ளது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. கட்ட வேண்டியதை மூன்றாண்டுகளில் கொஞ்ச கொஞ்சமாகக் கட்டலாம். அப்படிக் கட்டுவதும். இன்றைக்கு 40—60 என்றில்லாமல் நாளைக்கு வருகிற சட்டத்தில் 25—75 என்று வருகிறபோது சட்டம் நிறைவேறுகிற நாளிலிருந்து அது வருகிறபோது இப்போது கட்டவேண்டியது 10 அல்லது 15 சதவீதம். கட்ட வேண்டியது 30 அல்லது 35 சதவீதம் தாண்டிப் போகாது.

திரு. ரா. மார்க்கபந்து: அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நாங்கள் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் Definitien to 'Frevious Years'—ல் 1973க்கு முன்னால் கட்டவேண்டிய பாக்கிகளைக் கட்டவேண்டும் என்றிருக்கிறது. ப்ரீவியஸ் இயர்ஸ் என்பதில் 1973ல் இருந்து 1976 வரை இருப்பதில் கால்பாகம், பாதி என்றிருக்கிறதே தவிர 73க்கு முன் கட்டவேண்டிய பாக்கி அனைத்தையும் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. முன்பு Tamil Nadu Cultivating Tenants (Arrears of rent) Relief Act, 1972 என்று சட்டம் போட்டபோது 1383 பசலி வரை உண்டான பாக்கியைக் கட்டிவிட்டால் பூரா பாக்கியும் பைசலாகிவிட்டதாகக் கருதப்படும் என்று ஏற்கனவே ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு முரணாக 73க்கு முன்னால் இருக்கிற பாக்கிகள் அனைத்தையும் கட்ட வேண்டும் என்று இந்தச் சட்டத்தில் இருக்கிறது. 73ல் இருந்து 78 வரை பாக்கிகளை வசூலிக்கக்கூடாது என்று பலவிதச் சட்டங்கள் போட்டிருக்கிறோம். (Stayed) இதில் மூன்றாண்டு லிமிட்டேஷன் என்று இருக்கிறது. 73க்கு முன்னால் உள்ள பாக்கிகள் அனைத்தையும் கட்டினால்தான் அந்தப் பலன் கிடைக்கும் என்ற ஆபத்து இருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். 1973க்கு முன்னால் இருப்பதை எல்லாம் தள்ளுபடி செய்துவிட்டு. 73—76 வரை வைத்துக்கொண்டால் சௌகரியமாக இருக்கும். அதுதான் விவசாயிகளுக்கு நன்மை செய்வதாயிருக்கும்.

[பிற்பகல் 1.50]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. முதலிலேயே சொல்ல மறந்துவிட்டேன். நாங்கள் இதுவரை ஒன்றுமே செய்யவில்லை, ஒன்றுமே செய்ய வில்லை என்று சொன்னார்கள். புயல். வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு என்னவெல்லாம் செய்தோம் என் பதைப் படித்து காண்பித்தேன். அது மட்டுமல்ல. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்ணீர் தீர்வை வாய்தா பணம் பூராவும் தள்ளுபடி செய்தது இந்த அரசு. இதற்கு முன்னாலே இப்படிக் கொடுத்ததாக ஒரு அரசாணை இருந்தால் எடுத்துக் காட்டுங்கள். எங்கேயாவது மண் மேடிட்டால், சிறு விவசாயிகளாக இருந்தால், அந்த மண்ணை அப்புறப்படுத்துகின்ற பொறுப்பு அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டது. இதற்கு முன்னாலே அப்படி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது பம்பு செட்டு இருந்து அது ரிப்பேர் ஆகிவிட்டால், அந்தச் செலவையும் இந்த அரசு ஏற்றுக்கொண் டது. இதற்கு முன்பு இப்படிப்பட்ட காரியங்கள் செய்ததாக அரசாணை கிடையாது. இருந்தால். நாளைக்கு அதைப் படித்துக் காட்டுங்கள். அது மட்டுமல்ல. விவசாயிகளுடைய நிலத்தில் மண்ணை நீக்குவதற்கு, ஆயிரம் ரூபாய் வரையில் யாராக இருந்தாலும், அதை நீக்குவதற்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது. இதற்கு முன்னாலே அப்பேர்ப்பட்ட அரசாணை உங்களிடத்தில் இருந்தால், படித்துக் காட்டுங்கள். அது மட்டுமல்ல. சிறு விவசாயிகளாக இருந்தால். விதைகள், உரங்களுக்காக 25 சத வீதம் குறைத்துக் கொடுத்திருக்கிறோம். யூரியா விலை 25 சத வீதம் குறைத்து கொடுத்திருக்கிறோம். முன்பு இப்படிப் பிறப் பிக்கப்பெற்ற அரசாணை உங்களிடத்தில் இருந்தால், படித்துக் காட்டுங்கள். அது மட்டுமல்ல. திரு. மார்க்கபந்து அவர்கள் கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று சொன்னார் கள். முதலிலேயே நாங்கள் இதெல்லாம் தேவையில்லை என்று ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம், 11—8—72க்கு முன்னாலே, முதலிலேயே ஒரு சட்டமாக்கி, தள்ளுபடி ஆகிவிட்டது. அதற்குப் பின்னால் வருவது மட்டும்தான் இங்கே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 72வது 73வது ஆண்டுக்கு முன்னால், 'அர்ரீயர்ஸ்' கலெக்ட் பண்ண வேண்டுமென்று இருக்கிறது. நீங்கள் Wipe off செய்யப்பட்டன என்று சொல்லுங்கள் : அப்போதுதான் விவசாயிகளுக்கு உண்மையிலேயே நீங்கள் நன்மை செய்ததாக இருக்க முடியும். 73லே இருந்து வசூல் பண்ணவேண்டும் என் றிருக்கிறது. 1972 முதல் 78 வரை பல சட்டங்களைப் போட்டு.



ஸ்டே பண்ணி வைத்திருந்தார்கள். ஸ்டே பண்ணி வைத்திருந்த தால். 'பீரியட் ஆப் ஸ்டே இஸ் சஸ்பெண்டட்'. ஆனால். 1973க்கு முன்னாலே, மூன்று வருஷங்களுக்கு. 1970 முதல் 73 வரைக்கும் கூட வசூல் பண்ணக்கூடிய ஆபத்து அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த சட்டத்திலே இருக்கின்றது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, 1973க்கு முன்னால் இருக்கின்ற பாக்கி பூராவையும். ஒரு வருஷ பாக்கி கட்டிவிட்டால். அத்தனையும் தீர்ந்து விட்டதாக ஒரு சட்டம் போடப்பட்டு, அதையும் கட்ட முடியாமல், கட்ட வழி யில்லாமல் பாக்கி வைத்திருக்கிறார்கள். 73க்கு முன்னால் உள்ள பாக்கி கட்ட முடியாமல் போனால்தான். ஆகவே. அதை யும் சேர்த்து. முந்திய பாக்கியையும் சேர்த்து அதிலே மூன்றில் ஒரு பங்கை வசூல் செய்ய வேண்டும் என்று இப்போது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தில் ஒரு ஷரத்து இருக் கின்றது. 73க்கு முன்னால் ஏற்கனவே கட்டமுடியாத பாக்கிகளை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, ஒரே ஒரு விஷயம். நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதைப் பூரணப்படுத்த வேண்டுமென்றால், 73க்கு முன்னால் இருந்த பாக்கிகள்பின்னால் இருந்த பாக்கிகள் ஆகியவை களை எல்லாம் சேர்த்து ஓராண்டு குத்தகை பாக்கியைச் செலுத்தி விட்டால். 73க்கு முன்னாலோ. அல்லது பின்னாலோ. அதுவும் தவணைகளிலே செலுத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளித் தால், குத்தகை விவசாயிகளுக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படும். இதை அரசாங்கம் பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இதிலே எவ்வளவு உதவி செய்ய வேண்டும் என்பதிலே போட்டா போட்டி போட்டால். நான் அதிலே பின்வாங்க மாட்டேன். எனக்கிருக்கிற சங்கடம் எல்லாம் என்னவென்றால். இதிலே இன்றைக்கு 22 கோடிக்கு மேலாக தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இந்த 22 கோடி சாதாரணம் என்று எண்ணிப் பார்க்கக் கூடாது. அது மட்டும் அல்ல. நானும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அங்கே இருக்கின்ற விவசாயிகளை. குத்தகைதாரர்களை உங்களுக்கெல்லாம் எந்த அளவுக்கு தெரியுமோ. அந்த அளவுக்கு அதிகம் இல்லாவிட்டாலும் தெரியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் களில் பலர் சிறிய விவசாயிகளாக இருக்கிறார்கள். குத்தகைக்கு கொடுக்கின்ற சிறிய விவசாயிகளாக இருக்கிறார்கள். குத்த கைக்குக் கொடுத்திருக்கிற கணவனை இழந்த கைம்பெண்களாக

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

இருக்கிறார்கள். மைனர்களாக இருக்கிறார்கள். யாரும் ஆதரவற்றவர்களாக இருக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது. இவைகளிலே எல்லாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நடுநிலைமை வைத்து செய்யவேண்டி இருக்கிறது.

இன்னமும் சொல்ல வேண்டுமானால் இதைப் பற்றி எண்ணி எண்ணிப் பார்த்து தராசு வைத்துப் பார்த்து எனக்குத் தெரிந்த வரையிலும் எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற முறையிலே, யாரும் பாதிக்கப்படக்கூடாது என்ற முறையிலே செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் சிறு விவசாயிகள், விதவைகள், மைனர்கள் இவர்களுக்கெல்லாம் ஒன்றும் கிடைக்காதவாறு நன்கு விளைந்த காலத்தையும் ரத்து செய்வது எப்படிப் பொருத்தமானது? அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களும் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் தள்ள வேண்டுமென்று உங்களுக்கு எப்படி அக்கறை இருக்கிறதோ அதே போன்று மற்றவர்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற அக்கறையும் எனக்குச் சேர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> சென்ற ஆண்டு பாக்கி என்ன வாயிற்று அதற்கு என்ன நிவாரணம் தர இருக்கிறார்கள் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்துக்கும் நில வரி அத்தனையும் தள்ளுபடி செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். புயலால் பாதிக்கப்படாத பகுதி என்று மாயவரம். கும்பகோணம், பாபநாசம். தஞ்சை ஆகியவை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கெல்லாம் நிலவரி வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வரும் நிவாரணத்தில் அந்த நான்கு தாலுக்காக்களும் அடங்கியிருக்கின்றனவா ? அவர்களிடத்தில் நில வரி வசூல் செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :</u> புயலால் பாதிக்கப்பட்டபோது இதைத் தள்ளி வைத்தபோது அந்த நன்மைகளை அனுபவித்து வந்தார்களானால் இப்போதும் நன்மைகளை அனுபவிப்பார்கள். தள்ளி வைத்தபோது அந்த நன்மையை அனுபவிக்காதவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஆனால் மிராசுதார்கள் ஐந்து ஆண்டுகளுக்குள் அவர்களை வெளியே அனுப்பியிருப்பார்கள். வெளியே அனுப்பாமல் இருந்தார்களானால் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னேன் மைனர்கள் இருக்கிறார்கள், விதவைகள் இருக்கிறார்கள, எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். யாருக்கும் பாதிப்பு இல்லாமல் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 11]

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவர் அவர்களே....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நான்கு மசோதாக்களை முதலிலே எடுத்து பொதுவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் குறுக்கீடு செய்து பதில் சொல்லி விவாதம் தொடர்ந்தால் மாலை 4 மணி மாலை 6 மணி வரை செல்லும். ஆகவே, அந்த நான்கு மசோதாக்களை முடித்து விடலாமா அல்லது இப்படியே நிறுத்திவிட்டு பிறகு தொடரலாமா என்று கூறவேண்டும்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> முடித்து விடலாம்.

அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மைனர்கள், விதவைகளுக்கெல்லாம் பாதுகாப்புத் தரவேண்டாமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இன்னொரு சட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்கனவே இருக்கும் பாதுகாப்புகள் எடுக்கப்படவில்லை ; ஆனால் மற்றவர்களிடமிருந்து வசூலித்துக் கொள்கிற ஆபத்துக்கள் இருக்கின்றன. 1970 முதல் 1973 வரை இருக்கும் தொகையையும் ஆறு ஆண்டு காலத்தில் வசூலித்துக் கொள்ளும் ஆபத்து இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(பிற்பகல் 2-00.)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :</u> தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980) நிறைவேற்றப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1980 பிப்ரவரி 11

உ. புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்* என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1980) நிறைவேற்றப் பெறவேண்டும்" * என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊ. பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் நிவாரண) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை "சட்ட முன்வடிவு 0/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

---

* 1980, பிப்ரவரி 5 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசித ல் அச்சிடப்பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

[பிற்பகல் 2–00]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு 10/1980) நிறைவேற்ற பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு 1980).

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடபெற்றுநிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாகஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பெற்றது

பிரிவுகள் 2 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) நிறைவேற்றவேண்டும், என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1980 பிப்ரவரி 7-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

7. அரசினர் தீர்மானம்.

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்—விடைகள்" என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ நாளை 12—2—1980 அன்று தளர்த்தி அந்த நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

61. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு (மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்துவாரி செட்டில்மெண்டு விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4—10—1979 ஆம் தேதியிடப் பெற்ற 1602-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்துவாரி செட்டில்மெண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1964) 26 (2)-ஆம் பகுதியின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

62. கல்வித் துறையில் 16—2—1979-ஆம் தேதியன்று வெளியாகி, 28—2—1979-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டில் பாகம் II பிரிவு 2-ல் 109-ஆம் பக்கத்தில் வெளியான (2)/ EDU /1345/79-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 12—3—1979-ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 13987/ RDI /79-3-ல் வெளியான அறிவிப்பு [1978-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



63. உதகமண்டலத்திலுள்ள இந்திய-ஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டப் பணியின் புள்ளி விவர உதவியாளர் பதவியினை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்–M) துறையின் 4—10—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1131-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

64. இணை விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், இளநிலை விரிவுரையாளர் என்று பெயர் மாற்றம் செய்யப் பெற்றுள்ள அச்சுத் தொழில் விரிவுரையாளர், உதவி விரிவுரையாளர் அச்சுத் தொழில் பயிற்சி ஆசிரியர், செய்முறை விளக்குனர் ஆகிய பதவிகளை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்- M) துறையின் 11—12—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1323-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

65. குன்னூரிலுள்ள இந்திய குடும்ப நலச் சங்கத்திற்குச் சொந்தமான MDN 8313, TNN 358-ஆம் எண்களுள்ள மோட்டார் வண்டிகளைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 18—12—1979-ஆம் தேதியிடப்பெற்ற 3091-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

[1980 பிப்ரவரி 11

## இணைப்பு I.

[159-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 113-க்கான விடையைக் காண்க].

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1976 செப்டம்பரில் நடைபெற்ற மாநில அரசுகளின் பாசன அமைச்சர்களுடைய இரண்டாவது மாநாட்டில் செய்த பரிந்துரையை ஒட்டி, இம்மாநிலத்தில் (பெரியாறு-வைகை பாசன ஏற்பாட்டை புதுமைப்படுத்துவது நீங்கலாக) பெரிய, நடுத்தர பாசன திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க இம்மாநிலத்தின் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் (பாசன), முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளரை மாநிலக் கண்காணிப்பு அதிகாரியாகக் கொண்டு, உதவிப் பொறியாளர் ஒருவர் இளநிலைப் பொறியாளர் இருவர் ஆகியோரைக் கொண்டு, அரசினர் பாசனக் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பெரியாறு-வைகை பாசனப் புதுமைத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், பாசனப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக நிர்வாகப் பொறியாளர் ஒருவரையும், உதவிப் பொறியாளர் ஒருவரையும் துணைப் பணியாளர்களையும் கொண்டதொரு கோட்டம் அமைப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் தனித் தலைமைப் பொறியாளரின் கீழ் இக்குழு செயல்படுகிறது.

2. இதனைத் தொடர்ந்து 1977 ஜூலையில், இந்திய அரசு வேளாண்மை-பாசன அமைச்சகம், ரூ. 30 கோடிக்கு மேற்பட்ட செலவு மதிப்புடைய ஒவ்வொரு பெரிய பாசனத் திட்டத்திற்காகவும், மேற்பார்வைப் பொறியாளர் துணைச் செயலாளர், உதவிப் பொறியாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்டும், ரூ. 30 கோடிக்குக் குறைந்த மதிப்புடைய இரு பெரிய பாசனத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்காகவும் உதவிப் பொறியாளர் ஒருவரைக் கொண்டும், பாசனத் திட்டப்பகுதி, நிலையில் அய்ந்து முதல் ஆறு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்காகவும், உதவி பொறியாளர் ஒருவரையும். வட்ட அளவில் (ஒவ்வொரு வட்டத்துக்கும் உதவி பொறியாளர் ஒருவர்) நிர்வாகப் பொறியாளர் ஒருவரையும், உதவிப் பொறியாளர் ஒருவரையும் மாநில நிலையில் கொண்டு கண்காணிப்புக்குழு அமைக்கப்படலாமென்று கருத்து தெரிவித்தது.



1980 பிப்ரவரி 11]

3. இம் மாநிலத்தில் பாசன வளம் தற்போது மேம்பாடு அடைந்து வரும் கட்டத்தைக் கருதிப்பார்த்து இந்திய அரசுக்கு இவ்வரசு இது குறித்து எடுத்துள்ள ஏற்பாடுகள் போதுமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

4. சிறுபாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புப் பணியின் முன்னேற்றத்தைத் தொகுத்து அறிக்கை தரவும், மாநில நிலையில் ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை அமைக்கலாமென்று, 1978 மார்ச் மாதத்தில் இந்திய அரசு கருத்து தெரிவித்தது.

இதற்கிணங்க, தலைமைச் செயலாளரைத் தலைவராகவும் பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவு துறைச் செயலாளர்கள், தலைமைப்பொறியாளர் (பாசனம்) தலைமைப் பொறியாளர் (நிலநீர்) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர் (பங்கீடு) தமிழ்நாட்டில் உள்ள இந்திய வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி, வேளாண்மைத்துறை இயக்குநர். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகவும் கொண்டு (a) மேற்பரப்புப் பாசனம், (b) நிலநீர்ப்பயன் ஆகியவை குறித்து சிறுபாசனத் திட்டங்களைக் கண்காணித்து மறு ஆய்வு செய்வதற்காக மாநில நிலையில் ஒருங்கிணைப்புக் குழுவை இவ்வரசு அமைத்தது.

## இணைப்பு II.

[160ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 114 க்கான விடையைக் காண்க].

### விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் செடிப்பண்ணைகள் உள்ளன :—

| வரிசை எண், செடிப்பண்ணை உள்ள இடம், | மாவட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1 அரசு பழப்பண்ணை, ஆத்தூர் .. | செங்கற்பட்டு. |
| 2 முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம் | பிச்சிவாக்கம், செங்கல்பட்டு. |
| 3 அரசு பழப்பண்ணை, குற்றாலம் | திருநெல்வேலி. |
| 4 அரசு பழப்பண்ணை, வாணி — | இராமநாதபுரம் |

| வரிசை எண், செடிப்பண்ணை உள்ள இடம் | மாவட்டம் |
| --- | --- |
| (1) | (2) |
| 5 முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம் தேவக்கோட்டை. | இராமநாதபுரம். |
| 6 மரவள்ளிக் கிழங்குவிதைப் பெருக்கு நிலையம், தேவக்கோட்டை. | ஷை |
| 7 முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம் நாட்டுமங்கலம். | புதுக்கோட்டை. |
| 8 மரவள்ளிக் கிழங்கு விதை பெருக்கு நிலையம், நாட்டுமங்கலம். | ஷை |
| 9 அரசு பழப்பண்ணை, வல்லத்ர கோட்டை. | ஷை |
| 10 அரசு பழப்பண்ணை, பெரியகுளம் | மதுரை. |
| 11 அரசு பழப்பண்ணை, கொடைக்கானல் | ஷை |
| 12 அரசு பழப்பண்ணை, குடப்பட்டு | வட ஆற்காடு. |
| 13 சிறப்பு வாழைத் தோட்டம், நவ்லோக் இராணிப்பேட்டை. | ஷை |
| 14 காய்கறி விதை பெருக்கு நிலையம், பாலூர். | தென்னாற்காடு |
| 15 அரசு பழப் பண்ணை, தர்மாபுரம் | தர்மபுரி |
| 16 அரசுப் பழப்பண்ணை, மருங்குளம் | தஞ்சாவூர் |
| 17 காய்கறி விதைப் பெருக்கு நிலையம் இனுங்கூர். | திருச்சிராப்பள்ளி |
| 18 சிறப்பு வாழைத் தோட்டம், முதலைப் பட்டி. | ஷை |
| 19 அரசுப் பழப்பண்ணை, ஏற்காடு. | சேலம். |
| 20 பைனாப்பிள் பழப்பண்ணை, ஆத்தூர் | ஷை |
| 21 மிளகு நாற்றுப் பண்ணை, கூடலூர் | நீலகிரி |
| 22 பைனாப்பிள் பழப்பண்ணை, பேச்சிப் பாறை. | கன்னியாகுமரி |
| 23 மிளகு நாற்றுப் பண்ணை, பேச்சிப் பாறை. | ஷை |
| 24 காய்கறி விதைப் பெருக்கு நிலையம், பவானிசாகர், | கோயம்புத்தூர் |



(ஆ) மேற்குறிப்பிட்ட பண்ணைகளால் மக்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பின்வருமாறு :—

1. அரசு பழப் பண்ணைகள்.—தரம் மிகுந்த மா, பலா, கொய்யா, சப்போட்டா, திராட்டை, பிளம் போன்ற பழ வகை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு பயிரிடுவோர்க்குக் குறைந்த விலையில் அளிக்கப்படுகின்றன. இவை தவிர அழகு தரும் ரோஜா, மல்லிகை போன்ற பூஞ்செடி நாற்று கொடி வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு தேவையுள்ளவர்களுக்கு நியாயமான விலையில் அளிக்கப்படுகிறது. மேலும் தரம் மிகுந்த பழங்கள் மற்றும் செடிவகைகளைக்குறைந்த செலவில் நவீன முறையில் உற்பத்தி செய்வது பற்றி செயல்விளக்கமும் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது.

2. மற்ற தனிப்பட்ட பழவகை மற்றும் பணப்பயிர் பண்ணைகள்.—முந்திரி, பைன் ஆப்பிள், மரவள்ளி கிழங்கு, சிறந்த வகை வாழை, மிளகு காய்கறி வகைகள் ஆகியவைகளின் விதை மற்றும் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் தனித்தனிப் பண்ணைகள் உள்ளன. இவ்வகை செடிப்பண்ணைகளிலும் தரமான செடிகள், விதைகள் நவீன முறையில் உற்பத்தி செய்யப்பட்டு நியாயமான விலையில் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது. செயல்விளக்கம் மற்றும் உயர் ரக செடிகளை உற்பத்தி செய்வது பற்றிய தொழில் நுணுக்க ஆலோசனைகள் இங்குள்ள தோட்டக்கலை வல்லுநர்களால் வழங்கப்படுகின்றன.

## இணைப்பு III.

[165ம் பக்கத்திலுள்ளஉடுக் குறியிடப்பட்ட வினா எண். 117-க்கான விடையைக் காண்க].

### விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களும், சென்னை மாநகரமும் யானைக்கால் வியாதி பரவும் வாய்ப்புள்ள பகுதிகளாகும். இந்த பகுதிகளில் இந்நோயின் விகிதம் 6 : 4 அளவு விழுக்காடு என்று மதிப்பிடப்படுகிறது.

[1980 பிப்ரவரி 11

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின் கீழும், கொசு தடுப்புத்திட்டத்தின் கீழும் இருபது இடங்களில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(1) கொசுப்புழு பெருக்கத்தைத்தடுக்க கொசுப்புழு தடுப்பு எண்ணெய் (Mosquito Laroicidal oil) தெளித்தல்.

(2) நோயின் தன்மை கண்டறிய தாக்குண்டவர்களின் இரத்தத்திவிலைகள் சேகரித்து ஆய்வு செய்தல்.

(3) பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதோடல்லாமல் மற்றவர்களுக்கு இந்நோய் பரவாமல் தடுத்தல்.

கோவை மாவட்டம் யானைக்கால் நோய் பரவும் பகுதியில்லை. ஆகையால் யானைக்கால் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பிரச்சினை இல்லை.

(இ) அய்யப்பாட்டிற்குரிய பகுதிகளில் பூச்சியியல் வல்லுனர்களால் ஒரு விரிவான கணிப்பு (Survey) செய்யப்பட்டு, அங்கு யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்கள் உள்ளதா, அப்படியாயின் அக்கொசுக்களின் அடர்த்தி எவ்வளவு என்று அறியப்படும். நோயின் விகிதம் அய்ந்து அளவு விழுக்காட்டிற்கு மேலும் பாதிக்கப்பட்ட பகுதியின் மக்கள் தொகை 20,000க்கு மேற்பட்டால், அங்கு தேசிய யானைக்கால் தடுப்புத்திட்டம் நிறைவேற்றப்படும். மற்ற பகுதிகளில் சாதாரண கொசு தடுப்புத்திட்டம் உள்ளாட்சிகளால் நிறைவேற்றப்படும்.

(ஈ) தற்போது யானைக்கால் வியாதியினால் பாதிக்கப்பட்டு, கால் பெரியதாக வீங்கியவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் அதிகப்படியான சதைகளையும், சதை திசுக்களையும் நீக்குவதைத் தவிர, வேறு சிகிச்சை முறைகள் இல்லை. இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டோர் இதற்காக அரசு மருத்துவ மனைகளை நாடலாம். இந்த வியாதிக்கு ஒரு தீவிரமான சிகிச்சை முறைக்கான உயர்மட்டத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

## இணைப்பு IV.

[180ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா 204-க் கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

சென்ற ஆண்டு பயிற்சி மருத்துவர் மற்றும் பிறர் வேலை நிறுத்தத்தின் போது மருத்துவமனைப் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் பயிற்சி பெறா



1980 பிப்ரவரி 11]

மருத்துவர்களை பணிபுரிய அனுமதிக்காமல் இருக்க வேண்டுமெனவும், மருத்துவப் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமெனவும், மத்திய அரசு கொடுக்கும் தொகைக்கு சமமாக பயிற்சி மருத்துவர் மேற்பட்டப் படிப்பு மாணவர்கள் முதலியவர்களுக்கு மாதாந்திர உதவிப் பணம் வழங்குதல் வேண்டும் என்பன அவர்களுடைய கோரிக்கைகைள்.

இக்கோரிக்கைகளை ஆய்ந்து அரசு கீழ்க்கண்ட ஆணை பிறப்பித்துள்ளது, இந்த ஆணை 1—4—1978 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

1. பயிற்சி மருத்துவர்கள் (Compulsory Rotatory Interne.s) மாதாந்திர உதவித் தொகை ரூ. 275-ல் இருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு சாப்பாட்டு ஈட்டுத் தொகையாக ரூ. 25-ம் அளிக்கப்படுகிறது.

2. ரெசிடென்சி இன்டர்னிகளுக்கும் மாதாந்திர உதவித் தொகை ரூ. 200-ல் இருந்து ரூ. 325 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3. முதுநிலை பயிற்சி மருத்துவர்களுக்கும் (Senio House Surgeons) உதவித் தொகை ரூ. 325 மாதந்தோறும் வழங்கப்படும். இவர்களுக்கும் மற்ற படிகள் ஏதும் இடையாது.

4. மேற்பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படும் :—

(அ) பணியில் உள்ள 5 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்த (தகுதிகான் பருவத்தை முடித்தவர்) மாணவர்களுக்கு ரூ. 650 விதம் உதவிப் பணம் அதிகபட்சமாக 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

(ஆ) 5 வருடங்களுக்கு குறைவாக பணி புரிந்தவர்களுக்கு (தகுதிகான் பருவத்தை முடித்தவர்கள்) மாத உதவித் தொகையாக ரூ. 550 விதம் அதிகபட்சம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும். மேற்கண்ட மாணவர்களுக்கு படிப்பு சம்பந்தமாக விடுப்பு கிடையாது.

(இ) பணியில் இல்லாத மேற்பட்ட படிப்பு மற்றும் தகுதிப் பட்டயப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 325 விதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

(ஈ) உதவித் தொகையை பெறும் எல்லா மருத்துவர்களும் 5 வருடம் கிராமப்புறங்களில் பணி செய்வதாக ஒரு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.

[1980 பிப்ரவரி 11

## இணைப்பு V.

[183 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 212-க்கான விடையைக் காண்க].

திரு. என். கிட்டப்பா, சட்டமன்ற உறுப்பினர் விடுத்துள்ள வினா 8910 (உடுக்குறியிட்டது)க்கான பதிலின் இணைப்பு.

அரசு குறிப்பாணை எண். 41668/ந.7/78.15, நாள் 18.4.1978, நகல்

பொருள் : சொத்துவரி—சென்னை மதுரை மாநகராட்சிகள் 1978–79-க்கான பொது வரித் திருத்தம் மதிப்பீடு இறுதியாக்கல்—அறிவுரைகள்—வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் சென்னை மாநகராட்சியினால் பொது வரித் திருத்தத்திற்காக செய்யும் மதிப்பீட்டு விகிதம் பற்றி அரசுக்கு புகார்கள் வரப்பெற்றன. இது குறித்து சமீபத்தில் உயர்நீதிமன்றமும் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது. வரி விதிப்பதற்காக மதிப்பீடு செய்வது பற்றியும் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றியும் அரசு ஆய்ந்து வருகிறது அரசு ஆணை பிறப்பிக்கும் வரை, வரி திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதற்கு முன் உள்ள வரிகளையே வசூலிக்கும்படி சென்னை, மதுரை மாநகராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகை இருப்பின் அவைகளை அடுத்த அரையாண்டு காலத்திற்கு சரி செய்து கொள்ளப்படலாம். அரசின் அறிவுரைப்படி கடந்த காலங்களுக்கான வரி பாக்கி இருப்பின் அவைகளையும் பின்வரும் அரை ஆண்டுகளில் வசூல் செய்து கொள்ளலாம். ஆணையர்கள் மேற்கூறியவைகளை விரிவான பொது அறிவிப்பு செய்யலாம்.

## இணைப்பு VI.

[187 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 220-க்கான விடையைக் காண்க].

காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவ நிலையம் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறைகள் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கும் மார்பு பரிசோதனைகள் செய்தது. இதுவரை நான்கு அரசுத்துறை நிறுவனங்களுக்கும், ஐந்து தனியார் துறை நிறுவனங்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.



1980 பிப்ரவரி 11]

இத்திட்டத்திற்கு உள்பட்ட நிறுவனங்கள் :

அரசுத் துறை.

1. பால்வள நிறுவனம்.
2. எண்ணூர் அனல் மின்திட்டம்.
3. கனரக ஊர்தி தொழிற்சாலை, ஆவடி.
4. பேசின் பிரிட்ஜ் மின் நிலையம்.

தனியார் துறை.

1. டி.வி.எஸ். மோட்டார் தொழிற்சாலை.
2. பிரிட்டானியா பிஸ்கட் தொழிற்சாலை.
3. ஓல்டாஸ் நிறுவனம்.
4. கார்பராண்டம் யூனிவர்சல் நிறுவனம்.
5. மெட்டல் காஸ்ட் நிறுவனம்.

கண்டுபிடிப்புகள்.

இத்திட்டத்தின் கீழ் மொத்தத்தில் 5,922 பணியாளர்கள் அரசுத்துறை நிறுவனங்களிலிருந்து பரிசோதிக்கப்பட்டனர். இவர்களில் நுண்கதிர் புகைப்படம் மூலம் 2.6% லிருந்து 7.9% வரை நோயுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் தொற்றும் தன்மையுள்ள நோயாளிகள் (சளியில் கிருமிகள் வெளிப்படுத்துவோர்) 1.2% லிருந்து 1.6% ஆக கணிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் தனியார் துறையில் 3,101 பேர்களைப் பரிசோதித்ததில் நுண்கதிர் புகைப்படம் மூலம் காணப்பட்ட நோயாளிகளின் விகிதம் 1.2% லிருந்து 4.8% வரையிலும், தொற்றும் தன்மையுள்ள நோயாளிகளின் விகிதம் 0.4 லிருந்து 2.1% வரையிலுமாகக் காணப்பட்டது.

## இணைப்பு VII.

[189 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண்.226-க்க விடையைக் காண்க].

அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை.

திரு. என். கிட்டப்பா, எம்.எல்.ஏ.

வினா எண். 11644] (உடுக் குறியிட்டது)

QUESTION:

Will the Hon, the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) the details of the revised scheme for the award for best Films and artistes in this State:

(b) how is the new scheme different from the existing schemes.

பொது (செய்தி, மக்கள் தொடர்பு)த் துறை.

விடை:

(அ) இம் மாநிலத்தில் திரைப் படங்களுக்கும், கலைஞர்களுக்கும், மாநில வருடாந்திர விருதுகள் வழங்கும் திட்டத்தின் விவரம்:—

| | ரொக்கப் பரிசு. | பதக்கம். | |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1. முதல் பரிசு சிறந்த படம் .. | 50,000 | 250 | (தங்கம்) |
| 2. இரண்டாவது பரிசு சிறந்த படம். | 30,000 | 200 | (வெள்ளி) |
| 3. மூன்றாவது பரிசு சிறந்த படம். | 20,000 | 200 | (வெள்ளி) |
| 4. சிறப்புப் பரிசு (ஒரு படத்திற்கு). | 25,000 | 200 | (வெள்ளி) |
| 5. சிறந்த நடிகர் .. .. | .. | 5,000 | (தங்கம்) |
| 6. சிறந்த நடிகை .. .. | .. | 5,000 | (தங்கம்) |
| 7. சிறந்த இயக்குநர் .. | .. | 5,000 | (தங்கம்) |
| 8. சிறந்த கதையாசிரியர் .. | .. | 5,000 | (தங்கம்) |
| 9. சிறந்த உரையாடலாசிரியர் | .. | 5,000 | (தங்கம்) |
| 10. சிந்படப்பிடிப்பாளர் .. | .. | 5,000 | (தங்கம்) |
| 11. சிறந்த இசையமைப்பாளர் .. | .. | 5,000 | (தங்கம்) |
| 12. சிறந்த பின்னணி பாடகர் | .. | 5,000 | (தங்கம்) |
| 13. சிறந்த பின்னணி பாடகி .. | .. | 5,000 | (தங்கம்) |
| 14. சிறந்த பாடலாசிரியர் .. | .. | 5,000 | (தங்கம்) |
| 15. தனித் தன்மை நடிப்புக்கு (ஒரு நடிகர்). | .. | 5,000 | (தங்கம்) |
| 16. தனித் தன்மை நடிப்புக்கு (ஒரு நடிகை). | .. | 5,000 | (தங்கம்) |
| 17. சிறந்த குழந்தைகள் படம் | 25,000 | 200 | (வெள்ளி) |
| 18. சிறந்த செய்தி விளம்பரப் படம். | 5,000 | 200 | (வெள்ளி) |
| 19. இராஜா சாண்டோ நினைவுப் பரிசு. | 25,000 | 250 | (தங்கக் கேடயம்) |

(ஆ) நடைமுறையில் உள்ள திட்டத்தின் கீழ் தேசிய அளவில் மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்ட நல்ல கருத்துக்களை உள்ளடக்கிய தரமான திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஐந்து படங்களுக்கு, ஒரு படத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் அரசு உதவித் தொகை வழங்குகிறது. ஆனால் வருடாந்திரப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறந்த படங்களுடன், சிறந்த செய்திப் படம், சிறந்த குழந்தைகள் படம், சிறந்த கலைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், ரொக்கப் பரிசு மற்றும் தங்கம்/வெள்ளி பதக்கங்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு VIII.

*[199 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 246-க்கான விடையைக் காண்க].*

*1976-ஆம் ஆண்டு செப்டம்பரில் மாநிலத்தில் பல இடங்களில் குறிப்பாக சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள திரையரங்குகள் ஒரு காட்சியில் இரண்டு முழு நீள திரைப்படங்கள் காண்பிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1976 ஆம் ஆண்டு டிசம்பரில், தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குப் படுத்தல்) விதிகளை கண்டிப்பாக அமுல்படுத்தி, இது போன்ற இரண்டு திரைப்படங்களை ஒரே காட்சியில் திரையிடும் பழக்கத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சென்னை காவல்துறை ஆணையருக்கும் ஆணையிடப்பட்டு, அவர்களும் தங்கள் மாவட்டத்திலுள்ள எல்லா திரையரங்கு உரிமதாரர்களையும் இவ்வழக்கத்தை உடன் நிறுத்துமாறு எச்சரித்துள்ளனர்.*

*சமீபத்தில் கடந்த ஆண்டு டிசம்பரில், மீண்டும், மேற்கண்ட கடுமையான உத்தரவுகளுக்கு பின்னும், ஒரே காட்சியில் இரண்டு முழு நீளத் திரைப்படங்கள் காண்பிக்கின்றனர் என்று அரசுக்குப் புகார்கள் வந்தது. 1—2—1979-ல் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னைக் காவல் துறை ஆணையரும், இவ்வாறு இரண்டு படங்கள் திரையிடும் பழக்கம் கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடை செய்யப்படுவதுடன் இதுபோன்ற புகார்கள் மீண்டும் அரசுக்கு வராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*



## இணைப்பு IX.

*[230....88ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 315-க்கான விடையைக் காண்க.]*

விடை—

*(அ) 1978–79 ஆம் ஆண்டு பயிரிடப்பட்ட பயறு வகைகளின் பரப்பளவு கீழ்வருமாறு :—*

| | ஹெக்டேர். |
|---|---|
| துவரை .. .. .. .. .. | 233,590 |
| உளுந்து .. .. .. .. .. | 373,138 |
| பாசிப்பயறு .. .. .. .. .. | 172,688 |
| மொச்சை .. .. .. .. .. | 71,716 |
| கொண்டக் கடலை .. .. .. .. | 4,376 |
| கொள்ளு .. .. .. .. .. | 247,632 |
| மொத்தம் .. | 1,103,140 |

*(ஆ) (1) 1978-79-ல் பயறு வகைகளின் பரப்பு 11.00 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதனை 1979–80-ம் ஆண்டின் முடிவில் 11.60 இலட்சமாக உயர்த்த கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது :—*

| | ஹெக்டேர் |
|---|---|
| (அ) நெல் தரிசில் கூடுதல் பரப்பு .. .. | 19,280 |
| (ஆ) கலப்பு பயிரில் கூடுதல் பரப்பு .. .. | 35,280 |
| (இ) தனிப்பயிரில் கூடுதல் பரப்பு .. .. | 5,440 |
| மொத்தக் கூடுதல் பரப்பு .. | 60,000 |

[1980 பிப்ரவரி 11

(2) பயறு வகை உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டின் அளவான 3.25 லட்சம் டன்னிலிருந்து 1979-80-ஆம் ஆண்டு இறுதியில் 3.58 லட்சம் டன்னாக உயர்த்தப்படும்.

(3) உற்பத்தித் திறனும் ஹெக்டேர் ஒன்றுக்கு 295 கிலோவிலிருந்து (1978-79), 308 கிலோவாக 1979-80-ல் உயர்த்தப்படும்.

(4) 115,800 ஹெக்டேர் பரப்பில் பொறுக்கு வித்துக்கள் உபயோகிக்க வழிவகை செய்யப்படும்.

(5) 85,000 ஹெக்டேர் பரப்பில் நுண்ணுயிர் கலவை (ரைஸோபியம் கல்சர்) உபயோகப்படுத்த ஆவன செய்யப்படும்.

(6) மொத்தப் பரப்பில் 10 சதவிகித அளவிற்கு தரமான பயறு விதைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் சுமார் 2,400 டன் பயறு விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(7) 1,000 இடங்களில் ''ஒரு ஏக்கர்'' செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்படும். இதற்குத் தேவையான விதை, உரம், மற்றும் பூச்சி மருந்துகள் இலவசமாக, ஏக்கருக்கு ரூ. 65-க்கு மேற்படாமல் வழங்கப்படும்.

(8) பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் 100,000 ஹெக்டேரில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

(9) பயறுவகைகளில் விதைத்த 25 முதல் 30 நாட்களுக்குள் 3 சதவிகித டை-அமோனியம் பாஸ்பேட் கரைசலை 40,000 ஹெக்டேரில் இலைமூலம் தெளிக்க வழிவகை செய்யப்படும்.

(10) அடி உரம் இடுதல் :

அடியுரமாக மானாவாரி பயிருக்கு ஏக்கருக்கு 5 கிலோ தழைச் சத்து 10 கிலோ மணிச்சத்தும், இறவைப் பயிருக்கு ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து 20 கிலோ மணிச்சத்து என்ற அளவில் 5,000 ஹெக்டேர் பரப்பில் உரமிட ஏற்பாடு செய்யப்படும்.

(11) பயறு வகைகளில் ''காய் துளைப்பான்'' புழுவினால் ஏற்படும் சேதத்தைக் கட்டுப்படுத்த மருந்து தெளிக்கும் செலவிற்கு ஏக்கருக்கு ரூ. 3 மானியமாக 1,00,000 ஏக்கருக்கு அளிக்கப்படுகிறது.

(12) அமோனியம் பாஸ்பேட் உரத்தை இலை மூலம் தெளிக்கும் செலவிற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் 10,000 ஹெக்டேருக்கு மானியம் அளிக்கப்படுகிறது.



1980 பிப்ரவரி 11]

பயறு வகை முன்னோடி செயல்விளக்கத் திட்டம் ஒன்று இந்த ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :

இத்திட்டம் சேலம், செங்கல்பட்டு ஆகிய இருமாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த செயல் விளக்கப் பண்ணைகள் 1,300 ஹெக்டேர் பரப்பில் இவ்விரு மாவட்டங்களிலும் அமைக்கப்படும். ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்ச மானியமாக ரூ. 150 என்ற விகிதத்தில் தேவையான பொருள்கள் இலவசமாக வழங்கப்படும். பூச்சிமருந்துகள் 25 சதவிகித மானிய விலையில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 15-க்கு மிகாமல் 20,000 ஹெக்டேர் பரப்பிற்கு வழங்கப்படும். பயிர் பாதுகாப்பு கருவிகள் 25 சதவிகித மானிய விலையில் கருவி ஒன்றுக்கு மானியம் ரூ. 50 -க்கு மிகாமல் 300 கருவிகளுக்கு வழங்கப்படும்.

இதைத் தவிர மத்திய அரசு உதவி பெறும் கீழ்க்கண்ட திட்டமும் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் :

(1) 1,000 ஹெக்டேர் பரப்பில் ஒருங்கிணைந்த செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்படும். இதற்குத் தேவையான விதை, உரம் பூச்சி, மருந்துகள் இலவசமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 275-க்கு மேற்படாமல் வழங்கப்படும்.

(2) சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்திக்காக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 வீதம், 2,820 குவிண்டால்களுக்கு மானியம் வழங்கப்படும்.

(3) எட்டு குவிண்டால் அளவு மூல விதைகள் உற்பத்தி செய்ய மானியம் வழங்கப்படும்.

(4) 25 சதவிகித மானிய விலையில், பூச்சி மருந்துகள் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படாமல் 13,333 ஹெக்டேருக்கு வழங்கப்படும்.

(5) 50 சதவிகித மானிய விலையில், கையால் இயக்கும் பயிர் பாதுகாப்புக் கருவிகள் 200 வழங்கப்படும்.

## இணைப்பு X.

230ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 316-க்கான விடையைக் காண்க].

வணிகவரித்துறையில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள சோதனை சாவடிகளின் விவரங்கள்.

சென்னை வணிகவரி கோட்டம்.

1. இரும்புலியூர்.
2. பூந்தமல்லி
3. புழல்
4. ஆண்டார் குப்பம்
5. ஆவடி
6. லட்டிஸ் பிரிட்ஜ்
7. குன்னத்தூர்
8. மாதவரம்
9. தாமரபாக்கம்
10. மணிவாக்கம்
11. போரூர்
12. ஊத்துக்கோட்டை
13. திருத்தணி.

திருச்சி வணிகவரி கோட்டம்.

14. கொள்ளிடம் (டோல்கேட்), திருச்சி.
15. செம்பட்டு
16. மணத்தட்டை
17. தவிட்டுபாளையம்
18. மணப்பாறை
19. சன்னூரப்பட்டி
20. தத்துவாஞ்சேரி
21. கொள்ளிடம் (சிதம்பரம்)

திருச்சி வணிகவரி கோட்டம்—தொடர்ச்சி.

22. நொச்சியம்.

வேலூர் வணிகவரி கோட்டம்.

23. சின்னசேலம்
24. காட்பாடி.
25. ராணிப்பேட்டை.

மதுரை வணிகவரி கோட்டம்.

26. விராலிமலை
27. ஆவணம்
28. பொன்மேனி
29. அவனியாபுரம்
30. விளாங்குடி
31. திருமங்கலம்
32. மேலூர்
33. லோயர் கேம்ப்
34. போடி மேடு
35. ஒட்டன் சத்திரம்



திருநெல்வேலி வணிகவரி கோட்டம்.

36. விருதுநகரில் மதுரை ரோடு
37. விருதுநகரில் சிவகாசி ரோடு
38. விருதுநகரில் அருப்புக் கோட்டை ரோடு.
39. விருதுநகரில் சாத்தூர் ரோடு.
40. காவல் கிணர்
41. சுங்கான்கடை
42. திட்டுவிளை
43. ராஜாக்க மங்கலம்
44. களியக்காவிளை
45. புளியரை
46. கோவில்பட்டி
47. அஞ்சுகிராம விளக்கு.

கோவை வணிகவரி கோட்டம்.

48. குள்ள கவுண்டன் சாவடி
49. சிங்காநல்லூர்
50. வேலன்தாவளம்
51. கிணத்துக்கடவு
52. மீனாட்சிபுரம்
53. கருமத்தாம்பட்டி.
54. கோபாலபுரம்

கோவை வணிகவரி கோட்டம்—தொடர்ச்சி.

55. மனுப்பட்டி
56. பல்லடம்
57. ஆளியார்
58. கடலூர்.

சேலம் வணிகவரி கோட்டம்.

59. தாளவாடி
60. ஜெர்மலம்
61. ஒடந்துறை
62. ஹாசனூர்
63. பன்னாரி
64. அன்னூர்
65. பள்ளிபாளையம்
66. அரியானூர்
67. அயோத்திபட்டணம்
68. மல்லூர்
69. தோப்பூர்
70. ஹோசூர்.
71. ஆமந்தபல்லி
72. லண்டன்பேட்டை
73. தன்னி
74. காளிப்பேட்டை
75. கலிங்கராயன் பாளையம்.

123043